# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

# பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

DIET PVT

## கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

## இரண்டாம் ஆண்டு

## வினா விடை தொகுப்பு

## (2010 -2026)

**தயாரிப்பு**

**பழ. அழகப்பன்,**

**முதுநிலை விரிவுரையாளர்,**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**

**பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்ட.ம்.**

## 1. கற்றலுக்கான தொழில்நுட்பம்

## இரண்டு மதிப்பெண்கள் வினா விடைகள்

**1. மென்பொருள் நுட்பவியல் என்றால் என்ன? (2010, 2014, 2017, 2020, 2022) பக்கஎண் 3**

- புதியதொழில்நுட்பம் என்பது அறிவின் ஆய்வுக்கண்டுபிடிப்பு ஆகும். அறிவைப் பயன்படுத்தும் போது புதியதொழில்நுட்பம் உருவாகிறது.
- கல்வியில், உளவியல் தத்துவங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவருடைய நடத்தைகளை எவ்வாறு சிறப்பானதாக மாற்றி அமைக்க இயலும் என அறிந்து, அதன் அடிப்படையில் செயல்படுத்தப்படும் நுட்பவியலானது மென்பொருள் நுட்பவியல் எனப்படும்.
- (எ. கா) பாடநூல்கள், செய்தித்தாள்கள், படங்கள், வீடியோ படங்கள்.

**2. கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பக் கருவிகளால் ஏற்படும் பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2010). பக்கம் எண் 4**

- பங்கேற்பின் மூலம் கற்றுக்கொள்ள, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட உதவுகிறது.
- பொருளின் உண்மைத்தன்மையை உணர உதவுகின்றது.
- ஒவ்வொரு செயலிலும் கருத்துருவாக்கம் ஏற்பட உதவுகின்றது.
- திட்டமிடவும், செய்துபார்க்கவும் தூண்டும் வகையில் அமைகின்றது.
- கற்றலை மேம்படுத்தி, நினைவில் நிறுத்திக்கொள்ள உதவுகின்றது.
- தானே செய்து கற்பதால் உண்மை அனுபவத்தைக் கொடுப்பதோடு, தன்னம்பிக்கை வளரவும் உதவுகின்றது.
- குறைந்த நேரத்தில் தெளிவான நிலைத்த கற்றல் ஏற்பட உதவுகின்றது.
- மனதளவிலும் உடலளவிலும் செயல்படுத்தவேண்டும் என்ற ஊக்கம் பெற உதவுகிறது.
- கருத்து சார்ந்த படம் மனதில் பதிவாகி, திரும்பச் சரியான தகவலைக்கூற உதவுகின்றது.
- பெற்றுக்கொண்ட அனுபவமானது, ஆழந்த, வித்தியாசமான நடைமுறையில் உண்மையென்று கொள்ளத்தக்க அறிவைப் பெற உதவுகின்றது. (**any 2 points**)

**3. இயந்திர நுட்பவியல் என்றால் என்ன? (2015)**

- அறிவியலின் மின்காந்தத் தன்மைகளையும், பொறியியற் தத்துவங்களையும் பயன்படுத்தி, கற்பிக்கத் துணை செய்யும் மின் இயந்திர சாதனங்களைத் தயாரிப்பது இயந்திர நுட்பவியல் எனப்படும்.
- எடுத்துக்காட்டு: அனைத்துப் படவீழ்த்திகள், நாடாப் பதிவுக்கருவி, வானொலி, தொலைக்காட்சி, உள்ளரங்குத் தொலைக்காட்சி (CCTV), கணினி போன்றவை இயந்திர நுட்பவியலின் சாதனங்களாகும்.

**4. கல்வியில் தொழில்நுட்பம் என்றால் என்ன? (2016)**

தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைக் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பயன்படுத்துவது கல்வியில் தொழில்நுட்பம் (Technology in Education) எனப்படும்.

**5. கல்வியின் தொழில்நுட்பம் என்றால் என்ன? (2018, 2025)**

மாணவரது கவனத்தைக் கவரும் வழிகள், அவற்றைச் செயல்படுத்துதல், கற்பிக்கும் நோக்கங்களைத் தெளிவாக்குதல், உடனுக்குடன் வலுவூட்டிகளைப் பயன்படுத்துதல் போன்ற உளவியல் தொடர்பான கருத்துக்கள் கல்வியின் தொழில்நுட்பம் (**Technology of Education**) எனப்படும்.

**6. கல்வியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்களின் பெயர்களை எழுதுக. (2020, 2026)**

கல்வியியலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம்

- ❖ இயந்திர நுட்பவியல் (Hardware Technology)
- ❖ மென் பொருள் நுட்பவியல் (Software Technology) என இருவகைப்படும்

**7. கல்வி நுட்பவியலின் நோக்கம் யாது?**

கற்றலைச் சிறப்பாக்கப் பயன்படுத்தும் கருவிகள் அனைத்தும் கல்வி நுட்பவியலைச் சார்ந்தவை. கற்றல் இலக்குகளில் தெளிவு ஏற்பட்ட பின் அவற்றை குறைந்த காலத்தில் அடைவதற்கான வழிமுறைகளைத் திட்டமிட்டு, செயற்படுத்தி, மதிப்பீடு செய்வதே கல்வி நுட்பவியலின் நோக்கம் ஆகும்.

**8. கல்வி நுட்பவியல் என்றால் என்ன?**

- ❖ கற்பித்தலில் பல துணைக்கருவிகளைப் பயன்படுத்துவது அவசியம். அவற்றால் ஏற்படும் விளைவுகளை அறிந்து, அவற்றுள் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது கல்வி நுட்பவியல் எனப்படும்.
- ❖ சுருங்கக் கூறின், "கல்வி நுட்பவியல் என்பது கற்றலில் சிறந்த பயனளிக்கும் நுட்பங்களையும் முறைகளையும் தயாரித்து, பயன்படுத்தி, மதிப்பீடு செய்தல்" ஆகும்.

**9. கற்பித்தலுக்கான முக்கிய காரணிகள் யாவை? (2025, 2026 – 4மதிப்பெண்கள்)**

- ❖ மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.
- ❖ புலன்காட்சி மூலமாகவும், செயல்பாடுகள் மூலமாகவும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களைச் சுறுசுறுப்பாக ஈடுபட வைத்தல்
- ❖ சிறந்த முறையில் தகவல் அளித்தல் மூலம் ஆசிரியர் மாணவரிடையே நல்ல கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்துதல்.
- ❖ கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகளில் மாணவர்கள் தங்கள் பங்கினை அளித்தல்
- ❖ ஆரோக்கியமான விளைவறிக்கை (Healthy feedback) அளித்தல்.

DIET PVT

10. **தொழில்நுட்பக் கருவிகளை ஏன் பயன்படுத்த வேண்டும்?**

- ❖ தொழில்நுட்பக் கருவிகள் அனைத்தும் கற்றலை நிலைத்து நிற்கவும், விளைவுறு பயனளிக்கவும், ஒருமைப்படுத்தவும், கற்றலில் விருப்பமூட்டவும், உட்பொருளைத் தெளிவாக வெளிப்படுத்தவும், அகத்தூண்டுதலளிக்கவும், கருத்தாழத்தையும், அகலத்தையும் புலப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்.
- ❖ தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் எல்லா வகைக் கற்பித்தலையும் மேம்படுத்துவதோடு பல்வகைக் கற்றல் வெளிப்பாடுகளையும் பெற முடியும்.

11. **கற்பிக்கத் துணை செய்யும் கருவிகளின் வகைப்பாடு யாவை?**

கற்பிக்கப் பயன்படும் கருவிகளை முதன்முதலாக வகைப்படுத்திக் கூறியவர் எட்கர் டேல் (Edger Dale) என்னும் கல்வியாளர் ஆவார். அவர் நாம் பெறும் அனுபவங்களைப் பின்வரும் மூன்று பெரும் பிரிவுகளாக அமைக்கலாம் என்றார். அவை

- ❖ செயலை அடிப்படையாகக் கொண்டு பெறும் அனுபவங்கள்,
- ❖ உற்றுநோக்கலை அடிப்படையாகக் கொண்டு பெறும் அனுபவங்கள்,
- ❖ கருத்துப் பொருள்களை உணர்தல் ஆகியவை ஆகும்.

12. **முப்பரிமாணக் கருவிகள் யாவை? (2019)**

- ❖ உண்மை பொருட்கள்
- ❖ மாதிரிப் பொருட்கள்
- ❖ மாதிரிகள்
- ❖ பொம்மலாட்டம்
- ❖ முப்பரிமாணக்காட்சி அமைப்பு.

13. **எவ்வகையான கருத்துக்களின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் கருவிகளை தேர்ந்தெடுப்பீர்? (2010).**

- ❖ கற்றல் நோக்கங்களையும் மாணவர்களின் தன்மைகளையும் கருத்தில் கொண்டு ஆசிரியர் கருவிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- ❖ கற்பிக்க வேண்டிய பாடப்பகுதியைத் தேர்ந்தெடுத்து, சிறு அலகுகளாக பகுத்துக்கொள்ள வேண்டும்.
- ❖ எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகளை அடைவதற்கு எளிய கருத்திலிருந்து தொடங்கி புதிய கருத்துக்களைத் தொடர்ச்சியாக அமைத்தல் வேண்டும்.
- ❖ இவை ஒவ்வொன்றையும் கற்பிக்க எவ்வித கருவி பொருத்தமானதாக அமையும் என்பதைக் கண்டறிந்து அவற்றைச் சேகரித்தோ அல்லது தயாரித்தோ கற்பித்தலில் பயன்படுத்துதல் அவசியம்.

DIET PVT

14. **ஒரு கருவியின் முழு பயன்பாடு என்று எதை குறிப்பிடுகின்றோம்?**

ஒரு கருவியின் பல்வேறு வகையான செயல்பாடுகளை அறிந்து அச்செயல்பாடுகளுள் எவ்வெவற்றை கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்து அவற்றைப் பயன்படுத்துதலே அக்கருவியின் முழுப் பயன்பாடு ஆகும்.

15. **கருவிப்பெட்டி என்றால் என்ன? (2011)**

"கருவிப் பெட்டி" என்பது கற்றல் கற்பித்தலில், ஒவ்வொரு பாடத் தலைப்பிற்கும் ஏற்றவாறு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊடகங்கள், பொருட்கள் மற்றும் கருவிகள் அனைத்தும் சேகரித்து வைக்கப்படும் பெட்டியாகும்.

16. **கருவிப் பெட்டிக்குள் வைக்கப்படும் பொருட்களை எழுதுக. (2015)**

இப்பெட்டியில் உண்மைப் பொருட்கள், மாதிரிப்பொருட்கள், புத்தகத் தொகுப்புகள், சிறுவர் கலைக்களஞ்சியங்கள் வரைபடங்கள், படங்கள் அடங்கிய தொகுப்புகள், தேசப்படங்கள், பூமி உருண்டை, பொம்மலாட்டங்கள், சிறுசிறு சோதனைகளைச் செய்து காண்பிப்பதற்குத் தேவையான பொருட்கள், வரைகோட்டுப் படங்கள், எளிய விலை குறைந்த பொருட்களினால் செய்யப்பட்ட கருவிகள் மேலும் சுருள்படங்கள், தலைமேல் படம் வீழ்த்திக்கான ஒளி ஊடுறுவும் தாள்கள், நழுவங்கள், ஒலி / ஒளி நாடாக்கள் போன்ற அனைத்தையும் சேகரித்து வைக்கலாம்.

17. **பல் ஊடக ம் என்றால் என்ன? (2024, 2016)**

பல்வகை ஊடகம் என்பது கணினி மூலமாகவோ, அல்லது பிற மின்னியக்க ஊடகங்கள் மூலமாகவோ பாடப்பதிப்பு (Texts), வரைகலை (Graphics), கலைத்திறன் (art), ஒலி (Sound), உயிரூட்டம் (Animation) மற்றும் படம் (Pictures) போன்றவற்றை இணைத்துத் தரவல்லதாகும். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்களை இணைத்துக் கற்பிப்பதை பல்வகை ஊடகம் என்று அழைக்கிறோம்.

18. **பல்வகை ஊடகங்களின் பயன்பாட்டை சுருக்கமாக குறிப்பிடுக. (2011)**

பலவகைப் பாடப்பதிப்புகள் (**Texts**), ஜன்னல் திரை வரைகலைகள் (**Windows graphics**) போன்றவற்றைக் கருத்துப் பரிமாற்றம் மூலம் காட்சியாக அமைக்கும் வழி முறையாகும். ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காகப் பல மென்பொருள் கட்டுகள் (**Software packages**), கருவிகள் (**Tools**) மற்றும் பிற ஊடகங்களான (**Other media**) நாளேடு, இதழ்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கம் அளிக்கலாம். இவ்வாறு ஒன்றுக்கும் மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி, மாணவர்களின் ஒன்றுக்கும் மேற்பட்ட புலன் வழிக் கற்றலை ஏற்படுத்துவது கற்றலை மேலும் மேம்படுத்தும்.

19. **பல்வகை ஊடகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக. (அல்லது) உன் வகுப்பறையில் பல்வகை ஊடகம் பயன்பாட்டிற்கு ஏதேனும் ஒரு எடுத்துக்காட்டு தருக. (2017)**

ஆசிரியர் வாய்மொழி வழியாகப் பாடம் கற்பிக்கிறார். மேலும் கருத்துக்களைத் தெளிவாக்க செயல்முறைகளைச் செய்து காண்பிக்கிறார். பின்னர் மாணவர்களைச் செய்து பார்க்கத்

தூண்டுகிறார். வரைபடங்களைக் காண்பிக்கிறார். இவ்வாறு, கேட்டல், பார்த்தல், செய்து உணர்தல் என பலபுலன்கள் மூலம் பல ஊடகங்களைப் பயன்படுத்தி கற்றல் மேம்படஉதவுதல் மூலம் பல்வகை ஊடகங்களின் பயன்பாடு கற்பித்தலில் அமைகிறது.

**20. கருவிப் பெட்டியின் பயன்கள் யாவை? (2024, 2023) (அல்லது) கருவிப்பெட்டியை பயன்படுத்துவதால் விளையும் நன்மைகள் யாவை? (2014)**

- ❖ மாணவர்களின் முழு பங்கேற்பைத் தூண்டுகிறது.
- ❖ தனியாகக் கற்றல் மற்றும் பல்புலன்வழிக் (Multi sensory) கற்றலை மேம்படுத்துகிறது.
- ❖ கற்றலை மகிழ்ச்சியுடையாதவும், வியப்பிற்குரியதாகவும் மாற்றுகிறது.
- ❖ தெளிவாக வரையறுக்கப்பட்ட கற்றல் நோக்கங்கள், குறிப்பிட்ட உபகரணங்கள் மூலம் விளக்கப்படுவதால் கற்றல் எளிமையாக்கப்படுகிறது.

**21. கருவிப் பெட்டி தயாரிக்கும் போது நினைவில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் இரண்டினை கூறுக. (2019, 2022, 2025)**

- ❖ ஒவ்வொரு பாடத்திலும், ஒரு குறிப்பட்ட கற்றல் இலக்கை அடைவதற்கேற்றவாறும் திறனை வளர்ப்பதற்கேற்றவாறும் கருவிகளைச் சேகரித்துப் பயன்படுத்துதல் வேண்டும்.
- ❖ மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதற்கேற்றவாறு கருவிகளைக் கையாளச் செய்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு கருவியையும் பயன்படுத்தும்போது பாடப்பொருளோடு தொடர்புடைய மற்ற தெரிந்த கருத்துக்களையும் நினைவு கூர்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு படிநிலையிலும், கேள்விகள் கேட்டு கருத்துக்கள் மாணவர்களைச் சென்றடைந்தனவா? என்பதை அறிந்து அதற்கேற்றவாறு கருவிகளை ஆசிரியர்பயன்படுத்த வேண்டும்.

**22. தகவல் பரிமாற்றம் என்றால் என்ன? (2013)**

ஒரு தகவலை அல்லது செய்தியை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஒரு கூட்டத்திற்கோ தெரிவிப்பது தகவல் பரிமாற்றம்.

**23. தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் என்றால் என்ன? (2021)**

- ❖ தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பமானது (information and communication Technology) ஒரு தனி தொழில்நுட்பமன்று.
- ❖ இயந்திர நுட்பவியல், மென்நுட்பவியல், ஊடகம் மற்றும் வெளிப்படுத்தும் முறைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.
- ❖ எனவே பல்வகை ஊடகங்களை ஒருங்கிணைத்தல், கருத்துக்களைப் பரிமாற்றும் விதம், பயன்படுத்துவதிலுள்ள நெகிழ்வுத் தன்மை மற்றும் ஒன்றோடொன்றை இணைத்தல் போன்ற பரிமாணங்களில்இத்தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பமானது தனிச் சிறப்புப் பெற்று, முந்தைய தொழில் நுட்பங்களிலிருந்து மாறுபட்டு வெளிப்படுகிறது.

**24. தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்தை கற்பித்தலுக்கு ஒரு ஊடகமாக பயன்படுத்த வேண்டுமெனில் நீவீர் தங்களை எவ்வாறு ஆயத்தப்படுத்திக் கொள்வீர்? (2013)**

கற்றல் மேம்பட, ஆசிரியர் பணிமுன் பயிற்சியின் போதும், பணியிடைப்பயிற்சியின் போதும், தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த அறிந்து கொள்ளுதல்.

25. **தகவல் தொழில் நுட்பத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

தகவல் தொழில் நுட்பமானது அதன் சிறப்பியல்புகளின் படி, பாடப்பொருள் (Subject), நோக்கு (Aspect), ஊடகம் (Medium) என்னும் மூன்று பிரிவுகளாகப்பகுக்கப்படுகிறது.

**26. தகவல் பரிமாற்ற தொழில்நுட்பப் பயன்கள் நான்கினைக் கூறுக.** (2012)

- ❖ தகவல் தொழில்நுட்பமானது பள்ளிகளில் அமைப்பு மற்றும் மேலாண்மைக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.
- ❖ தகவல் தொழில் நுட்பம், நேரடி கற்றலோடு தொடர்புடையதன்று. ஆனால், வகுப்பறை அளவிலோ, பள்ளி அளவிலோ கற்றலுக்கு பக்கபலமாக அமைகிறது.
- ❖ தகவல் தொழில் நுட்பம் பற்றிய அடிப்படை உண்மைகளைக் கற்றுக் கொள்ளும்பொழுது தகவல் தொழில் நுட்பம் ஒரு "பாடப்பொருளாகிறது." (Subject) அதாவது, பள்ளிக்கலைத்திட்டத்தில், கணினிக் கல்வியில் பயிற்சி பெறுவதாகும்.
- ❖ தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் கல்வியில் பயன்படுத்தப்படுமேயானால் அது ஒரு "நோக்கு" (aspect) ஆகும். அது தொழில் சார்ந்த கல்வியைக் குறிக்கும்.
- ❖ ஆசிரியருக்கு கற்பித்தலுக்கான ஊடகமாகவும், மாணவர்களுக்கு கற்றலுக்கான ஊடகமாகவும் செயல்படுகிறது.

**27. டோஃபில் தேர்வு என்றால் என்ன?**

- ❖ TOEFL (Test of English as a foreign Language) ஆங்கிலத்தைத் தாய் மொழியாய்க் கொள்ளாத நாடுகளிலுள்ளவர்கள் இத்தேர்வில் தகுதி பெறுவது அவசியம்.
- ❖ இத்தேர்வானது உலகம் முழுவதும் பல இடங்களில் நடத்தப்படுகிறது. பெரும்பாலும் கம்ப்யூட்டரில் எழுத வேண்டிய தேர்வாகவே இது நடத்தப்பட்டாலும் ஒரு சில இடங்களில் மட்டும் எழுத்துத் தேர்வாகவும் நடத்தப்படுகிறது.
- ❖ டோஃபில் தேர்வுகளின் நோக்கமானது ஆங்கிலம் எழுதப் பேசத் தெரியாத நாடுகளிலுள்ள மாணவர்களின் வட அமெரிக்க ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ளும் திறனை சோதிப்பதாக உள்ளது.
- ❖ டோஃபில் தேர்வை அமெரிக்காவிலுள்ள Educational Testing Service (ETS) என்னும் அமைப்பு நடத்துகிறது.

DIET PVT

**28. டோஃபில் தேர்வின் நோக்கங்கள் யாவை? (2021)**

- டோஃபில் தேர்வுகளின் நோக்கமானது ஆங்கிலம் எழுதப் பேசத் தெரியாத நாடுகளிலுள்ள மாணவர்களின் வட அமெரிக்க ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ளும் திறனை சோதிப்பதாக உள்ளது.

**29. ஒளி புகும் தாள்கள் தயாரிக்கப்படும் முறைகள் யாவை? (2017) (அல்லது) சமூக அறிவியல் பாடத்தில் ஒளிபுகும் தாள்களை எம் முறையில் பயன்படுத்தலாம்? (2020) தலைமேல் படம் வீழ்த்தியில் பயன்படும் ஒளிபுகும் தாள் தயாரிக்கும் நான்கு முறைகள் யாவை? (2023) ஒளிபுகும் தாள்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் வெவ்வேறு முறைகளை பட்டியலிடுக. (2026)**

- மேற் பொருத்து முறை,
- இயக்கமுறை,
- மறைத்தல் முறை மற்றும்
- நிழல் முறை.

**30. மேற்பொருத்து முறையில் ஒளி புகும் தாள்கள் தயாரிப்பது பற்றி எழுதுக. (2021) (அல்லது) மேற்பொருத்து முறைப் பற்றி சிறு குறிப்பு வரைக. (2022)**

- தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் திரையில் காட்டப்படும் காட்சி சிக்கல்கள் நிறைந்ததாக இருந்தால் அதற்குப் பொருத்து விளக்க முறையில் தயாரிக்கப்பட்ட ஒளிபுகும் படத்தாள்களைப் பயன்படுத்தலாம்.
- ஒளிபுகும் தாள்களில் பயன்படுத்தும் காட்சிகளைப் படிப்படியாகக் கையால் வரைந்தோ அல்லது அச்சடித்தோ தயாரிக்க வேண்டும். அதன் பின் ஒன்றின் மேல் ஒன்றாக ஒளிபுகும் தாள்களை வைத்து கற்றல் கற்பித்தலை ஏற்படுத்த வேண்டும்.

**31. ஒளிபுகும் தாள்களை பாடக்கருத்துக்களில் பயன்படுத்துவதற்கான சில எடுத்துக்காட்டுக்களை கூறுக.**

மேற்பொருத்து முறை (**Over lapping method**)

- (எ. கா) சந்திர கிரகணம், சூரிய கிரகணம், மண்ணின் அடுக்குகள்,
- பட்டுப் பூச்சியின் வாழ்க்கை வரலாறு.

நிழல் முறை (**Silhoutte Method**)

- (எ.கா) இரவு, பகல் உண்டாகுதல்.

மறைத்தல் முறை (**Revelation Method**)

- (எ.கா) பூமியின் அடுக்கு

இயக்க முறை (Movement Method)

- ❖ (எ.கா) தேனீ - பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்துச் செல்வது.

**32. நழுவப்பட வீழ்த்தியின் நிறைகள் யாவை?**

- ❖ தொடர்ந்து நழுவங்களை ஒரு முறை அடுக்கியோ அதனை மாற்றியமைத்தோ பல வகைகளில் தொடர் கருத்தை விளக்குவதற்குப் பயன்படுத்தலாம்.
- ❖ தெளிவான தகவல்களைக் கொடுக்கிறது.
- ❖ பல நாள் நீடித்து உழைக்கும்.
- ❖ அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறது.

33. **நழுவப்பட வீழ்த்தியின் குறைகள் யாவை?**

- ❖ அறை முழுவதும் இருட்டாக்க வேண்டும்.
- ❖ நழுவம் தயாரிப்பதற்கான விலை சற்று அதிகமாகும்.
- ❖ ஐம்பது பேருக்கு மேல் உள்ள பார்வையாளர்களுக்கு இதனைப் பயன்படுத்தி விளக்கமளிக்க இயலாது.
- ❖ உயிரோட்டமுள்ள படமாக இதனைக் காண்பித்தல் இயலாது.

**34. சாதாரண கண்ணாடி நழுவம் எவ்வாறு உன் வகுப்பறையில் தயாரிப்பாய்? (2018) சாதாரண கண்ணாடி நழுவத்தை எவ்வாறு தயாரிப்பாய்? (2026)**

இரண்டு 2" x 2" அளவுள்ள கண்ணாடித் துண்டுகளை எடுத்துக்கொண்டு ஒரு கண்ணாடித்துண்டில் இண்டியன் மையைக் (Indian ink) கொண்டு தேவையான செய்தியை எழுதி மற்றொரு கண்ணாடித்துண்டால் மூடி செலோஃபன் நாடாவால் (cello tape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.

**35. கற்பித்தலில் மாதிரிகளை பயன்படுத்துவதால் ஏற்படும் மாற்றங்களை பட்டியலிடுக. (2013) (அல்லது) கற்பித்தலில் ஏன் மாதிரிகளை பயன்படுத்த வேண்டும்? (2012, 2014, 2016)**

- ❖ உண்மை அனுபவத்தைக் கொடுக்கிறது.
- ❖ தெளிவற்ற கருத்துக்களைத் தெளிவாக்குகிறது.
- ❖ மிகப் பெரிய செய்முறையைக் கூட மாதிரிகளைக் கொண்டு எளிதில் கூற முடியும். ஏனெனில் அதன் இயந்திரத் தன்மை, உட்புறக் காட்சிகள் அனைத்தும் விளக்கப்படுகிறது.

**36. மாதிரிகளை ஏன் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நிகழ்வில் பயன்படுத்த வேண்டும்? (அல்லது) மாதிரிகள் என்றால் என்ன?**

பல நேரங்களில் நேரிடை அனுபவத்தைக் கொடுக்கக் கூடிய உண்மைப் பொருட்கள் எளிதில் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் கூட அவை மிகப் பெரியதாகவோ, கடினமானதாகவோ, கையாளுவதில் அதிகக் கவனம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாகவோ, இருப்பதால் கற்பித்தலில் பயன்படுத்த முடிவதில்லை. ஆகவே மாதிரிகள் என்பது உண்மைப்

பொருள்களின் மாற்று ஆகும். இது உருவத்தில் செலவில் குறைந்து, பயன்படுத்த எளிதாகும் வகையில் அமைக்கப்படுகிறது. மேலும் இது முப்பரிமாண அமைப்பில் உண்மைப் பொருளின் பிரதிபலிப்பு ஆகும்.

(எ.கா.) நீராவி இயந்திரம், நிலத்தை உழும் இயந்திரம் போன்றவை. இந்தச் சூழ்நிலையில் மாதிரிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

**37. கற்பித்தலில் மாதிரிகள் உருவாக்க தேவைப்படும் பொருட்கள் யாவை? (2023 – 4 மதிப்பெண்கள்)**

- வெள்ளை சிமெண்ட்
- பாரிஸ் சாந்து (**Plaster of paris**)
- மாவு வகைகள்
- மரக்கட்டைகள்
- கடின அட்டைகள்
- சீனக் களிமண்
- பேப்பர்
- களிமண்
- **M - Seal** (குழாய்களில் வெடிப்புகளை அடைக்கப் பயன்படுவது)
- செய்தித்தாள் - வார்ப்புகள் **etc**

**38. மின்னட்டைகள் பற்றி குறிப்பு வரைக.**

- பொதுவாக சிறிய குழுவுக்கான (10 - 20 மாணவர்கள்) மின்னட்டைகள் 10 **x** 12 இன்ச் அளவிலும், பெரிய குழுவிற்கான (40 - 50 மாணவர்கள்) மின்னட்டைகள் 22 **x** 28 இன்ச் அளவிலும் அமையலாம்.
- இவை ஒரு கருத்தைக் குறிக்கும் படி அமைதல் வேண்டும். ஒரு பக்கத்தில் கருத்து சார்ந்த படமும், மறுபக்கத்தில் ஒரே வார்த்தையில் கருத்தும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரு பாடவேளையின் **போது** கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் பத்து (10) மின்னட்டைகள் வரை பயன்படுத்தலாம்.

**39. விளக்கப் படங்கள் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக. (2015).**

கூறப்படும் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப் படங்களாகும். பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

- எளிய விளக்கப்படம் (**Simple charts**)
- கிளை விளக்கப்படம் (**Tree charts**)
- தொடர் விளக்கப்படம் (**Flow charts**)
- தொகுப்பு விளக்கப்படம் (**Flip charts**)
- மேற்பொருந்து விளக்கப்படம் (**Over lapping chart**)

**40. பொம்மலாட்டம் எவ்வாறு கற்பித்தலில் பயன்படும்? (2011)**

பொம்மலாட்டம் கற்பித்தலில் வகுப்பறை நிகழ்விற்குப் பெரிதும் பயன்படுகின்றன.


கேட்டல், பேசுதல், நடித்தல் போன்ற அனைத்து திறன்களுக்கும் பொம்மலாட்டம் உதவுகின்றது.

**41. பொம்மலாட்ட பொம்மைகளின் வகைகளை எழுதுக.**


- குச்சிப் பொம்மைகள்,
- நூலினால் இயக்கக்கூடிய பொம்மைகள்,
- காகிதப்பொம்மைகள்,
- முட்டை ஓட்டுப் பொம்மைகள்,
- அட்டைப்பெட்டி பொம்மைகள்,
- பலூன் பொம்மைகள்,
- காகிதக்கூழ் பொம்மைகள்,
- கையுறை பொம்மைகள்,
- காலுறை பொம்மைகள் எனப் பல வகை உண்டு.

**42. கொடுக்கப்பட்ட அளவுகளைக் கொண்டு நேர்கோட்டு வரைபடம் வரைக.**


| | **வெப்பநிலை** |
|---|---|
| **திங்கள்** | **30** |
| **செவ்வாய்** | **35** |
| **புதன்** | **40** |
| **வியாழன்** | **45** |
| **வெள்ளி** | **50** |



**43. ஒரு மாணவன் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் முறையே தமிழ் 60, ஆங்கிலம் 40, கணிதம் 75, அறிவியல் 80 மற்றும் சமூக அறிவியல் 70. இவ்விவரத்திற்கான வட்ட வரைபடம் வரைக. (2019)**




**44. ஒரு மாணவன் 33% பள்ளியிலும், 17% பயணத்திலும், 5% பொழுதுபோக்கிற்கும், 45% வீட்டிலும் செலவு செய்கிறான். இத் தகவல்களைக் கொண்டு வட்ட வரைபடம் வரைக. (2020)**




45. **கற்றலுக்கான தொழில் நுட்பம் என்றால் என்ன? (2012)**

தொழில்நுட்பத்தின் வழி கற்றல் நடைபெறும் போது கற்றல் எளிதாகிறது. மேலும் கற்றல் வலுவடைகிறது. ஆசிரியர் மாணவர்களாகவும், மாணவர்கள் ஆசிரியர்களாகவும் மாறுகின்றனர். மாணவர்கள் சுறுசுறுப்பான பங்கேற்பாளாராக மாறுகின்றனர். இதுவே கற்றலுக்கான தொழில்நுட்பம் எனப்படும்.

**46. செலோஃபன் தாள் நழுவத்தினை நீ எவ்வாறு தயாரிப்பாய்? (2024)**

ஏதேனும் ஒரு கலர் செலோஃபன் தாள் எடுத்துக்கொண்டு 2" × 2 " அளவுக்குள் தேவையான உருவத்தை வரைந்து வெட்டிக்கொள்ளவேண்டும். இதனை இரு 2" × 2 "

கண்ணாடித்துண்டுகளின் நடுவில் வைத்து இறுகப்பிடித்துக்கொண்டு ஓரங்களை செலோஃபன் நாடாவால் (cellotape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.


<u>**நான்கு மதிப்பெண்கள் வினா விடைகள்**</u>

1. **கற்பிதலுக்கு எட்கர் டேலின் அனுபவக் கூம்பு பற்றி விளக்குக.** (2010, 2012)

கற்பிக்கப் பயன்படும் கருவிகளை முதன்முதலாக வகைப்படுத்திக் கூறியவர் எட்கர் டேல் (**Edger Dale**) என்னும் கல்வியாளர் ஆவார். அவர் நாம் பெறும் அனுபவங்களைப் பின்வரும் மூன்று பெரும் பிரிவுகளாக அமைக்கலாம் என்றார். அவை

- **செயலை** அடிப்படையாகக் கொண்டு பெறும் அனுபவங்கள்,
- உற்றுநோக்கலை அடிப்படையாகக் கொண்டு பெறும் அனுபவங்கள்,
- கருத்துப் பொருள்களை உணர்தல் ஆகியவை ஆகும்.

இவற்றுள் நிலைத்த அறிவினைத் தருவதில் செயல் மூலம் பெறும் அனுபவம் முதன்மையானது. அடுத்தது உற்று நோக்கலைக் கொண்டு பெறும் அனுபவம் ஆகும். கருத்துப் பொருள்களை உணர்தல் தெளிவான நிலைத்த அறிவைக் கொடுக்காது. அவர் அமைத்துக் காட்டிய அனுபவக் கூம்பின் வடிவமைப்பின்படி மேலிருந்து கீழாகவே, ஒருவர் ஒரு கருத்து சார்ந்த நிலைத்த அறிவைப் பெறுகிறார்.




**எட்கர் டேலின் அனுபவக் கூம்பு**

2. **தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் வகுப்பறையில் கற்பித்தலில் எவ்வாறு உதவுகிறது என்பதை விவரிக்க. (2010, 2014, 2017) (அல்லது) தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பப் பயன்களைக் கூறுக. (2024, 2022).**

- ஆசிரியர் சார்ந்த கற்பித்தல் வழிமுறைகளிலிருந்து மாணவர் சார்ந்த கற்றல் வழிமுறைகளுக்கு நிலை மாற்றம் **செய்வது** இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்தின் முதன்மை செயலாகிறது.
- இத்தகவல் தொழில்நுட்பம் ஓர் ஆசிரியரின் கற்பித்தல் சார்ந்த எண்ணங்களிலோ, மனப்பக்குவத்திலேலோ அல்லது அடிப்படைக் கற்றல் கற்பித்தல் வழிமுறைகளிலோ மாற்றத்தை ஏற்படுத்தாது.
- தற்போதைய கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் இத்தகவல்தொழில்நுட்பம் ஒரு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டு உண்மையான கற்றல் அனுபவம் மேம்படபயன்படுகிறது.
- கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பமானது அதன் சிறப்பியல்புகளின் படி,பாடப்பொருள் (**Subject**), நோக்கு (**Aspect**), ஊடகம் (**Medium**) என்னும் மூன்று பிரிவுகளாகப்பகுக்கப்படுகிறது.
- தகவல் தொழில்நுட்பமானது பள்ளிகளில் அமைப்பு மற்றும் மேலாண்மைக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.
- தகவல் தொழில் நுட்பம், **நேரடி** கற்றலோடு தொடர்புடையதன்று. ஆனால், வகுப்பறை அளவிலோ, பள்ளி அளவிலோ கற்றலுக்கு பக்கபலமாக அமைகிறது.
- தகவல் தொழில் நுட்பம் பற்றிய அடிப்படை உண்மைகளைக் கற்றுக் கொள்ளும்பொழுது தகவல் தொழில் நுட்பம் ஒரு "பாடப்பொருளாகிறது." (**Subject**) அதாவது, பள்ளிக்கலைத்திட்டத்தில், கணினிக் கல்வியில் பயிற்சி பெறுவதாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் கல்வியில் பயன்படுத்தப்படுமேயானால் அது ஒரு "நோக்கு" (**aspect**) ஆகும். அது தொழில் சார்ந்த கல்வியைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக,திட்டமிட்ட கலைகள் சார்ந்த கணினிப் பயிற்சி, உற்பத்தி செய்தல் மற்றும் கணினி மூலம்கணக்கீடு செய்தல் முதலியன.
- எந்த ஒரு பாடத்தையும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பித்தால், அது கற்றலை எளிதாக்குகின்றது. (எ.கா.) பொது மேனிலைக் கல்வியில் அறிவியல் கல்வியைச் சோதனைகள் மூலம் கற்பித்தல்.

- இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு "நோக்கு" என்பதன் முக்கியக் கல்விக் குறிக்கோளானது மாணவர்களை வேலைக்காகத் தயார்படுத்துவதாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஓர் "ஊடகம்" (**Medium**) என்பதில், கற்றல் கற்பித்தல் நிகழ்வின் போது, இது ஆசிரியருக்குக் கற்பித்தலுக்கான ஊடகமாகவும், மாணவருக்குக் கற்றலுக்கான ஊடகமாகவும் செயல்படுகிறது.
- தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பம் ஒரு ஊடகமாகப் பல வழிகளில்பயன்படுத்தப்படுகிறது. அவை பன்முறைப் பயிற்சி (**drill and practice exercises**), வாழ்க்கை நிலைமைகளைப் பிரதிபலித்தல் (**Simulation**), தனியாள் கற்றல் முறைகள் (**Individual learning system**) கல்வித் தொலைத் தொடர்பு வலைகள் (**Educational Tele Network**) போன்றவையாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமேயானால் அதற்கு ஆசிரியர் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு கற்பித்தல் படிநிலையாய், கற்றலுக்கு ஒரு வழியாக ஆசிரியர் பணியில் அமைகிறது.
- எனவே கற்றல் மேம்பட, ஆசிரியர் பணிமுன் பயிற்சியின் போதும், பணியிடைப்பயிற்சியின் போதும், தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த அறிந்து கொள்வது தேவையானதாகும். இவ்வாறு தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பத்தின் பங்கானது கற்பித்தல் முறைகளையும் பாடம் குறித்த கற்றல் விளைவுகளைச் சார்ந்தும் அமையும். தகவல் பரிமாற்றத்தொழில்நுட்பத்தையும் கற்றல் முறைகளையும் ஒன்றோடொன்று இணைப்பது என்பது புதிய அணுகுமுறைகளைப் புகுத்துவது அல்ல, ஆனால் எல்லா நிலைகளிலும் கற்றலை மேம்படுத்தும் ஒரு பொருள், ஒரு நோக்கு, மற்றும் ஒரு ஊடகம் என்பதே உண்மையானதாகும்.

**3. நழுவப்பட வீழ்த்தியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நிறை, குறைகள் யாவை? (2010, 2016, 2023)**
**நழுவப்பட வீழ்த்தியின் அமைப்பினை விளக்கி அதன நிறை குறைகளை பட்டியலிடுக. (2025)**

நழுவப்பட வீழ்த்தி எளிதில் கையாளக்கூடிய ஒரு மின்சாதனமாகும். அதன் நழுவங்கள் 2" × 2" *அளவு கொண்டவையாகும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட நழுவங்களிலிருந்து படம் அல்லது படத்துடன் கூடிய செய்திகள் திரையில் வீழ்த்தப்பட்டு உருப்பெருக்கம் செய்யப்பட்ட பிம்பங்களாகக் காணலாம்.* நழுவப்பட வீழ்த்தியில் வீழ்த்தும் லென்சு திறன்மிக்க மின்விளக்காகும். அது உண்டாக்கும் வெப்பத்தினை தணிக்க ஒரு சிறிய மின்விசிறி, நழுவங்கள் வைக்கக்கூடிய சிறப்புத்தாங்கி ஆகியன முக்கிய பாகங்களாகும்.

**நிறைகள்:**

- தொடர்ந்து நழுவங்களை ஒரு முறை அடுக்கியோ அதனை மாற்றியமைத்தோ பல வகைகளில் தொடர் கருத்தை விளக்குவதற்குப் பயன்படுத்தலாம்.
- தெளிவான தகவல்களைக் கொடுக்கிறது.
- பல நாள் நீடித்து உழைக்கும்.
- அனைவரின் கவனத்தையும் ஈர்க்கிறது.

**குறைகள்:**

- அறை முழுவதும் இருட்டாக்க வேண்டும்.
- நழுவம் தயாரிப்பதற்கான விலை சற்று அதிகமாகும்.
- ஐம்பது பேருக்கு மேல் உள்ள பார்வையாளர்களுக்கு இதனைப் பயன்படுத்தி விளக்கமளிக்க இயலாது.
- உயிரோட்டமுள்ள படமாக இதனைக் காண்பித்தல் இயலாது.

**4. கற்பிக்க உதவும் கருவிகளின் பொருந்தப்பாடுமையை எவ்வாறு கண்டறிவாய்?** (2011)

- மாணவரின் அறிவு நிலையையும், பாடப்பொருளையும் பொருத்தே கருவியினைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- சரியான நேரத்தில் பயன்படுத்துதல் வேண்டும்.
- தேர்ந்தெடுத்த கருவியினைப் பயன்படுத்தும் முன்னர் மாணவர்களைக் கற்றலுக்கு ஆயத்தம் செய்ய வேண்டும். கற்பித்தல் தயார்நிலை, கருவிகள் தயார்நிலை, செயல்பாடு, ஆசிரியர்-கருவி-மாணவர் - கற்றல் செயல்-விளைவு முதலியன சரியாக அமைந்துள்ளதா? அது மாணவரின் அறிவு நிலைக்கு ஏற்புடையதா? அதில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்த வேண்டுமா? படம் / விளக்கப்படம் கொண்டு விளக்கம் அளித்திருப்பின் அதிலுள்ள விளக்கவுரையை மாணவர்க் கேட்டு புரிந்து பயன்பெற இயலுமா? பாடச் செய்திகளுடன் தொடர்புடைய செய்திகளா? இக்கருவிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் செலவும், காலமும் அதனால் விளையும் பயனுக்கு ஏற்ற அளவில் உள்ளனவா? போன்ற பல்வேறு வினாக்களை எழுப்பி, தேர்ந்தெடுத்த கருவியை வடிவமைக்கத் திட்டமிட வேண்டும்.
- ஆசிரியர் கருவியினைப் பயன்படுத்தும்போது, மாணவரது கவனத்தை நிலைநிறுத்தி ஈடுபட்டுக் கற்க துணை செய்தல் வேண்டும்.
- கருவியினைப் பயன்படுத்திக் கற்பித்தபின் அதனைத் தொடர்ந்து, பாடம் தொடர்பான வேலைகளில் மாணவரது ஈடுபடுத்துதல் வேண்டும்.

DIET PVT

இவ்வாறு செய்து கற்பித்தல் நிகழ்ச்சி முடிந்த பின்னர், ஒவ்வொரு கருவியும் செயல்பட்டதைக் குறித்தும், பயன்படுத்திய முறை குறித்தும், பாடத்தோடு தொடர்புபடுத்தி அதன் பொருத்தப்பாடு குறித்தும் மீளாய்வு செய்து, ஆராய்ந்து, மதிப்பீடு செய்தல் அவசியமானதாகும்.

5. **ஊடகங்கள் மூலம் வகுப்பறைக் கற்றலை எவ்வாறு மேம்படுத்துவாய்? (2011) அல்லது பல்வகை ஊடகங்களைப் பயன்படுத்தி கற்றலை எவ்வாறு மேம்படுத்துவாய் (2013) (அல்லது) பல்வகை ஊடகத்தின் பயன்பாட்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2015)**

- பல்வகை ஊடகம் என்பது கணினி மூலமாகவோ, அல்லது பிற மின்னியக்க ஊடகங்கள் மூலமாகவோ பாடப்பதிப்பு (Texts), வரைகலை (Graphics), கலைத்திறன் (art), ஒலி (Sound), உயிரூட்டம் (Animation) மற்றும் படம் (Pictures) போன்றவற்றை இணைத்துத் தரவல்லதாகும். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகங்களை இணைத்துக் கற்பிப்பதை பல்வகை ஊடகம் என்று அழைக்கிறோம்.
- இது பலவகைப் பாடப்பதிப்புகள் (Texts), ஜன்னல் திரை வரைகலைகள் (Windows graphics) போன்றவற்றைக் கருத்துப் பரிமாற்றம் மூலம் காட்சியாக அமைக்கும் வழி முறையாகும். ஒரு கருத்தை வலியுறுத்துவதற்காகப் பல மென்பொருள் கட்டுகள் (Software packages), கருவிகள் (Tools) மற்றும் பிற ஊடகங்களான (Other media) நாளேடு, இதழ்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கம் அளிக்கலாம். இவ்வாறு ஒன்றுக்கும் மேற்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி, மாணவர்களின் ஒன்றுக்கும் மேற்பட்ட புலன் வழிக் கற்றலை ஏற்படுத்துவது கற்றலை மேலும் மேம்படுத்தும்.
- எடுத்துக்காட்டு: ஆசிரியர் வாய்மொழி வழியாகப் பாடம் கற்பிக்கிறார். மேலும் கருத்துக்களைத் தெளிவாக்க செயல்முறைகளைச் செய்து காண்பிக்கிறார். பின்னர் மாணவர்களைச் செய்து பார்க்கத் தூண்டுகிறார். வரைபடங்களைக் காண்பிக்கிறார். இவ்வாறு, கேட்டல், பார்த்தல், செய்து உணர்தல் என பலபுலன்கள் மூலம் பல ஊடகங்களைப் பயன்படுத்தி கற்றல் மேம்படஉதவுதல் மூலம் பல்வகை ஊடகங்களின் பயன்பாடு கற்பித்தலில் அமைகிறது.

6. **தொழிநுட்பத்தைத் தேர்வில் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டுடன் விவரி (2011) தொழில்நுட்பத் தேர்வின் வகைகளை எழுதுக (2015)" தேர்வுக்கான தொழில்நுட்பம்" – விளக்குக. (2018)**

- தொழில் நுட்பம் மூலம் எழுத்துத் தேர்வு, அறிவியல் பயன்பாடுகள், குழுப்பணி, பணிசார்ந்த திறன்கள், பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்ற அனைத்தையும் மதிப்பீடு செய்ய இயலும்.

- இத்தொழில்நுட்பம் மூலம் தேர்வுகளை மதிப்பீடு செய்வது தொழில்நுட்பப்பயன்பாட்டில் ஏற்பட்ட முன்னேற்றமாகும்.
- ஒளி வழி குறியீடு உணர்தல் மதிப்பிடல் (Optical Mark Recognition Evaluation)
- இணையதளம் மூலம் தேர்வுகள் (Online Testing)
- கணினி வழிக் கல்வி மூலம் தேர்வுகள் (Computer Managed Testing)
- TOEFL (Test of as a foriegn Language)
- அடைவுத் தேர்வு (Achievement Test)
- பணியாளர் தேர்வு(Staff Selection Service Commission)
- தேசிய தேர்வுகள் மதிப்பிடல் (National Testing Service) போன்றவை தொழில் நுட்பத் தேர்வுக்கான சில வகைகள்.
- இத்தேர்வுகள் மூலம், குறுகிய நேரத்திற்குள் பதிலளிக்க முடிகிறது. விபரங்களைப் பதிவு செய்தலும், மதிப்பெண் பட்டியல் தயாரிப்பதும், மதிப்பீடு செய்வதும் குறுகிய நேரத்திற்குள், எளிய முறையில் செய்ய முடிகிறது, இவ்வகை தேர்வுகள் நம்பகத்தன்மையுடையதாகவும், சரியானதாகவும், அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.
- **எடுத்துக்காட்டாக.**

TOEFL (Test of English as a foreign Language) ஆங்கிலத்தைத் தாய் மொழியாய்க் கொள்ளாத நாடுகளிலுள்ளவர்கள் இத்தேர்வில் தகுதி பெறுவது அவசியம். இத் தேர்வானது உலகம் முழுவதும் பல இடங்களில் நடத்தப்படுகிறது. ளபெரும்பாலும் கம்ப்யூட்டரில் எழுத வேண்டிய தேர்வாகவே இது நடத்தப்பட்டாலும் ஒரு சில இடங்களில் மட்டும் எழுத்துத் தேர்வாகவும் நடத்தப்படுகிறது. டோபல் தேர்வுகளின்நோக்கமானது ஆங்கிலம் எழுதப் பேசத் தெரியாத நாடுகளிலுள்ள மாணவர்களின் வட அமெரிக்க ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ளும் திறனை சோதிப்பதாக உள்ளது. டோபல் தேர்வை அமெரிக்காவிலுள்ள Educational Testing Service (ETS) என்னும் அமைப்பு நடத்துகிறது.

7. **நழுவங்களை எவ்வாறு தயாரிப்பாய்? (2012) (அல்லது) ஏதேனும் இரண்டு வகை நழுவங்களின் தயாரிப்பு முறைகளை விவரிக்க (2013) (அல்லது) கண்ணாடி துண்டுகளை வைத்து நழுவங்கள் தயாரிக்கும் முறைகள் எவையேனும் இரண்டினை எழுதுக.** (2020)

இரண்டு 2" × 2 " அளவுள்ள கண்ணாடித் துண்டுகளை எடுத்துக்கொண்டு கீழ்காணும் முறைகளில் நழுவங்களைத் தயாரிக்கலாம்.

**1. செலோஃபன் தாள் நழுவம் (Cellophane Slide)**

ஏதேனும் ஒரு கலர் செலோஃபன் தாள் எடுத்துக்கொண்டு 2" × 2 " அளவுக்குள் தேவையான உருவத்தை வரைந்து வெட்டிக்கொள்ளவேண்டும். இதனை இரு 2" × 2 " கண்ணாடித்துண்டுகளின் நடுவில் வைத்து இறுகப்பிடித்துக்கொண்டு ஓரங்களை செலோஃபன் நாடாவால் (cellotape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.

**2. கிரவுண்டட் கண்ணாடி நழுவம்**

முட்டையின் வெள்ளைக் கருவை நன்றாக கலக்கிக்கொண்டு ஒரு தூரிகையில் (Brush) ஒரு கண்ணாடித்துண்டின் ஒரு பக்கத்தில் தடவ வேண்டும். காயவைத்து மறுபடியுமாக இரண்டு அல்லது மூன்று முறை தடவி காய்ந்தபின் சாதாரண எழுதுகோள் கொண்டு அதன் மீது தேவையான செய்தியை எழுதி அல்லது படம் வரைந்தபின் மற்றொரு கண்ணடாடித் துண்டால் மூடி செலோஃபன் நாடாவால் (cellotape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.

3. **சாதாரண கண்ணாடி நழுவம் (Plain Glass Slide)**

ஒரு கண்ணாடித்துண்டில் இண்டியன் மையைக் (Indian ink) கொண்டு தேவையான செய்தியை எழுதி மற்றொரு கண்ணாடித்துண்டால் மூடி செலோஃபன் நாடாவால் (cello tape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.

4. **புகை நழுவம் (Smoke slide)**

மண்ணெண்ணை விளக்கை எரியவிட்டுக் கொண்டு ஒரு கண்ணாடித்துண்டின் ஒரு பக்கம் முழுவதும் புகைபடுமாறு அதன் மீது காண்பிக்க வேண்டும். அதன் பின் பொருள் கூறு, எதிர்சொல் கூறு போன்ற செய்திகளை கூர்முனையுள்ள பழைய அல்லது எழுதாத எழுதுகோல் மூலம் எழுதியபின் மற்றொரு கண்ணாடித் துண்டால் புகை அழியாத வகையில் சரியாக அதன்மீது பொருத்திய பின் செலோஃபன் நாடாவால் (cellotape) ஒட்டி பயன்படுத்த வேண்டும்.

5. **புகைப்பட நழுவம் (Photographic slide)**

புகைப்படம் அல்லது தலைவரின் படங்களை போன்றவற்றின் சரியான அளவில் நுணுக்கமாக வெட்டிக்கொண்டு 2" x 2 " கண்ணாடித்துண்டின் நடுவில் வைத்து செலோஃபன் நாடாவால் (**cellotape**) ஒட்டி பயன்படுத்த வேண்டும். இம்முறையில் படம் உள்ள பகுதி இருட்டாகவும் அதன் வெளி வடிவம் மட்டுமே தோன்றும்.

8. **கற்றலை மேம்படுத்த தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் மாற்றங்களை விவரிக்க.** (2016) **தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்துவதால் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை விளக்குக.** (2023 , 2025– 10 **மதிப்பெண்கள்**)

- ஓர் ஆசிரியர், ஆசிரியர் என்ற தன் பங்கிலிருந்து கற்றலை எளிதாக்குபவராகவும், அனுபவம் மிக்க நம்பிக்கையான செயலாளராகவும் மாறுகிறார்.
- மாணவர்கள் சுறுசுறுப்பான பங்கேற்பாளராக மாறுகின்றனர்.
- ஒவ்வொரு கற்றல் கற்பித்தல் செயலும் அதிகமான விளக்கங்கள் நிறைந்ததாகவும், கருத்தாழமிக்கதாகவும் மாறுகின்றது.

- தகவல் பெறும் வளங்களுக்கான வாய்ப்புகள் குறிப்பிட்ட இலக்கை நோக்கி விரிவடைகின்றன.
- மாணவர்கள் அதிக சுதந்திரத்துடன் செயல்படுகின்றனர்.
- ஆசிரியர் மாணவர் இடைவினை (Interaction) சம அளவிலும் நேரிடையாகவும் கிடைக்கிறது.
- ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாற்றம் அதிகரிக்கின்றது.
- கல்வி மாணவர்கள் மையமாக மாறுகின்றது.
- கற்றல் அவரவர் கற்கும் திறமைக்கேற்றவாறு அமைகிறது.
- அனைத்து மாணவர்களுக்குமான கற்றல் வாய்ப்புகள் சமமாக்கப்படுகின்றது.
- மாணவர் - மாணவர் இடையேயான குழுக்கருத்துப் பரிமாற்றம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கிறது.
- கற்பித்தலும். கற்றலும் வலுவடைகிறது.
- மாணவர், ஆசிரியர் வரிசை நீக்கப்பட்டு, ஆசிரியர் மாணவர்களாயும், மாணவர்கள் ஆசிரியர்களாகவும் மாறுகின்றனர்.

**9. கற்பித்தல் கற்றலில் தொழில்நுட்பக் கருவிகளால் ஏற்படும் பயன்கள் யாவை? (2019, 2025)**

**விடை: 2 மதிப்பெண்கள் விடையில் 2ம் வினா.**

**10. கருவிப்பெட்டி தயாரித்தலை விளக்குக. (2016) (அல்லது) வகுப்பறைப் பயன்பாட்டில் கருவிப்பெட்டி – விளக்குக. (2017)**

- "கருவிப் பெட்டி" என்பது கற்றல் கற்பித்தலில், ஒவ்வொரு பாடத் தலைப்பிற்கும் ஏற்றவாறு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊடகங்கள், பொருட்கள் மற்றும் கருவிகள் அனைத்தும் சேகரித்து வைக்கப்படும் பெட்டியாகும்.
- இப்பெட்டியில் உண்மைப் பொருட்கள், மாதிரிப்பொருட்கள், புத்தகத் தொகுப்புகள்,சிறுவர் கலைக்களஞ்சியங்கள் வரைபடங்கள், படங்கள் அடங்கிய தொகுப்புகள், தேசப்படங்கள், பூமி உருண்டை, பொம்மலாட்டங்கள், சிறுசிறு சோதனைகளைச் செய்து காண்பிப்பதற்குத் **தேவையான** பொருட்கள், வரைகோட்டுப் படங்கள், எளிய விலை குறைந்த பொருட்களினால் செய்யப்பட்ட கருவிகள் மேலும் சுருள்படங்கள், தலைமேல் படம் வீழ்த்திக்கான ஒளி ஊடுறுவும் தாள்கள், நழுவங்கள், ஒலி / ஒளி நாடாக்கள் போன்ற அனைத்தையும் சேகரித்து வைக்கலாம்.
- பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இப்பெட்டியை தனது கற்பித்தல் முறைக்கும், பயன்பாட்டிற்கும் ஏற்றவாறு ஆசிரியரே தயாரித்துக் கொள்ளலாம்.

- பொருட்கள் சேகரிக்கும் பணியில் மாணவர்களையும் ஈடுபடுத்திக் கொள்ளலாம். அவ்வாறு செய்யும் போது மாணவர்களின் ஆர்வம் பெருகும். பொருட்களைச் சரியான முறையில் கையாளுவதற்கும், சேதம் விளைவிக்காமல் பாதுகாப்பதற்குமான பொறுப்புணர்வும் ஏற்படும்.
- இப்பெட்டியை ஆசிரியர் தனது கற்பித்தல் செயலில் மட்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது மாணவர்கள் தனித்தனியாக மற்றும் **குழுவாக** பயன்படுத்துவதற்கேற்ப அதிக எண்ணிக்கையில் தயாரிக்கலாம். சேகரித்து வைக்கக் கூடிய பொருட்கள் அனைத்தும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், அதிக செலவில்லாததாகவும் இருந்தால் நலம். மேலும் ஒவ்வொரு பாடத்திலும் உள்ள ஒத்த திறன்களுக்கேற்ப பொருட்கள் சேகரிக்கப்பட்டிருப்பின், எல்லாப் பாடங்களிலும் இதனைப் பயன்படுத்த முடியும்.

**பயன்கள்:**

- மாணவர்களின் முழு பங்கேற்பைத் தூண்டுகிறது.
- தனியாகக் கற்றல் மற்றும் பல்புலன்வழிக் (Multi sensory) கற்றலை மேம்படுத்துகிறது.
- கற்றலை மகிழ்ச்சியுடையாதவும், வியப்பிற்குரியதாகவும் மாற்றுகிறது.
- தெளிவாக வரையறுக்கப்பட்ட கற்றல் நோக்கங்கள், குறிப்பிட்ட உபகரணங்கள் மூலம் விளக்கப்படுவதால் கற்றல் எளிமையாக்கப்படுகிறது.

**11. கணித வகுப்பறையில் பயன்படுத்தும் கருவிகளின் முழு பயன்பாட்டினை பெற தேவையான படி நிலைகளை விளக்குக.** (2020)

- ஒரு கருவியின் பல்வேறு **வகையான** செயல்பாடுகளை அறிந்து அச்செயல்பாடுகளுள் எவ்வெவற்றை கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்துஅவற்றைப் பயன்படுத்துதலே அக்கருவியின் முழுப் பயன்பாடு ஆகும்.
- ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் கருவியைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அதை ஏன் நாம (ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்) தேர்ந்தெடுத்தோம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். ஏன்? எதற்காக? என்ற கேள்விகள் கற்பித்தல் செயல்முறையில் அடிப்படைகளாக அமைதல் வேண்டும். இது உண்மையில் தேவைதானா? இதற்காக இவ்வளவு நேரத்தையும் நாட்களையும் செலவிட வேண்டுமா? இக்கருவி எதில் மற்றவற்றைக் காட்டிலும் சிறப்புடையது? இப்படிப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் ஒவ்வொரு கருவியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பின், அக்கருவியின் முழுப் பயனும் மாணவர்களுக்குக் கிட்டும்.
- கருவிகள் ஒவ்வொன்றும் சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமானால், திட்டமிட்ட கவனம் என்ற அடிப்படையில் செயல்படுதல் வேண்டும். மாணவர்கள், தாங்கள் ஏன் அக்கருவியைப் பார்க்கிறோம் அல்லது கூர்ந்து கவனிக்கிறோம் என்பதை மட்டுமல்லாது எதற்காக அக்கருவியைப் பயன்படுத்துகிறோம் என்பதையும் அறிந்திருத்தல் வேண்டும்.

DIET-PVT

- கருவிகளை முழு அளவில் பயன்படுத்துவதற்கான ஆயத்தம்" நான்கு அம்சங்களைக் கொண்டதாகும்.
- கருவிகளின் பயன்கள் மற்றும் வரையறைகள் ஆகியவற்றைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டு அவற்றைத் தேர்ந்தெடுத்தல்.
- கருவிகளைப் பற்றித் தெரிந்தகொண்டு, தேவைப்பட்டால் அவற்றை முன்கூட்டியே சோதித்துப் பார்த்து, அவற்றைப் பயன்படுத்தும் **போது** எழும் பிரச்சனைகளையும் சிக்கல்களையும் பற்றி தெளிவுபடுத்திக் கொள்ளுதல்.
- திட்டமிட்ட கற்றல் நோக்கங்களை மிகக் குறுகிய காலத்தில் அடையுமாறு பொருட்களைப் பயன்படுத்துதல்.
- தொடர் வேலை.

12. **நழுவங்கள் தயாரிக்கும் போது நீ தெரிந்து கொள்ள வேண்டியவை.** (2018)

- நழுவங்களில் உள்ள படம் மற்றும் வார்த்தைகளை அசையும் படமாக (Animation) மாற்ற,
- நழுவங்கள் காட்சி தரும் வகைகளை மாற்றி அமைக்க,
- நழுவங்களுக்கு டெம்ப்ளேட் (Template) களைப் பயன்படுத்த,
- நழுவங்களைத் தானகவே ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் அடுத்தடுத்து தோன்றுமாறு செய்ய,
- நழுவங்களில் நமது பேச்சை ஒலிப்பதிவு செய்து ஒலிக்க வைக்க,
- நிழற்படங்களை நழுவங்களில் சேர்க்க போன்ற பயிற்சிகளை, மாதிரி நழுவங்கள் தயாரித்து தெரிந்து கொள்ளும் வகையில் செய்முறைப் பயிற்சியில் ஈடுபடுத்த வேண்டும்.
- மேலும் தயாரிக்கப்பட்ட இந்நழுவங்களை பவர் பாய்ண்ட் பயன்பாட்டின் போது திரையில் வீழ்த்தும் பல் ஊடக வீழ்த்தி (Multimedia Projector) கருவியான LCD (Liquid Crystal Display) திரை வீழ்த்தி மூலம், ஒவ்வொரு நழுவங்களாகத் திரையில் வீழ்த்தி விளக்கமளித்துக் கற்பித்தலில் பயன்படுத்த வேண்டும்.

13. **ஒளி புகும் தாள்களைப் பாடக் கருத்துகளில் எவ்வாறு பயன்படுத்துவாய்?** (2015)

   **i.** மேற்பொருத்து முறை (**Over lapping method**)

   (எ. கா) சந்திர கிரகணம், சூரிய கிரகணம், மண்ணின் அடுக்குகள், பட்டுப்பூச்சியின் வாழ்க்கை வரலாறு.

   **ii.** நிழல் முறை (**Silhoutte Method**)

   (எ.கா) இரவு, பகல் உண்டாகுதல்.

**iii.** மறைத்தல் முறை (**Revelation Method**)

(எ.கா) பூமியின் அடுக்கு

**iv.** இயக்க முறை (**Movement Method**)

(எ.கா) தேனீ - பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்துச் செல்வது போல்.

- ஆசிரியர் திரையைப் பார்த்து வாசித்து விளக்கமளித்தல் கூடாது. ஒளிபுகும் தாளைப் பார்த்து காண்போரையும் கவனித்து கண் தொடர்பை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.


14. **பொம்மலாட்டம் என்றால் என்ன? பொம்மலாட்ட பொம்மையின் வகைகளைக் குறிப்பிடுக. (2014)** (**அல்லது**) **பொம்மலாட்டம் பற்றி விளக்குக. பொம்மலாட்ட பொம்மையின் வகைகளைக் கூறுக. (2022)**


- பொம்மலாட்டம் கற்பித்தலில் வகுப்பறை நிகழ்விற்குப் பெரிதும் பயன்படுகின்றன.
- கேட்டல், பேசுதல், நடித்தல் போன்ற அனைத்து திறன்களுக்கும் பொம்மலாட்டம் உதவுகின்றது.
- பொம்மலாட்ட பொம்மைகளுக்கு உயிர்கொடுத்து செயல்படுத்துபவர் ஆசிரியரே ஆவார்.
- ஆசிரியரின் குரலும், கை, விரல், அசைவுகளுமே பொம்மையை உயிருள்ள கதாபாத்திரமாகவே ஆக்குகிறது.
- வகுப்பறையில் இரண்டு மாணவர்களை திரை ஒன்றை பிடிக்கச்செய்து அதன்பின் ஆசிரியர் மறைந்து நின்று கொண்டு தமது கைகளில் இணைக்கப்பட்டுள்ள பொம்மைகள் மட்டும் மாணவர்களுக்கு தெரியும்படியாக வைத்து பொம்மலாட்டத்தினை நிகழ்த்தலாம்.

**பொம்மலாட்ட பொம்மையின் வகைகள்**

- குச்சிப் பொம்மைகள்,
- நூலினால் இயக்கக்கூடிய பொம்மைகள்,
- காகிதப்பொம்மைகள்,
- முட்டை ஓட்டுப் பொம்மைகள்,
- அட்டைப்பெட்டி பொம்மைகள்,
- பலூன் பொம்மைகள்,
- காகிதக்கூழ் பொம்மைகள்,
- கையுறை பொம்மைகள்,
- காலுறை பொம்மைகள் எனப் பல வகை உண்டு.

15. **ஏதேனும் ஒரு பாடப்பகுதியை கற்பிக்க கிளை விளக்கப்படம் மற்றும் தொடர் விளக்கப்படம் வரைக. (2019)**




16. **கணினி வழி மின் நழுவங்கள் தயாரித்தலை விளக்குக.** (2024)

- கணினியில் எம். எஸ் பவர் பாயிண்ட் என்னும் பயன்பாடு மூலம் கற்பித்தலை எளிமையாகவும் நிறைந்த பயனுடையதாகவும் மாற்ற இயலும்.
- Start ➔Program ➔Microsoft powerPoint கிளிக் செய்து பவர்பாயிண்ட் புதிய கோப்பினைத் திறக்கவும்.
- பின்னர் New Slide கிளிக் செய்யும் போது வரும் நழுவத்தில் தலைப்புகள், அது சார்ந்த செய்தி அல்லது படம் என தட்டச்சு செய்து, தேவையான வடிவத்தில் எழுத்துக்களைப் பெரியதாகவோ, சிறியதாகவோ மாற்றி, அதன் நிறத்தையும் மாற்றம் செய்து, ஒவ்வொரு நழுவங்களாகத் தயாரிக்க வேண்டும்.
- நழுவத்தில் உள்ள படம் / எழுத்திற்கு உயிரோட்டமான அசைவைக் கொடுக்கவும்.
- Slide Transition ➔ Custom animation கிளிக் செய்து, தேவையானதைத் தெரிந்தெடுக்க வேண்டும்.
- இவ்வாறு ஒரு கருத்துச்சார்ந்த பல நழுவங்கள் தயாரித்து, அவற்றை வரிசைப்படி மாற்றி, கற்பித்தலின் போது பயன்படுத்த வேண்டும்.
- இவ்வாறு கொடுக்கப்படும் செய்தி, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைவதோடு, தெளிவான செய்தியையும், மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு கற்போரிடம் கருத்துத் தெளிவையும் ஏற்படுத்துகிறது.

17. **கல்வியில் தொழில்நுட்பம், கல்வியின் தொழில்நுட்பம் – வேறுபடுத்துக.** (2026)

**கல்வியில் தொழில்நுட்பம்**

தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைக் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பயன்படுத்துவது கல்வியில் தொழில்நுட்பம் (Technology in Education) எனப்படும்.

DIET PYI

**கல்வியின் தொழில்நுட்பம்**

மாணவரது கவனத்தைக் கவரும் வழிகள், அவற்றைச் செயல்படுத்துதல், கற்பிக்கும் நோக்கங்களைத் தெளிவாக்குதல், உடனுக்குடன் வலுவூட்டிகளைப் பயன்படுத்துதல் போன்ற உளவியல் தொடர்பான கருத்துக்கள் கல்வியின் தொழில்நுட்பம் (**Technology of Education**) எனப்படும்.

**10 <u>மதிப்பெண்கள் வினா விடைகள்</u>**

1. **நழுவங்களின் வகைகளும் தயாரிப்பு முறைகளும் பற்றி விளக்குக.** (2021)

**விடை: 4 மதிப்பெண்கள் விடையில் 7ம் வினா**

2. **பல்வேறு மாதிரிகளைப் பயன்படுத்தி உன் வகுப்பறை கற்றல் கற்பித்தலை எவ்வாறு மேம்படுத்துவாய் என்பதை தகுந்த உதாரணத்துடன் விளக்குக.** (2019)

- பல நேரங்களில் நேரிடை அனுபவத்தைக் கொடுக்கக் கூடிய உண்மைப் பொருட்கள் எளிதில் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் கூட அவை மிகப் பெரியதாகவோ, கடினமானதாகவோ, கையாளுவதில் அதிகக் கவனம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடியதாகவோ, இருப்பதால் கற்பித்தலில் பயன்படுத்த முடிவதில்லை.
- மாதிரிகள் என்பது உண்மைப் பொருள்களின் மாற்று ஆகும்.
- இது உருவத்தில் செலவில் குறைந்து, பயன்படுத்த எளிதாகும் வகையில் அமைக்கப்படுகிறது.
- மேலும் இது முப்பரிமாண அமைப்பில் உண்மைப் பொருளின் பிரதிபலிப்பு ஆகும்.
  (எ.கா.) நீராவி இயந்திரம், நிலத்தை உழும் இயந்திரம் போன்றவை. இந்தச் சூழ்நிலையில் மாதிரிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.
- வகுப்பறை நிகழ்வில் சீனக் களிமண், பிளாஸ்டிக் களிமண் போன்றவற்றைக் கொடுத்து ஒரு குறிப்பிட்ட கற்றல் நிகழ்விற்கு தேவைப்படும் ஏதாவது ஒரு உபகரணத்தைச் செய்யும்படிக் கூறி அதன் மூலம் கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்திக் கற்றலை நிலைத்து நிற்கச் செய்ய முடியும்.
- இது மாணவர்களின் அறிவுப் புலம் மற்றும் உள் இயக்கப் புலம் மூலம் திறன்களை வளர்க்கப் பெரிதும் உதவுகின்றது.

**கற்பித்தல் மாதிரிகளை பயன்படுத்துவதன் நோக்கம்**:

- உண்மை அனுபவத்தைக் கொடுக்கிறது.
- தெளிவற்ற கருத்துக்களைத் தெளிவாக்குகிறது.

❖ மிகப் பெரிய செய்முறையைக் கூட மாதிரிகளைக் கொண்டு எளிதில் கூற முடியும். ஏனெனில் அதன் இயந்திரத் தன்மை, உட்புறக் காட்சிகள் அனைத்தும் விளக்கப்படுகிறது.

**மாதிரிகள் செய்வதற்கான பொருட்களை பட்டியலிடுக.**

- வெள்ளை சிமெண்ட்
- பாரிஸ் சாந்து (Plaster of paris)
- மாவு வகைகள்
- மரக்கட்டைகள்
- கடின அட்டைகள்
- சீனக் களிமண்
- பேப்பர்
- களிமண்
- M - Seal (குழாய்களில் வெடிப்புகளை அடைக்கப் பயன்படுவது)
- செய்தித்தாள் - வார்ப்புகள் etc

**ஏதேனும் ஒரு மாதிரியை பயன்படுத்தி, ஒரு பாடத்தலைப்பிற்கான மூன்று செயல்கள் அமைத்தல் / எழுதுதல்.**

3. **ஐந்தாம் வகுப்பில் ஏதேனும் இரண்டு பாடப்பொருளுக்கு கிளை விளக்கப்படம் மற்றும் தொடர் விளக்கப்படம் வரைந்து அதை எவ்வாறு வகுப்பில் பயன்படுத்துவாய்?** (2020)

கூறப்படும் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப் படங்களாகும். பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

- எளிய விளக்கப்படம் (**Simple charts**)
- கிளை விளக்கப்படம் (**Tree charts**)
- தொடர் விளக்கப்படம் (**Flow charts**)
- தொகுப்பு விளக்கப்படம் (**Flip charts**)
- மேற்பொருத்து விளக்கப்படம் (**Over lapping chart**)

❖ விளக்கப்படங்கள் அனைத்தும் தெளிவாகவும், திருத்தமாகவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைய வேண்டும்.

❖ ஒரு அட்டையில் ஒரே ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடிய படத்தை, அதன் பாகங்களோடு (அதிகபட்சம் ஆறு பாகங்கள்) வரைதல் வேண்டும். பொருத்தமான தலைப்பை பெரிய எழுத்துகளில் எழுதுதல் வேண்டும்.

DIET PVT

❖ விளக்கப்படங்கள் கிழியாமல் இருக்க நான்கு விளிம்புகளிலும் பிளாஸ்டிக் நாடவை ஒட்டிப் பாதுகாக்க வேண்டும்.

***<u>இரண்டு பாடப்பொருளுக்கு கிளை விளக்கப்படம் மற்றும் தொடர் விளக்கப்படம் வரைந்து அதை எவ்வாறு வகுப்பில் பயன்படுத்துவாய் என்பதை விரிவாக விளக்கம் அளிக்க வேண்டும். ((எ.கா) நான்கு மதிப்பெண்கள் வினா 15 ஐ போல்).</u>***

4. **ஒளிபுகும் தாள்கள் தயாரித்தலின் முறைகளை விரிவாக விளக்குக.** (2018)

தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் கற்றல் கற்பித்தல் நிகழ்த்த ஒளிபுகும் தாள்கள் பல்வேறு முறைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவை,

- மேற் பொருத்து முறை,
- இயக்கமுறை,
- மறைத்தல் முறை மற்றும்
- நிழல் முறை.

**<u>மேற்பொருத்து முறை (Over lay method)</u>**

தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் திரையில் காட்டப்படும் காட்சி சிக்கல்கள் நிறைந்ததாக இருந்தால் அதற்குப் பொருத்து விளக்க முறையில் தயாரிக்கப்பட்ட ஒளிபுகும் படத்தாள்களைப் பயன்படுத்தலாம். ஒளிபுகும் தாள்களில் பயன்படுத்தும் காட்சிகளைப் படிப்படியாகக் கையால் வரைந்தோ அல்லது அச்சடித்தோ தயாரிக்க வேண்டும். அதன் பின் ஒன்றின் மேல் ஒன்றாக ஒளிபுகும் தாள்களை வைத்து கற்றல் கற்பித்தலை ஏற்படுத்த வேண்டும்.

(எ.கா) சந்திர கிரகணம், சூரிய கிரகணம், மண்ணின் அடுக்குகள், பட்டுப்பூச்சியின் வாழ்க்கை வரலாறு

**<u>இயக்க முறை (Movement Method)</u>**

இயக்கத்தைச் சுட்டிக் காட்டும் பாடப் பொருளை தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் கற்பிக்க இம்முறை பெரிதும் பயன்படும்.

(எ.கா) தேனீ - பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்துச் செல்வது

**<u>மறைத்தல் முறை (Revelation Technique)</u>**

மறைத்தல் முறையில் ஒரு ஒளிபுகும் படத்தாளில் தயாரித்து வைக்கப்பட்டுள்ள பல படங்களில், தேவையான படங்களை மட்டும் தலைக்கு மேல் பட வீழ்த்தி மூலம் திரையில் வீழ்த்தி மற்ற படங்களை மறைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

(எ. கா) பூமியின் அடுக்கு

**<u>நிழல் முறை (Silhouette)</u>**

நிழல் முறையில் வடிவங்களை எளிதாகக் கற்பிக்கலாம்.

எ.கா) இரவு, பகல் உண்டாகுதல்

DIET PYT

**<u>ஒளிபுகும் தாள்களில் எழுதுவது / வரைவது எப்படி?</u>**

- ஒளிபுகும் தாளைக் கிடைமட்டமாகப் பயன்படுத்த வேண்டும்.
- படங்கள், வரைபடங்கள், வரைகோட்டுப் படங்கள் போன்றவற்றை வரைந்து பயன்படுத்துதல் சிறப்பானது. அதை விளக்கிக் கூறும்வார்த்தைகளைக் கரும்பலகையில் எழுத வேண்டும்.
- குறிப்பிட்ட ஒரு கருத்தை மட்டும் வலியுறுத்தும் வகையில் படங்கள் வரைதல் வேண்டும்.
- ஒரு ஒளிபுகும் தாளில் மூன்று அல்லது நான்கு சிறு படங்களுக்கு மேல் வரைவதை தவிர்க்கவும்.
- படங்கள் இல்லாத பட்சத்தில் குறைந்த சொற்களே எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரு ஒளிபுகும் தாளில் ஒரு வரிக்கு ஆறு சொற்கள் அல்லது அதற்குக் குறைந்த சொற்களை எழுதலாம்.
- முக்கிய வார்த்தைகள் காண்போரின் கவனத்தை ஈர்க்கும்.
- ஆகவே தலைப்புகளை எழுதி அதன் கீழ் முக்கிய வார்த்தைகளைக்குறிப்பிடுவது அவசியம் தெளிவாக வரைதல் / எழுதுதல் மிகவும் முக்கியமானதாகும்.
- ஒரு ஒளிபுகும் தாளில் எழுதி அதன் கீழ் ஒரு வெள்ளைத் தாளை தரை மீது வைத்துவிட்டு அதன் அருகே நின்று ஒருவரால் அவ்வெழுத்துக்களை வாசிக்கக் கூடுமேயானால் அதுவே சிறந்ததாகும்.
- இவ்வாறு எழுதப்படுவதையே வீழ்த்தியின் மூலம் சிறப்பாக வீழ்த்த முடியும். பொருத்து முறையில் அமைக்கப் பெறும் ஒளிபுகும் தாள்கள் கடினமான கருத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படி பயன்படுத்தும்போது எளிமையாக்கி விடும்.


5. **தகவல் பரிமாற்ற தொழில்நுட்பத்தின் பயன்களை விளக்குக. (2017) கற்றல் கற்பித்தலில் கற்றலை மேம்படுத்த தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுகிறது என்பதை விளக்குக.(2026)**

- ஆசிரியர் சார்ந்த கற்பித்தல் வழிமுறைகளிலிருந்து மாணவர் சார்ந்த கற்றல் வழிமுறைகளுக்கு நிலை மாற்றம் செய்வது இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பத்தின் முதன்மை செயலாகிறது.
- இத்தகவல் தொழில்நுட்பம் ஓர் ஆசிரியரின் கற்பித்தல் சார்ந்த எண்ணங்களிலோ, மனப்பக்குவத்திலேலோ அல்லது அடிப்படைக் கற்றல் கற்பித்தல் வழிமுறைகளிலோ மாற்றத்தை ஏற்படுத்தாது.
- தற்போதைய கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் இத்தகவல்தொழில்நுட்பம் ஒரு மாற்றாகப் பயன்படுத்தப்பட்டு உண்மையான கற்றல் அனுபவம் மேம்படபயன்படுகிறது.
- கற்றல் கற்பித்தலில் தகவல் தொழில் நுட்பமானது அதன் சிறப்பியல்புகளின் படி,பாடப்பொருள் (Subject), நோக்கு (Aspect), ஊடகம் (Medium) என்னும் மூன்று பிரிவுகளாகப்பகுக்கப்படுகிறது.

- தகவல் தொழில்நுட்பமானது பள்ளிகளில் அமைப்பு மற்றும் மேலாண்மைக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.
- தகவல் தொழில் நுட்பம், நேரடி கற்றலோடு தொடர்புடையதன்று. ஆனால், வகுப்பறை அளவிலோ, பள்ளி அளவிலோ கற்றலுக்கு பக்கபலமாக அமைகிறது.
- தகவல் தொழில் நுட்பம் பற்றிய அடிப்படை உண்மைகளைக் கற்றுக் கொள்ளும்பொழுது தகவல் தொழில் நுட்பம் ஒரு "பாடப்பொருளாகிறது." (Subject) அதாவது, பள்ளிக்கலைத்திட்டத்தில், கணினிக் கல்வியில் பயிற்சி பெறுவதாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் கல்வியில் பயன்படுத்தப்படுமேயானால் அது ஒரு "நோக்கு" (aspect) ஆகும். அது தொழில் சார்ந்த கல்வியைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக,திட்டமிட்ட கலைகள் சார்ந்த கணினிப் பயிற்சி, உற்பத்தி செய்தல் மற்றும் கணினி மூலம்கணக்கீடு செய்தல் முதலியன.
- எந்த ஒரு பாடத்தையும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கற்பித்தால், அது கற்றலை எளிதாக்குகின்றது. (எ.கா.) பொது மேனிலைக் கல்வியில் அறிவியல் கல்வியைச் சோதனைகள் மூலம் கற்பித்தல்.
- இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு "நோக்கு" என்பதன் முக்கியக் கல்விக் குறிக்கோளானது மாணவர்களை வேலைக்காகத் தயார்படுத்துவதாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒர் "ஊடகம்" (Medium) என்பதில், கற்றல் கற்பித்தல் நிகழ்வின் போது, இது ஆசிரியருக்குக் கற்பித்தலுக்கான ஊடகமாகவும், மாணவருக்குக் கற்றலுக்கான ஊடகமாகவும் செயல்படுகிறது.
- தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பம் ஒரு ஊடகமாகப் பல வழிகளில்பயன்படுத்தப்படுகிறது. அவை பன்முறைப் பயிற்சி (drill and practice exercises), வாழ்க்கை நிலைமைகளைப் பிரதிபலித்தல் (Simulation), தனியாள் கற்றல் முறைகள் (Individual learning system) கல்வித் தொலைத் தொடர்பு வலைகள் (Educational Tele Network) போன்றவையாகும்.
- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமேயானால் அதற்கு ஆசிரியர் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது இத்தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம் ஒரு கற்பித்தல் படிநிலையாய், கற்றலுக்கு ஒரு வழியாக ஆசிரியர் பணியில் அமைகிறது.
- எனவே கற்றல் மேம்பட, ஆசிரியர் பணிமுன் பயிற்சியின் போதும், பணியிடைப்பயிற்சியின் போதும், தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த அறிந்து கொள்வது தேவையானதாகும். இவ்வாறு தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பத்தின் பங்கானது கற்பித்தல்

முறைகளையும் பாடம் குறித்த கற்றல் விளைவுகளைச் சார்ந்தும் அமையும். தகவல் பரிமாற்றத்தொழில்நுட்பத்தையும் கற்றல் முறைகளையும் ஒன்றோடொன்று இணைப்பது என்பது புதிய அணுகுமுறைகளைப் புகுத்துவது அல்ல, ஆனால் எல்லா நிலைகளிலும் கற்றலை மேம்படுத்தும் ஒரு பொருள், ஒரு நோக்கு, மற்றும் ஒரு ஊடகம் என்பதே உண்மையானதாகும்.

6. **கேள்வி காட்சி கருவிகளின் வகைப்பாட்டை கூறி இவை கற்றல் கற்பித்தலில் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்குக.** (2012,2014,2016) **(அல்லது) கற்றல் கற்பித்தல் நிகழ்வின் துணைக் கருவிகளின் பங்கு** (2013) **(அல்லது) கற்றல் கற்பித்தல் பொருட்களைப் பயன்படுத்தி வகுப்பறையில் எவ்வாறு கற்பித்தலை மேற்கொள்வாய் என்பதைச் சான்றுடன் விவரி.** (2015)




**கற்றல் கற்பித்தல் கருவிகள்**

**<u>1. தலைமேல் படவீழ்த்தி</u>**:

**<u>மேற்பொருத்து முறை (Over lay method)</u>**

தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் திரையில் காட்டப்படும் காட்சி சிக்கல்கள் நிறைந்ததாக இருந்தால் அதற்குப் பொருத்து விளக்க முறையில் தயாரிக்கப்பட்ட ஒளிபுகும் படத்தாள்களைப் பயன்படுத்தலாம். ஒளிபுகும் தாள்களில் பயன்படுத்தும் காட்சிகளைப் படிப்படியாகக் கையால் வரைந்தோ அல்லது அச்சடித்தோ தயாரிக்க வேண்டும். அதன் பின் ஒன்றின் மேல் ஒன்றாக ஒளிபுகும் தாள்களை வைத்து கற்றல் கற்பித்தலை ஏற்படுத்த வேண்டும்.

(எ. கா) சந்திர கிரகணம், சூரிய கிரகணம், மண்ணின் அடுக்குகள், பட்டுப்பூச்சியின் வாழ்க்கை வரலாறு

**<u>இயக்க முறை (Movement Method)</u>**

இயக்கத்தைச் சுட்டிக் காட்டும் பாடப் பொருளை தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் கற்பிக்க இம்முறை பெரிதும் பயன்படும்.

(எ.கா) தேனீ - பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்துச் செல்வது

**<u>மறைத்தல் முறை (Revelation Technique)</u>**

மறைத்தல் முறையில் ஒரு ஒளிபுகும் படத்தாளில் தயாரித்து வைக்கப்பட்டுள்ள பல படங்களில், தேவையான படங்களை மட்டும் தலைக்கு மேல் பட வீழ்த்தி மூலம் திரையில் வீழ்த்தி மற்ற படங்களை மறைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

(எ.கா) பூமியின் அடுக்கு

**<u>நிழல் முறை (Silhouette)</u>**

நிழல் முறையில் வடிவங்களை எளிதாகக் கற்பிக்கலாம்.

எ.கா) இரவு, பகல் உண்டாகுதல்

**2. நழுவப்படவீழ்த்தி: 4 மதிப்பெண்கள் விடையில் 7ம் வினா**

**3. கணினி வழி நழுவங்கள்:**

கணினியில் எம். எஸ் பவர் பாயிண்ட் என்னும் பயன்பாடு மூலம் கற்பித்தலை எளிமையாகவும் நிறைந்த பயனுடையதாகவும் மாற்ற இயலும்.

Start - Program - Microsoft powerPoint கிளிக் செய்து பவர்பாயிண்ட் புதிய கோப்பினைத் திறக்கவும்.

பின்னர் New Slide கிளிக் செய்யும் போது வரும் நழுவத்தில் தலைப்புகள், அது சார்ந்த செய்தி அல்லது படம் என தட்டச்சு செய்து, தேவையான வடிவத்தில் எழுத்துக்களைப் பெரியதாகவோ, சிறியதாகவோ மாற்றி, அதன் நிறத்தையும் மாற்றம் செய்து, ஒவ்வொரு நழுவங்களாகத் தயாரிக்க வேண்டும்.

நழுவத்தில் உள்ள படம் / எழுத்திற்கு உயிரோட்டமான அசைவைக் கொடுக்கவும்.

Slide Transition - Custom animation கிளிக் செய்து, தேவையானதைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு கருத்துச்சார்ந்த பல நழுவங்கள் தயாரித்து, அவற்றை வரிசைப்படி மாற்றி, கற்பித்தலின் போது பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு கொடுக்கப்படும் செய்தி, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைவதோடு, தெளிவான செய்தியையும், மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு கற்போரிடம் கருத்துத் தெளிவையும் ஏற்படுத்துகிறது.

**4. மாதிரிகள்: 10 மதிப்பெண்கள் விடையில் 2ம் வினா**



DIET PYT

**5. விளக்கப் படங்கள்**:

கூறப்படும் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப் படங்களாகும். பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

- எளிய விளக்கப்படம் (**Simple charts**)
- கிளை விளக்கப்படம் (**Tree charts**)
- தொடர் விளக்கப்படம் (**Flow charts**)
- தொகுப்பு விளக்கப்படம் (**Flip charts**)
- மேற்பொருத்து விளக்கப்படம் (**Over lapping chart)**

- விளக்கப்படங்கள் அனைத்தும் தெளிவாகவும், திருத்தமாகவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைய வேண்டும்.
- ஒரு அட்டையில் ஒரே ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடிய படத்தை, அதன் பாகங்களோடு (அதிகபட்சம் ஆறு பாகங்கள்) வரைதல் வேண்டும். பொருத்தமான தலைப்பை பெரிய எழுத்துகளில் எழுதுதல் வேண்டும்.
- விளக்கப்படங்கள் கிழியாமல் இருக்க நான்கு விளிம்புகளிலும் பிளாஸ்டிக் நாடவை ஒட்டிப் பாதுகாக்க வேண்டும்.

**6. மின்னட்டைகள்**: **2 மதிப்பெண்கள் விடையில் 38ம் வினா**

**7. பொம்மலாட்டம்**: **2 மதிப்பெண்கள் விடையில் 40 மற்றும் 41 ஆம் வினா**

7. **கற்றலை மேம்படுத்த தகவல் பரிமாற்றுத் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவாய்? (2011)**

**தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பம்**:

- தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பமானது (information and communication Technology) ஒரு தனி தொழில்நுட்பமன்று.
- இயந்திர நுட்பவியல், மென்நுட்பவியல், ஊடகம் மற்றும் வெளிப்படுத்தும் முறைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.
- எனவே பல்வகை ஊடகங்களை ஒருங்கிணைத்தல், கருத்துக்களைப் பரிமாற்றும் விதம், பயன்படுத்துவதிலுள்ள நெகிழ்வுத் தன்மை மற்றும் ஒன்றோடொன்றை இணைத்தல் போன்ற பரிமாணங்களில்இத்தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பமானது தனிச் சிறப்புப் பெற்று, முந்தைய தொழில் நுட்பங்களிலிருந்து மாறுபட்டு வெளிப்படுகிறது.

**தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பமும் கற்றல் மேம்பாடும்:**

- அறிவைப் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தலில் ஏற்பட்ட முன்னேற்றமும், தகவல் பரிமாற்றத் தொழில்நுட்பமும், மாறி வரும் கல்வித் தேவைகளுக்கேற்ப மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
- ஒரு தனி நபரைத் தகவல்களைக் கையாளுவதற்கேற்ப தயார் படுத்த இன்றைய கல்விமுறை நிறைய சவால்களைச் சந்தித்து வருகிறது. குறிப்பாகக் கணினிகள் இணையதளத்தோடு இருக்குமேயானால், அது அனைத்து வகுப்பறைச் செயல்பாடுகளையும் மாற்றவல்லதாகும்.
- எனவே இத்தகவல் பரிமாற்றத் தொழில் நுட்பமானது ஆசிரியர் கல்விப் பயிற்சியில் மற்ற துறைகளைக் காட்டிலும் ஆசிரியப் பணியை சிறப்பாக மாற்றிவிடும்.
- ஒவ்வொரு ஆசிரியரும் வெறும் தொழில்நுட்பத்திற்காக மாத்திரம் அதைப் பயன்படுத்தாமல், தகவலைப் பரிமாற்றுவதற்கு அதன் முழுப் பயனும் கிட்டும் வகையில் அதனைப் பயன்படுத்துவது அவசியமானதாகும்.
- ஆசிரியர், மாணவர், பாடப்பொருள், கற்றல் கற்பித்தல் துணைப்பொருள்கள் என்னும் நான்கு உட்பொருள்களிடையே சமநிலைப்பாட்டை ஏற்படுத்தும் போது கற்றல் – கற்பித்தல் இலக்குகள் எளிதாக வெற்றியடைகின்றன.
- எனவே பாடப்பொருள் கருத்து, ஆசிரியரால் ஏற்படுத்தப்படும் கற்றல் செயல்பாடுகளின் அமைப்பு, தேவையான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் ஆகிய அனைத்தையும் சரியாக மாற்றியமைத்துக் கொள்ள வழி வகுக்கிறது.
- தகவல் தொழில்நுட்ப கற்றல் அணுகுமுறை மாணவர்களின் கற்றல் அடைவிற்குஆற்றல் மிக்க பாலமாக இருக்கிறது. மாணவர்களைத் தயார் படுத்துவதோடல்லாமல் தகவல்கள் நிறைந்த சமுதாயத்தைச் சந்திக்கத் தகுதியுடையவர்களாகவும் மாற்றுகின்றது.
- கணினி மயமாக்குதல் என்னும் சூழலில் தகவல் தொழில்நுட்பமான விலை பயனுடைய முதலீடு (Cost effectiveness) ஆகும். கற்பித்தல் முறைகள், கலைத்திட்டம், மதிப்பீடு மற்றும் பள்ளி அமைப்பில் உடன் நிகழ்த்த வேண்டிய புதுமைகள் அனைத்தும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டில் இணைக்கப்பட்டு முயற்சியும் நேரமும் இக்கருவிகளைப் பயன்படுத்துவதில் செலவிடப்படுமேயானால், கல்வியில் சிறந்த முன்னேற்றத்தை வெளிக் கொணர முடியும்.

தகவல் பரிமாற்றுத் தொழில்நுட்பத்தின் பயன்கள்:

**10 மதிப்பெண்கள் விடையில் 2ம் வினா**

**********************************

**8. கல்வியில் தொழில்நுட்பம் என்றால் என்ன? அது கற்றல்/கற்பித்தலுக்கு எவ்வாறு பயன்படுகிறது? (2010)**

**கல்வியில் தொழில்நுட்பம் (Technology in Education):**

தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளைக் கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பயன்படுத்துவது கல்வியில் தொழில்நுட்பம் (Technology in Education) எனப்படும்.

DIET PVT

**இயந்திர நுட்பவியல்**

அறிவியலின் மின்காந்தத் தன்மைகளையும், பொறியியற் தத்துவங்களையும் பயன்படுத்தி, கற்பிக்கத் துணை செய்யும் மின் இயந்திர சாதனங்களைத் தயாரிப்பது இயந்திர நுட்பவியல் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

அனைத்துப் படவீழ்த்திகள், நாடாப் பதிவுக்கருவி, வானொலி, தொலைக்காட்சி, உள்ளரங்குத் தொலைக்காட்சி (CCTV), கணினி போன்றவை இயந்திர நுட்பவியலின் சாதனங்களாகும்.

**கற்றல்/கற்பித்தலில் தொழில்நுட்பக்கருவிகளால் ஏற்படும் பயன்கள்:**

- பங்கேற்பின் மூலம் கற்றுக்கொள்ள, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட உதவுகிறது.
- பொருளின் உண்மைத்தன்மையை உணர உதவுகின்றது.
- ஒவ்வொரு செயலிலும் கருத்துருவாக்கம் ஏற்பட உதவுகின்றது.
- திட்டமிடவும், செய்துபார்க்கவும் தூண்டும் வகையில் அமைகின்றது.
- கற்றலை மேம்படுத்தி, நினைவில் நிறுத்திக்கொள்ள உதவுகின்றது.
- தானே செய்து கற்பதால் உண்மை அனுபவத்தைக் கொடுப்பதோடு, தன்னம்பிக்கை வளரவும் உதவுகின்றது.
- குறைந்த நேரத்தில் தெளிவான நிலைத்த கற்றல் ஏற்பட உதவுகின்றது.
- மனதளவிலும் உடலளவிலும் செயல்படுத்தவேண்டும் என்ற ஊக்கம் பெற உதவுகிறது.
- கருத்து சார்ந்த படம் மனதில் பதிவாகி, திரும்பச் சரியான தகவலைக்கூற உதவுகின்றது.
- பெற்றுக்கொண்ட அனுபவமானது, ஆழந்த, வித்தியாசமான நடைமுறையில் உண்மையென்று கொள்ளத்தக்க அறிவைப் பெற உதவுகின்றது.

9. **விளக்கப் படங்கள், மின்னட்டைகள், கணித வரைகோட்டுப் படங்கள் தயாரித்தல் பற்றி படத்துடன் விளக்குக.** (2022)

**விளக்கப் படங்கள்:**

கூறப்படும் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப் படங்களாகும். பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

- எளிய விளக்கப்படம் (**Simple charts**)
- கிளை விளக்கப்படம் (**Tree charts**)
- தொடர் விளக்கப்படம் (**Flow charts**)

- ➢ தொகுப்பு விளக்கப்படம் (**Flip charts**)
- ➢ மேற்பொருத்து விளக்கப்படம் (**Over lapping chart)**

❖ விளக்கப்படங்கள் அனைத்தும் தெளிவாகவும், திருத்தமாகவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைய வேண்டும்.

❖ ஒரு அட்டையில் ஒரே ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடிய படத்தை, அதன் பாகங்களோடு (அதிகபட்சம் ஆறு பாகங்கள்) வரைதல் வேண்டும். பொருத்தமான தலைப்பை பெரிய எழுத்துகளில் எழுதுதல் வேண்டும்.

❖ விளக்கப்படங்கள் கிழியாமல் இருக்க நான்கு விளிம்புகளிலும் பிளாஸ்டிக் நாடவை ஒட்டிப் பாதுகாக்க வேண்டும்.

**மின்னட்டைகள்:** **2 மதிப்பெண்கள் விடையில் 38ம் வினா**

**கணித வரைகோட்டுப் படங்கள்:**

கணித வரைகோட்டுப் படங்கள்


வரை கோட்டுப் படங்கள் குறிப்பிட்ட கருத்தினை எளிதாக, விரைவாக, துல்லியமாகக் கொடுக்கப்பட்ட அட்டவணை எண் உருக்களின் தொகுப்பை அல்லது தொடர்பினை விளக்கும் துணைக் கருவியாகும். பயன்படுத்துவோருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி எளிதில் புரிந்து கொள்ள உதவும். இதன் வகைகளாவன:

வரைகோட்டுப் படங்கள்

- நேர்கோட்டு வரைபடம் (line graph)
- செவ்வக வரைபடம் (Bar Graph)
- வட்டவரைபடம் (Pie graph)
- பட வரைபடம் (Pictorical graph)


தூண் வரை படம் (Bar Digram)

தொடர்புடைய இரு அளவுகளை x, y அச்சுகளில் நிறுத்தி கொடுக்கப்பட்ட அளவுகளிலிருந்து வரையப்படும் வரைபடமாகும். ஒப்பிடவும் உதவும். பட்டைக் கோடுகள் அல்லது பிரிவுகள் ஐந்து அல்லது ஆறுக்கு மிகாமல் இருத்தல் நலம். செங்குத்து, கிடைபட்டை கோடுகளையும் வரைபடத்தில் வரையலாம்.





நேர்க்கோட்டு வரைபடம்

தொடர்புடைய இரு அளவுகளை x, y அச்சுகளில் நிறுத்தி பல புள்ளிகளைக் குறித்து இணைக்கும் கோடாகும்.




வட்ட வரைபடம்





கொடுக்கப்பட்ட விவரங்களை, வட்டக் கோணப்பகுதிகளாக மாற்றி, ஒரு முழு வட்டத்தில் குறித்துக்காட்டும் வரைபடம் வட்டவரைப்படம் எனப்படும்.

பட வரைபடம்

புள்ளித் தொகுப்பியல் விவரங்களை எண்களாக மட்டும் அளிக்காமல் எண்களுடன் அந்தந்த எண்களுக்கு ஏற்ற வகையில் படங்களையும் இணைத்துக் காட்டுவது பட வரைபடமாகும். ஒப்பிட்டு நோக்க இவ்வகை வரைபடம் பயன்படும்.




**10. ஒரு மாணவன் ஆண்டுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் விவரம் பின்வருமாறு. தமிழ் – 75, ஆங்கிலம் – 80, கணிதம் – 56, அறிவியல் – 71, சமூக அறிவியல் – 65. இதற்கான வட்ட வரைபடம் வரைக. (2023)**




**11. வகுப்பறை பயன்பாட்டிற்கான கற்றல் கற்பித்தல் பொருட்கள் தயாரித்தலை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2024)**

**<u>1. தலைமேல் படவீழ்த்தி</u>:**

**<u>மேற்பொருத்து முறை (Over lay method)</u>**

தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் திரையில் காட்டப்படும் காட்சி சிக்கல்கள் நிறைந்ததாக இருந்தால் அதற்குப் பொருத்து விளக்க முறையில் தயாரிக்கப்பட்ட ஒளிபுகும்

படத்தாள்களைப் பயன்படுத்தலாம். ஒளிபுகும் தாள்களில் பயன்படுத்தும் காட்சிகளைப் படிப்படியாகக் கையால் வரைந்தோ அல்லது அச்சடித்தோ தயாரிக்க வேண்டும். அதன் பின் ஒன்றின் மேல் ஒன்றாக ஒளிபுகும் தாள்களை வைத்து கற்றல் கற்பித்தலை ஏற்படுத்த வேண்டும்.

(எ. கா) சந்திர கிரகணம், சூரிய கிரகணம், மண்ணின் அடுக்குகள், பட்டுப்பூச்சியின் வாழ்க்கை வரலாறு

**இயக்க முறை (Movement Method)**

இயக்கத்தைச் சுட்டிக் காட்டும் பாடப் பொருளை தலைக்கு மேல் பட வீழ்த்தியின் மூலம் கற்பிக்க இம்முறை பெரிதும் பயன்படும்.

(எ.கா) தேனீ - பூவிலிருந்து மகரந்தத் தூளை எடுத்துச் செல்வது

**மறைத்தல் முறை (Revelation Technique)**

மறைத்தல் முறையில் ஒரு ஒளிபுகும் படத்தாளில் தயாரித்து வைக்கப்பட்டுள்ள பல படங்களில், தேவையான படங்களை மட்டும் தலைக்கு மேல் பட வீழ்த்தி மூலம் திரையில் வீழ்த்தி மற்ற படங்களை மறைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

(எ. கா) பூமியின் அடுக்கு

**நிழல் முறை (Silhouette)**

நிழல் முறையில் வடிவங்களை எளிதாகக் கற்பிக்கலாம்.

எ.கா) இரவு, பகல் உண்டாகுதல்

**2. நழுவப்படவீழ்த்தி: 4 மதிப்பெண்கள் விடையில் 7ம் வினா**

**3. கணினி வழி நழுவங்கள்:**

கணினியில் எம். எஸ் பவர் பாயிண்ட் என்னும் பயன்பாடு மூலம் கற்பித்தலை எளிமையாகவும் நிறைந்த பயனுடையதாகவும் மாற்ற இயலும்.

Start - Program - Microsoft powerPoint கிளிக் செய்து பவர்பாயிண்ட் புதிய கோப்பினைத் திறக்கவும்.

பின்னர் New Slide கிளிக் செய்யும் போது வரும் நழுவத்தில் தலைப்புகள், அது சார்ந்த செய்தி அல்லது படம் என தட்டச்சு செய்து, தேவையான வடிவத்தில் எழுத்துக்களைப் பெரியதாகவோ, சிறியதாகவோ மாற்றி, அதன் நிறத்தையும் மாற்றம் செய்து, ஒவ்வொரு நழுவங்களாகத் தயாரிக்க வேண்டும்.

நழுவத்தில் உள்ள படம் / எழுத்திற்கு உயிரோட்டமான அசைவைக் கொடுக்கவும்.

Slide Transition - Custom animation கிளிக் செய்து, தேவையானதைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

இவ்வாறு ஒரு கருத்துச்சார்ந்த பல நழுவங்கள் தயாரித்து, அவற்றை வரிசைப்படி மாற்றி, கற்பித்தலின் போது பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு கொடுக்கப்படும் செய்தி, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைவதோடு, தெளிவான செய்தியையும், மனதில் நிலைத்து நிற்கும் அளவிற்கு கற்போரிடம் கருத்துத் தெளிவையும் ஏற்படுத்துகிறது.

**4. மாதிரிகள்: 10 மதிப்பெண்கள் விடையில் 2ம் வினா**

**5. விளக்கப் படங்கள்:**

கூறப்படும் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள உதவுபவையே விளக்கப் படங்களாகும். பாடக் கருத்துக்களின் தன்மை மற்றும் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளுக்கேற்ப தயாரிக்கப்படும் விளக்கப்படங்களை பல வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

- எளிய விளக்கப்படம் (**Simple charts**)
- கிளை விளக்கப்படம் (**Tree charts**)
- தொடர் விளக்கப்படம் (**Flow charts**)
- தொகுப்பு விளக்கப்படம் (**Flip charts**)
- மேற்பொருத்து விளக்கப்படம் (**Over lapping chart**)

- விளக்கப்படங்கள் அனைத்தும் தெளிவாகவும், திருத்தமாகவும், மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைய வேண்டும்.
- ஒரு அட்டையில் ஒரே ஒரு கருத்தை வலியுறுத்தக் கூடிய படத்தை, அதன் பாகங்களோடு (அதிகபட்சம் ஆறு பாகங்கள்) வரைதல் வேண்டும். பொருத்தமான தலைப்பை பெரிய எழுத்துகளில் எழுதுதல் வேண்டும்.
- விளக்கப்படங்கள் கிழியாமல் இருக்க நான்கு விளிம்புகளிலும் பிளாஸ்டிக் நாடவை ஒட்டிப் பாதுகாக்க வேண்டும்.

**6. மின்னட்டைகள்: 2 மதிப்பெண்கள் விடையில் 38ம் வினா**

**7. பொம்மலாட்டம்: 2 மதிப்பெண்கள் விடையில் 40 மற்றும் 41 ஆம் வினா**

**12. கருவிப்பெட்டி தயாரித்தல், தயாரிக்கும் போது நினைவிற் கொள்ள வேண்டியவை குறித்து விளக்குக.** (2026 – 10 **மதிப்பெண்கள்**)

**கருவிப்பெட்டி:**

- கருவிப் பெட்டி ” என்பது கற்றல் கற்பித்தலில், ஒவ்வொரு பாடத் தலைப்பிற்கும் ஏற்றவாறு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊடகங்கள், பொருட்கள் மற்றும் கருவிகள் அனைத்தும் சேகரித்து வைக்கப்படும் பெட்டியாகும்.

DIET PYT

- இப்பெட்டியில் உண்மைப் பொருட்கள், மாதிரிப்பொருட்கள், புத்தகத் தொகுப்புகள்,சிறுவர் கலைக்களஞ்சியங்கள் வரைபடங்கள், படங்கள் அடங்கிய தொகுப்புகள், தேசப்படங்கள், பூமி உருண்டை, பொம்மலாட்டங்கள், சிறுசிறு சோதனைகளைச் செய்து காண்பிப்பதற்குத் **தேவையான** பொருட்கள், வரைகோட்டுப் படங்கள், எளிய விலை குறைந்த பொருட்களினால் செய்யப்பட்ட கருவிகள் மேலும் சுருள்படங்கள், தலைமேல் படம் வீழ்த்திக்கான ஒளி ஊடுறுவும் தாள்கள், நழுவங்கள், ஒலி / ஒளி நாடாக்கள் போன்ற அனைத்தையும் சேகரித்து வைக்கலாம்.
- பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இப்பெட்டியை தனது கற்பித்தல் முறைக்கும், பயன்பாட்டிற்கும் ஏற்றவாறு ஆசிரியரே தயாரித்துக் கொள்ளலாம்.
- பொருட்கள் சேகரிக்கும் பணியில் மாணவர்களையும் ஈடுபடுத்திக் கொள்ளலாம். அவ்வாறு செய்யும் போது மாணவர்களின் ஆர்வம் பெருகும். பொருட்களைச் சரியான முறையில் கையாளுவதற்கும், சேதம் விளைவிக்காமல் பாதுகாப்பதற்குமான பொறுப்புணர்வும் ஏற்படும்.
- இப்பெட்டியை ஆசிரியர் தனது கற்பித்தல் செயலில் மட்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது மாணவர்கள் தனித்தனியாக மற்றும் **குழுவாக** பயன்படுத்துவதற்கேற்ப அதிக எண்ணிக்கையில் தயாரிக்கலாம். சேகரித்து வைக்கக் கூடிய பொருட்கள் அனைத்தும் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், அதிக செலவில்லாததாகவும் இருந்தால் நலம். மேலும் ஒவ்வொரு பாடத்திலும் உள்ள ஒத்த திறன்களுக்கேற்ப பொருட்கள் சேகரிக்கப்பட்டிருப்பின், எல்லாப் பாடங்களிலும் இதனைப் பயன்படுத்த முடியும்.

**கருவிப்பெட்டி தயாரிக்கும் போது நினைவிற் கொள்ள வேண்டியவை**

- ஒவ்வொரு பாடத்திலும், ஒரு குறிப்பட்ட கற்றல் இலக்கை அடைவதற்கேற்றவாறும் திறனை வளர்ப்பதற்கேற்றவாறும் கருவிகளைச் சேகரித்துப் பயன்படுத்துதல் வேண்டும்.
- மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதற்கேற்றவாறு கருவிகளைக் கையாளச் செய்தல் வேண்டும்.
- ஒவ்வொரு கருவியையும் பயன்படுத்தும்போது பாடப்பொருளோடு தொடர்புடைய மற்ற தெரிந்த கருத்துக்களையும் நினைவு கூர்தல் வேண்டும்.
- ஒவ்வொரு படிநிலையிலும், கேள்விகள் கேட்டு கருத்துக்கள் மாணவர்களைச் சென்றடைந்தனவா? என்பதை அறிந்து அதற்கேற்றவாறு கருவிகளை ஆசிரியர்பயன்படுத்த வேண்டும்.

## 2. வகுப்பறைச்சூழல்

## இரண்டு மதிப்பெண்கள்

1. **நெகிழ்வுத் தன்மை கொண்ட வகுப்பறை எவ்வாறு இருக்கும்?** (2010, 2014, 2017) **வகுப்பறை ஏன் நெகிழ்வுத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்?** (2012) **நெகிழ்வுத் தன்மை கொண்ட வகுப்பறை – விளக்குக.** (2022)

- ஒரு வசதியான வகுப்பறை இடவசதி மாணவர்கள் செயல் செய்து பார்க்க ஒரு தடையாக இல்லாமல் எந்த வகையான கற்றல் செயல், செயல் திட்டம், பரிசோதனை என்றாலும் அறையை மாற்றிப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.
- மாணவர் தனியாகக் கற்கவும், குழுவாகக் கற்கவும் வகுப்பு மாணவர்கள் அனைவரும் கூடிக்கற்கவும், தேவையெனில் புதிய இடவசதியை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் அளிக்க வேண்டும்.
- இடவசதியில் கூடுதல், குறைத்தல், விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் (Flexible classroom) நெகிழ்வுத்தன்மை கொண்ட வகுப்பறையே சிறந்த வகுப்பறையாகும்.

2. **குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் இரண்டினை எழுதுக.** (2010)

**குழந்தையின் அடிப்படை தேவைகள் நான்கினை கூறுக.** (2016)

- ஒரு குழந்தையின் அடிப்படைத் தேவை என்பது அதன் அடிப்படை உரிமையாகும்.
- ஒரு குழந்தைக்கு அடிப்படை தேவை சத்துள்ள உணவு, உடல்நலம், பாசமுள்ள உறவு, ஒழுக்க உணர்வு, ஆன்மீக உணர்வு, பாதுகாப்பான சுற்றுச் சூழல், பயனுள்ள பொழுதுபோக்கு வசதிகள் ஆகியன ஆகும். இவற்றை எல்லாம் ஒரு குழந்தை பெற தெளிந்த அறிவு, கற்பனை வளமிக்க படைப்பாற்றல் தேவை. ஒரு வகுப்பறைச் சூழல் குழந்தைக்கு தெளிந்த அறிவையும், கற்பனை வளமிக்க படைப்பாற்றல் திறனையும் வளர்க்கும் பாசறையாகத் திகழ்தல் வேண்டும்.

3. **மாணவர்களுக்கு ஏன் பாதுகாப்பான வகுப்பறைச் சூழல் அவசியமாகிறது?** (2011, 2025)

- வகுப்பறையின் உட்புறச் சூழல் வசதி, இருக்கைகள், தளவாடப் பொருட்கள், வேதியியல் பொருட்கள், மின்சார, மின்னியல் கருவிகள் ஆகிய அனைத்தும் மாணவர்களுக்கு உடல் ரீதியான எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தா வண்ணம் எளிதாகக் கையாளும் வகையில் நிறுவிப் பராமரித்தல் வேண்டும்.



DIET PYT

- கற்றலுக்கான செயல்களை செய்வதற்கு ஏற்றதாக மாணவர்களின் இருக்கைகள் இருத்தல் வேண்டும். வகுப்பறைச் சூழல் அமைவு மாணவர்களுக்குப் பாதுகாப்பையும், நம்பகத்தன்மையையும் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.

4. **சர்வதேச பிரகடனமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் யாவை?** (**அல்லது**) **வகுப்பறையில் குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் எவையெவை?** (2011, 2015, 2018)

   1. வாழ்வுரிமை, 2. பாதுகாப்பு உரிமை 3. வளர்ச்சி உரிமை 4. பங்கேற்பு உரிமை

5. **மெல்லக் கற்போர் யாவர்?** (2024, 2012)

   - மிகக்குறைந்த அடைவுத்திறன் உடையவர்.
   - பாடங்களை கற்றுப் புரிந்து கொள்வதில், பெறுவதில், பின் தங்கி இருப்பர்.

6. **ஆசிரியர் – மாணவர் உறவிற்கு அடிப்படை காரணிகள் யாவை?** (2013)

   வகுப்பறைச் சூழல் பாடப்பொருள், கற்றல் - கற்பித்தல் இவற்றோடு ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவர்களின் ஆர்வத்திற்கும், ஈடுபாட்டிற்கும், மகிழ்ச்சிக்கும், கற்றல் அடைவிற்கும் இனிமையான சூழலுக்கும் மிகவும் அடிப்படையான காரணியாகும்.

7. **தங்கள் வகுப்பில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் அனைத்து உரிமைகளும் வழங்கப்படுகின்றனவா? ஆம்/இல்லை, எனில் எவ்வாறு?** (2013)

   1. வாழ்வுரிமை, 2. பாதுகாப்பு உரிமை 3. வளர்ச்சி உரிமை 4. பங்கேற்பு உரிமை.

   *(ஆம் / இல்லை என்பதற்கு ஏற்ப பொருத்தமான விளக்கம் தர வேண்டும்)*

8. **வகுப்பறையில் கற்பித்தல் – கற்றல் சூழல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் சமுதாய எதிர்பார்புகள் எவையேனும் இரண்டினை குறிப்பிடுக.** (2014)

   - கற்றல் சூழல் மாணவர்களின் சமூக மனவெழுச்சி உணர்வுகளுக்குப் பொருத்தமாக இருத்தல் வேண்டும்.
   - மாணவர்களிடம் சுயக்கட்டுப்பாடு, பண்பாடு ஆகியவற்றுடன் கூடிய நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும்.
   - மாணவர்களிடம் சிந்தனையைத் தூண்டி கற்பனையை வளர்க்கும் வகுப்பறை அமைத்தல் வேண்டும்.
   - தரமான கல்வி மாணவர்களின் மேன்மையான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஆசிரியர் உதவுதல்.
   - கற்பித்தல் என்பது கற்பித்தல் திட்டத்தை செயல்படுத்துதல் மட்டுமன்று; சமூக மனவெழுச்சிகளை வளர்த்தல்.

- அனைத்து வகையான மாணவர்களும் சிறந்து திறமையாகத் திகழும் வகையில்செயலாற்றுதல்.
- வகுப்பறைக்கற்பித்தல், கற்றல் செயல்பாட்டில் உள்ளார்ந்த ஆர்வத்தைத் (intrinsic motivation) தூண்டுதல்.
- சிறந்த வகுப்பறைச் சூழல் பண்புகள் பற்றிய ஆராய்ச்சி முடிவுகளைப் பின்பற்றுதல்.
- வரவேற்கும், பாதுகாக்கும் நம்பிக்கையூட்டும் சூழலைப் பராமரித்தல்.
- ஆசிரியருக்கும் மாணவருக்கும் சமுதாய ஆதரவு (Social support) தரும் செயலைச் செய்தல்.
- கல்வி இலக்குகளை அடைவதற்கான பல வாய்ப்புகளைத் தருதல்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து முடிவுகள் எடுப்பதற்கேற்ற சுமூகமான சூழலை உருவாக்குதல்
- உள்ளார்ந்த ஆர்வத்தை இயற்கையாக, மிகுதியாகத் தூண்டி அதிகபட்சக் கற்றல் விளைவுகளை ஏற்படுத்த வழி வகை செய்தல்.
- ஆசிரியர் தம் சொந்தநடையில் சிக்கல்களை ஏற்று பயிற்றுவித்தலைச் செய்தல்.
- எழும் பிரச்சனைகளை / சிக்கல்களை உடனுக்குடன் தீர்வு காணப் பலவகை யுத்திகளைப் பயன்படுத்துதல்.
- கற்பித்தலுக்கும், கற்றலுக்கும் பொருத்தமான, ஏற்கக் கூடிய கட்டமைப்புச் சூழலை உருவாக்குதல்.
- பள்ளியில் பணியாற்றும் தலைமை ஆசிரியர் முதல் கடைநிலை பணியாளர் வரை அனைத்து அலுவலர்களும் நல்ல வகுப்பறைச் சூழலை உருவாக்கத் தமது பங்களிப்பை முழுமையாகத் தருதல்.
- ஆசிரியர்கள் தொழில் திறன்களை (Professional competency) மேம்படுத்துதல்; பயன்படுத்துதல். ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி முதல்நிலை மாணவர் முதல் கடைநிலை மாணவர் வரை அனைவரின் தேவைகளை அறிந்து வகுப்பறையை மேலாண்மை செய்தல்.
- மாணவர்களின் ஈடுபாடு, நடத்தை, சுயமதிப்பீடு (Self evaluation), அடைவு, மனவெழுச்சி வளர்ச்சி, தலைமைப்பண்புகள், கல்வி வளர்ச்சி, ஆசிரியர் விரக்தி (Teacher burnout) இவை யாவும் ஒட்டுமொத்த பள்ளிச் சுற்றுப்புறச் சூழல், ஆக்கம், பராமரிப்பு ஆகியவற்றைப் பொருத்தே ஒரு பள்ளியின் கல்வித்தரம் அமைகிறது. **(எவையேனும் இரண்டு மட்டும்)**

**9. குழந்தை மையக் கல்வி அணுகுமுறை என்பது யாது? (2015)**

ஆசிரியர், மாணவர்கள் பால் அன்பும், அக்கறையும், அரவணைப்பு காட்டும் பாங்கையும், மாணவர்கள் ஆசிரியர்பால் நம்பிக்கைகொள்ளும் பாங்கையும், சகமாணவர்களோடு சகோதர பாசத்தோடு பழகும்

பாங்கையும் ஆசிரியர் உருவாக்க வேண்டும். தானே கற்றல், குழு கற்றல், செய்து கற்றல் ஆகிய அனைத்து கற்றல் செயல்கள் நிகழும் பொழுது, ஆசிரியர் வழிகாட்டியாக, தோழமை உணர்வோடு, மனிதநேயப் பிணைப்போடு பழகும் நயத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

10. **வகுப்பறை பற்றி ஜவஹர்லால் நேருவின் கூற்றை எழுதுக.** (2016, 2025)

எதிர்கால இந்தியா வகுப்பறையில் உருவாக்கப்படுகிறது என்பது முன்னாள் பிரதமர் ஜவகர்லால்நேரு அவர்களின் கூற்று.

11. **ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தையின் உரிமைக்கான உடன்படிக்கை பிரிவு – 30(பி) மற்றும் பிரிவு – 31 உணர்த்துவது யாது?** (2017)

**பிரிவு 30 (பி) :**

சட்டத்திற்குப் புறம்பாகவோ, தன்னிச்சையாகவோ குழந்தைகளின் உரிமைகளைப் பறிக்க முடியாது .

**பிரிவு 31:**

ஓய்வு, விளையாட்டு, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபெற குழந்தைகளுக்கு உரிமை உண்டு.

12. **சிறந்த ஆசிரியர் – மாணவர் உறவு உன் கண்ணோட்டத்தில் எவ்வாறு இருக்க வேண்டும்?** (2018)

- ஆசிரியர் மாணவர் உறவு மாணவரின் பன்முக வளர்ச்சிக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் உதவுதல்.
- வகுப்பறைச் சூழல் பாடப்பொருள், கற்றல் - கற்பித்தல் இவற்றோடு ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவர்களின் ஆர்வத்திற்கும், ஈடுபாட்டிற்கும், மகிழ்ச்சிக்கும், கற்றல் அடைவிற்கும் இனிமையான சூழலுக்கும் மிகவும் அடிப்படையான காரணியாகும்.
- ஆசிரியரின் தொழில் சார் பண்புகளுடன், மாணவர்கள் தம்மை அச்சமின்றி அணுகி உரையாடவும், மாற்றுக் கருத்துகள், சந்தேகங்களை முன் வைக்கவும், முடிவெடுக்கவும், பெற்றோர் மாணவர் சந்திக்கும் உறவை வளர்த்துக் கொள்ளல்.
- அன்பு, ஆதரவு, நம்பிகை கொள்ளல்.
- அச்சமற்ற சூழல் கொள்ளல்.

13. **இரண்டு புலன்களை தூண்டும், பொருட்களின் வகுப்பறை பயன்களை கூறுக.** (2019)

- மாணவர்களின் சிந்தனையை தூண்டி விரும்பிய கற்றல் விளைவை அடைய பயன்படுகிறது.
- கற்றலில் துலங்களை தூண்டி ஆயத்தப்படுத்தவும் செயல்களை செய்து பார்த்து கற்கவும் துணை செய்கிறது.
- கற்றல் மீதான மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி கவனத்தை ஒருமுகப்படுத்தி கற்கவும், சுய மதிப்பீடு செய்யவும் பயன்படுகிறது.
- ஆசிரியர் - பாடப்பொருள் – மாணவர்கள் ஆகியவற்றிற்குள் இடைவினை புரியவும், கற்றல் வளமானதாக்கவும் இப்பொருட்கள் பயன்படுகின்றன.

**14. மெல்ல கற்போரின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியரின் பங்கினைக் குறிப்பிடுக. (2019) ஆசிரியர்கள் மெல்லக் கற்போரை எவ்வாறு கையாள வேண்டும்? (2023) மெல்ல கற்போரின் கற்றலடைவை மேம்படுத்துவதில் ஆசிரியரின் பங்கு என்ன? (2026)**

- புதிய கற்பித்தல் உத்தி மூலம் மாணவர்களின் கவனத்தை மேம்படுத்த வேண்டும்.
- மகிழ்ச்சியான / விருப்பமான வகுப்பறைச் சூழலை உருவாக்கி மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்த வேண்டும்.
- குழந்தையின் தனிப்பட்ட இயலாமையையும், இயல்பையும் அளந்தறிந்து பாட உத்திகளை கடைபிடிக்க வேண்டும்.
- கற்றல் – கற்பித்தல் பொருட்கள், தேவையான அளவுக்கு பயன்படுத்தி கற்றலை இனிமையாக்க வேண்டும்.

**15. ஐக்கிய நாடுகள் சபை கூறும் குழந்தை உரிமைக்கான உடன்படிக்கையின் அம்சங்களைக் கூறுக. (2020)**

- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் மீதான உடன்படிக்கை 18 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரையும் குழந்தைகள் என்கிறது.
- இவ்வுலகிலுள்ள அனைத்து வளங்களிலும் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
- இந்த பிரகடனங்களின் மையக்கருத்தினைக் கவனத்தில் ஏற்று வகுப்பறைச் சூழலில் மாணவர்களுக்கு அனைத்துவளங்களிலும், செயல்களிலும் முன்னுரிமை, சம உரிமை வழங்குதல் வேண்டும்.
- ஆண், பெண் உயர்வு, தாழ்வு போன்ற எந்த வித பாரபட்சமும் காட்டாமல் அனைத்து குழந்தைகளும் அடிப்படையான உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்க வழிவகை செய்யவேண்டும்.

**16. ஆசிரியர் மாணவர்களுக்கு எவ்வாறெல்லாம் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்? (2020)**

ஒப்படைவுகளை (Assignment) முடிக்க, ஆசிரியர் திறமையைக்காட்டி உற்சாகப்படுத்தி மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும். ஒரு செயலைச் செய்ய மாணவர் தடுமாறும் வேளையில் உனக்குத் தெரிந்ததை முதலில் செய் எனக்கூறல், மற்றொரு மாணவர் தவறாகச் செய்யும் சூழலில் சரி! சரி! நாம் இப்போது தான் கற்றுக் கொள்கிறோம், முயற்சி செய் உன்னால் முடியும் என்று உற்சாகப்படுத்துதல், வேறு இரண்டு மாணவர்கள் செய்வதறியாது திக்கு முக்காடும் பொழுது, ஆம் இச்செயல் கடினமானது என்றும் எனக்குத் தெரியும், செயல் முடியும் நிலையில் உள்ளது, இதை உன்னால் செய்து முடிக்க முடியும் என்றும் உற்சாகமூட்டி மாணவர்களையும் அன்புகாட்டி, அரவணைத்து, கற்றல் இலக்கை அடைய வழிகாட்டும் ஆசிரியராக செயல்பட்டால், வகுப்பறை சூழல் சிறப்பாக அமைந்து, பள்ளியின் கல்வித் தரம் உயர உதவும்.

**17. வகுப்பறைச் சூழல் எவ்வாறு இருக்க வேண்டும்? (2021)**

- வகுப்பறைச் சூழல் என்பது கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் நல்ல சூழலாக, பின்னணியாக இருக்க வேண்டும்.
- வளரும் சமுதாயத்தில் தான் பயனுறவும், பிறருக்குப் பயன்படவும் மாணவர்களை உருவெடுக்கும் களமாக வகுப்பறைச் சூழல் இருக்க வேண்டும்.

- வகுப்பறைச் சூழலின் பயன்கள் ஆசிரியர்களுக்குத் துணையாகவும் மாணவர்களின் கற்றலுக்கு வழிகோலுவதாகவும், சிறக்கச் செய்வதாகவும் இருக்க வேண்டும்.

**கூடுதல் 2 மதிப்பெண்கள் வினா விடைகள்**

**18. பள்ளியின் பண்பாட்டையும் கல்வியின் தரத்தையும் எச்சூழல் பிரதிபலிக்கிறது? (2024)**

பள்ளிக்கூடத்தின் பின்னணி தோற்றம், நுழைவு வாயில், உட்புறக் கட்டமைப்பு வசதிகள், இருக்கைகள், அலமாரிகள், கற்றல் கற்பித்தலுக்கான பரிசோதனை, செயல்பாட்டுக் கருவிகள், பிற பொருட்கள், மின் வசதி ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி உடனடி பயன்பாட்டிற்கு வகுப்பறைச் சூழல் உதவ வேண்டும். இச்சூழல் கல்வித்தரத்தை வெளிப்படுத்துவது மட்டுமன்று, பள்ளியின் பண்பாட்டையும் (School Culture) பிரதிபலிப்பது.

**19. வகுப்பறைச் செயல்கள் எதன் அடிப்படையாகக் அமைந்துள்ளன?**

(அ) சமுதாய கட்டமைப்பு (Social - organisation)

(ஆ) சமுதாய மனப்பான்மைகள் (Social attitudes)

(இ) ஆசிரியர் - மாணவர் உறவு. (Teacher-Student Relationship)

(ஈ) அதிகாரம், கட்டுப்பாடு, வழிநடத்துதல், ஆதரவு, மதிப்பீட்டு முறைகள்.

(உ) கலைத்திட்டம் - பயிற்றுவித்தல் முறைகள்

(ஊ) எதிர்பார்ப்பு வெளிப்பாடுகள் (Expected Outcomes)

(எ) செயல்திறன்

(ஏ) பொறுப்பேற்றுக் கொள்ளுதல் (accountability)

(ஐ) போட்டி (competition)

(ஒ) கற்போருக்கும் வகுப்பறை சூழலுக்குமுள்ள பொருத்தம்.

(ஔ) ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு.

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**20. வகுப்பறை எத்தகைய இடவசதி கொண்டதாக இருத்தல் அவசியம்?**

- வகுப்பறையில் ஆசிரியர் உலவிவரவும், மாணவர்கள் கற்றல் செயல்களை, துணைக்கருவிகளைப் பயன்படுத்தி செய்து கற்கவும், சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து ஆராய்ந்து கற்கவும், ஒருவருக்கொருவர் கலந்துரையாடி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், முடிவெடுக்கவும் (to explore, to contact, to discover, to investigate and to share) வகுப்பறையில் போதுமான இடவசதியை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.
- எந்த செயலுக்கு எந்த இடம் என்று வகுப்பறையில் உள்ள இடத்தை திட்டமிட்டு ஒதுக்கிப் பயன்படுத்துதல் மாணவர்களின் அடைவை மேம்படுத்தும்.
- வகுப்பறை இடவசதி ஏற்பாடு என்பது தனியாகச் செய்து கற்கவும், குழுவாகச் செய்து கற்கவும், வட்டமாக அமர்ந்து கற்கவும், கூட்டுறவாகக் கூடிக்கற்கவும் (co-operative learning),

மாணவர்களுக்குப் புதுமையாகத் தோன்றும் எண்ணங்களையும், கருத்துக்களையும், கொள்கைகளைச் செயல்படுத்திப் பார்க்க உதவும் வகையிலும் உருவாக்கப்படல் வேண்டும்.

21. **இயலாதோர்க்கான சூழல் பற்றி குறிப்பு வரைக.** (2022)

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 45-வது பிரிவின்படி 1990 ஆம் ஆண்டில் தாய்லாந்து நாட்டின் ஜாம்டியன் நகரத்தில் நடைபெற்ற "அனைவருக்கும் கல்வி" என்ற தலைப்பில் நடைபெற்ற உலகளாவிய கருத்தரங்கத்தில் 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரையும், குறிப்பாக மாற்றுத்திறன் உடைய குறைந்த அளவு மற்றும் மிதமான அளவு (Mild and moderate) குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து அவர்களைப் புரிந்து கொண்டு, அவர்களிடம் உள்ள இயலாத் தன்மையைக் குறைத்து, எஞ்சியுள்ள திறமையை வளர்க்கின்ற வகையில் வகுப்பறைச் சூழலை உருவாக்கித்தருதல் வேண்டும் என்ற தீர்மானம் இயற்றப்பட்டது.

22. **மாணவர்களிடம் புரிந்து கொள்ளல் எவ்வாறு நிகழ்கிறது?**

- புரிந்து கொள்ளல் என்பது பல வழிகளில், பல நிலைகளில், பல சூழல்களில் மாணவர்களிடம் நிகழ்கிறது. அவையாவன, கேட்டுத் தெரிந்து கொள்ளுதல், பார்த்துத் தெரிந்து கொள்ளுதல், படித்துத் தெரிந்து கொள்ளுதல், அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்ளுதல் என்பனவாகும், அவரவரின் அறிவாற்றல், மனப்பான்மை, நாட்டம், ஈடுபாடு ஆகியவற்றைப் பொருத்து புரிந்து கொள்ளல் மாறுபடுகிறது.
- பலதரப்பட்ட மாணவர்கள் உள்ள வகுப்பறை சூழலில் ஐம்புலன்களையும் தூண்டி கற்றலில் ஈடுபடச் செய்து வகுப்பறையை உயிரோட்டம் உடையதாக்க புரிந்து கொள்ளல் உதவுகிறது.
- புரிந்துகொண்டு கற்பதால் கடினமான பாடப்பொருளையும் எளிமையானதாக்கி ஆசிரியரின் கற்பித்தல் திட்டத்தை வெற்றி பெற வைக்கிறது. நுண்ணாய்வுசிந்தனை, புத்தாக்க சிந்தனைகளை வளர்த்து மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி, தரமான கல்விக்கு வழிவகுக்கிறது.

## 4 மதிப்பெண்கள் வினா விடைகள்

23. **வகுப்பறைச் சூழல் மதிப்பீட்டுக் கருவி பற்றி எழுதுக.** (2021, 2025)

- வகுப்பறைச் சூழல் மதிப்பீடு என்பது வகுப்பறையின் புற மற்றும் அகத்தோற்றம் கற்றல் வகுப்பறை அமைப்பு உட்புறச் சூழல் ஆகியவற்றை அளந்தறிவதாகும்.
- பள்ளிச் சூழலில் கற்றல் களமாக இருக்கும் வகுப்பறையைப் பற்றி ஆசிரியர் பயிற்சி மாணவர் முழுமையாகப் புரிந்து கொண்டால்தான் வகுப்பறையை எவ்வாறு மேலாண்மை (Class room management) செய்தல் வேண்டும் என்பதையறிந்து கற்பித்தல் செயலை, கற்றல் கற்பித்தல் இலக்குளை அடையும் சூழலை உருவாக்கமுடியும்.

- இக்கருவி வகுப்பறையின் புறத்தோற்றம் (Physical appearance), அமைப்பு (Setting) இட வசதி (space), கற்றல் கற்பித்தல் பொருட்கள் (TLM), ஆசிரியர் மனப்பான்மை (attitude) ,ஆர்வம் (Curiosity), ஆசிரியர் மாணவர் இடைவினை ,நடத்தை மாற்றம், கற்றல் கற்பித்தல் பொருத்தப்பாட்டுச் சூழல், கற்றல் அடைவு ஆகியவை பற்றி அளந்தறிய வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் கற்பித்தல் பயிற்சிகளுக்குச் செல்லும் போது வகுப்பறைச் சூழலை ஆராய்ந்தறிய பயன்படுகிறது.

**24. சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பற்றிய கால அட்டவணை ஒன்றை தயாரிக்கவும். (2021) (அல்லது) சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பற்றி குறிப்பு வரைக. (2013, 2025)**

| | | |
|---|---|---|
| 1 | சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு | 1989 |
| 2 | வாசகம் | “மகிழ்ச்சியான குழந்தை தேசத்தின் பெருமை” |
| 3 | குழந்தைகள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் | குழந்தைகளது முழுவளர்ச்சியை மனதில் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 4 | ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகள் மீதான உடன்படிக்கை பிரிவு - 13 | தகவலைப் பெறவும், பெற்ற தகவலை வழங்கவும், பிறரது உரிமைகளைப் பாதிக்காதவரை அத்தகவல் குறித்துத் தன் கருத்தை வெளியிடவும் குழந்தைக்கு உரிமை உண்டு என்று கூறுகிறது. அதன்படி வகுப்பறைச் சூழல் பாடப்பொருளுக்குரிய விளக்கங்களை எளிமையாகப் புரிந்து கொள்ளவும், அது பற்றிய தனது கருத்தைக் குழந்தைகள் சுதந்திரமாக வெளியிடும் வகையிலும் அமைய வேண்டும். |
| 5 | ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகள் மீதான உடன்படிக்கை பிரிவு - 3 | வகுப்பறை மகிழ்ச்சியான சூழலாகவும், நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளரும் குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலும் வகுப்பறை நிகழ்வுகளை, செயல்களை ஆசிரியர் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். |
| 6 | ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகள் மீதான உடன்படிக்கை பிரிவு - 23 | வகுப்பறைச்சூழலில் அனைத்து அமைப்புகளும் செயல்களும் இயலாத குழந்தைகளின் (மனரீதியாகவும், உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்கள்) இயக்கத்திற்கும், செயலுக்கும் உதவும் |

| | | |
|---|---|---|
| | | வகையில் அமைக்கப்படுதல் மிகவும் முக்கியமானதாகும். |
| 7 | ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகள் மீதான உடன்படிக்கை பிரிவு – 30 (பி) | சட்டத்திற்குப் புறம்பாகவோ, தன்னிச்சையாகவோ குழந்தைகளின் உரிமைகளைப் பறிக்க முடியாது |
| 8 | ஐக்கிய நாடுகள் சபையின், குழந்தைகள் மீதான உடன்படிக்கை பிரிவு – 31 | ஓய்வு, விளையாட்டு, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்குபெற குழந்தைகளுக்கு உரிமை உண்டு. |

**25. மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு எவ்வாறான மாணவர் - ஆசிரியர் உறவு தேவை?** (2020)

- ஆசிரியர் மாணவர் உறவு என்பது ஆயிரங்காலத்துப் பயிர் போன்றது. மாணவரின் பன்முக வளர்ச்சிக்கு வித்தானது, எதிர்கால வளர்ச்சிக்கு உரம் போன்றது.
- பள்ளி நாட்களை நினைத்துப் பெருமையும், அதிசயமும், மகிழ்ச்சியும் அடைய வைக்க வேண்டிய உறவு.
- வகுப்பறைச் சூழல் பாடப்பொருள், கற்றல் - கற்பித்தல் இவற்றோடு ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவர்களின் ஆர்வத்திற்கும், ஈடுபாட்டிற்கும், மகிழ்ச்சிக்கும், கற்றல் அடைவிற்கும், இனிமையான சூழலுக்கும் மிகவும் அடிப்படையான காரணியாகும்.
- ஆசிரியரின் தொழில் மனப்பான்மை (Professional attitudes), சமுதாய அக்கறை, மாணவர் வளர்ச்சி, புதுமை நோக்கு, ஆராய்ச்சியில் நாட்டம் ஆகியத் தொழில் சார் பண்புகளோடு, மாணவர்கள் தம்மை எப்பொழுதும் அச்சமின்றி அணுகி உரையாடவும், மாற்றுக் கருத்துக்களையும், சந்தேகங்களையும் முன் வைக்கவும் முடிவு எடுக்கவும் பெற்றோர் மாணவர்கள் ஆகியோர் இயல்பாகச் சந்திக்கும் சுமூகமான உறவை வளர்த்துக் கொள்ளுதலும் (interpersonal behaviour) வேண்டும்.
- மாணவர்களின் மனவெழுச்சிகள் பலவிதம். அதை அங்கீகரித்து உற்சாகமூட்டி, மதிப்பளிக்கின்ற சூழல் வகுப்பறையில் நிலவுதல் வேண்டும். மாணவர்கள் எழுப்பும் சந்தேகங்கள், வினாக்கள், கருத்துகள், முடிவுகள் போன்றவை எந்த நிலையிலும் பிறரால் மாணவர்களின் சுய கௌரவத்திற்கு ஊறு விளைவிக்காததாக இருத்தல் வேண்டும்.

**26. குழந்தை உரிமை பாதுகாப்பு பற்றி விளக்குக.** (2023, 2020, 2018)

- இந்தியத் திருநாடு மிகப்பெரிய பரப்பளவு கொண்டது. அளவில்லாத இயற்கை, கனிம வளங்களைக் கொண்டது. பல்வேறு தட்ப வெட்ப நிலைகளைக் கொண்டது. மக்கள் தொகை அதிகமாகக் கொண்டது.

- பல இனங்கள், மொழிகள், பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைக் கொண்டது. இவ்வளவு வேற்றுமைகள் இருப்பினும் நமது இந்தியா, நாம் இந்தியர் என்ற சமூகப்பண்பாட்டுணர்வோடு ஒற்றுமையாக வாழ்கிறோம். (Unity in Diversity) உலக நாடுகளுக்கு பண்பாட்டின் நிலைக் களஞ்சியமாகத் திகழ்கிறோம். இத்தகைய பாரம்பரிய உணர்வை இந்தியக் குழந்தையும் புரிந்து சுயவளர்ச்சிக்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.
- ஒரு சமுதாயத்தின்/ நாட்டின் வளர்ச்சிக்கு, ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியே ஆதாரமாகிறது, இவ்வளர்ச்சிக்கு அடிப்படையாகவும், வழித்துணையாகவும் இருப்பது கல்வி. இக்கல்வி மிகப்பெரிய அடிப்படை மனித உரிமையாகும். இந்த அடித்தளத்தில் தான் சுதந்திரம், மக்களாட்சி தத்துவம் செயல்படுகிறது. எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற பாரதியின் கூற்றும் மெய்ப்படுகிறது.
- இந்த அடித்தளத்தில் தான் மனித குலத்தின் பன்முக வளர்ச்சிக்கான கட்டுமானம் உருவாகிறது. அன்பையும் மகிழ்ச்சியையும் தரும் குடும்பச் சூழலில் தான் குழந்தையின் முழு ஆளுமை வளர்ச்சி சாத்தியமாகும். குழந்தைகளின் உரிமை, பாதுகாப்பு காக்கப்படும்.

**27. உனது வகுப்பறையை பாதுகாப்பான மற்றும் சுதந்திரமான வகுப்பறையாக எவ்வாறு மாற்றுவாய்? (2010, 2019) பாதுகாப்பான - சுதந்திரமான வகுப்பறைக் கற்றல் பற்றி விளக்குக. (2022)**

- வகுப்பறையின் உட்புறச் சூழல் வசதி, இருக்கைகள், தளவாடப் பொருட்கள், வேதியியல் பொருட்கள், மின்சார, மின்னியல் கருவிகள் ஆகிய அனைத்தும் மாணவர்களுக்கு உடல் ரீதியான எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தா வண்ணம் எளிதாகக் கையாளும் வகையில் நிறுவிப் பராமரித்தல் வேண்டும்.
- கற்றலுக்கான செயல்களை செய்வதற்கு ஏற்றதாக மாணவர்களின் இருக்கைகள் இருத்தல் வேண்டும். வகுப்பறைச் சூழல் அமைவு மாணவர்களுக்குப் பாதுகாப்பையும், நம்பகத்தன்மையையும் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.
- வகுப்பறைச் சூழலில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை எப்பொழுதும் அனைவரும் பயன்படுத்தும் வகையிலும் சுதந்திரமான உணர்வை மாணவர்களுக்குத் தர வேண்டும்.
- கற்றலுக்குரிய பாடப்பொருளை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் வரைபடங்கள், கற்றல் துணைக்கருவிகள், அன்றாடக் கற்றல் தேவைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்து கொள்ளும் வகையில் அமைக்கப்படுதல் வேண்டும்.

- மாணவர்களுக்கு வகுப்பறையில் உள்ள பொருள்கள் தம்முடையது, தனது பயன்பாட்டிற்கும் சக மாணவர்களின் பயன்பாட்டிற்கும் உரியது என்ற அடிப்படை நடத்தைப் பண்பை ஏற்படுத்த வேண்டும்.
- பயன்படுத்தும் பொருள் எதுவாயினும் வீணாக்காமல் பயன்படுத்திய பின் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே வைக்கும் மனப்பயிற்சியை / பழக்கத்தைத் தானகவே ஏற்படுத்துதல் வேண்டும்.
- வகுப்பறைச் சூழலை அச்சமில்லாததாகவும், மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைத்துத் தருதல் ஆசிரியரின் முதன்மை பொறுப்பாகும்.
- மாணவர்களை செலவில்லாத அல்லது குறைந்த செலவில் தயாரித்த பொருள்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல், அவைகளைப் பாதுகாத்தல், வகுப்பறையைத் தூய்மையாகப் பராமரிக்கும் அக்கறை, ஆகியவற்றைக் கற்கும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

**28. வகுப்பறை – ஒரு சிந்தனை செயல்களம் – விளக்குக. (அல்லது) வகுப்பறையை எப்படி சிந்தனை செயல்களமாக மாற்றுவாய்? (2024, 2012, 2013, 2019)**

- வகுப்பறை என்பது செங்கற்சுவர்கள் கொண்ட அறை தான். ஆனால் அந்த அறை வருவோரை ஈர்க்கும் சூழல் கொண்டதாக அமைய வேண்டும்.
- வகுப்பறைத் தோற்றம், தூய்மை, வெளிச்சம், காற்றோட்டம், உட்புற அமைப்பு ஆகிய அனைத்தும் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.
- வகுப்பறைச் சூழல் என்பது நேரிடையான மாணவர் கற்றல், சிந்தனை, கற்பனை, சிக்கலுக்குத் தீர்வு, அனுபவப்பகிர்வு, முடிவு எடுத்தல், ஆசிரியர் கற்பித்தல், ஆர்வமூட்டுதல், பாடப்பொருள் பயிற்றுவித்தல், செய்முறை / செயல் வழிகாட்டுதல், பயிற்சி, விளைவுகள், மதிப்பிடுதல் ஆகிய செயல்களுக்கான வளங்களை உள்ளடக்கியது.
- கடந்தகாலக் கல்விமுறையானது குருகுலக்கல்வி முறை. இம்முறையில் மாணவர்களைக் கட்டுபடுத்திக் கீழ்ப்படிய வைத்து, கொடுக்கும் பயிற்சிகளைத் தவறாமல் முடித்து, வகுப்பறை அமைதியான அறையாகக் கண்காணிக்கப்பட்டது.
- ஆனால் இன்றைய சமூக, அறிவியல் வளர்ச்சி, சமூக பொருளாதார பண்பாட்டு வளர்ச்சி, மின்னியல் மின்னனுவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள ஊடக வளர்ச்சி (Media development) சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

- வகுப்பறை என்பது நான்கு சுவர்கள் தான் என்றில்லாமல், ஆசிரியர் மட்டுமே கற்பிப்பார் என்ற நிலை மாறி பல ஒலி, ஒளிக்கருவிகள், கணினி, பரிசோதனைச்சாலை ஆகியவை மாணவர்கள் முழுமையான கற்றல் அடைவுகளைப் பெற வகுப்பறைச் சூழலில் பங்கேற்கின்றன.
- இச்சூழலில் மாணவர்களின் சிந்தனையும் - கற்பனை நுண்ணாய்வுச் சிந்தனை (Critical thinking) மற்றும் படைப்பாற்றல் திறனையும் (Creative thinking தூண்டுகின்றன.

**29. உன்னுடைய வகுப்பரையை "அச்சமுற்ற சூழல்" வகுப்பறையாக வைத்துக் கொள்ள என்ன செய்வாய்? (2018) ஒரு ஆசிரியராக உன் வகுப்பறையில் அச்சமற்ற சூழலை எவ்வாறு உருவாக்குவாய்? (2023 – 2 மதிப்பெண்கள்) அச்சமற்ற சூழலை வகுப்பறையில் எவ்வாறு ஏற்படுத்துவாய்? (2024)**

- குழந்தை வளர்ச்சி அடைந்து ஓடி, ஆடி, விளையாடும் பருவத்தில் எதையும் பார்த்து (பாம்பு, மிருகம்) அச்சப்படுவதில்லை.
- ஏனெனில் அக்குழந்தைக்கு அதனால் ஏற்படும் ஆபத்து, விளைவுகள் ஆகியவை தெரியாத பருவம். இச்சூழல் குழந்தைக்கு அச்சுறுத்தல் இல்லாத சூழல், அவ்வாறு அச்சுறுத்தலை உணருமானால், அதிலிருந்து விடுவிக்க பெற்றோர் உள்ளனர் என்ற நம்பிக்கையும், பாதுகாப்பு உணர்ச்சியும் ஏற்படுகின்றது.
- அதே குழந்தை பள்ளிக்கு வரும் போது புதிய சூழலை எதிர்கொள்கின்றது. இந்த புதிய சூழலில் இனம் புரியாத அச்சம் தோன்றுவது இயற்கை. அப்புதிய சூழலை அன்பாகவும், ஆதரவாகவும் மாணவர்களுக்கு ஏற்படுத்தித்தருவது ஆசிரியரின் முதன்மை பொறுப்பாகும்.
- எங்கே சுதந்திரமான உணர்வு இருக்கிறதோ, அச்சமற்ற சூழல் நிலவுகிறதோ அங்கே தான் கற்றல் நிகழும். கற்பிக்கப்படும் கருத்துக்களை அத்தகைய சூழலில் மாணவர்கள் ஏற்கவும், புரிந்து கொள்ளவும், சிந்தனைகளைத் தாராளாமாக வெளிப்படுத்தவும் இயலும்.
- மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், புதிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும், தன்னம்பிக்கையோடு 'எதிர்காலம் தன்கையில்' என்ற உணர்வோடு கல்வி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவும்.

**30. குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் – விவரிக்கவும்.** (2014, 2017)

- ஒரு குழந்தையின் அடிப்படைத் தேவை என்பது அதன் அடிப்படை உரிமையாகும்.
- ஒரு குழந்தைக்கு அடிப்படை தேவை சத்துள்ள உணவு, உடல்நலம், பாசமுள்ள உறவு, ஒழுக்க உணர்வு, ஆன்மீக உணர்வு, பாதுகாப்பான சுற்றுச் சூழல், பயனுள்ள பொழுதுபோக்கு வசதிகள் ஆகியன ஆகும்.

- இவற்றை எல்லாம் ஒரு குழந்தை பெற தெளிந்த அறிவு, கற்பனை வளமிக்க படைப்பாற்றல் தேவை. ஒரு வகுப்பறைச் சூழல் குழந்தைக்கு தெளிந்த அறிவையும், கற்பனை வளமிக்க படைப்பாற்றல் திறனையும் வளர்க்கும் பாசறையாகத் திகழ்தல் வேண்டும்.
- வகுப்பறைச் சூழலில் அனைத்து குழந்தைகளின் உணர்வுக்கும் மதிப்பளித்து எல்லா குழந்தைகளும் வளரும் குழந்தைகள், நம்மால் வளர்க்கப்பட வேண்டிய குழந்தைகள் என்ற பொறுப்புணர்ச்சியோடு, ஏற்றத்தாழ்வு பார்க்காமல், பாரபட்சமாக நடக்காமல், தனிக்கவனத்துடன் அக்கறையுடன் நடத்தப்பட வேண்டும்.
- ஆண், பெண் குழந்தைகள், பெற்றோரை இழந்த குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர், கொத்தடிமைக் குழந்தைகள், தெருவோரக் குழந்தைகள் (Street children) குற்றவாளிக் குழந்தைகள், அகதிக் குழந்தைகள், இயலாத (மனரீதியாக, உடல் ரீதியாக) குழந்தைகள் என்று பல வகையான குழந்தைகள் பலவிதமான சூழல்களில் உள்ளனர். இப்படி எந்த சூழலில் வளரும் குழந்தையானாலும் சராசரி குழந்தையாக அதாவது பிற குழந்தைகள் போல் எல்லா உரிமைகளும் பெற்ற குழந்தையாக மனித நேயம், பொறுப்பு, கடமை உணர்வுடன், வகுப்பறையின் சூழலைக் கற்றலுக்கு உகந்தவாறு உருவாக்கித் தருதல் வேண்டும்.
- குழந்தைகளுக்கு மனித உரிமைக் கல்வியைப் புரிய வைப்பதன் மூலம் தமது உரிமைகள் பற்றிய புரிதலைப் பெறுவார்கள். பிறர் உரிமைகளை மதித்து நடக்கும் சிறப்பான பண்பாட்டையும் வளர்த்துக் கொள்வர்.
- உலகளாவிய சர்வதேச பிரகடனமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குழந்தைகள் உரிமை முழக்கத்தைக் கருத்தில் நிறுத்தி 1. வாழ்வுரிமை, 2. பாதுகாப்பு 3. வளர்ச்சி 4. பங்கேற்பு ஆகிய நான்கு அடிப்படை உரிமைகளை வகுப்பறையில் செயல்படுத்த வேண்டும்.
- குடும்பத்தில் பிறக்கும் குழந்தை குடும்பச் சூழ்நிலையிலிருந்து அடுத்துக் காலெடுத்து வைக்கும் இடம் வகுப்பறை தான்.
- குழந்தையின் உயர்வை சமுதாய மயமாக்கலுக்கான முதல் முயற்சி குடும்பத்தில் தோன்றினாலும், கல்வி தான் அதை மேலும் பரவலாக்குகிறது. மனிதனின் சுய அடையாளத்தையும், மனிதநேயம், மாண்பு ஆகிய பண்புகளையும், சமூக பங்கேற்பை வளர்க்கவும், கல்வி எல்லார்க்கும் உரியது என்பதாலும் கல்வி என்பது குழந்தைகளின் அடிப்படை உரிமையாகிறது.

- இந்த உரிமைகள், பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரிடையே விழிப்புணர்ச்சியையும், அவர்களின் கல்வி பற்றிய பொறுப்புணர்ச்சியையும், ஏற்படுத்தும். குழந்தைகள் கல்வி உரிமை என்பது வளர்ச்சிக்கான உரிமையின் ஒரு பகுதியாகும்.

**31. ஒரு வகுப்பறையின் அமைப்பு சிறப்பானாதாக அமைய நீவீர் கூறும் கருத்துக்களை எழுதுக. (2017)**

**வகுப்பறை இடவசதி:**

- வகுப்பறைக் கற்பித்தல் - கற்றல் செயல்களுக்கு இடவசதி மிக அடிப்படையான தேவையாகிறது.
- வகுப்பறையில் ஆசிரியர் உலவிவரவும், மாணவர்கள் கற்றல் செயல்களை, துணைக்கருவிகளைப் பயன்படுத்தி செய்து கற்கவும், சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து ஆராய்ந்து கற்கவும், ஒருவருக்கொருவர் கலந்துரையாடி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், முடிவெடுக்கவும் (to explore, to contact, to discover, to investigate and to share) வகுப்பறையில் போதுமான இடவசதியை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.
- மாணவர்கள் தம் வீட்டில் எவ்வளவு சுதந்திரமாக சுற்றி வருகிறார்களோ, அதைப்போன்ற சூழலை வகுப்பறையில் உருவாக்கித் தர வேண்டும்.
- எந்த செயலுக்கு எந்த இடம் என்று வகுப்பறையில் உள்ள இடத்தை திட்டமிட்டு ஒதுக்கிப் பயன்படுத்துதல் மாணவர்களின் அடைவை மேம்படுத்தும்.
- வகுப்பறை இடவசதி ஏற்பாடு என்பது தனியாகச் செய்து கற்கவும், குழுவாகச் செய்து கற்கவும், வட்டமாக அமர்ந்து கற்கவும், கூட்டுறவாகக் கூடிக்கற்கவும் (co-operative learning), மாணவர்களுக்குப் புதுமையாகத் தோன்றும் எண்ணங்களையும், கருத்துக்களையும், கொள்கைகளைச் செயல்படுத்திப் பார்க்க உதவும் வகையிலும் உருவாக்கப்படல் வேண்டும்.
- மாணவர்கள் தாமாகவே திட்டமிட்டு இடத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு, கூட்டுறவாகக் கூடிக்கற்கும் வாய்ப்பு, செய்திறனில், செயல்திட்டம் / பரிசோதனைகள் / செயல்கள் செய்து கற்கும் வாய்ப்புகளை அதிகமாக வழங்குதல் வேண்டும்.

**நெகிழ்வுத்தன்மை கொண்ட வகுப்பறை:**

- ஒரு வசதியான வகுப்பறை இடவசதி மாணவர்கள் செயல் செய்து பார்க்க ஒரு தடையாக இல்லாமல் எந்த வகையான கற்றல் செயல், செயல் திட்டம், பரிசோதனை என்றாலும் அறையை மாற்றிப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.
- மாணவர் தனியாகக் கற்கவும், குழுவாகக் கற்கவும் வகுப்பு மாணவர்கள் அனைவரும் கூடிக்கற்கவும், தேவையெனில் புதிய இடவசதியை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பையும் அளிக்க வேண்டும்.

DIET PYT

❖ இடவசதியில் கூடுதல், குறைத்தல், விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் (Flexible classroom) நெகிழ்வுத்தன்மை கொண்ட வகுப்பறையே சிறந்த வகுப்பறையாகும்.

❖ வகுப்பறையில் இடவசதி எப்படி இருப்பினும், இருக்கை மற்றும் பிற தளவாடச்சாமான்களை மாற்றி அமைக்கவும், புதிய இடவசதியை உருவாக்கவும், பலவகை செயல்களுக்கு ஏற்ற கல்வி இலக்குகளை அடையவும், இடவசதியை ஏற்ற வகையில் மாற்றி அமைக்கவும், வாய்ப்புகள் அளித்தல் வேண்டும்.

❖ மாணவர்களின் கற்றல் களமாக (Working environments) விளங்கும் வகுப்பறை வசதியாகவும், வீடு போன்ற சூழலை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

❖ நுழைவு வாயில் திரை (Door curtain), வகுப்பறைக்குள் உணவை அனுமதித்தல், பல்வேறு வண்ணங்களில் மாணவர்களின் படைப்பைக் காட்சிப்படுத்துதல், வகுப்பறை தகவல் பலகை (bulletin board) போன்ற அனைத்து வசதிகளையும் வழங்கி மாணவர்கள் விரும்பும் சூழலைக் கொண்ட வகுப்பறையாக இருத்தல் நலம்.

❖ கற்றல் - கற்பித்தல் கருவிககளை இயக்கக் கூடிய அனைத்து வசதிகளும் வகுப்பறையில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

❖ மாணவர்கள் களைப்பில்லாமல் சுறுசுறுப்புடன் கற்றல் செயல்களில் ஈடுபட, நல்ல காற்றோட்டம், வெளிச்சம், தட்ப வெப்ப நிலை ஆகியவைகளைத் திட்டமிட்டுப் பராமரித்தல் அனுபவித்துக் கற்றலுக்கு வழிவகுக்கும்.

**பாதுக்காப்பான சுதந்திரமான வகுப்பறை:**

❖ வகுப்பறையின் உட்புறச் சூழல் வசதி, இருக்கைகள், தளவாடப் பொருட்கள், வேதியியல் பொருட்கள், மின்சார, மின்னியல் கருவிகள் ஆகிய அனைத்தும் மாணவர்களுக்கு உடல் ரீதியான எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தா வண்ணம் எளிதாகக் கையாளும் வகையில் நிறுவிப் பராமரித்தல் வேண்டும்.

❖ கற்றலுக்கான செயல்களை செய்வதற்கு ஏற்றதாக மாணவர்களின் இருக்கைகள் இருத்தல் வேண்டும். வகுப்பறைச் சூழல் அமைவு மாணவர்களுக்குப் பாதுகாப்பையும், நம்பகத்தன்மையையும் அளிப்பதாக இருத்தல் வேண்டும்.

❖ வகுப்பறைச் சூழலில் வைக்கப்பட்டுள்ள பொருட்களை எப்பொழுதும் அனைவரும் பயன்படுத்தும் வகையிலும் சுதந்திரமான உணர்வை மாணவர்களுக்குத் தர வேண்டும்.

❖ கற்றலுக்குரிய பாடப்பொருளை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் வரைபடங்கள், கற்றல் துணைக்கருவிகள், அன்றாடக் கற்றல் தேவைகளுக்கு ஏற்ப மாற்றம் செய்து கொள்ளும் வகையில் அமைக்கப்படுதல் வேண்டும்

❖ மாணவர்களுக்கு வகுப்பறையில் உள்ள பொருள்கள் தம்முடையது, தனது பயன்பாட்டிற்கும் சக மாணவர்களின் பயன்பாட்டிற்கும் உரியது என்ற அடிப்படை நடத்தைப் பண்பை ஏற்படுத்த வேண்டும்.

❖ பயன்படுத்தும் பொருள் எதுவாயினும் வீணாக்காமல் பயன்படுத்திய பின் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திலேயே வைக்கும் மனப்பயிற்சியை / பழக்கத்தைத் தானகவே ஏற்படுத்துதல் வேண்டும்.

❖ வகுப்பறைச் சூழலை அச்சமில்லாததாகவும், மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைத்துத் தருதல் ஆசிரியரின் முதன்மை பொறுப்பாகும்.

❖ மாணவர்களை செலவில்லாத அல்லது குறைந்த செலவில் தயாரித்த பொருள்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல், அவைகளைப் பாதுகாத்தல், வகுப்பறையைத் தூய்மையாகப் பராமரிக்கும் அக்கறை, ஆகியவற்றைக் கற்கும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

**32. கற்றல் கற்பித்தலில் புலன்களை தூண்டும் பொருட்களின் பங்கினை விளக்குக.** (2024 – 10 மதிப்பெண், 2016)

❖ மாணவர்களிடம் என்னென்ன கற்றல் விளைவுகள் ஏற்படவேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து அதனைத் திட்டமிட வேண்டும். அந்த பாடத்திட்டம் சார்ந்து ஊடகங்களைத் தேர்வு செய்து, கற்றல் விளைவுகளைப் பாடப்பொருளோடு ஒருங்கிணைத்து ஐம்புலன்களையும் ஈர்த்து மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி கற்றலில் ஈடுபடுத்த வேண்டும்.

❖ வகுப்பறை உட்புறச் சூழலைப்பயன்படுத்திக் கற்றலை நிகழ்த்தும் காரணிகள் தாம், பாடப்பொருள் - திறன்கள் - ஊடகங்கள் - கற்பித்தல் - கற்றல் துணைக்கருவிகள் – கற்றல் அணுகுமுறை - கற்றல் செயல்கள் என்பன.

❖ இவற்றின் வழி கற்றல் அனுபவத்தை (learning experience) மாணவர்களுக்கு அளிக்க வாய்க்காலாக இருப்பதே ஐம்புலன்களைத் தூண்டுகின்ற சாதனங்கள் ஆகும்.

❖ யாருக்கான தகவல்? என்ன வகையான தகவல்? எந்த வகையான செயல்கள்? என்னென்ன ஊடகங்கள்? ஊடகங்களில் பயன்படுத்தப்பட்ட மென்பொருள்கள் யாவை? ஊடகங்களில் கண்ணுக்கும், காதுக்கும், உணர்வுக்கும் விருந்தளிப்பவை யாவை? என்பன போன்ற

வினாக்களுக்கு விடையளிப்பனவாக இருப்பதே கற்றல் கற்பித்தல் துணைக்கருவிகளின் முக்கிய பங்காகும்.

- ஐம்புலன்களையும் தூண்டி, கருவிகளை வடிவமைத்து, அனுபவங்களைத் தந்து கற்றலைத் துலங்க வைப்பதே அனைத்து ஊடகங்களின் பயன்பாட்டு நோக்கமாகும். இந்த ஊடகங்கள் மாணவர்களைக் கற்றலுக்கு ஆயத்தப்படுத்தவும், கற்றலில் ஈடுபடுத்தவும், செயல்களைச் செய்து பார்க்கவும், கற்றலை மதிப்பீடு செய்யவும் உறுதுணையாக விளங்குவன.
- ஆசிரியர் - பாடப்பொருள் – மாணவர்கள் ஆகியவற்றிற்குள் இடைவினை புரியத் தூண்டுவதும் இக்கருவிகளே.
- இந்த ஊடகங்கள் எளிமையாகக் கையாளக் கூடியதாகவும், பராமரிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். கற்றல் இலக்குகளில் மாணவர்கள் அடைவுபெறவும், ஆர்வத்தைத் தூண்டி கவனத்தை ஒருமுகப்படுத்தி முறையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து கற்கவும், கற்றல் அடைவைச் சுயமாக மதிப்பீடு செய்யவும் இவ்வூடகங்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.
- ஆசிரியர் கற்பிக்கும் பாடப்பொருளுக்குப் பொருத்தமாக, எளிதான / கடினமான பல்வேறு கற்பித்தல் யுத்திகளைக்கையாள உதவும் வகையில் (குறிப்பாக தானே கற்றல் (self learning), குழு கற்றல் (Group learning), அனைவரும் கற்றல் என்ற அனைத்து கற்றல் முறைகளும் பயன்படும் நோக்கில்) உருவாக்கப்படல் வேண்டும்.
- ஊடகக்கருவிகள் கற்பித்தல் திட்டத்திற்குத் தேவையான பொருள்களைச் சேகரித்து, திட்டமிட்டு, வடிவமைத்து மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் வகுப்பறையில் ஆசிரியர் ஏற்பாடு செய்தல் வேண்டும். இக்கருவிகள் யாவும் ஆசிரியருக்கு உதவும் கருவிகள் (Teaching aids), மாணவர்களுக்கு கற்றலை வழங்கும் கருவிகள்.
- கற்றல் வலுவூட்டலுக்கு தேவையான தொழில்நுட்பக் கருவிகளை மாணவர்களின்ஐம்பலன்களையும் தூண்டிட ஆசிரியர்கள் கண்டறிந்து அவற்றை திறமையாக பயன்படுத்த வேண்டும். கற்றல் இனிமையாக, மகிழ்ச்சியானதாக, விரும்பிய கற்றல் விளைவுகளை ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். மாணவர் செயலாற்றத் துணை நின்று கற்றலை (வழிப்படுத்தி) வளமானதாக்க வேண்டும்.

**33. மெல்ல கற்கும் குழந்தைகளின் கற்றல் அடைவை எவ்வாறு மேம்படுத்துவாய்? (2015) மெல்ல கற்போர் பற்றி விளக்குக. (2022) உனது வகுப்பறையில் மெல்லக் கற்போருக்கான சாதகமான சூழலை எவ்வாறு உருவாக்குவாய்? (2026)**

- ஒரு வகுப்பறையில் எல்லாக் குழந்தைகளும் 100 விழுக்காடு அடைவுத்திறன் பெறுவதில்லை. வகுப்பில் 8 விழுக்காடு முதல் 10 விழுக்காடு வரை மிகக்குறைந்த அடைவுத்திறன் பெறுவோராக இருப்பர்.
- இவர்கள் எல்லா பாடங்களையும் கற்றுப் புரிந்து கொள்வதில், பெறுவதில், பின் தங்கி இருப்பர். இவர்களுடைய அடைவுத் திறனை மேம்படுத்தி தனிக்கவனம் செலுத்துவது அவசியம்.
- புதிய கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தவும், அவர்களுக்கு விருப்பமான வகுப்பறைச் சூழலை உருவாக்கவும் முயற்சிகள் எடுத்தல் வேண்டும்.
- இக்குழந்தைகளுக்கு பொதுவான அணுகுமுறையைப் பின்பற்றாது, ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட இயலாமையையும், இயல்பையும் அளந்தறிந்து, அதற்கேற்றார் போல் ஒரு சில உதாரணங்களை தரவேண்டும்.
- கற்பித்தல் திட்டங்களை, வகுப்பறைச் சூழலை உருவாக்கி இவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்த வேண்டும்.

34. **மனிதநேயக் கல்வியைப் பற்றி விளக்குக.** (2012, 2014)

- புரிந்து கொள்ளல் என்பது பல வழிகளில், பல நிலைகளில், பல சூழல்களில் மாணவர்களிடம் நிகழ்கிறது. அவையாவன, கேட்டுத் தெரிந்து கொள்ளுதல், பார்த்துத் தெரிந்து கொள்ளுதல், படித்துத் தெரிந்து கொள்ளுதல், அனுபவத்தின் மூலம் தெரிந்து கொள்ளுதல் என்பனவாகும், அவரவரின் அறிவாற்றல், மனப்பான்மை, நாட்டம், ஈடுபாடு ஆகியவற்றைப் பொருத்து புரிந்து கொள்ளல் மாறுபடுகிறது.
- பலதரப்பட்ட மாணவர்கள் உள்ள வகுப்பறை சூழலில் ஐம்புலன்களையும் தூண்டி கற்றலில் ஈடுபடச் செய்து வகுப்பறையை உயிரோட்டம் உடையதாக்க புரிந்து கொள்ளல் உதவுகிறது.
- புரிந்துகொண்டு கற்பதால் கடினமான பாடப்பொருளையும் எளிமையானதாக்கி ஆசிரியரின் கற்பித்தல் திட்டத்தை வெற்றி பெற வைக்கிறது. நுண்ணாய்வுசிந்தனை, புத்தாக்க சிந்தனைகளை வளர்த்து மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி, தரமான கல்விக்கு வழிவகுக்கிறது.
- வகுப்பறைச் சூழல் வெற்றி அடைய குழந்தை மையக் கல்வி (Child centred Education) அணுகுமுறை இன்றியமையாததாகும்.
- ஆசிரியர், மாணவர்கள் பால் அன்பும், அக்கறையும், அரவணைப்பு காட்டும் பாங்கையும், மாணவர்கள் ஆசிரியர்பால் நம்பிக்கைகொள்ளும் பாங்கையும், சகமாணவர்களோடு சகோதர பாசத்தோடு பழகும் பாங்கையும் ஆசிரியர் உருவாக்க வேண்டும். தானே கற்றல், குழு கற்றல், செய்து கற்றல் ஆகிய

அனைத்து கற்றல் செயல்கள் நிகழும் பொழுது, ஆசிரியர் வழிகாட்டியாக, தோழமை உணர்வோடு, மனிதநேயப் பிணைப்போடு பழகும் நயத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

- ❖ குழந்தை மனம் தெளிந்த நீரோடை போன்றது. முகம் காட்டும் கண்ணாடி போன் உள்ளம் படைத்தவர்கள் குழந்தைகள்.
- ❖ உள்ளது உள்ளபடியே ஒளிவு மறைவின்றிச் சொல்லும் பண்புடையவர்கள். இதற்கு ஏற்ற வகையில் பார்க்கவும், உணரவும், புரிந்து கொள்ளவும் உதவும் வகையில் வகுப்பறைச் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

**35. ஆசிரியர் மாணவர் உறவை வலுப்படுத்தும் காரணிகளை விவரி. (2011)**

- ➢ ஆசிரியர் மாணவர் உறவு என்பது ஆயிரங்காலத்துப் பயிர் போன்றது. மாணவரின் பன்முக வளர்ச்சிக்கு வித்தானது, எதிர்கால வளர்ச்சிக்கு உரம் போன்றது.
- ➢ பள்ளி நாட்களை நினைத்துப் பெருமையும், அதிசயமும், மகிழ்ச்சியும் அடைய வைக்க வேண்டிய உறவு.
- ➢ வகுப்பறைச் சூழல் பாடப்பொருள், கற்றல் - கற்பித்தல் இவற்றோடு ஆசிரியரின் கற்பித்தல் முறை, மாணவர்களின் ஆர்வத்திற்கும், ஈடுபாட்டிற்கும், மகிழ்ச்சிக்கும், கற்றல் அடைவிற்கும், இனிமையான சூழலுக்கும் மிகவும் அடிப்படையான காரணியாகும்.
- ➢ ஆசிரியரின் தொழில் மனப்பான்மை (Professional attitudes), சமுதாய அக்கறை, மாணவர் வளர்ச்சி, புதுமை நோக்கு, ஆராய்ச்சியில் நாட்டம் ஆகியத் தொழில் சார் பண்புகளோடு, மாணவர்கள் தம்மை எப்பொழுதும் அச்சமின்றி அணுகி உரையாடவும், மாற்றுக் கருத்துக்களையும், சந்தேகங்களையும் முன் வைக்கவும் முடிவு எடுக்கவும் பெற்றோர் மாணவர்கள் ஆகியோர் இயல்பாகச் சந்திக்கும் சுமூகமான உறவை வளர்த்துக் கொள்ளுதலும் (interpersonal behaviour) வேண்டும்.
- ➢ மாணவர்களின் மனவெழுச்சிகள் பலவிதம். அதை அங்கீகரித்து உற்சாகமூட்டி, மதிப்பளிக்கின்ற சூழல் வகுப்பறையில் நிலவுதல் வேண்டும். மாணவர்கள் எழுப்பும் சந்தேகங்கள், வினாக்கள், கருத்துகள், முடிவுகள் போன்றவை எந்த நிலையிலும் பிறரால் மாணவர்களின் சுய கௌரவத்திற்கு ஊறு விளைவிக்காததாக இருத்தல் வேண்டும்.

**<u>அன்பு, ஆதரவு, நம்பிக்கை:</u>**

- ➢ மாதா, பிதா, குரு தெய்வம் - இம் மரபுத் தொடருக்கு இலக்கணமாக ஆசிரியர் திகழ வேண்டும்.
- ➢ "ஆசிரியர் பணி அறப்பணி" - ஆம், மனித சமுதாயத்தில் நேயத்தையும், மனித வளத்தையும் திட்டமிட்டு செயல்படுத்தி வளர்க்கும் பொறுப்பான பணியாகும்.
- ➢ எதிர்கால இந்தியாவின் தூண்களாகத் திகழ இருக்கும் இன்றைய குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான செயல்களைச் செய்பவராக இருத்தல் வேண்டும்.

- இனம், மொழி வேற்றுமையின்றி, சாதிமத பேதமின்றி இன்முகத்தோடு, கனிவான சொல்லோடு, குழந்தைகளின் இயல்பு, எதிர்பார்ப்பு, விருப்பம், தேவை, உடல்நலம், வளம், மனநலம், செயல்திறன் ஆகியவற்றை நன்கு மதிப்பீடு செய்து குழந்தைகளின் தனியாள் வேற்றுமையை (Individual difference) கவனத்தில் கொண்டு ஆசிரியர் கடமை ஆற்ற வேண்டும்.
- தந்தையின் கண்டிப்போடு, தாயின் பாசத்தோடு, சகோதர / சகோதரியின் தோழமை உணர்வோடு, நிறைகளைப் பாராட்டியும், குறைகளை நீக்க ஆலோசனை கூறியும் வாழ்க்கை வளம்பெற வழிகாட்டிச் செயலாற்ற வேண்டும்.
- ஆசிரியர், மாணவர்களின் உணர்வுகளுக்கும், மாணவர்கள் ஆசிரியரின் மரியாதைக்கும், மதிப்பளித்து ஆசிரியர் சகமாணவர்களைச், சரிசமமாக மதிக்கும் மனப்பான்மையும் வேண்டும். இருத்தல் வேண்டும்.
- ஆசிரியர், இயலாக் குழந்தைகளை வகுப்பறையில் சக மாணவர்களோடு ஒருங்கிணைப்பதும் அக்குழந்தைகளின் சிறப்புத் தேவைகளை (Special Needs) நிறைவு செய்வதும், பிற மாணவர்களோடு அக்குழந்தைகளை ஒருங்கிணைத்துச் செல்லும் மனப்பாங்கு ஆசிரியருக்கு மிகவும் இன்றியமையாதது.
- மாணவர்களிடம் தன்னம்பிக்கையையும், சுயகட்டுப்பாட்டையும், சுய ஒழுங்கையும், சுய மதிப்பையும் வளர்க்கும் பண்பாட்டு நெறியாளராக ஆசிரியர் திகழ்தல் வேண்டும்.
- அது எதிர்காலத்தில் மனித நேயமும், பண்பாடும் உடையவர்களாக மாணவர்கள் வாழ வழி கோலும்.
- மாணவர்கள் என்ன கற்கிறார்கள் என்பதைவிட எவ்வாறு பயிற்றுவிக்கப்படுகிறார்கள் என்பதே மிகவும் முக்கியமானது. ஒரு மாணவர் தவறான பதிலைக் கூறும் போது ஆசிரியர் அக்கறையோடும், அமைதியோடும் அந்த மாணவருக்கு மீண்டும் வாய்ப்பளித்து சரியான பதிலைக் கூற வைக்க வேண்டும்.
- இன்முகமான ஆசிரியரின் (Pleasant teacher) பண்பு வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவரையும் மிக மிக முக்கிய நபராக (Very important person) மதிக்கும் மனோபாவம் மட்டும் அன்று, மாணவர்களின் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரின் நலனை (நோய்வாய்ப் பட்டவரை மருத்துவ மனையில் உள்ளவரை) தாத்தா, பாட்டியை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

**நம்பிக்கை:**

- ஒப்படைவுகளை (Assignment) முடிக்க, ஆசிரியர் திறமையைக்காட்டி உற்சாகப்படுத்தி மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும்.

- ஒரு செயலைச் செய்ய மாணவர் தடுமாறும் வேளையில் உனக்குத் தெரிந்ததை முதலில் செய் எனக்கூறல், மற்றொரு மாணவர் தவறாகச் செய்யும் சூழலில் சரி! சரி! நாம் இப்போது தான் கற்றுக் கொள்கிறோம். முயற்சி செய் உன்னால் முடியும் என்று உற்சாகப்படுத்துதல், வேறு இரண்டு மாணவர்கள் செய்வதறியாது திக்கு முக்காடும் பொழுது, ஆம் இச்செயல் கடினமானது என்றும் எனக்குத் தெரியும், செயல் முடியும் நிலையில் உள்ளது, இதை உன்னால் செய்து முடிக்க முடியும் என்றும் உற்சாகமூட்டி மாணவர்களையும் அன்புகாட்டி, அரவணைத்து, கற்றல் இலக்கை அடைய வழிகாட்டும் ஆசிரியராக செயல்பட்டால், வகுப்பறை சூழல் சிறப்பாக அமைந்து, பள்ளியின் கல்வித் தரம் உயர உதவும்.
- வளமான நெறிப்படுத்தப்பட்ட வகுப்பறைச் சூழலில் ஆசிரியர் ஒருவர் மட்டுமே பதில்களை வழங்குபவர் அல்ல.
- மாணவர்களின் திறமையை அறிந்த ஆசிரியர்கள் மாணவர்களே விளக்கங்களைக் கூறட்டும் என்றும், மாணவர்களாகவே கற்ற, கண்டறிந்த ஒன்றை தான் கற்பித்தது அன்று அவர்களாகவே கண்டுபிடித்தது என்றும் கூறுவது மாணவர்களின் திறமையில் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தும்.
- மாணவர்கள் புதிய முறையில் கற்றுக் கொள்ளும் போது ஒருவேளை மிகச் சரியான முறையாகக் கூட இருக்கலாம் என்றும், மாணவர்கள் அவர்களாகவே கண்ட புதிய முறை, நான் இந்த முறையில் கற்கலாம், கற்பிக்கலாம் என்று நினைத்துக் கூட பார்க்காத முறை என்று நேர்மையான அணுகுமுறையில் மாணவர்களின் செயல் திறமைகளைப் பாராட்டவும் அங்கீகரிக்கவும் வேண்டும்.

**அச்சமற்ற சூழல்:**

- குழந்தை வளர்ச்சி அடைந்து ஓடி, ஆடி, விளையாடும் பருவத்தில் எதையும் பார்த்து (பாம்பு, மிருகம்) அச்சப்படுவதில்லை.
- ஏனெனில் அக்குழந்தைக்கு அதனால் ஏற்படும் ஆபத்து, விளைவுகள் ஆகியவை தெரியாத பருவம். இச்சூழல் குழந்தைக்கு அச்சுறுத்தல் இல்லாத சூழல், அவ்வாறு அச்சுறுத்தலை உணருமானால், அதிலிருந்து விடுவிக்க பெற்றோர் உள்ளனர் என்ற நம்பிக்கையும், பாதுகாப்பு உணர்ச்சியும் ஏற்படுகின்றது.
- அதே குழந்தை பள்ளிக்கு வரும் போது புதிய சூழலை எதிர்கொள்கின்றது. இந்த புதிய சூழலில் இனம் புரியாத அச்சம் தோன்றுவது இயற்கை. அப்புதிய சூழலை அன்பாகவும், ஆதரவாகவும் மாணவர்களுக்கு ஏற்படுத்தித்தருவது ஆசிரியரின் முதன்மை பொறுப்பாகும்.
- எங்கே சுதந்திரமான உணர்வு இருக்கிறதோ, அச்சமற்ற சூழல் நிலவுகிறதோ அங்கே தான் கற்றல் நிகழும். கற்பிக்கப்படும் கருத்துக்களை அத்தகைய சூழலில் மாணவர்கள் ஏற்கவும், புரிந்து கொள்ளவும், சிந்தனைகளைத் தாராளமாக வெளிப்படுத்தவும் இயலும்.

- ➢ மாணவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், புதிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும், தன்னம்பிக்கையோடு 'எதிர்காலம் தன்கையில்' என்ற உணர்வோடு கல்வி வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவும்.

## 10 மதிப்பெண்கள் வினா விடைகள்

**36. வகுப்பறைச் சூழலைப் பற்றிய சமுதாய எதிர்பார்புகள் யாவை? (2011, 2018) (அல்லது) சமுதாய எதிர்பார்ப்புக்கேற்ப நல்ல வகுப்பறைச் சூழல் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரிவாக விளக்குக. (அல்லது) ஆசிரியர்கள் மீதான சமுதாய எதிர்பார்ப்புகளை விளக்குக. (2023)**

***பதில்: 2 மதிப்பெண்கள் வினா எண் -8***

**37. வகுப்பறையில் ஆசிரியர் – மாணவர் உறவை எவ்வாறு அமைத்துக் கொள்வீர் என்பதை விவரி. (அல்லது) மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு ஆசிரியர் மாணவர் உறவு முறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை விளக்குக. (2025) (அல்லது) ஒரு ஆசிரியர் அன்பானவராக, ஆதரவளிப்பவராக, நம்பிக்கையூட்டுபவராக இருக்க வேண்டும். ஏன்? (2010, 2014, 2017, 2019)**

***பதில்: 4 மதிப்பெண்கள் வினா எண் - 35***

**38. நல்ல வகுப்பறைச் சூழலை குழந்தைகளுக்கு எப்படி உருவாக்கித் தருவாய்? (அல்லது) ஒரு சிறந்த வகுப்பறைச் சூழலை உருவாக்குவதில் ஆசிரியரின் பங்கினை விளக்குக. (2012, 2016)**

***பதில்: 4 மதிப்பெண்கள் வினா எண் – 31***

***39.* குழந்தை உரிமை பாதுகாப்பு பற்றி விளக்குக. (2015) (அல்லது) குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை விரிவாக விளக்குக. (2020, 2022, 2026)**

***பதில்: 4 மதிப்பெண்கள் வினா எண் – 30 மற்றும் 26***

**40. மாணவர்களின் புலன்களைத் தூண்டும் பொருள்கள் பற்றி விவரிக்கவும். (2021)**

***பதில்: 4 மதிப்பெண்கள் வினா எண் – 32***

**41. இயலாதோருக்கான / மாற்றுத் திறனுடையோருக்கான கல்வி விளக்குக. (2013)**

- ❖ கல்வி பெறுதல் குழந்தையின் பிறப்புரிமை கல்வி வழங்குதல் சமுதாயத்தின் பொறுப்பு. சமுதாயத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் கல்வி பெற்றால் தான் அனைவருக்கும் கல்வி என்ற திட்ட இலக்கினை அடைய முடியும்.
- ❖ பிறக்கும் குழந்தைகள் அனைவரும் முழு உடல்வளர்ச்சி, மனநலத்துடன் பிறப்பதில்லை. இவர்கள் இயலாதோர் அல்லது மாற்றுத்திறன் உடையவர் என்று அறியப்படுகின்றனர். இவர்கள் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் (mentally retarded) சதவிகித வாரியாக வரிசைப்படுத்தினால் மாணவர்களுக்கு எளிதாக புரியும். ஐம்புலன்களில் குறைபாடுடையவர்கள் (கேட்க, பார்க்க, பேச இயலாதவர்கள்), உடல் ஊனமுற்ற குழந்தைகள் (கை, கால்) ஆகியோர் இயலாநிலையில் உள்ளவர்கள்.
- ❖ இக்குழந்தைகளின் இயலாத் தன்மையைக் கவனத்தில் கொண்டு மிஞ்சியுள்ள திறமைகளைக் கருத்தில் கொண்டு வகுப்பறைச் சூழலைத் திட்டமிடுதல்.

**சிறப்புப் பள்ளி (Special school)**

- ❖ சிறப்புப் பள்ளிகளில் ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி வழங்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கல்வி அளிக்கப்படுகிறது. சிறப்புப் பள்ளி என்பது மற்ற பள்ளிகளில் இருந்து வேறுபட்டு சிறப்புத் தன்மையைக் கொண்டு இயங்கும்.

**இயலாதோர்க்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் (Integrated Education for Disabled)**

- ❖ ஒரே வகுப்பறையில் இயல்பான குழந்தைகளோடு ஊனமுற்ற குழந்தைகளையும் சேர்த்து கல்வி அளிப்பது ஒருங்கிணைந்த கல்வி. இதில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆதார ஆசிரியர்களாக செயல்பட்டு வகுப்பாசிரியரின் உதவியோடு, ஆதார வகுப்பறையில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்களைக் கொண்டு கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வர். இதில் ஆதார அறை (Resource room) என்பது தனியாக அமைக்கப்பட்டிருக்கும். இம்முறையில் பள்ளிகளில் ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் ஓர் அங்கமாகச் செயல்படுகிறது.

**உள்ளடங்கிய கல்வி (Inclusive Education)**

- ❖ ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சாதாரண ஆசிரியர்களுக்கு ஊனமுற்ற குழந்தைகளைப் பள்ளிகளில் மேலாண்மை செய்யும் விதம் அல்லது பராமரித்தல் பற்றிய பணியிடைப் பயிற்சியளித்து, ஒரே வகுப்பில் மற்ற மாணவ மாணவிகளுடன் ஊனமுற்ற மாணவ - மாணவிகளுக்கும் கல்வி அளிக்கச் செய்வது உள்ளடங்கிய கல்வி ஆகும். இதில் ஆசிரியர்கள் தேவைப்படும் போது மட்டுமே சிறப்பாசிரியர்களிடம் ஆலோசனை பெறுவர். இம்முறையில் அனைத்து ஊனமுற்ற குழந்தைகளும் சாதாரண பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர். (ஊனத்தின் தீவிரம் மிகவும் அதிகமாக இருக்கும் நிலையில் சிறப்புப்பள்ளியில் சேர்க்க வழிகாட்டுவர்).

**சிறப்பியல்புக் குழந்தைகளின் புள்ளி விபரம்**

- ➢ சிறப்பியல்புக் குழந்தைகளின் எண்ணிக்கையை மிகச் சரியாக கணக்கிடுவது கடினமானது. 2001-ல் எடுக்கப்பட்ட தேசியக் கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகையில் 21.9 மில்லியன் நபர்கள் ஊனமுற்றோர்கள் எனத்தெரிகிறது. இதில் 12.6 மில்லியன் நபர்கள் ஆண்களும் மற்றும் 9.3 மில்லியன் நபர்கள் பெண்களாகவும் உள்ளார்கள்.
- ➢ மேலும் பள்ளிவயது குழந்தைகள் (5-14வயது) 3.4 மில்லியன் குழந்தைகள் சிறப்பியல்புக் குழந்தைகளாக உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தனை சிறப்பியல்புக் குழந்தைகளுக்கும் சிறப்புப்பள்ளி வாயிலாகக் கல்வியளிப்பது என்பது இயலாத நிலை உள்ளதால் உள்ளடங்கிய கல்விமுறை மூலமாக கல்வியளிக்க அனைவருக்கும் கல்வித்திட்டம் வாய்ப்பளித்துள்ளது.
- ➢ இன்றைய பள்ளிப் பாடத்திட்டத்தில் கற்றல் கற்பித்தல் முறைகளில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் சிறப்புக் குழந்தைகளுக்கான கற்பித்தல் அணுகுமுறைகள், அவர்கள்

கற்கும்போது ஏற்படக்கூடிய இடர்பாடுகள், அதற்குரிய தீர்வுகள், அவர்களுக்குரிய கல்விச் சலுகைகளும் வழங்கப்படுகிறது.

**42. *ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைக்கான உடன்படிக்கை வலியுறுத்தும் உரிமைகள் யாவை?*** (2023)

*ஐக்கிய நாடுகள் சபை குழந்தை உரிமைக்கான உடன்படிக்கை:*

- *வகுப்பறையில் உள்ள குழந்தைகள் பல சூழல்களில் இருந்து வருகின்றனர். பிறப்பாலும், இனத்தாலும், மொழியாலும், நிறத்தாலும், பண்பாட்டாலும், பொருளாதாரத்தாலும் மாறுபட்டவர்களாகவே அத்தகையோர் இருப்பர்.*
- *இப்படிப்பட்ட சூழலில் இருந்து வருகின்ற குழந்தைகளின் ஆர்வம், மனப்பான்மை, நாட்டம், பழக்கவழக்கம், செயல்கள் ஆகிய அனைத்தும் வேறுபட்டேயிருக்கும். ஆனால் மாணவப் பருவம் என்பது வளர வேண்டிய பருவம் என்பதால் வகுப்பறைச் சூழலில் மாணவர்கள் தாழ்வு மனப்பான்மையின்றி பிற மன அழுத்தங்கள் இன்றி தாராளமாக பழகும் பயிற்சியை அளித்தல் வேண்டும்.*
- *குழந்தைகள் உரிமையென்பது உலகளாவிய அளவில் பிரகடனப்படுத்தப்பட்ட உரிமை முழக்கம். சமத்துவம், குழந்தைகளின் பிறப்புரிமை, வாழும் உரிமை, குழந்தைகளின் சுய மரியாதை ஆகியவற்றிற்கு எவ்வித தீங்கும் ஏற்படாத வண்ணம் குழந்தைகள் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.*
- *ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் மீதான உடன்படிக்கை 18 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரையும் குழந்தைகள் என்கிறது. இவ்வுலகில் உள்ள அனைத்து வளங்களிலும் குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். இந்த பிரகடனங்களின் மையக்கருத்தினைக் கவனத்தில் ஏற்று வகுப்பறைச் சூழலில் மாணவர்களுக்கு அனைத்து வளங்களிலும், செயல்களிலும் முன்னுரிமை, சம உரிமை வழங்குதல் வேண்டும்.*
- *ஆண், பெண் உயர்வு, தாழ்வு போன்ற எந்த வித பாரபட்சமும் காட்டாமல் அனைத்து குழந்தைகளும் அடிப்படையான உரிமைகள் அனைத்தையும் அனுபவிக்க வழிவகை செய்ய வேண்டும்.*

**43. வகுப்பறைச் சூழல் மதிப்பீடு என்றால் என்ன?. (2026)**

வகுப்பறைச் சூழல் மதிப்பீடு என்பது வகுப்பறையின் புற மற்றும் அகத்தோற்றம் கற்றல் வகுப்பறை அமைப்பு உட்புறச் சூழல் ஆகியவற்றை அளந்தறிவதாகும்.

**44. மாற்றுத் திறனாளருக்கான வகுப்பறைச்சூழல் –குறிப்பு வரைக.. (2026 – 4 மதிப்பெண்கள்)**

- இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 45-வது பிரிவின்படி 1990 ஆம் ஆண்டில் தாய்லாந்து நாட்டின் ஜாம்டியன் நகரத்தில் நடைபெற்ற "அனைவருக்கும் கல்வி" என்ற தலைப்பில் நடைபெற்ற உலகளாவிய கருத்தரங்கத்தில் 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரையும், குறிப்பாக மாற்றுத்திறன் உடைய குறைந்த அளவு மற்றும் மிதமான அளவு (Mild and moderate) குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்து அவர்களைப் புரிந்து கொண்டு, அவர்களிடம் உள்ள இயலாத்

தன்மையைக் குறைத்து, எஞ்சியுள்ள திறமையை வளர்க்கின்ற வகையில் வகுப்பறைச் சூழலை உருவாக்கித்தருதல் வேண்டும் என்ற தீர்மானம் இயற்றப்பட்டது.

- கல்வி பெறுதல் குழந்தையின் பிறப்புரிமை கல்வி வழங்குதல் சமுதாயத்தின் பொறுப்பு. சமுதாயத்தில் உள்ள எல்லாக் குழந்தைகளும் கல்வி பெற்றால் தான் அனைவருக்கும் கல்வி என்ற திட்ட இலக்கினை அடைய முடியும்.
- பிறக்கும் குழந்தைகள் அனைவரும் முழு உடல்வளர்ச்சி, மனநலத்துடன் பிறப்பதில்லை. இவர்கள் இயலாதோர் அல்லது மாற்றுத்திறன் உடையவர் என்று அறியப்படுகின்றனர். இவர்கள் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் (mentally retarded) சதவிகித வாரியாக வரிசைப்படுத்தினால் மாணவர்களுக்கு எளிதாக புரியும். ஐம்புலன்களில் குறைபாடுடையவர்கள் (கேட்க, பார்க்க, பேச இயலாதவர்கள்), உடல் ஊனமுற்ற குழந்தைகள் (கை, கால்) ஆகியோர் இயலாநிலையில் உள்ளவர்கள்.
- இக்குழந்தைகளின் இயலாத் தன்மையைக் கவனத்தில் கொண்டு மிஞ்சியுள்ள திறமைகளைக் கருத்தில் கொண்டு வகுப்பறைச் சூழலைத் திட்டமிடுதல்.

DIET PYT

## 3. பல்வகுப்புப் பயிற்றல்

## இரண்டு மதிப்பெண்கள்

1. **இணைக்கப்பட்ட வகுப்பு எவ்வாறு அமைய வேண்டும்? (2020) இணைக்கப்பட்ட வகுப்புகள் என்றால் என்ன? (2022)**

   - இணைக்கப்பட்ட வகுப்பு மாணவர்கள் அனைவரும் தங்கள் திறனுக்கேற்றவாறு பிரிக்கப்பட்ட குழுக்களுக்குள் இருக்க வேண்டும்.
   - ஒரே அடைவு நிலை கொண்ட ஐந்து வகையான பிரிவுகளையும் மனத்தில் கொண்டு குழுக்களைப் பிரிக்க வேண்டும்.
   - ஒருங்கிணைக்கப்பட்ட சில பாடப் பகுதிகளுக்கு பல வகுப்புகளை ஒரே குழுவாக கொண்டும் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை மேற்கொள்ளல் நலம்.
   - தொடர்பணிகளைச் சரிபார்க்க வேண்டும்.

2. **பல்வகுப்பு கற்பித்தலுக்கு எவ்வாறு தொண்டு நிறுவன உதவிகளைப் பயன்படுத்தலாம்? (2020) (அல்லது) தொண்டு நிறுவனங்களை பல்வகுப்புப் பயிற்றலில் எவ்வாறு ஈடுபடுத்தலாம்? (2012)**

   - பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர், கிராமக் கல்விக் குழுவினர் நிதி உதவியுடன் பயிற்றுநர்களை நியமித்தல்.
   - கல்வித் தகுதி பெற்ற, விருப்பமுள்ள பள்ளியின் முன்னாள் மாணவர்களை அழைத்துப் பேசி, உள்ளூர் ஆர்வலர்களின் பட்டியலைத் தயாரித்து, தேவை கருதி முன்கூட்டியே தகவலனுப்பி, அவர் தம் கல்வித் தொண்டை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

3. **பல்நிலை கற்பித்தல் என்றால் என்ன?** (2026, 2019, 2016, 2014,2012) **பல்நிலை கற்பித்தல் பற்றி சிறு குறிப்பு எழுதுக.** (2022)

   - ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் வேறுபட்ட கற்றல் அடைவு நிலைகளிலுள்ள மாணவர்களை அல்லது குழுவினர்களை வைத்து இணைத்துக் கற்பித்தல் பல்நிலைக் கற்பித்தல் எனப்படும்.
   - இம்முறைகளில் கற்பிப்பவர் ஒருவரே ஆயினும் அவர் கற்பிக்கும் பாடப்பொருளும், கற்போரின் ஏற்கும் திறனும் வேறுபடுகின்றன. இவற்றை, ஏற்ற செயல்நுட்பங்கள், அணுகுமுறைகள், உத்திகள், பயிற்று முறைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி, கற்றல் அடைவை அதிகரிக்கச் செய்வதே குறிக்கோளாகும்.

4. **ஆசிரியர் மாணவர்களுக்கிடையே எந்தச் சூழலில் கற்றல் நிகழ்கிறது?** (2019)

   - பாடப்பொருளை அறிமுகப்படுத்தும் போதும்.
   - பாடப்பொருளைத் தொகுத்து நிறைவு செய்யும் போதும்.
   - திறனடைவை மதிப்பீடு செய்யும் போதும் மற்றும்
   - குறைதீர் செயல்களை நடைமுறைப் படுத்தும் போதும்.

DIET PVT

5. **பல்வகுப்புப் கற்பித்தலில் நேரடிக் கவனிப்பு – விளக்குக.** (2018)

- இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் சூழல் ஏற்படின், ஒவ்வொரு பாடவேளையையும் மூன்றாகப் பிரித்து, ஒரு வகுப்புக்கு நேரடி கற்பிப்பும்; அதே நேரத்தில் மற்ற இரண்டு வகுப்புகளுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கலாம்.
- ஆசிரியர் கற்பிப்பு பாடப் பொருளையும், செய்முறைப் பயிற்சிகளையும் வகுப்பிற்கேற்ப முறையே திட்டமிட்டு முன்பே வகுத்துக் கொண்டு செயல்படுத்தலாம்.
- செயல்முறை பயிற்சிகளைத் திட்டமிடும் போது ஆசிரியர் நேரடிக் கற்பிப்பைத் தொடர்ந்து வரும் செய்முறை வகுப்பு, பாடப் பொருளுக்கேற்றவாறு அமைத்தல் வேண்டும்.

6. **பல்வகுப்புக் கற்பித்தலில் மாணவர்களை எவ்வாறு அமர வைப்பாய்?** (2018,2016,) **பல்வகுப்புப் பயிற்றலில் மாணவர்களை அமரவைக்கும் முறை யாது? ஏன்?** (2025)

- பல்வகுப்புக் கற்றல் நிகழ்விற்கு ஏற்ற வகையில் மாணவர்களை வட்டமாக/ "ப "வடிவில்/ சிறுசிறு வட்டமாக அமர வைக்க வேண்டும்.
- இவ்வாறு அமரவைப்பதன் நோக்கம் மாணவர்கள் ஒருவரை ஒருவரும், ஆசிரியர் அனைவரையும் பார்வையிட வேண்டும்.
- மாணவர்கள் அனைவரும் ஆசிரியரை நேராகப் பார்த்துக் கற்க உதவ வேண்டும்.

7. **பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் ஏதேனும் நான்கினைக் கூறுக.** (2017)

- ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேறுபட்ட வகுப்புகளைக் கையாளுதல்.
- அனைத்து வகுப்புகளுக்கும், அனைத்துப் பாடங்களுக்கும் கற்றல் – கற்பித்தல் பொருள்கள் தயாரித்தல்.
- கற்றல் அடைவில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின்மீது தனிக் கவனம் செலுத்துதல்.
- மாணவர்களுக்குப் போதிய படித்தல் பயிற்சி அளித்து மேற்பார்வை செய்தல்.
- ஈராசிரியர் பள்ளிகளில் ஓர் ஆசிரியர் விடுப்பில் செல்லும்போது அனைத்து வகுப்புகளையும் ஒருவரே கவனித்தல்.
- மாணவர்களின் தனியாள் வேற்றுமைகளை அறிந்து செயல்படுதல்.
- செயல்வழிக் கற்றல், விளையாட்டு வழிக்கற்றல், பங்கேற்றுக் கற்றல் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்.
- கொடுக்கப்படும் பயிற்சிகளுக்குப் போதிய நேரம் ஒதுக்கி மேற்பார்வை செய்தல்.
- முதல் வகுப்பு மாணவர்களுக்குப் போதிய கவனம் செலுத்துதல்.

- மாணவர்கள் இடர்ப்படும் கடினப் பகுதிகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- குழுசெயல்களில் கவனம் செலுத்துதல்.
- மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்துதல்.
- செயல்பாடுகளை வழங்குவதில் கவனம் செலுத்துதல்.
- அனைத்து மாணவர்களையும் முறையாக மதிப்பீடு செய்ய போதிய கால அவகாசத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

8. **வகுப்புகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் போது வழங்கப்படக் கூடிய செயல்பாடுகள் யாவை?** (2023, 2017)
    - தன் சுத்தம் மற்றும் சுற்றுச்சூழல் சுத்தம் பேணுதல்
    - தோட்ட வேலை செய்தல்
    - கை வேலை மற்றும் சித்திர வேலை
    - விளையாட்டுப் பயிற்சிகள்
    - அணிப் பயிற்சி
    - கதை கூறுதல்
    - நாடகம் நடித்தல்
    - போட்டிகளில் பங்கேற்றல்
    - சமூகநலச் செயல்பாடுகள்.

9. **செயல்வழிக் கற்றல் அணுகுமுறைகளை எழுதுக.** (2015) **செயல்வழிக் கற்றலில் கற்றல் அட்டைகளின் முக்கியத்துவம் என்ன?** (2026)
    - செயல்வழிக்கற்றல் அணுகுமுறையில் அனைத்து பாடங்களிலுள்ள திறன்களுக்கு கற்றல் அட்டைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
    - இக்கற்றல் அட்டைகள பல்வகுப்புக் கற்பித்தல் முறைக்கேற்ப கற்பிக்க உதவும் குழு அட்டைகளாக உருவாக்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் அடைவுகளைப் பதிவு செய்ய திறனடைவு அட்டை (Achievement Chart) பயன்படுத்தப்படுகிறது.

10. **செயல்வழிக் கற்றலில் குழுக்களை எவ்வாறு அமைப்பாய்?** (2015)
    - தானே கற்றுக் கொள்ளும் திறன் கொண்ட குழு (fully self / supported group)
    - ஆசிரியரின் உதவியோடு கற்கும் குழு (Partially teacher supported group)
    - ஆசிரியரின் முழுக் கண்காணிப்பில் கற்கும் குழு (fully teacher supported group)
    - சக மாணவர் உதவியுடன் கற்கும் குழு (Peer group Supported).
    - கற்றல் பொருள்களை பயன்படுத்தி கற்கும் குழு.

DIET PYT

11. **பல்வகுப்புப் பயிற்றல் சூழலில் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகள் யாவை? (2024 – 4 மதிப்பெண்கள், 2014, 2010)**

- தகவல் அறியும் திறன், தேடலுக்காக தகவல் தொடர்பு கொள்ளும் திறன் இளம்பருவத்திலேயே மாணவர்களிடம் வளர்கிறது.
- இணைந்து செயல்படுதல், கூடிச் செய்ய முனைதல், உதவி மனப்பான்மை ஆகிய நற்பண்புகளை மாணவர்களிடையே இது வளர்க்கின்றது.
- மாணவர் தாம் கற்றதைத் தன்னொத்த மாணவர்களுக்கும் சொல்லித்தருவதால் கற்றலில் மேலும் தெளிவும் வலுவும் பெற வாய்ப்பளிக்கிறது.
- சமுதாய சக வாழ்வுக்குப் போற்றத்தக்க இயல்புகள், சமூகப் பண்புகள், இடர் களைதல், தொண்டில் மகிழ்ச்சி, உதவி மனப்பான்மை, ஒத்துழைப்பு ஆகியவை மாணவப் பண்புகளை ஒளிரச் செய்கின்றன.
- பல்வகுப்புச் சூழலில் கலந்துரையாடல் மிகுவதால், மாணவர்களின் கூச்சம் தெளிந்து அச்சம் அகன்று சுய வெளிப்பாடு மலர்கிறது.
- மாணவர்கள் ஒருவரை ஒருவர் ஒப்பு நோக்கித் தம் நிலையை உயர்த்த வழிகோலுகிறது.
- முன்னர் கற்றவற்றை நினைவு கூர்தலும், சரி பார்த்து வலுப்படுத்திக் கொள்ளவும் வழி வகுக்கின்றது.
- எல்லா மாணவர்களும் குழுக்களில் பங்கேற்றுத் தம் கருத்துக்களை வெளிப்படுத்த வாய்ப்பு கிட்டுகிறது.

12. **செயல்வழிக் கற்றல் முறையின் பயன்கள் நான்கினைக் குறிப்பிடுக.** (2013) (2025 – 4 **மதிப்பெண்கள்**)

- செயல்வழிக் கற்றல், குழுக் கற்றல், தானே கற்றல், சகமாணவர், குழுக் கற்றல் போன்ற புதிய கற்றல் உத்திகள் செயல்படுகின்றன.
- மாணவர்கள் அவரவர் வேகத்திற்கு ஏற்ப கற்க முடியும்.
- கால அட்டவணையை முறையாகப் பின்பற்றி ஈராசிரியர், மூவாசிரியர் உள்ள பள்ளிகளில் சிறப்பாக நடைமுறைப்படுத்தலாம்.
- ஓர் ஆசிரியர், ஒரு வகுப்பைக் கையாளும்போது பிற வகுப்புகளுக்கு குழுச்செயல்கள் / தனிச்செயல்கள் வழங்க வேண்டும். அதை உயர்வகுப்பு, மீத்திற மாணவர்களைக் கொண்டு பிறவகுப்பு மாணவர்கள் கற்க உதவ வேண்டும்.

DIET PYT

- இதற்குத் தேவையான கற்றல் கற்பித்தல் பொருள்கள், தானே கற்றல் பொருள்கள் ஆகியனவற்றை ஆசிரியர்கள் வார விடுமுறையில் தயாரித்து வைத்துக் கொள்ளுதல் அவசியம்.
- ஆசிரியர் விடுப்பில் செல்லும் போது மீத்திற மாணவர்கள், படித்த வேலையில்லாத உள்ளூர்ப் பட்டதாரிகள், ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள், கிராமக் கல்விக்குழு உறுப்பினர்கள், தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- வகுப்பறையில் தினமும் ஒரே இடம், அதே அண்டை மாணவர்கள், ஒரே பாடம் என்ற நிலைமாறி வெவ்வேறு வகுப்புகள் சார்ந்த திறன்கள், வெவ்வேறு அடைவு நிலையில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் செயல்பாடுகள் அமைத்துப் பங்கேற்றல் இதன் சிறப்பு அம்சமாக உள்ளது.
- மீத்திற மாணவர்கள், சராசரி, சிறப்புத் தேவையுள்ள கற்றலில் இடருறும் குழந்தைகள் எனப்பல பிரச்சினைகளை ஒரே நேரத்தில் கையாளுதல் மற்றும் தீர்வு காணுதல் சிறப்பான செயலாகும்.
- பள்ளியிலுள்ள அனைத்து மாணவர்களும் கற்றலில் இணைந்து ஈடுபட்டுப் பழகும் வாய்ப்பை இது அளிக்கிறது.
- ஆசிரியர்களுடைய பணி கம்பீரம், தற்சார்பு தொழில் வல்லமை, பணி திருப்தி, தன்னம்பிக்கை, தொண்டு மனப்பான்மை, விடாமுயற்சி, சமூகப் பொறுப்புணர்ச்சி பணிஈடுபாடு ஆகிய ஆசிரியத்துவ மாண்புகள் மலர இம்முறை வாய்ப்பளிக்கிறது.

13. **பல்வகுப்பு கற்பித்தல் வகுப்புகளை ஓர் ஆசிரியர் மேலாண்மை செய்யும் பொழுது அவர் பெறும் தொழில்திறன்கள் யாவை?**

- பாடப்பொருளிலும் கற்பித்தல் நுட்பங்களிலும், ஆழ்ந்த புலமை பெறுபவர்.
- உடன் பணியாற்றுபவரிடம் அனுபவக் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்பவர்.
- தொழிலறம், நன்னடத்தை, பணிநலம் ஆசிரியர் தொழில்சார் நற்பண்புகளைப் பெற்றிருத்தல்.
- மனத்திறன்கள், பணியிடைப்பயிற்சி, தானே கற்றல், புதியன அறிதல் போன்றவற்றின் வாயிலாகத் தன்னை புதுப்பித்துக் கொள்பவர்.
- வகுப்பறைச் சோதனைகள், புதுமை ஆக்கச் செயல்கள், செயலாராய்ச்சி முதலியவற்றால் அறிவு நலம் பொருக்குதல்.

14. **தானே கற்றல் என்றால் என்ன? (2011)**

ஆசிரியர் வழிகாட்டுதலின்படி, கற்றல் உபகரணங்களைக் கொண்டு கற்கும் முறையே தானே கற்றல் எனப்படும். தனி மாணவராகவோ, பிறருடன் இணைந்தோ ஆர்வத்துடன் தாங்களே ஆய்ந்து, அறிந்து, உணர்ந்து, கற்பதும், மதிப்பிடுவதும் தானே கற்றல் எனப்படும்.

15. **பல்வகுப்புச் சூழலில் ஆசிரியரின் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.** (2010)

- மாணவர் பற்றிய விபரங்களை சேகரித்தல்.
- மாணவர்களின் செயல், நடத்தை, பங்கேற்பு சேகரித்தல்.
- வார, ஆண்டுத் திட்டத்தை தயாரித்தல்.
- அனுபவங்களை, புதுமை ஆக்கச் செயல்களை நடைமுறைப்படுத்துதல்.
- கற்பித்தல் நோக்கம், கால அட்டவணை, கற்பித்தல் கருவிகளை பயன்படுத்துதல்.
- மதிப்பீடு மற்றும் மீள்பார்வை.

16. **அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் (SSA) முதன்மை நோக்கம் யாது?**

பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து, சேர்ந்த அனைவரையும் 2010 ஆம் ஆண்டிற்குள் இடைநிற்றலின்றி, தரமான கல்வியை உறுதியாக வழங்கி, எட்டாம் வகுப்பை முடிக்கச் செய்தல் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் (SSA) முதன்மை நோக்கமாகும்.

17. **பல் வகுப்புப் பயிற்றல் நோக்கம் யாது?** (2025)

ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் பல வகுப்புகளைப் பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றி மாணவரைக் கற்றலடைவுகள் பெறச் செய்வதே பல்வகுப்புக் கற்பித்தலின் நோக்கமாகும்.

18. **பல்வகுப்புப் பயிற்றல் என்பதன் பொருள் என்ன?** (2023)

ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளுக்குக் கற்றல் கற்பித்தல் நிகழ்வை மேற்கொள்ளல் பல்வகுப்புக் கற்பித்தல் எனப்படும்.

19. **தொடக்கப்பள்ளிக் கல்வி அடைவின் இலக்குகள்?**

தமிழைப் பேச, படிக்க, எழுதக் கற்றல், ஆங்கிலத்தைப் பேச, படிக்க, எழுதக் கற்றல், எண்களைக் கூட்ட, கழிக்க, பெருக்க, வகுக்க அறிதல், இயற்கைச் சூழலை விளங்கிக் கொள்ளல், சமூகச் சூழலுடன் பொருத்தப்பாட்டை அடைதல் - இவை தொடக்கப்பள்ளிக் கல்வி அடைவின் இலக்குகள் எனலாம்.

## நான்கு மதிப்பெண்கள்

20. **பல்வகுப்பு கற்பித்தலில் மாணவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வுகள் எவ்வாறு இருக்கும்?** (2010)

- பலவகுப்புக் கற்பித்தலில், குழுக்கற்றல் நிகழ்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எல்லா நேரங்களிலும் ஆசிரியரின் நேரடிக் கற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. இச்சமயங்களில் குழுக்கற்றலை நடைமுறைப்படுத்தலாம்.
- தெரிந்த கருத்துகளிலிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்ளவும், வலுவூட்டும் செயல்களில் மாணவர்களை ஈடுபடச் செய்யும் பொழுதும் இக்குழுக் கற்றல் முறை பயனுள்ளதாக அமையும்.

- ❖ இவை தவிர, பாட இணைச் செயல்பாடுகளில் ஈடுபடக்கூடிய கற்றல் நிகழ்வுகள், (எ.கா)தோட்டம் அமைத்தல், கண்காட்சி அமைத்தல்
- ❖ மாணவர்கள் கொண்ட குழுவிற்கு ஒரு குழுத்தலைவனைத் தெரிவு செய்ய வேண்டும். பலவகுப்புக் கற்பித்தல் சூழலில் குழுத்தலைவனின் பணி மிக முக்கியமானது.

**குழுத்தலைவனைத் தேர்வு செய்யும்போது,**

- ❖ ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு மாணவர்களைக் குழுத்தலைமைக்குத் தேர்வு செய்யலாம்.
- ❖ தேவைக் கேற்ற நேரத்தில் சுழற்சிமுறையில் குழுத்தலைவரை மாற்றிக் கொள்ளலாம்.
- ❖ ஒரே வகுப்பில் குழுக்கள் பிரிக்கப்பட்டிருந்தால், அந்த வகுப்பிலிருந்தே குழுத் தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்.
- ❖ வகுப்புகள் இணைந்து அமைந்திருந்தால், குழுவிலுள்ள உயர் வகுப்பு மாணவரைக் குழுத்தலைவனாகத் தெரிவு செய்ய வேண்டும்.
- ❖ குழுவை வழிநடத்திக் குழுவிலுள்ள அனைத்து மாணவர்களையும் கற்றலில் ஈடுபடுத்தும் திறன்படைத்த மாணவனைக் குழுத்தலைவனாகத் தெரிவு செய்ய வேண்டும்.
- ❖ தானே கற்றல், கற்றல் பொருட்கள் தயாரித்தல்.
- ❖ குழு தூண்டல்
- ❖ தாழ்வு மனப்பான்மை நீங்கி சிந்தனையை வெளிப்படுத்த.
- ❖ சக மாணவர்களுக்கு கற்பிக்க, தனி மாணவர் ஆர்வம், தேடல் ஏற்பட.

21. **ஒரு பல்வகுப்பு சூழலில் ஆசிரியராக தங்கள் பணியினை விவரிக்க.** (2010, 2016)

- ❖ மாணவர் பற்றிய விவரங்களைச் சேகரிப்பவர்
- ❖ வகுப்பறையில் குழந்தையின் செயல், நடத்தை பங்கேற்புகளைப் பற்றிய தகவல்களைப் பெறுபவர்.
- ❖ குழந்தைகளைக் கவனித்து அவர்களது தேவைகளை அறிபவர்.
- ❖ அந்தந்த நாளின் கற்றல் நிகழ்வுகளைப் பதிந்து நாள்குறிப்பைப் பராமரிப்பவர்.
- ❖ கற்றல் அலகுகளின் வார, மற்றும் ஆண்டுத் திட்டத்தைத் தயாரிப்பவர்.
- ❖ வகுப்பறைச் செயல்களைக் கால வரம்பிட்டுத் தினசரி செயல்களாகப் பதிந்து எதிர்காலத் தேவைக்கும் வைத்திருப்பவர்.
- ❖ ஒவ்வொரு பாட அலகின் கற்பித்தல் நோக்கங்களைப் பட்டியலிடுபவர்.
- ❖ பாடப் பொருளிலும் கற்பித்தல் நுட்பங்களிலும் ஆழ்ந்த புலமை பெறுபவர்.

DIET PY

- பலவகுப்புக் கற்பித்தல் பற்றிய பள்ளி அமைப்பில், கற்பித்தல் தத்துவங்களைப் பற்றி ஆழ்ந்து புரிந்திருப்பவர்
- உடன் பணியாற்றுபவரிடம் அனுபவக் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்பவர்.
- மனத்திறன்கள், பணியிடைப் பயிற்சி மற்றும் தானே கற்றல் தன்னை புதியன அறிதல் போன்றவற்றின் வாயிலாகத் தன்னைபுதுப்பித்துக் கொள்பவர். வகுப்பறைச் சோதனைகள், புதுமை ஆக்கச் செயல்கள், செயலாராய்ச்சி முதலியவற்றால் அறிவு நலம் பெருக்குதல்.
- தொழிலறம் (Code of Ethics, character and conduct), நன்னடத்தை, பணிநலம் ஆசிரியர் தொழில்சார் நற்பண்புகளைப் பெற்றிருத்தல்.
- பள்ளிச் செயல்களைத் திறம்படவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்துதல்.
- அன்றாட வகுப்பறை கற்றல் நிகழ்ச்சிக்கான கற்றல் உபகரணங்கள், பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வகுப்பறையில் கால அட்டவணை அன்றாடச்செயல்திட்டப் பணியையும், குழுச் செயல்களையும் தனிமாணவர் செயல்களையும் வகுத்தளித்தல்.
- மாணவர் படைப்புகள் மற்றும் ஆக்கச் செயல்களைப் பிறர் அறியக் காட்சிக்கு வைத்தல்.
- குழந்தைகளின் உள்ளார்ந்த கற்றல் திறன்களின் வளர்ச்சியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருத்தல்.
- குழந்தைகள் கற்க வழிகாட்டுதலும், உதவியும் வழங்குதல்.
- குழு மற்றும் தனிமாணவர் கற்றலுக்கு உகந்த சூழலை வகுத்துத் தருதல்.
- பல்வகைப்பட்ட தரமான கற்றல் செயல்களை உருவாக்கி, வற்றாத தொழில்நுட்பக் கருவூலமாகத் திகழச் செய்தல்.
- ஆக்க பூர்வ வெற்றி, நிறைவான மனநிலையை மாணவர்களிடத்தில் வளர்த்து, முனைந்து கற்கச் செய்தல்.
- தோல்வியும், இடர்ப்படுதலும் கற்றலின் ஒரு படிநிலையே என்று உணர்த்தி, மாணவர் துவளாதிருக்க ஆக்கபூர்வமாக வழிகாட்டுதல்.
- அன்றாடச் செயல்களையும், மாணவர் முன்னேற்றத்தையும் ஆக்கபூர்வமாக மீள்பார்வை செய்தல்.
- மாணவர் அடைவு முன்னேற்றத்தைப் பிறர் அறியக் காட்டுதல்.
- மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்தைப் பெற்றோர் உணரச் செய்தல்.
- தரத்தை அதிகரிக்கச் சுயமதிப்பீட்டையும், கற்றல் செயல் மதிப்பீட்டையும் வடிவமைத்தல்.

DIET PYT

- ❖ திலாஸ் ஆஞ்சிலாஸ் பௌத்திஸ்தாவின் கூற்றின்படி பல வகுப்புக் கற்பித்தல் விளைவுள்ள வகையில் செயல்பட பின்வருவன அவசியமானவை.
- ❖ வெற்றிகரமான நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டமிட்ட பயிற்று முறையும், மாணவர் குழுக் கட்டமைப்பும் அவசியம்.
- ❖ நன்கு மேலாண்மை செய்யப்படும் கற்றலுக்கு உகந்த வகுப்பறை அவசியம்.
- ❖ பல வகுப்புப் பள்ளிகளில் தேவையான வளங்கள் அனைத்தும் தயார்நிலையில் இருத்தல்.
- ❖ முறையான அன்றாடச் செயல்களைத் திட்டமிட்டு வைத்தல்.

22. **செயல் வழிக்கற்றல் முறையில் குழுக்களை எவ்வாறு பிரிப்பாய்?** (2011) (**அல்லது**) **பல்வகுப்பு கற்பித்தலில், குழுக்களை பிரித்தலின் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை?** (2017) (**அல்லது**) **தொடக்கப் பள்ளி வகுப்பறையில் குழுக்களை எவ்வாறு பிரிப்பாய்?** (2021) (**அல்லது**) **ஆசிரியர், கற்றல் குழுக்களை பிரிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை?** (2023) **மாணவர்களை பல்வகுப்புக் கற்பித்தலில் எத்தகைய குழுக்களாகப் பிரிக்கலாம்?** (2024)

- ➢ அதிகமாக உள்ள வகுப்பில் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.
- ➢ எண்ணிக்கை குறைவாக இருப்பின், இணைக்கப்பட்ட வகுப்புகளுக்குள் உள்ள மாணவர்களையே குழுக்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.
- ➢ அதிகபட்சமாக ஒரு குழுவில் ஆறு மாணவர்கள் வரை இருக்கலாம்.
- ➢ சில சமயங்களில் தேவைக்கேற்ப இருவர் கொண்ட குழுக்களாகவும் பிரிக்கலாம்.
- ➢ பிரிக்கப்பட்ட குழுக்கள் நிலையாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை.
- ➢ பாடத்திற்கேற்ப மாணவர்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.
- ➢ அவ்வாறு பிரிக்கப்படும் குழு பலவகுப்பு மாணவர்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்.
- ➢ ஒரே வகுப்பாக இருப்பின் தனிமாணவர் திறன் அடிப்படையில் மாணவர்களைக்
- ➢ குழுக்களாக அமைக்கலாம் (மீத்திறன், சராசரித்திறன், குறைதிறன்) சம அடைவு நிலை பெற்ற மாணவர்களைக் கொண்டும் குழுக்கள் அமைக்கலாம்.
  - ❖ தானே கற்றுக் கொள்ளும் திறன் கொண்ட குழு (fully self / supported group)
  - ❖ ஆசிரியரின் உதவியோடு கற்கும் குழு (Partially teacher supported group)
  - ❖ ஆசிரியரின் முழுக் கண்காணிப்பில் கற்கும் குழு (fully teacher supported group)
  - ❖ சக மாணவர் உதவியுடன் கற்கும் குழு (Peer group Supported).
  - ❖ கற்றல் பொருள்களை பயன்படுத்தி கற்கும் குழு.

DIET PVT

23. **பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் யாவை?** (2011, 2012, 2014, 2016, 2019)

- ஓர் ஆசிரியர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வேறுபட்ட வகுப்புகளைக் கையாளுதல்.
- அனைத்து வகுப்புகளுக்கும், அனைத்துப் பாடங்களுக்கும் கற்றல் – கற்பித்தல் பொருள்கள் தயாரித்தல்.
- கற்றல் அடைவில் மிகவும் பின்தங்கிய மாணவர்களின்மீது தனிக் கவனம் செலுத்துதல்.
- மாணவர்களுக்குப் போதிய படித்தல் பயிற்சி அளித்து மேற்பார்வை செய்தல்.
- ஈராசிரியர் பள்ளிகளில் ஓர் ஆசிரியர் விடுப்பில் செல்லும்போது அனைத்து வகுப்புகளையும் ஒருவரே கவனித்தல்.
- மாணவர்களின் தனியாள் வேற்றுமைகளை அறிந்து செயல்படுதல்.
- செயல்வழிக் கற்றல், விளையாட்டு வழிக்கற்றல், பங்கேற்றுக் கற்றல் ஆகியவற்றைச் செயல்படுத்துதல்.
- கொடுக்கப்படும் பயிற்சிகளுக்குப் போதிய நேரம் ஒதுக்கி மேற்பார்வை செய்தல்.
- முதல் வகுப்பு மாணவர்களுக்குப் போதிய கவனம் செலுத்துதல்.
- மாணவர்கள் இடர்ப்படும் கடினப் பகுதிகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- குழுசெயல்களில் கவனம் செலுத்துதல்
- மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்துதல்
- செயல்பாடுகளை வழங்குவதில் கவனம் செலுத்துதல்
- அனைத்து மாணவர்களையும் முறையாக மதிப்பீடு செய்ய போதிய கால அவகாசத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல்.

24. **கற்றல் குழுத் தலைவனின் பணிகளை விவரி.** (2026 – 10 **மதிப்பெண்கள்**, 2012, 2014, 2017) **குழுத் தலைவனின் பணிகளைக் கூறுக.** (2023, 2022)

- ஆசிரியரின் பணிகளில் உதவியாய் இருந்து, அவரது பணிச் சுமையைக் குறைக்கிறார்.
- ஆசிரியர் பிற வகுப்புகளில் பணியாற்றுகையில், தன் வகுப்பில் கற்றல் பணிகளை முன்னின்று இவர் நடத்துகிறார்.
- பலவகுப்புக் கற்பித்தல் சூழலில், கற்றல் குழுத் தலைவனின் பணிகள் பலவாகவும், பொறுப்பாகவும், மிக்க பயன் விளைவிப்பவையாகவும் அமையும்.
- குழுத்தலைவர் ஆசிரியருக்கு வகுப்பறை அமைப்பாக்கம், குழுப்பிரித்தல், மாணவர் அமர்வு, கற்றல் பொருள்கள் தயாரித்தல் ஆகிய பல பணிகளில் உறுதுணையாக இருக்கிறார்.
- குழு ஒழுங்கையும், வகுப்பறை அமைதியையும் நிர்வகிப்பவர் இவரே.
- குழுக்களில் இடம்பெறும் அனைத்து விதமான கற்றல் செயல்களுக்கும் இவர் வழிகாட்டுபவர்/ பொறுப்பாளர்.

DIET-PYT

❖ கற்றல் நிகழ்ச்சிக்குத் தேவையான துணைக் கருவிகளை வழங்கி, பயன்படுத்தி, சிந்தாமல் சிதையாமல் மீளப் பெறுபவர் குழுத்தலைவரே.

❖ களப் பணி மேற்கொள்ளும்போது வழிநடத்துபவராகிறார்.

❖ குழுவினை ஒருங்கிணைத்து வழி நடத்தி அவ்வப்போது வளர்நிலைக் கண்டு மாணவர் கற்றல் அடைவை உறுதி செய்ய உதவுகிறார்.

❖ கற்றல் பொருள்களைத் திறமையாகக் கையாண்டு தான் தெளிவுறக் கற்று, விளக்கிக் கூறி, தானே கற்றல் செயல்களை மேற்கொள்ள வழி வகுக்கிறார்.

❖ கற்றல் குழுத் தலைவனைத் தெரிவு செய்கையில், பாடத்துக்குப் பாடம் தலைவர் அடைவுத்திறனை மதிப்பிட்டு, வெவ்வேறு தலைவர்களையும் தேவைக்கேற்ப தெரிவு செய்யலாம்.

❖ நாளடைவில், அவர்தம் ஏற்புடைமையை கருதி, தேவைக்கேற்ப மாற்றியும் நியமிக்கலாம்.

❖ ஒரு வகுப்பின் தலைவனை அவ்வகுப்பிலிருந்தே தெரிவு செய்ய வேண்டும்.

❖ குழுத் தலைவனுக்கு பாடப் பொருளறிவும், பிறருக்கு எடுத்துக்கூறும் ஆர்வமும் இருக்க வேண்டும்.

❖ அவர், எல்லா மாணவர்களாலும் விரும்பப்படுபவராக, அரவணைப்பவராக, கனிவான தலைவராக அமைதல் மிக அவசியம்.

❖ தயக்கம், மந்தம் இல்லாதவராகவும் தகவல் தொடர்புத் திறன்களைப் பெற்றவராகவும் அமைதல் வேண்டும்.

❖ இணக்கம், ஒத்துணர்வு, பணி ஆர்வம் மிக்கவராக சமூகவளர்ச்சியில் அக்கறை உள்ளவராக அவர் அமைதல் இன்றியமையாததாகும்.

25. **பல்வகுப்பு பயிற்றல், செயல்வழிக் கற்றல் இவைகளின் தன்மைகளை ஒப்பிடுக.** (2013).

| **செயல்வழிக் கற்றல்** | **பல்வகுப்பு பயிற்றல்** |
|---|---|
| 1. திறன் வாரியான கற்றல் அட்டைகள் | 1. கற்பிக்க உதவும் குழு அட்டைகள் |
| 2. மீத்திறன் மாணவர்கள் உதவி புரிதல் | 2.ஆசிரியர் வழிகாட்டுதல் படி குழுக் கற்றலின் போது மீத்திறன் மாணவர்கள் உதவி புரிதல் |
| 3. உதவி மனப்பான்மை, ஒற்றுமை மாணவர்களிடையே ஏற்படும். | 3. உதவி மனப்பான்மை, ஒற்றுமை மாணவர்களிடையே ஏற்படும். |
| 4. குழுக்கற்றலால் மாணவர்களிடையே ஏற்படும் கூச்சம், அச்சம் அகன்று விடும். | 4. குழுக்கற்றலால் மாணவர்களிடையே ஏற்படும் கூச்சம், அச்சம் அகன்று விடும். |



DIET PYT

| | |
|---|---|
| 5. குழுவாரியாக மாணவர்கள் அமர்வு. | 5.வகுப்பு வாரியாக மாணவர்கள் அமர்வு. |
| 6. மாணவர்கள் கற்றல் வேகத்திற்கு ஏற்ப குழுக்கள் தானாக அமையும். | 6. குழுக்கள் ஆசிரியரால் அமைக்கப்படும். |
| 7. வெவ்வேறு வகுப்புகள் / அடைவு நிலையில் உள்ள மாணவர்கள் கொண்ட குழுக்கள் | 7. வகுப்பறையில் தினமும் ஓரே இடம், அதே அண்டை மாணவர்கள், ஓரே பாடம். |
| 8. ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு பாடங்கள். | 8. கால அட்டவணை பின்பற்றப்படும். |
| 9. அன்றைய பாடப் பொருளை மாணவரின் கற்றல் வேகம் தீர்மானிக்கிறது. | 9. ஆசிரியரால் தீர்மானம் செய்யப்படுகிறது. |

26. **வகுப்புகளை ஒருங்கிணைத்து கற்பித்தலால் மாணவர் அடையும் நன்மைகளை விவரிக்க. (அல்லது) பல்வகுப்புப் பயிற்றல் சூழலில் மாணவர்களுக்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றி விவரிக்கவும்.** (2013, 2015, 2018)

**விடை: வினா எண் 11**

27. **பல்வகுப்பு பயிற்றலில் பன்முகம் கொண்ட ஆசிரியரின் குணநலன்களை விவரிக்க.** (2013).

**விடை: வினா எண் 21**

28. **பல்வகுப்புக் கற்பித்தலின் நிகழ்வுகளை விளக்குக.** (2015) **பல்வகுப்புக் கற்பித்தலின் பயன்படுத்தப்படும் கற்றல் நிகழ்வுகளை விளக்குக.** (2024-10 மதிப்பெண்கள்)

பல்வகுப்புக் கற்பித்தல் சூழலை எளிமையாகக் கையாளுவதற்கு மூன்று வகையான கற்றல் நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தலாம்.

(அ) ஆசிரியர் – மானவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு

(ஆ) மாணவர் - மானவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (குழுக்கற்றல்)

(இ) மாணவர் – கற்றல் பொருள்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (தானே கற்றல்)

**அ) ஆசிரியர் - மாணவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வுகள்** :

- பலவகுப்புக் கற்பித்தலில் கற்றல் நிகழ்வுகள் பல வகையில் நடைபெற்றாலும் பின்வரும் சூழல்களில் ஆசிரியர் மாணவர்களுக்கு நேரடியாகக் கற்பிப்பது தவிர்க்க இயலாது
  அவை.
- பாடப்பொருளை அறிமுகப்படுத்தும் போதும்
- பாடப்பொருளைத் தொகுத்து நிறைவு செய்யும் போதும்,
- திறனடைவை மதிப்பீடு செய்யும் போதும் மற்றும்
- குறைதீர் செயல்களை நடைமுறைப் படுத்தும் போதும்

- இக்கற்றல் நிகழ்வின் போது ஆசிரியரின் ஆளுமைப் பண்பு, மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி, கற்றலில் ஆர்வத்தையும் தொடர்ந்து கற்கவும் மாணவர்களைத் தூண்டும்.

*ஆ)* **மாணவர் - மாணவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (குழுக்கற்றல்)**

❖ பலவகுப்புக் கற்பித்தலில், குழுக்கற்றல் நிகழ்வுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. எல்லா நேரங்களிலும் ஆசிரியரின் நேரடிக் கற்பித்தல் நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. இச்சமயங்களில் குழுக்கற்றலை நடைமுறைப்படுத்தலாம்.

❖ தெரிந்த கருத்துகளிலிருந்து தொடர்ந்து கற்றுக் கொள்ளவும், வலுவூட்டும் செயல்களில் மாணவர்களை ஈடுபடச் செய்யும் பொழுதும் இக்குழுக் கற்றல் முறை பயனுள்ளதாக அமையும்.

இவை தவிர,

❖ தோட்டம் அமைத்தல், கண்காட்சி அமைத்தல்

❖ மாணவர்கள் கொண்ட குழுவிற்கு ஒரு குழுத்தலைவனைத் தெரிவு செய்ய வேண்டும். பலவகுப்புக் கற்பித்தல் சூழலில் குழுத்தலைவனின் பணி மிக முக்கியமானது.

**குழுத்தலைவனைத் தேர்வு செய்யும்போது**,

➢ ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு மாணவர்களைக் குழுத்தலைமைக்குத் தேர்வு செய்யலாம்.

➢ தேவைக் கேற்ற நேரத்தில் சுழற்சிமுறையில் குழுத்தலைவரை மாற்றிக் கொள்ளலாம்.

➢ ஒரே வகுப்பில் குழுக்கள் பிரிக்கப்பட்டிருந்தால், அந்த வகுப்பிலிருந்தே குழுத் தலைவரைத் தெரிவு செய்ய வேண்டும்.

➢ வகுப்புகள் இணைந்து அமைந்திருந்தால், குழுவிலுள்ள உயர் வகுப்பு மாணவரைக் குழுத்தலைவனாகத் தெரிவு செய்ய வேண்டும்.

➢ குழுவை வழிநடத்திக் குழுவிலுள்ள அனைத்து மாணவர்களையும் கற்றலில் ஈடுபடுத்தும் திறன்படைத்த மாணவனைக் குழுத்தலைவனாகத் தெரிவு செய்ய வேண்டும்.

**இ. மாணவர் - கற்றல் பொருள்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (தானே கற்றல்)**

➢ கற்றல் பொருள்களோடு கற்கும்போது கற்றல் நிலைப்படுவதோடு, மேலும் கற்பதற்கான ஆர்வமும் ஏற்படுகிறது. கற்றலில் ஒரு தேடல் உண்டாகிறது. இவ்வகையான பலவகுப்புக் கற்றல் சூழலில், கற்றல் பொருள் தயாரிப்பதில் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

**கற்றல் பொருள்கள் தயாரித்தல்**

- குழுக் கற்றலுக்கு உதவும் வகையில் போதுமான எண்ணிக்கையில் கற்றல் பொருள்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கற்றல் பொருள்கள் பாடப்பொருளுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும்.
- குழந்தைகள் கையாளுவதற்கு ஏதுவாக அமைந்திருக்க வேண்டும்.
- மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பனவாக இருக்க வேண்டும்.
- தானே கற்றலுக்கு ஏதுவாக இருக்க வேண்டும்.

- எ.கா: கீழ்க்காணும் செயல்களுக்குத் தேவையான கற்றல் பொருள்கள் தயாரித்துக் கொள்ளல்.

  அ) சாலைப் போக்குவரத்து விளக்கு - பட அட்டை.

  ஆ) ஒலி எழுப்பாதே - பட அட்டை.

  இ) எச்சரிக்கை என்று எழுதப்பட்ட மின்னட்டை.

  ஈ) பல்வேறு விளம்பரங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.

  உ) பொதுநலம், மருத்துவவிவர அட்டைகள்.

  ஊ) மருத்துவமனை மற்றும் கிராம வரை படங்கள்.

  எ) பேருந்து நிலையம், தொடர் வண்டி நிலையம்: கால அட்டவணை.

29. **உன்னுடைய வகுப்பறையில் தொடர்புடைய பாடங்களைக் கற்பிக்க என்ன விதமான செயல்களை திட்டமிடுவாய்?** (2018) **தொடர்புடைய பாடங்களைக் கற்பித்தலைப் பற்றி விளக்குக.** (2022)

- இரண்டு வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் சூழ்நிலையில், அடுத்தடுத்த வகுப்புகளே ஓர் ஆசிரியர் பொறுப்பில் இருத்தல் நலம்.

  முதல் வகுப்பும், இரண்டாம் வகுப்பும்

  இரண்டாம் வகுப்பும், மூன்றாம் வகுப்பும்

  மூன்றாம் வகுப்பும், நான்காம் வகுப்பும்

  நான்காம் வகுப்பும், ஐந்தாம் வகுப்பும்

- அடுத்தடுத்த இரு வகுப்புகள் ஓர் ஆசிரியரின் பொறுப்பில் இருந்தால், கிட்டத்தட்ட தொடர்புடைய பாடப் பகுதிகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்க இயலும்.
- செய்முறைப் பயிற்சிகள் வழங்கும்போது மட்டும் வகுப்பிற்கேற்ப செயல்களை மாற்றி வழங்கலாம்.
- மொழிப் பாடத்தில் கேட்டல், படித்தல் போன்றவைக்கான பயிற்சிகள் மூலம் மாணவர்களுக்கு மீள்அடைவும் (Feed back), வலுவூட்டமும் (re-inforcement) கிடைக்கும்.
- எனவே, தொடர்புடைய பாடப் பொருள்களை ஒரே நேரத்தில் கற்பிப்பதற்கேற்றார் போல் திட்டமிடுதல் அவசியம்.
- மீத்திறக் குழந்தைகள் உதவியுடன் செய்முறைப்பயிற்சியை கற்றலில் ஆர்வமூட்ட பயன்படுத்தலாம். மேலும் அவ்வப்போது ஊக்கமூட்டி வகுப்பறை ஒழுங்கிற்கு உட்படுத்தி மாணவர்களின் திறனுக்கேற்ப வீட்டுப் பாடப் பயிற்சிகளை வழங்கலாம்.

30. **உன் வகுப்பறை / பள்ளி சூழலை மேம்படுத்த சமுதாயம் மற்றும் தொண்டு நிறுவனங்களை எவ்வாறு ஒருங்கிணைப்பாய் என்பதை விளக்குக.** (2019)

  - ❖ பெற்றோர் – ஆசிரியர் கழகம்.
  - ❖ கிராமக் கல்விக்குழு
  - ❖ உள்ளூர் ஆர்வலர்கள்
  - ❖ மகளிர் சுய உதவிக்குழு
  - ❖ முன்னாள் மாணவர்கள்
  - ❖ தொண்டு நிறுவனங்கள்
  - ❖ அன்னையர் குழு
  - ❖ புரவலர்கள்



DIET PYT

மேற்கண்ட அமைப்புகளின் மூலம் மாணவர்கள் சேர்க்கை, குடிநீர், கழிப்பறை வசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம், கூடுதல் கட்டிடம், கூடுதல் ஆசிரியர் நியமனம், மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கி மாணவர்கள் கல்வி அடைவு மற்றும் தரத்தினை மேம்படுத்தலாம்.

31. **பல் வகுப்புச் சூழலில் ஆசிரியரின் பன்முகப் பணிகள் யாவை?**

- ❖ திலாஸ் ஆங்கினிஸ், பௌத்திஸ்தா (1994) கருத்துப்படி பலவகுப்புக் கற்பித்தலில் ஆசிரியர்கள் கீழ்க்காணும் நான்குவகை அடிப்படைக் கொள்கைகளை மனதில் கொள்ள வேண்டும்.
  - i. குழந்தைகள் ஒவ்வொருவரும் கற்றலில் தனித்தன்மை வாய்ந்தவர்கள்.
  - ii. குழந்தைகள் அனுபவங்களின் வாயிலாகச் சிறப்பாகக் கற்கிறார்கள்.
  - iii. குழந்தைகள் பிற குழந்தைகளிடமிருந்து எளிதில் கற்கின்றனர். அவ்வாறு அவர்கள் இணைந்து செயல்பட்டுக் கற்பவை, அவர்களிடத்தில் தன்னம்பிக்கையையும் வாழ்க்கைப் பிரதிபலிப்புகளையும் நடைமுறை வாழ்க்கையில் உண்டாக்க வல்லவை.
  - iv. ஒரு வகுப்பிலிருக்கும் குழந்தைகள், குழுவின் பல்திறன் வல்லமைகளையும், பல ஆர்வத்தையும், திறமைகளையும் கருத்தில் கொண்டு வடிகாலாக்கி நடைமுறைப்படுத்த ஏற்றதாகவும் பலவகுப்புக் கற்பித்தல் திட்டம் அமைய வேண்டும்.

32. **சாலை போக்குவரத்து என்ற பாடத்திற்கு எம்மாதிரியான கற்றல் பொருள்கள் தயாரிப்பாய்?** (2020)

- ❖ குழுக் கற்றலுக்கு உதவும் வகையில் போதுமான எண்ணிக்கையில் கற்றல் பொருள்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ❖ கற்றல் பொருள்கள் பாடப்பொருளுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும்.
- ❖ குழந்தைகள் கையாளுவதற்கு ஏதுவாக அமைந்திருக்க வேண்டும்.
- ❖ மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பனவாக இருக்க வேண்டும்.
- ❖ தானே கற்றலுக்கு ஏதுவாக இருக்க வேண்டும்.
- ❖ கற்றல் கற்பித்தல் கருவிகளான தலைமேல் பட வீழ்த்தி, நழுவப் படவீழ்த்தி, கணினி வழி நழுவங்கள், மாதிரிகள், மின்னட்டைகள், விளக்கப்படங்கள், பொம்மலாட்டங்கள் போன்ற கருவிகளை கொண்டு கற்பிக்கலாம்.
- ❖ எ.கா: கீழ்க்காணும் செயல்களுக்குத் தேவையான கற்றல் பொருள்கள் தயாரித்துக் கொள்ளல்.

  அ) சாலைப் போக்குவரத்து விளக்கு - பட அட்டை.

  ஆ) ஒலி எழுப்பாதே - பட அட்டை.

  இ) எச்சரிக்கை என்று எழுதப்பட்ட மின்னட்டை.

  ஈ) பல்வேறு விளம்பரங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.

  உ) பொதுநலம், மருத்துவவிவர அட்டைகள்.

  ஊ) மருத்துவமனை மற்றும் கிராம வரை படங்கள்.

  எ) பேருந்து நிலையம், தொடர் வண்டி நிலையம்: கால அட்டவணை.

33. **ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான கற்பித்தல் நிகழ்வுகளை எழுதுக.** (2021) **பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான கற்பித்தல் நிகழ்வுகள் பற்றி விவாதிக்க.** (2026)

- ○ பலவகுப்புக் கற்பித்தலில் கற்றல் நிகழ்வுகள் பல வகையில் நடைபெற்றாலும் பின்வரும் சூழல்களில் ஆசிரியர் மாணவர்களுக்கு நேரடியாகக் கற்பிப்பது தவிர்க்க இயலாது. அவை.

- ➢ பாடப்பொருளை அறிமுகப்படுத்தும் போதும்
- ➢ பாடப்பொருளைத் தொகுத்து நிறைவு செய்யும் போதும்,
- ➢ திறனடைவை மதிப்பீடு செய்யும் போதும் மற்றும்
- ➢ குறைதீர் செயல்களை நடைமுறைப்படுத்தும் போதும்
- ➢ இக்கற்றல் நிகழ்வின் போது ஆசிரியரின் ஆளுமைப் பண்பு, மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தி, கற்றலில் ஆர்வத்தையும் தொடர்ந்து கற்கவும் மாணவர்களைத் தூண்டும்.

**பத்து மதிப்பெண்கள்**

**34. பல் வகுப்புக் கற்பித்தல் சூழலை எளிமையாகக் கையாளுவதற்கு மூன்று வகையான கற்றல் நிகழ்வுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவாய் என்பதை விளக்குக. (2019) (அல்லது) பல் வகுப்புக் கற்பித்தல் அணுகுமுறையில் நீ பார்வையிட்ட கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை விளக்கமாக எழுதுக. (2012, 2016) (அல்லது) பல் வகுப்புக் கற்பித்தல் சூழலை எவ்வாறு சிறப்பாக கையாள்வாய்? (2013) (அல்லது) பல் வகுப்புக் கற்பித்தல் சூழலில் உள்ள நிகழ்வுகளை விளக்கி, இன்றைய வகுப்புச் சூழலில் எவ்வகையான நிகழ்வுகள் அதிக பொருத்தப்பாடுடையவை என்பதை விவரி. (2010)**

**விடை: வினா எண் 28**

**எடுத்துக்காட்டு:**

**செயல் 1 (குழுத் தூண்டல்)** (Group inspiration)

ஓர் அழகான சின்னஞ்சிறிய நாய்க்குட்டி, அடர்த்தியான வெள்ளைவெளேரென்று உரோமம், பளிச்சிடும் கண்கள், வளைந்த வால், எப்போதும் துறுதுறுவென்று வீட்டிற்குள் அலைந்து கொண்டிருக்கும். செல்வத்திற்கு அதனுடன் விளையாடுவதென்றால் கொள்ளை ஆசை. தினந்தோறும் பள்ளி முடிந்து வந்தவுடன் அதனை அழைத்துக் கொண்டு வெளியில் செல்வான். ஒரு நாள், நாய்க் குட்டியுடன் ஒரு பாலத்தைக் கடக்க முயன்றான். நாய்க் குட்டி சட்டென்று நின்றது. செல்வம் நிமிர்ந்து பார்த்தான். வேகமாக வண்டியொன்று குறுகியபாலத்தில் இவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. சட்டென்று விலகிக்கொண்டான். செல்வம் ஒரு கணம் திகைத்தான். நாய்க்குட்டி மட்டும் நில்லாமலிருந்தால்! நாய்க் குட்டியை நன்றியுடன் தடவிக் கொடுத்தான். வீட்டிற்குத் திரும்பும் வழியில் பல்வேறு சாலை அடையாளக் குறியீடுகளையும், அறிவிப்புகளையும் படித்துக் கொண்டே வந்தான்.

**செயல் 2 (மாணவர் செயல்)**

மாணவர்கள் கதையில் கேட்ட, தாங்கள் ஏற்கனவே பார்த்த அறிவிப்புகள், சாலை அடையாளங்கள், விளம்பரங்கள், எச்சரிக்கைகள் போன்றவற்றைத் தனித்தாளில் எழுதுதல் மற்றும் வரைதல். பின்னர் ஆசிரியர் அவற்றைச் சரிபார்த்தல்.

**செயல் 3 (ஆசிரியர் - மாணவர்) - வகுப்பு 3 - தமிழ்**

தேடித்தேடி என்ற படக் கதையைக் கூறுதல். சாலையில் காணப்படும் நில், கவனி, செல், குறுகலான பாதை, சாலையைக் கடக்கும்போது இருபுறமும் பார்த்துச் செல், போன்ற விவரங்களைப் படங்களுடன் விளக்குதல்.

**செயல் 4 (மாணவர் - மாணவர்) - வகுப்பு 4**

தயார் நிலையில் உள்ள செயல் அட்டைகளை எடுத்து ஒரு மாணவர் படிக்க, மற்றவர்கள் அது விளம்பரமா, எச்சரிக்கையா எனக் கூறுதல். குறிப்பிட்ட எச்சரிக்கை எங்கு எழுதப்பட்டிருக்கும் என மாணவர் கேட்க, மற்றொருவர் விடை கூறுதல்.

**செயல் 5 (மாணவர் - மாணவர்) - வகுப்பு 5 - தமிழ்**

தயார் நிலையில் உள்ள அஞ்சல் பொருள் விலைப் பட்டியலை எடுத்து, ஒரு மாணவர் "அஞ்சல் அட்டையின் விலை என்ன? " என்றவுடன், மற்றொரு மாணவர் அதன் விலையைக் கூறுதல். இதுபோலவே, அங்காடி விலைப்பட்டியலில் உள்ள பொருள் வாரியாகப் பெயரை ஒரு மாணவர் கூற, மற்றொருவர் அதன் விலையைக் கூறுதல்.

**செயல் 6 (ஆசிரியர் - மாணவர்) வகுப்பு 4**

'பார்க்கும் இடமெல்லாம்' - என்ற பாடப் பகுதியில் வரும் விளம்பரங்களையும், நகைச்சுவைத் துணுக்குகளையும் ஆசிரியர் கற்றல் பொருள் கொண்டு விளக்கிக் கூறுதல்.

**செயல் 7 (தானே கற்றல்) - வகுப்பு 5 - தமிழ்**

ஆறுகளின் நீளங்கள் வரையப்பட்ட படத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புதல்.

**செயல் 8 (மாணவர் - மாணவர்) - வகுப்பு 3**

போக்குவரத்து விளக்க அட்டை கொண்டு, சிவப்பு விளக்கு, மஞ்சள் விளக்கு, பச்சைவிளக்கு உணர்த்தும் கருத்துகளை ஒருவர் கேட்க மற்றொருவர் கூறுதல்.

**செயல் 9 (ஆசிரியர் - மாணவர்) வகுப்பு 5**

பார்ப்போம், படிப்போம் - என்ற பாடப் பகுதியில் உள்ள வரை படங்கள், அறிவிப்புகள் போன்றவற்றைக் கற்றல் பொருள்கள் கொண்டு விளக்குதல். இவை வாழ்க்கையில் பயன்படும் விதம் விளக்கிக் கூறுதல். பள்ளியில் உள்ள தகவல் பலகை, பேருந்து நிலையத்தில் காணப்படும் கால அட்டவணை போன்றவற்றை பற்றி விளக்கிக் கூறுதல்.

**செயல் 10 (தானே கற்றல்) - வகுப்பு 3**

மாணவர்கள் தாமே விளம்பரத்தைப் படித்து, அது இடம்பெறும் இடத்தைச் செயலட்டையில் எழுதுதல். விளம்பரத்தை முறைப்படுத்தி பொருள் மாறாது தாங்களே எழுதுதல்.

**செயல் 11 (தொடர் செயல்)**

ஆசிரியர் 3, 4, 5 வகுப்புகளை ஒருங்கிணைத்து, கீழ்க்காணும் செயலைச் செய்து வரச்செய்தல்

- உன் ஊரில் காணப்படும் அறிவிப்புகளை எழுதி வருக?
- அங்காடிக்குச் சென்று பொருள்களின் விலைப் பட்டியல் எழுதி வருக?

பேருந்து நிலையத்திற்குச் சென்று, கால அட்டவணையைக் குறித்து வருக போன்ற தொடர் செயல்களை வழங்குதல்.

**35. செயல்வழிக் கற்றல் அணுகுமுறைகளைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. (2011, 2014) அல்லது செயல்வழிக் கற்றல் அணுகுமுறை ஒரு பல்வகுப்புப் பயிற்றல் முறை என்பதை விவாதித்து, அதன் பயன்களை கூறுக. (2018) (அல்லது) செயல்வழிக் கற்றல் முறையின் பயன்கள் யாவை?**

**விடை: வினா எண் 9, 12, 11**

**36. பல்வகுப்புப் பயிற்றலில் ஆசிரியரின் தொழில் திறமையை வளர்த்துக் கொள்ள உதவும் பல்வேறு பணிநிலைப் பரிமாணங்கள் யாவை? (2017) அல்லது பல்வகுப்புக் கற்பித்தலில் ஆசிரியரின் பல்வேறு பணிநிலைப் பரிமாணங்களை எழுதுக. (2015, 2022)**

**விடை: வினா எண் 21**

**37. பல்வகுப்புக் கற்றலின் குழுத்தலைவனின் பணிகளை பட்டியலிடுக. (2020)**

**விடை: வினா எண் 24**

**38. பல்வகுப்புக் கற்பித்தல் சூழலை எவ்வாறு கையாளுவாய்? (2021) பல்வகுப்புக் கற்பித்தல் சூழலில் ஆசிரியர்கள் எத்தகைய அணுகுமுறைகளை கையாளுகிறார்கள் என்பதை விவரி. (2025)**

பல வகுப்புகளுக்குக் கற்பிக்கும் சூழலில் நேரடிக் கவனிப்பு, மீத்திற மாணவர் துணை, தொடர்புடைய பாடக் கற்பிப்பு, குழுக் கற்றல், மேற்பார்வைப் படிப்பு போன்ற அணுகுமுறைகளைக் கையாளலாம்.

**நேரடிக் கவனிப்பு:**

- ஓர் ஆசிரியர் ஐந்து வகுப்புகளையோ, மூன்று வகுப்புகளையோ, இரண்டு வகுப்புகளையோ ஒரே நேரத்தில் கையாள வேண்டிய சூழல் ஏற்படலாம்.
- இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் சூழல் ஏற்படின், ஒவ்வொரு பாடவேளையையும் மூன்றாகப் பிரித்து, ஒரு வகுப்புக்கு நேரடி கற்பிப்பும்; அதே நேரத்தில் மற்ற இரண்டு வகுப்புகளுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கலாம்.
- ஆசிரியர் கற்பிப்பு பாடப் பொருளையும், செய்முறைப் பயிற்சிகளையும் வகுப்பிற்கேற்ப முறையே திட்டமிட்டு முன்பே வகுத்துக் கொண்டு செயல்படுத்தலாம்.
- செயல்முறை பயிற்சிகளைத் திட்டமிடும் போது ஆசிரியர் நேரடிக் கற்பிப்பைத் தொடர்ந்து வரும் செய்முறை வகுப்பு, பாடப் பொருளுக்கேற்றவாறு அமைத்தல் வேண்டும்.

**தொடர்புடைய பாடங்களை கற்பித்தல்:**

- இரண்டு வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் சூழ்நிலையில், அடுத்தடுத்த வகுப்புகளே ஓர் ஆசிரியர் பொறுப்பில் இருத்தல் நலம்.
    - முதல் வகுப்பும், இரண்டாம் வகுப்பும்
    - இரண்டாம் வகுப்பும், மூன்றாம் வகுப்பும்
    - மூன்றாம் வகுப்பும், நான்காம் வகுப்பும்
    - நான்காம் வகுப்பும், ஐந்தாம் வகுப்பும்
- அடுத்தடுத்த இரு வகுப்புகள் ஓர் ஆசிரியரின் பொறுப்பில் இருந்தால், கிட்டத்தட்ட தொடர்புடைய பாடப் பகுதிகளை ஒருங்கிணைத்துக் கற்பிக்க இயலும்.
- செய்முறைப் பயிற்சிகள் வழங்கும்போது மட்டும் வகுப்பிற்கேற்ப செயல்களை மாற்றி வழங்கலாம்.
- மொழிப் பாடத்தில் கேட்டல், படித்தல் போன்றவைக்கான பயிற்சிகள் மூலம் மாணவர்களுக்கு மீள்அடைவும் (Feed back), வலுவூட்டமும் (re-inforcement) கிடைக்கும்.

❖ எனவே, தொடர்புடைய பாடப் பொருள்களை ஒரே நேரத்தில் கற்பிப்பதற்கேற்றார் போல் திட்டமிடுதல் அவசியம்.

❖ மீத்திறக் குழந்தைகள் உதவியுடன் செய்முறைப்பயிற்சியை கற்றலில் ஆர்வமூட்ட பயன்படுத்தலாம். மேலும் அவ்வப்போது ஊக்கமூட்டி வகுப்பறை ஒழுங்கிற்கு உட்படுத்தி மாணவர்களின் திறனுக்கேற்ப வீட்டுப் பாடப் பயிற்சிகளை வழங்கலாம்.

**<u>பல்வகுப்பு கற்றல் சூழல்</u>**:

எடுத்துக்காட்டாக, கற்றல் நிலை கீழ்க்காணும் மூன்று சூழல்களில் அமைகிறது எனக் கொண்டு அவற்றிற்கேற்பப் பல்வகுப்புக் கற்பித்தல் சூழலை ஆசிரியர்கள் எதிர் கொள்ளலாம்.

- **<u>சூழல் 1வகுப்பு 1</u>**

ஆசிரியர் படங்களைச் சுட்டிக் காண்பித்து அதற்குரிய தொடர்புகளைக் கூறச் செய்தல்.

- **<u>சூழல் 2 வகுப்பு 2</u>**

இருவர் இருவராக மாணவர்கள் அமர்ந்துள்ள நிலையில் ஒரு குழந்தை மற்றொரு குழந்தையிடம் தன் வீட்டுத் தோட்டத்தைப் பற்றிக் கூறுதல். பின்பு அடுத்த குழந்தை தன் வீட்டுத் தோட்டத்தைப் பற்றிக் கூறுதல்.

- **<u>சூழல் 3 வகுப்பு 3</u>**

தங்களிடமுள்ள எழுது பலகை / நோட்டுப் புத்தகத்தில் பாடத்தைப் பார்த்து எழுதுதல்.

- **<u>சூழல் 1</u>** இல் ஆசிரியர் கூறுவதைக் குழந்தைகள் கவனிக்கின்றனர். குழந்தைகளின் சிந்தனைக்கு வேலை அளிக்கப்படுகின்றது.
- **<u>சூழல் 2</u>** இல் இரண்டாம் வகுப்புக் குழந்தைகள் உணர்ந்தனவற்றைக் கூறுகின்றனர். உள்ளத்தில் பதிந்தவைகள் வெளிப்படுகின்றன. உணர்வுத் தூண்டலால் சிந்தனை வெளிப்படுகின்றது.
- **<u>சூழல் 3</u>** இல் குழந்தைகள் செயலில் ஈடுபட்டுள்ளனர். இம்மூன்று சூழலிலும் நடைபெறும் கற்றல் தன்மைகளை அறிவு, பதிவு, முனைவு என மூன்றாகக் கூறலாம்.
- <u>சூழல் 1</u> இல் ஒரே குழுவாக்கிக் கற்பித்தல் செயல் நடைபெறுகிறது.
- **<u>சூழல் 2</u>** இல் இருவர் கொண்ட சிறு சிறு குழுக்கள் கற்றல் செயலில் ஈடுபடுகின்றன.
- **<u>சூழல் 3</u>** இல் ஒரு குழுவில் கற்றல் நிகழ்கிறது. எழுதுதலில் ஆர்வம் ஏற்பட இரண்டு, மூன்று குழுக்களைப் பிரித்து எழுத்து வேலையைத்தரலாம். எழுத்துப் போட்டி வைக்கலாம்.

**39. பல்வகுப்புக் கற்பித்தல் சூழலை எளிமையாகக் கையாளுவதற்கு நடைமுறைப்படுத்தக் கூடிய கற்றல் நிகழ்வுகளின் வகைகளைக் குறிப்பிடுக. (2024- 2 மதிப்பெண்)**

பல்வகுப்புக் கற்பித்தல் சூழலை எளிமையாகக் கையாளுவதற்கு மூன்று வகையான கற்றல் நிகழ்வுகளை நடைமுறைப்படுத்தலாம்.

(அ) ஆசிரியர் – மானவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு

(ஆ) மாணவர் - மானவர்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (குழுக்கற்றல்)

(இ) மாணவர் – கற்றல் பொருள்களுக்கிடையேயான கற்றல் நிகழ்வு (தானே கற்றல்)

**40. கற்பித்தல் நிகழ்வு எளிமையாக வெற்றியடைய ஆசிரியர் எவ்வாறு திட்டமிடல் வேண்டும்? (2024- 2 மதிப்பெண்)**

கற்பித்தல் நிகழ்வு எளிமையாக வெற்றியடைய ஆசிரியர் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

- கால அட்டவணையை நிர்ணயம் செய்தல்.
- பல்வகுப்புக் பாடப்பொருளுக்கேற்ப கற்பித்தல் பொருட்க:ளைத் தயாரித்தல்.
- பல்வகுப்பு ஒத்த பாடத்திறன்களை ஒருங்கிணைத்துப் பட்டியலிட்டு, பாடப்பொருளையும் தயாரித்தல்.

**41. பல் வகுப்புப் பயிற்றலின் இன்றியமையாமை குறித்து விளக்குக.(2025)**

- தொடக்கப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் அனைத்து வகுப்புகளிலும் ஒரே அடைவுநிலையில் இருப்பதில்லை.
- ஒரு பள்ளியின் நான்காம் வகுப்புப் பாடங்கள் திறனடைவில் அனைத்து மாணவரும் நான்காம் வகுப்புக்குரிய நிலையில் இருப்பதில்லை; சிலர் மூன்றாம் வகுப்பு அடைவு நிலையிலும், மிகச் சிலர் இரண்டாம் வகுப்பு அடைவு நிலையிலும், ஒருசிலர் ஐந்தாம் வகுப்புக்குரிய திறனடைவு நிலையிலும் இருக்கின்றனர். இவ்வேறுபாடுகள், புதிய வகுப்பில், புதிய பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு இடையூறாக இருத்தல் இயல்பே. இச்சூழலில் பலவகுப்புப் பயிற்றல் ஒரு சுமை, இடர், சிரமம் எனக் கொள்வதற்கில்லை. மாறாக மாணவர்கள் கூடுதல் எண்ணிக்கையில் கொண்ட வகுப்புகளைக் கையாள்வதும் கடினம். எனவே, இந்நிலையில் பெரும்பான்மையான வகுப்புகளும் பல்நிலைக் கற்பித்தல் வகுப்புகளே என்பது தெளிவாகும்.
- வகுப்புக்கோர் ஆசிரியரென ஐந்து வகுப்புக்கும் ஐந்து ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுப் பணியில் இருந்தாலும், ஆசிரியர்கள் பல்வேறு விடுப்புகளில் செல்கின்றபோதும், இடமாறுதல், பதவி உயர்வு காரணமாக ஏற்படும் காலி பணியிடம் நிரப்பப்படாத போதும், பிற பணிகளில் ஈடுபடும் போதும் ஏனைய ஆசிரியர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புகளைக் கையாள வேண்டிய நிலை உருவாகின்றது.
- வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை இருப்பினும் ஐவரும் தற்செயல் விடுப்புகள் மேற்கொள்ளும் போதும், சுமார் 75 நாள்கள் (5×(12+3)) மகப்பேறு விடுப்புகள், மருத்துவ விடுப்புகள் மற்றும் பிறவிடுப்புகள் எடுக்கும் போதும் அந்நாள்கள் அனைத்துமே பள்ளிக்குப் பல்வகுப்புப் பயிற்றல் நாள்களாக நேர்தல் கண்கூடு.
- எனவே, ஈராசிரியர், மூன்றாசிரியர் பணிபுரியும் பள்ளிகள் அதிகம் உள்ள இன்றைய சூழ்நிலையில் பல்வகுப்புக் கற்பித்தல் முறை தவிர்க்க முடியாததாகும். வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்றவாறு, சிறு கிராமங்களில் கல்விச் சேவையைக் கொண்டு செல்வதற்கு, அரசு புதிய சிறு பள்ளிகளைத் தொடங்கி ஒன்று அல்லது இரண்டு ஆசிரியர்களை நியமிக்கிறது. மாணவர் எண்ணிக்கை மிகவும் Fiwthf இருப்பதால் பல்வகுப்புக் கற்பித்தல் முறை தவிர்க்க இயலாது.

DIET PYT

42. பல்வகுப்புப் பயிற்றலில் நேரடிக் கவனிப்பு பற்றி எழுதுக. (2026)

**நேரடிக் கவனிப்பு:**

- ஓர் ஆசிரியர் ஐந்து வகுப்புகளையோ, மூன்று வகுப்புகளையோ, இரண்டு வகுப்புகளையோ ஒரே நேரத்தில் கையாள வேண்டிய சூழல் ஏற்படலாம்.
- இரண்டு அல்லது மூன்று வகுப்புகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கும் சூழல் ஏற்படின், ஒவ்வொரு பாடவேளையையும் மூன்றாகப் பிரித்து, ஒரு வகுப்புக்கு நேரடி கற்பிப்பும்; அதே நேரத்தில் மற்ற இரண்டு வகுப்புகளுக்கு செய்முறைப் பயிற்சிகளையும் வழங்கலாம்.
- ஆசிரியர் கற்பிப்பு பாடப் பொருளையும், செய்முறைப் பயிற்சிகளையும் வகுப்பிற்கேற்ப முறையே திட்டமிட்டு முன்பே வகுத்துக் கொண்டு செயல்படுத்தலாம்.
- செயல்முறை பயிற்சிகளைத் திட்டமிடும் போது ஆசிரியர் நேரடிக் கற்பிப்பைத் தொடர்ந்து வரும் செய்முறை வகுப்பு, பாடப் பொருளுக்கேற்றவாறு அமைத்தல் வேண்டும்.

***********************************************************************************

DIET PYT

## 4. உணர்வு சார்ந்த கற்றல்

## இரண்டு மதிப்பெண்கள்

**1. கல்வி கற்பித்தலின் நோக்கங்கள் யாவை? (2021)**

- மாணவர் அறிவினை பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடையச் செய்வது.
- மாணவரிடம் எழுச்சியினையும், உணர்வினையும் தூண்ட செய்வது.
- மாணவர்களிடம் செயல் திறன்களை வளர்ப்பது.

**2. பெஞ்சமின் புளூமின் கற்றலின் வகைபாடுகளை எழுதுக. (2021)**

1) அறிவு சார்ந்தவகை (Cognitive Domain)

2) எழுச்சி சார்ந்தவகை (Affective Domain)

3) உடல் உள இயக்கம் சார்ந்தவகை (Psychomotor Domain)

**3. மனவெழுச்சி நுண்ணறிவின் இயல்புகள் யாவை? (2021, 2013, 2010)**

- இயல்பாகவே ஒவ்வொரு குழந்தையிடமும் பிறவியிலேயே அமையப்பட்டது. (It is an innate potential)
- ஒவ்வொரு குழந்தையிடமும் வெவ்வேறு அளவுகளில் அமையப் பெற்றிருக்கும்.
- மனவெழுச்சிகளை உணர்ந்து செயல்படும் ஆற்றலோடு தொடர்புடையது.
- உணர்வுகளையும் நினைவிருத்தலையும் உள்ளடக்கியது.

**4. விழுமத்தின் இயல்புகளை எழுதுக. (2021)**

- பயிற்சியாளரின் விழுமம் என்பது வெறும் பயிற்சி அதனால் ஏற்படும் மனவெழுச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது விழுமம்.
- விழுமம் என்பது நலம் செய்யும் உணர்வுகளை அகவயப்படுத்தி செயலாற்றுவது.

**5. மனப்பான்மையின் பண்புகளை கூறுக. (2020)**

- மனப்பான்மையில் பொதுவாக மூன்று அம்சங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அவை சிந்தனை, உணர்வு, செயல்.
- மனப்பான்மை என்பது சிந்தனைக்கூறு, 'நம்பிக்கை' (Belief)' எனப்படும். அது ஒருவரது எண்ணத்தை பிரதிபலிக்கிறது.
- மனப்பான்மையின் உணர்வுக்கூறு 'விழுமம்' (Value) எனப்படும். இது ஒரு பொருளால் நாம் கவரப்படுகிறோமா, வெறுப்புறுகிறோமா அல்லது நடுநிலையாகத் திகழ்கிறோமா என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.
- மனப்பான்மையின் மூன்றாவது கூறான செயல் என்பது நமது நடத்தைத் தோன்றுவதற்கான தயார் நிலையைக் (Readiness to act) குறிக்கின்றது.
- நமது பல்வேறு மனப்பான்மைகள் குழந்தைப் பருவத்திலேயே, ஆக்க நிலையுறுத்தல் (conditioning), பின்பற்றுதல் (Imitation), போதனை (Instruction) ஆகியவற்றால் தோன்றி நிலைத்து விடுகின்றன.

6. **மாணவர்களின் மனவெழுச்சிகளை நெறிப்படுத்துதல் மற்றும் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பவை யாவை?** (2020)

❖ ஒருவர் தமது மன வெழுச்சிகளுக்கும், மகிழ்ச்சிக்கும் தாமே பொறுப்பேற்றல்.

❖ பிறர் தமது மனவெழுச்சிகளை கண்டறிந்து பயன்பெறுவதற்கு உதவுதல்.

7. **மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகள் யாவை?** (2023, 2019)

❖ மனவெழுச்சியினை உணர்தல் மற்றும் வெளிப்படுத்துதல்

❖ மனவெழுச்சியினை சிந்தனையில் பயன்படுத்துதல்.

❖ மனவெழுச்சிகளைப் புரிந்துகொண்டு பகுத்தாய்தல்.

❖ மனவெழுச்சிகளை நெறிப்படுத்தி சுயமுன்னேற்றத்துக்கு வழிவகுத்தல்.

8. **உடன்பாட்டு மனப்பான்மையினை மாணவனிடம் எவ்வாறு வளர்க்கலாம்?** (2019, 2014)

❖ உடன்பாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க நல்லவிதமான சுய அறிவுறுத்தல்கள் பயிற்சியை மாணவர்களிடையே கடைபிடிக்க உதவுதல்.

❖ பலவீனங்களை மீறி சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதையை கூறி தன்னம்பிக்கை உணர்வினை வளர்த்தல்.

❖ ஏளனமான வார்த்தைகள் மூலம் மாணவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாதிருத்தல்.

❖ மாணவர்களின் திறமை, ஆர்வம், விருப்பத்திற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தி திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்யவேண்டும்.

❖ தேவையற்ற ஒப்புமை செய்து மாணவர்களின் மன உணர்வினை காயப்படுத்தாமலிருத்தல்.

9. **மகாத்மா காந்தியடிகள் பயன்படுத்திய விழுமங்களைக் கூறுக.** (2018)

மக்களாட்சித் தத்துவம், சமதர்மம், மதச்சார்பின்மை, சமத்துவம், சமநீதித்தத்துவம் மேலும் நமது இந்திய பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வேர்களாகக் காணப்படும், உண்மை, அஹிம்சை, கருணை, அமைதிவழி, மன்னிக்கும் பண்பு, சகிப்புத் தன்மை, எளிமை, அறிவு வேட்கை, அறிவைப் பரப்புதல், ஒத்துழைப்பு நல்குதல் போன்ற பண்புகளும் குழந்தைகளிடையே வளர்க்கப்பட வேண்டிய பண்புகள் ஆகும்.

10. **எந்த உணர்வின் மூலம் குழந்தைகளுக்கு அச்சம் ஏற்படுகிறது?** (2018)

அச்சம் என்ற மனவெழுச்சி குழந்தைகளிடம் இயல்பாகக் காணப்படுவது, இதன் முக்கிய நோக்கம், தப்பித்து உயிர் வாழ்வதற்கு உதவுவது. 'தனியாக விடப்பட்டிருக்கிறோமோ' என்ற உணர்வின் அடிப்படையிலேயே குழந்தைகளிடம் அச்சம் எழுகிறது.

11. **அறிவு சார்ந்த வகைக் கற்றலின் நோக்கங்கள் நான்கினைக் கூறுக.** (2017, 2022)

❖ கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் (Knowledge)

❖ புரிந்து கொள்ளுதல் (Understanding)

- ❖ பெற்ற அறிவினைப் புதிய சூழலில் பயன்படுத்துதல் (Application)
- ❖ விவரங்களைப் பகுத்தாராய்தல் (Analysis)
- ❖ விவரங்களைத் தொகுத்தாராய்தல் (Synthesis)
- ❖ மதிப்பிட்டு அறிதல் (Evaluation).

**12. பயிற்சி ஆசிரியர்களுக்கான விழுமத்தின் முக்கியத்துவம் ஏதேனும் நான்கினைக் கூறுக. (2017)**

- ❖ பயிலும் நிறுவனச் சூழலை மதித்தல்.
- ❖ பயிற்சியைத் திறம்பட ஏற்பதற்குப் பயன்படுகிறது.
- ❖ பயிற்றுனர்களின் ஆர்வத்தை மேம்படுத்துகிறது.
- ❖ கடினமான பயிற்சிகூட எளிமையாகவும், இனிமையாகவும் அனைவரும் பெற ஊக்கம் அளிக்கிறது.
- ❖ தாமாக முன்வருதல், பயிற்சிப் பணிகளில் மனநிறைவு, பயிற்றுனர், தலைமை ஆகியோருடன் அன்பு பாராட்டுதல், காலந் தவறாமை, பயன்பாடு, எதிர்கால சமுதாயத்தின்பால் அக்கறை, ஆகிய நற் சிந்தனைகளை பயிற்சியாளர் கொண்டிருத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

**13. விழுமக்கல்வி என்றால் என்ன? (2024, 2016)**

குழந்தைகட்குக் கல்வியின் வாயிலாக அறிவையும் திறன்களையும் வளர்த்தல் ஆசிரியர் கடமையாகும். குழந்தைகள் எதிர்காலத்தில் நாட்டின் சிறந்த குடிமக்களாக உருவாகும் வண்ணம் நற்பண்புகளையும், எண்ணங்களையும் உருவாக்குவதும் கல்வியின் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும். இத்தகைய நல்ல மனப்பாங்கை வளர்க்கும் கல்வியினை "விழுமக் கல்வி" என்று கூறுகிறோம்.

**14. மனவெழுச்சி நுண்ணறிவு குறித்து ஜாக்மேயரின் வரையறை யாது? (2016) மனவெழுச்சி நுண்ணறிவு – வரையறு (2011)**

❖ **ஜாக்மேயர், பீட்டர் ஸலோவே முன்மொழிந்த வரையறையானது**:

"மனவெழுச்சி நுண்ணறிவு என்பது சமூக நுண்ணறிவின் உள் அங்கமாகும். தமது மற்றும் பிறரது உணர்வுகள், மனவெழுச்சிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, முறைப்படுத்தும் அறிவைப் பெற்றிருப்பதோடு அவற்றில் தமது சிந்தனைகளையும் செயல்களையும் நெறிப்படுத்தி மேம்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பதே மனவெழுச்சி நுண்ணறிவாகும்."

❖ **எஸ். ஹெயின் என்பவரது வரையறைப்படி,**

"மனவெழுச்சிகளை உணர்தல், வெளிப்படுத்துதல், அடையாளம் காணுதல், நினைவிலிருத்தல், அவற்றைப் பயன்படுத்திக் கற்றல், நெறிப்படுத்துதல் ஆகியவற்றில் மேம்பட்ட ஆற்றலை ஒருவர் இயல்பாகப் பெற்றிருத்தலைக் குறிப்பதே மனவெழுச்சி நுண்ணறிவாகும்".

❖ **லீ. பரோவேதனி என்பாரது வரையறைப்படி,**

"மனவெழுச்சி நுண்ணறிவு என்பது, உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் அறிந்து கொண்டு, தம்மை நெறிப்படுத்தவும், பிறரோடு தாம் கொண்டுள்ள உறவுகளை பயன் மிக்கதாக ஆக்கிவிடுவதற்கு பெற்றிருக்கும் ஆற்றலாகும் ".

**15. விழுமக் கல்வியின் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு யாது? (2015)**

- ❖ விழுமக் கல்வி பள்ளியில் நடத்தப்பெறும் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் பெறுவர். வகுப்பிற்கு உள்ளும், புறமும், ஒவ்வொரு சிறு சிறு செயலிலும் நல்ல உணர்வுகளும், அதன் அடிப்படையிலான செயல்களும் வளர்க்கப்படுகின்றன.
- ❖ விளையாட்டில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல், மற்றவருடன் இணைந்து செயல்படுதல் போன்ற நன்னெறி விழுமப் பண்புகள் பள்ளி வாழ்க்கையில் மட்டுமே வளர்கின்றன.
- ❖ விழுமக் கல்வியைப் பாடம் சார்ந்த செயல்பாட்டிலும் பாடம்சாரா செயல்பாட்டிலும் ஆசிரியரே திட்டமிட்டு வளர்க்க வேண்டும்.

**16. உணர்வு சார்ந்த வகையின் நோக்கங்கள் யாவை? (2015, 2014, 2010)**

1) பாராட்டுணர்வை வளர்த்தல்

2) ஆர்வம் கொள்ளுதல்

3) மனப்பான்மை பெறுதல்

4) உயர்ந்த எண்ணங்களைப் பேணுதல்

5) நற்பண்புகளைப் பெறுதல்

**17. விழுமக்கல்வியின் பொது நோக்கங்கள் நான்கினைக் கூறுக. (2013)**

- ❖ அடிப்படையான மனிதப் பண்புகளை மாணவர்களிடம் வளர்ப்பது அவற்றுள் முக்கியமானவை அவைகள். சுத்தம், வாய்மை, அஹிம்சையுணர்வு, கடின உழைப்பு, அன்பும் பரிவும், சமத்துவம், சமதர்மம், மதச் சார்பின்மை, குடியாட்சி தத்துவ உணர்வு, ஒத்துழைப்பு நல்குதல், நீதியுணர்வு, தைரியம், அறிவியல் நோக்கு, சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, உற்பத்தி திறன் அதிகரிப்பு, சிறு குடும்ப நெறி போன்றவை.
- ❖ ஒவ்வொரு மாணவரும் தமது தனி மற்றும் சமூக வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக உதவுதல்.
- ❖ தற்போது நாட்டில் நிலவும் சமூக பொருளாதார நிலைமைகளை மாணவர்களுக்கு அறியச் செய்து, அதற்கான தீர்வுகளைக் கண்டறியும் விழிப்புணர்வை உருவாக்குதல்.
- ❖ சமயம், மொழி, சாதி, பாலினம் குறித்த பாகுபாடுகளை தவிர்த்து விலகி எண்ணத்திலும் செயலிலும் சிறப்பான பண்புகளை மாணாக்கரிடத்தில் உருவாக்குதல்.
- ❖ மாணவர்களிடத்தில் தன்மதிப்பை உருவாக்குதல்; அவர்களது உள்ளார்ந்த திறன்களை வளர்த்தல்; நல்ல சமூக ஒழுக்கப் பண்புகளை அவர்களிடம் வளர்த்திட உதவ வேண்டும்.
- ❖ தன்னைக் குறித்தும், சமூகத்தைக் குறித்தும், நாட்டைக் குறித்தும் பிற நாடுகள் குறித்தும், சுற்றுப்புற சூழல் குறித்தும், எல்லாச் சமயங்கள் குறித்தும், மாணவர்களிடம் நல்லெண்ணத்தை வளர்த்திட உதவ வேண்டும்.

DIET PYT

18. **அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமங்கள் நான்கினை கூறுக.** (2012)

- விட்டொழித்தல், தவிர்த்தல்
- மற்றவர்களின் பண்பாட்டு மதிப்புகளை பாராட்டுதல்
- தீண்டாமையை எதிர்த்தல்
- கொடைத்தன்மை
- குடிமை உரிமை
- பிறர்பால் பரிவு
- கூட்டுறவு
- தூய்மை பழக்கவழக்கம்
- பரிவு, இரக்கம்
- பொதுக்காரணம்
- பொதுநலம்
- மனவலிமை
- மதிப்பு நயச்செயல்
- அறிய ஆர்வமுள்ள இயல்பு
- சம உரிமையுடன் முடிவெடுத்தல்
- உறுதிப்பாடு
- கடவுள் பற்று
- தனிமனித உயர்வு
- உழைப்பின் உயர்வு
- கடமை

19. **உடன்பாட்டு மனப்பான்மையின் சிறப்பைக் குறிப்பிடுக.** (2012)

- வகுப்பறையில் சுறுசுறுப்பாகவும், வெற்றி உணர்வோடும், தன்னம்பிக்கையுடனும் திகழ்வார்கள்.
- பிறரோடு இணைந்து விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள்.
- ஆற்றல்களை மேன்மேலும் உயர்ந்த அளவிற்கு வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள்.
- சமூகத் தொடர்புகளில் நாட்டம் கொண்டு குழுவேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள்.

20. **விழுமங்களின் வகைகள் நான்கினை எழுதுக.** (2011)

- தற்சார்பு விழுமம்
- பண்பாடு சார்ந்த விழுமம்
- சமூகம் சார்ந்த விழுமம்
- பணி சார்ந்த விழுமம்.



DIET PYT

## நான்கு மதிப்பெண்கள்

**21. மனவெழுச்சி நுண்ணறிவின் இயல்புகளை எழுதுக.** (2021)

- ❖ இயல்பாகவே ஒவ்வொரு குழந்தையிடமும் பிறவியிலேயே அமையப்பட்டது. (It is an innate potential)
- ❖ ஒவ்வொரு குழந்தையிடமும் வெவ்வேறு அளவுகளில் அமையப் பெற்றிருக்கும்.
- ❖ மனவெழுச்சிகளை உணர்ந்து செயல்படும் ஆற்றலோடு தொடர்புடையது.
- ❖ உணர்வுகளையும் நினைவிருத்தலையும் உள்ளடக்கியது.

**22. பள்ளிகளில் விழுமக் கல்வி அளிப்பதற்கான பொது நோக்கங்களை விளக்குக.** (2026, 2023, 2021, 2017)

- ❖ அடிப்படையான மனிதப் பண்புகளை மாணவர்களிடம் வளர்ப்பது அவற்றுள் முக்கியமானவை அவைகள். சுத்தம், வாய்மை, அஹிம்சையுணர்வு, கடின உழைப்பு, அன்பும் பரிவும், சமத்துவம், சமதர்மம், மதச் சார்பின்மை, குடியாட்சி தத்துவ உணர்வு, ஒத்துழைப்பு நல்குதல், நீதியுணர்வு, தைரியம், அறிவியல் நோக்கு, சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, உற்பத்தி திறன் அதிகரிப்பு, சிறு குடும்ப நெறி போன்றவை.
- ❖ ஒவ்வொரு மாணவரும் தமது தனி மற்றும் சமூக வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக உதவுதல்.
- ❖ தற்போது நாட்டில் நிலவும் சமூக பொருளாதார நிலைமைகளை மாணவர்களுக்கு அறியச் செய்து, அதற்கான தீர்வுகளைக் கண்டறியும் விழிப்புணர்வை உருவாக்குதல்.
- ❖ சமயம், மொழி, சாதி, பாலினம் குறித்த பாகுபாடுகளை தவிர்த்து விலகி எண்ணத்திலும் செயலிலும் சிறப்பான பண்புகளை மாணாக்கரிடத்தில் உருவாக்குதல்.
- ❖ மாணவர்களிடத்தில் தன்மதிப்பை உருவாக்குதல்; அவர்களது உள்ளார்ந்த திறன்களை வளர்த்தல்; நல்ல சமூக ஒழுக்கப் பண்புகளை அவர்களிடம் வளர்த்திட உதவ வேண்டும்.
- ❖ தன்னைக் குறித்தும், சமூகத்தைக் குறித்தும், நாட்டைக் குறித்தும் பிற நாடுகள் குறித்தும், சுற்றுப்புற சூழல் குறித்தும், எல்லாச் சமயங்கள் குறித்தும், மாணவர்களிடம் நல்லெண்ணத்தை வளர்த்திட உதவ வேண்டும்.

**23. ஒரு ஆசிரியராக உன்னுடைய மாணவர்களுக்கு உடன்பாட்டு மனப்பான்மையை மேம்படுத்த கையாளும் உத்திகள் யாவை?** (2020)

- ❖ உடன்பாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க நல்லவிதமான சுயஅறிவுறுத்தல்கள் பயிற்சியை மாணவர்களிடையே கடைபிடிக்க உதவுதல்.
- ❖ பலவீனங்களை மீறி சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதைகளை கூறி தன்னம்பிக்கை உணர்வினை வளர்த்தல்.
- ❖ ஏளனமான வார்த்தைகள் மூலம் மாணவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாதிருத்தல்.

❖ மாணவர்களின் திறமை, ஆர்வம், விருப்பத்திற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தி திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்யவேண்டும்.

❖ தேவையற்ற ஒப்புமை செய்து மாணவர்களின் மன உணர்வினை காயப்படுத்தாமலிருத்தல்.

**24. 5 புள்ளிகள் கொண்ட தர அளவு கோலால் அளத்தல் முறைக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.** (2020)

***எடுத்துக்காட்டு - 1***

என்னுடைய வாழ்வில் சில முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு என்னுடைய உணர்வுகளைப் பயன்படுத்துவதாக அறிகிறேன். (எப்பொழுதும்) (வழக்கமாக) (சில நேரங்களில்) (எப்பொழுதாவது) (எப்பொழுதுமில்லை)

***எடுத்துக்காட்டு - 2***

எனக்கு உறவுகளால் ஏற்படும் மனப்போராட்டத்தை கையாளுவதில் குழப்பம் ஏற்படுகிறது. (எப்பொழுதும்) (வழக்கமாக) (சில நேரங்களில்) (எப்பொழுதாவது) (எப்பொழுதுமில்லை)

**25. உன் வகுப்பறையில் எளிய உளவியல் உத்திகள் மூலம் விழுமங்களை எவ்வாறு வளர்க்கலாம் என்பதை விளக்குக.** (2019)

i) விழுமங்களைக் குலைப்பவன் ஒரு தனிப்பட்ட மாணவன் எனில் அவனது தீய நடத்தை (ஒழுங்கற்ற நடத்தை) வகுப்பின் பொது அமைதியைப் பெருமளவு பாதிக்கவில்லை என்றால் ஆசிரியர் அவனைப் புறக்கணிக்கலாம்; அல்லது அவனது நடத்தையைத் தாம் கவனித்து விட்டதை குறிப்பால் உணர்த்தலாம்.

ii) ஊக்குவித்தலின் அளவை ஆசிரியர் உயர்த்துதல் வழியே மாணவர்களது கவர்ச்சியைப் பெற்று தீயநெறியினைக் கட்டுப்படுத்தலாம்.

iii) அவர்களது தற்கருத்து, தன்மானம், பொறுப்புணர்ச்சி போன்றவற்றைச் சுட்டிக்காட்டி, தீய நடத்தை இவற்றுக்கு இழுக்காகும் எனச் சுட்டிக்காட்டலாம். இது குமரப் பருவத்தினரிடம் மிக்க பயனளிக்கும்.

iv) நகைச்சுவையுணர்வுடன் பிரச்சினைகளை ஆசிரியர் அணுகுவது ஒழுங்கின்மையைத் தவிர்க்க உதவும். ஆனால் குறிப்பிட்ட மாணவனைப் புண்படுத்தும் வகையில் நகைச்சுவை அமையக்கூடாது.

v) வகுப்பு முழுவதும் அமைதியற்றுக் காணப்பட்டால், அவ்வகுப்பிற்கு தமது, உணர்ச்சிகளை வெளிப்படுத்த சிறிது கால அவகாசம் அளித்து பின்னர் ஆசிரியர் பாடத்தினைத் தொடங்கலாம்.

vi) தொல்லை தரும் மாணவர்களைத் தனியாக அழைத்துப் பேச வேண்டும். தண்டனை கொடுக்க வேண்டுமாயின் அது மாணவனைத் திருத்துவதாக அமைய வேண்டும். பழிவாங்குதல் வகையில் அமையலாகாது.

vii) தனிப்பட்ட காரணங்களினால் ஒரு மாணவன் அமைதியின்றி காணப்பட்டால், வகுப்பை விட்டுச் செல்ல அவனுக்கு அனுமதி அளிக்கலாம். இது தண்டனையன்று, பின்னர் அவனுடன் தனியாகப் பேசி, அவனுக்கு அறிவுரைகள் கூறி அவனது பிரச்சினையைத் தீர்க்க ஆசிரியர் உதவ வேண்டும்.

26. **மாணவர்களிடையே வளர்க்க வேண்டிய நான்கு வகை விழுமங்களை விரிவாக கூறுக.** (2024, 2018)

**விழுமங்களின் வகைகளை விளக்குக.** (2025, 2016, 2015, 2014, 2010)

***1) தற்சார்பு விழுமம்***

ஒரு மனிதனிடம் உள்ள நல்ல விழுமங்களைக் கொண்ட நடத்தையை தற்சார்பு விழுமம் என்று கூறுகிறோம். அம்மனிதனிடம் காணப்படும் விழுமங்கள் நேர்மை, உண்மைத் தன்மை, நம்பகத் தன்மை, மற்றவர்களுடனான நட்புறவு நிகழ்வுகளைச் சந்திக்கும் பாங்கு ஆகியவை.

***2) பண்பாடு சார்ந்த விழுமம்***

சமயம், தேசியம், மொழி, மதம் போன்ற பாரம்பரியமாகப் பேணி வளர்க்கப்படுகின்ற வேறுபாடற்ற பண்பாடுகளை அனைவரிடமும் பகிர்ந்துக் கொள்ளுதல் பண்பாடு சார்ந்த விழுமங்களின் அடையாளமாகும்.

***3) சமூகம் சார்ந்த விழுமங்கள்***

பொது இடங்களில் தங்களை வெளிப்படுத்தும் முறை சமூகம் சார்ந்த விழுமம் ஆகும்.

***4) பணிசார்ந்த விழுமங்கள்***

நாம் மேற்கொள்ளும் பணியில் வெற்றி கொள்ள பணியிடத்தில் பின்பற்றும் அனைத்து மதிப்புகளும், மற்றவர்களுடன் பழகும் விதம், காலந்தவறாமை, பணியில் அர்ப்பணிப்பு, சமத்துவம் போன்றவையும் பணிசார்ந்த மதிப்புகளாகும்.

27. **மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியில் விழுமக் கல்வியின் தேவையை விவரிக்கவும்.** (2018)

**மாணவர்களுக்கு விழுமக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி விவரிக்கவும்.** (2024)

- ❖ அதிவேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் மக்களின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறிக்கொண்டே வருகிறது. மனித வாழ்க்கையில் அமைதி பல காரணங்களால் சீர்குலைந்து வருகிறது. அறிவியல் தொழில் நுட்பம் அழிவு வேலைக்குப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். எனவே வளரும் குழந்தைகளிடம் நல்லொழுக்க உணர்வைத் தூண்டி, வளர்த்து அறிவியலை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துமாறு நெறிப்படுத்துவது தேவையான ஒன்றாகும்.
- ❖ மேலை நாடுகளைப் போலவே நமது நாட்டிலும் பழமையான ஒழுக்க நெறிகள் மக்களிடையே குறைந்துவருவதைக் காணமுடிகிறது. சமுதாய நல்வாழ்வுக்குத் தேவையான பண்புகளையும், எண்ணங்களையும் விழுமக் கல்வி வளர்த்திடும்.
- ❖ எதிர்காலத்தில் குடும்பத்திலும், சமூகத்திலும், தொழிலிலும், அரசியலிலும் ஏராளமான பிரச்சினைகளை ஒவ்வொருவரும் சந்திக்க நேரிடும். அவ்வேளையில் ஒவ்வொருவரும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தனியாகவும், குழுவாகவும், தீர்மானிக்க வேண்டியிருக்கும். அத்தகைய தீர்வுகள் சிறப்பான தீர்வுகளாக இருந்திடல் அவசியம். இதற்கு ஒவ்வொருவருக்கும்

நல்ல பண்பு நலன்கள் பெற்றிருப்பது அவசியமாகிறது. அத்தகைய பண்பை மாணவரிடம் உருவாக்க விழுமக் கல்வி உதவுகிறது.

- ❖ சில மாணவர்கள் புகைபிடித்தல், மது அருந்துதல், போதை மருந்தை உட்கொள்ளுதல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். மாணவப் பருவத்தில் விழுமக் கல்வி அளிப்பதன் மூலம் இத்தகைய தீய பழக்கங்களுக்கு அடிமையாவதினின்றும் அவர்களைத் தடுக்கலாம்.

**28. உடன்பாட்டு மனப்பான்மை என்றால் என்ன?(2025 – 2 மதிப்பெண்கள்) உன் மாணவர்களிடம் உடன்பாட்டு மனப்பான்மையை எவ்வாறு வளர்பாய்? (2017) மாணவர்களிடம் உடன்பாட்டு மனப்பான்மையை எவ்வாறு வளர்பாய்? (2011) ஆசிரியர் மாணவர்களிடம் உடன்பாட்டு மனப்பான்மையை வளர்க்கும் முறைகளை விவரி.** ( 2025)

ஒருவரின் தற்கருத்து, வெற்றி உணர்வு, அன்பு, பாதுகாப்புணர்வு, மரியாதை, நம்பிக்கை போன்ற உணர்வுகளின் அடிப்படையில் அமைந்திருப்பது உடன்பாட்டு மனப்பான்மை எனப்படும்.

***உடன்பாட்டு மனப்பான்மையை வளர்த்தல்***

- ❖ உடன்பாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க நல்லவிதமான சுய அறிவுறுத்தல்கள் பயிற்சியை மாணவர்களிடையே கடைபிடிக்க உதவுதல்.
- ❖ பலவீனங்களை மீறி சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதையைக் கூறி தன்னம்பிக்கை உணர்வினை வளர்த்தல்.
- ❖ ஏளனமான வார்த்தைகள் மூலம் மாணவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாதிருத்தல்.
- ❖ மாணவர்களின் திறமை, ஆர்வம், விருப்பத்திற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தி திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்யவேண்டும்.
- ❖ தேவையற்ற ஒப்புமை செய்து மாணவர்களின் மன உணர்வினை காயப்படுத்தாமலிருத்தல்.

**29. ஜாக்மேயர் மற்றும் பீட்டர் ஸலோவேவின் மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகளை பற்றி நீவிர் புரிந்து கொண்டதை வெளிப்படுத்தக.** (2015). **மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகளை விளக்குக.** (2024 – 10 **மதிப்பெண்கள்**, 2012) ). **மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகளைக் கூறுக.** (2022)

***மனவெழுச்சியினை உணர்தல், வெளிப்படுத்துதல்:***

(i) தன் உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் நன்குணர்தல்

(ii) சொற்கள், குரல்ஒலி, முகபாவம், செய்கைகள் ஆகியவற்றின் மூலம் பிறரது உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் புரிந்து கொள்வதோடு, கலைப்படைப்புகள், வடிவமைப்புகள் போன்றவற்றின் நயங்களையும் உன்னிப்பாக கவனிக்கும் ஆற்றலை பெற்றிருத்தல்.

(iii) மனவெழுச்சி பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்; அதாவது தமது மற்றும்
பிறரது மனவெழுச்சிகளை குறிப்பிட்டு இனம் காணும் திறமை, அவற்றை தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல், அவை பற்றி விவாதிக்கும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றிருத்தல்.

DIET PVT

***மனவெழுச்சியும், சிந்தனை வளர்ச்சியும்:***

(i) தமது உணர்வுகளை ஆராய்ந்தறிதல், முடிவுகள் எடுத்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்ற கருத்தியல் செயல்பாடுகளில் பயன்படுத்துதல்.

(ii) தமது உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து செயல்படுதல்.

***மனவெழுச்சிகள் பகுப்பாய்வு – புரிதல்:***

(i) மனவெழுச்சிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்.

(ii) மனவெழுச்சி, சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகளை புரிந்து கொள்ளுதல். அதாவது சிந்தனை எவ்வாறு மனவெழுச்சியை உண்டாக்குகின்றது, மனவெழுச்சி. சிந்தனையை எவ்வாறு பாதிக்கின்றது, ஒருவரது மனவெழுச்சியின் வெளிப்பாட்டால் அவரது நடத்தையும். பிறர் அவரிடம் நடந்துக் கொள்வதும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளுதல்.

***மனவெழுச்சிகளை நெறிப்படுத்துதல், முன்னேற்றத்துக்கு வழிவகுத்தல்***

(i) ஒருவர் தமது மன வெழுச்சிகளுக்கும், மகிழ்ச்சிக்கும் தாமே பொறுப்பேற்றல்.

(ii) பிறர் தமது மனவெழுச்சிகளை கண்டறிந்து பயன்பெறுவதற்கு உதவுதல்.

**30. தேசியக் கல்விக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தீயநெறிமுறைகளைக் களையும் வழிமுறைகளைக் குறிப்பிடுக. (2014)**

❖ எதிர்கால மனித ஆற்றல் தேவையை நன்கு திட்டமிட்டு, அதற்குரிய வகையில் மாணவர்களைத் தயார் செய்யும் போக்கை அரசு கடைபிடிக்க வேண்டும்.

❖ கல்வி நிறுவனங்களில் தொழில் தேர்வுக்கான வழிகாட்டல் அளிக்கப்பட வேண்டும். சில தொழில்களை மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் நிலைமாறி, எல்லா வேலைகளும் சமமதிப்புடையவை என்ற கருத்து மாணவர்கள் உள்ளத்திலும் அவர்களது பெற்றோர்கள் மனத்திலும் எழுமாறு ஆவன செய்ய வேண்டும்.

❖ தொழில் சார்ந்த கல்வி முறை பள்ளிகளிலும், கல்லுரிகளிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

❖ பாடத்திட்டத்தை மேலும் கவர்ச்சியுள்ளதாக மாற்றியமைத்தல், புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல், தேர்வு முறையினை மாற்றியமைத்து மேலும் பயனுள்ளதாக ஆக்கல், மதிப்பெண்களை மட்டுமின்றி, பள்ளிக்கு ஒழுங்காக (Regular) வருதல், பள்ளிச் செயல்களில் ஆர்வத்துடன் பங்கு பெறல், நூல்நிலையத்தினை நன்கு பயன்படுத்துதல் கையெழுத்து, விளையாட்டில் பங்கு, நல்லொழுக்கம் போன்றவற்றையும் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு வகுப்பு உயர்வு அளித்தல் ஆகியவையும் தீயநெறிகளைத் தடுக்க உதவும்.

❖ பல வேறுபாடுகள் கொண்ட நமது மக்களிடையே தேசிய பண்பாட்டு கலாச்சார ஒற்றுமையை விழுமக் கல்வியின் மூலமே உருவாக்கிட வேண்டும்.

DIET

- ❖ அறியாமை, சமயவெறி, தீவிரவாதம், மூடநம்பிக்கை, அவநம்பிக்கை போன்றவற்றைக் களைவதற்கு விழுமக் கல்வி உதவிட வேண்டும்.
- ❖ ஆசிரியர், மாணவர் உறவு உள்ளுறவாக அமைதல் தேவை. இன்றும் நேர்மையும், கற்பித்தல் திறனும் பெற்றுள்ள ஆசிரியர்களை மாணவர்கள் மதித்துப் போற்றுகின்றனர். ஆனால் இவ்வகை ஆசிரியர்கள் மிகக் குறைவே. எனவே சிறந்த பட்டதாரிகள் ஆசிரியப் பணிக்கு வர ஊக்குவிக்கப்படுதல், ஆசிரியப் பயிற்சித் தரத்தை உயர்த்துதல் ஆகியவையும் மிகவும் அவசியம்.
- ❖ மாணவர்களது தலைமைப் பண்புகள் செயற்பட பொருத்தமான வாய்ப்புகள் பரவலாக பள்ளியில் தோற்றுவிக்கப்பட வேணடும்.
- ❖ மாணவர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள் போன்று இயங்குவது தவிர்க்கப்பட வேண்டும். ஆசிரியர்களும் அரசியலில் நேரடிப்பங்கு கொள்ளக்கூடாது. அடிப்படை சமூக மதிப்புகளை ஆசிரியர்கள் தாமே பெற்றிருக்க வேண்டும்.
- ❖ மாணவர்களது ஆற்றல், சக்தி, உற்சாகம் ஆகியன அரசியல் கட்சிகளால் தவறான வழிகளில் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக நல்ல முறைகளில் கல்வியாளர்களால் கல்வி நிறுவனங்களில் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.
- ❖ ஆயிரக்கணக்கான மாணவர்கள் மத்தியில் மாணவரின் தனித்தன்மை வெளிப்படாமல் போவது இயல்பு, இதன் விளைவாக மாணவர்களில் சிலர் தமது உணர்ச்சிகளை ஒழுங்கற்ற நடத்தை வழியே வெளிப்படுத்த முற்படக்கூடும்.
- ❖ தீய சிந்தனைகளை நீக்குவதோடு, நமது பண்பாடு. தேசியக் குறிக்கோள்கள். உலகளாவிய நோக்கு போன்றவை குறித்தும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், விழுமக் கல்வி அளிக்க வேண்டும்.

31. **மனவெழுச்சி நுண்ணறிவு மிக்க குழந்தையின் செயல்களை விவரிக்க.** (2013)

- ❖ தப்பித்து உயிர்வாழ்தலுக்கான முதல்படி அச்சம். எனவே அச்சமுற்ற குழந்தை பாதுகாப்புக்கு முயற்சிக்கும்.
- ❖ அச்சம் காரணமாக பெரும்பாலான குழந்தைகள் அழத் தொடங்குகின்றன. அச்சம் அதிகமாக இருந்தால் தொடர்ந்து அலறுவார்கள். ஆனால் மனவெழுச்சி நுண்ணறிவு அதிகமுள்ள குழந்தைகள் தமது அச்சத்தினை பிறருக்கு தெரிவிக்க முற்படுவார். உதாரணமாக பாம்பைக் கண்டு பயம் கொண்டோர் 'பாம்பு' என்றே சொல்லிக் கொண்டே அழுவர்
- ❖ மனவெழுச்சி நுண்ணறிவு மிக்க குழந்தை, தனது தாய் அல்லது தந்தை சினத்துடன் இருக்கிறார் என்பதை விரைவில் கண்டறிந்து கொள்ளும்
- ❖ மனவெழுச்சி நுண்ணறிவு மிக்க குழந்தை, தனது தாய் அல்லது தந்தை சினத்துடன் இருக்கும்போது எவ்வாறு தோற்றமளிப்பர். அவர்களது குரல் ஒலி எப்படி இருக்கும், அவர்களது செய்கைகள் எவ்வாறு இருக்கும் என்பதையெல்லாம் நினைவில் வைத்திருக்கும்.
- ❖ தனது தாய் அல்லது தந்தையை கோபமுறச் செய்யும் செயல்கள் யாவை என்பதை மனவெழுச்சி நுண்ணறிவு மிக்க குழந்தை விரைவில் கற்றுக்கொள்ளும்.

❖ மனவெழுச்சி நுண்ணறிவு மிக்க குழந்தை தனது மனவெழுச்சிகளை நன்கு மேலாண்மை செய்வதன் மூலம் தனது பெற்றோர்களை சினமடையச் செய்யாமல் இருக்கக் கற்றுக் கொள்ளும்.

❖ உதாரணமாக: அழுதால் பெற்றோர் சினம் கொள்வர் என்பதை உணரும் குழந்தை, அச்சமுறும்போது இயற்கையாக எழும் அழுகையைக் கூட அடக்கிக் கொள்ள முயலும்.

**32. உடன்பாட்டு மனப்பான்மைக்கும் எதிர்மறை மனப்பான்மைக்கும் உள்ள வேறுபாட்டை குறிப்பிடுக.**

**(2012)**

| உடன்பாட்டு மனப்பான்மை | எதிர்மறை மனப்பான்மை |
|---|---|
| சுறு சுறுப்பு, வெற்றி உணர்வு, தன்னம்பிக்கையுடன் திகழ்வார்கள். | நம்பிக்கையின்றி திகழ்வர். |
| பிறரோடு இணைந்து விதிகலுக்கு கட்டுப்பாட்டு நடப்பர். | இணைந்து செயல்படாதவராக இருப்பர். |
| ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவர். | ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடமாட்டார். |
| சமூக தொடர்புகளில் நாட்டம் கொண்டு குழு வேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடுவர். | சுயநலம், பொறாமை, அச்சம், மனச்சோர்வு, மனப்பதட்டம் போன்ற உணர்வுகளுடன் காணப்படுவர். |

<u>பத்து மதிப்பெண்கள்</u>

**33. கற்பித்தலின் பொது நோக்கங்கள், நடத்தை நோக்கங்களை அட்டவணைப் படுத்துக.** (2021) **வகுப்பறையில் கற்பித்தல் செயல்பாட்டில் பொது நோக்கம் மற்றும் நடத்தை நோக்கம் இவற்றை புரிந்து கொள்வது அவசியம். ஏன்? விளக்குக.** (2019)

❖ ஒவ்வொரு பாடத்தினைக் கற்பிக்கும்போதும், ஆசிரியர் முன்கூட்டியே அப்பாடத்தின் இறுதியில் மாணவரிடம் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகளைத் தெளிவு படுத்தி, நடத்தைகளாகக் குறிப்பாராயின், அவற்றை நடத்தை நோக்கங்கள் என்று கூறுவோம்.

❖ இவ்வாறு நோக்கங்களைத் தெளிவுப்படுத்தும்போது, ஆசிரியருக்குச் சென்றடைய வேண்டிய இலக்குகள் (Goals) நிர்ணயிக்கப்படுகின்றன.

❖ இலக்குகள் தெளிவானால், அவைகளை அடைவதற்கான வழிமுறைகள், பயிற்றல் செயல்பாடுகளை திட்டமிட இயலும். பாடம் கற்பித்த பின், எதிர்பார்த்த கற்றல் விளைவுகள் நிகழ்ந்தனவா என்றறிய மதிப்பீட்டுக் கருவிகள் தயாரிக்கவும் இயலும்.

❖ அறிவு மண்டல வளர்ச்சியும், எழுச்சி மண்டல வளர்ச்சியும் பெரும்பாலும் வகுப்பறைச் சூழ்நிலையிலேயே நிகழ்கிறது. ஒவ்வொரு பாடத்தினைக் கற்பிக்கும்போதும், ஆசிரியர் அப்பாடம் கற்பிக்கும் நோக்கங்கள் எவை எவை என்று தெளிவாக்குதல் வேண்டும்.

❖ அறிவு பெறுதல் என்பது பொது நோக்கம்; தெளிவற்றது; கண்ணால் பார்க்க இயலாது; ஆகவே அளந்தறிய இயலாது.

❖ நினைவு கூர்தல், சரியான விடையை அறிந்து சொல்லுதல் (Recognition) என்பது மாணவனின் நடத்தையினால் வெளிப்படுவதால், இதனை நடத்தை நோக்கம் என்று சொல்கிறோம்.

❖ பாடத்தினைக் கற்பிக்கும் முன்னர், அப்பாடத்தினை மாணவர் கற்றறிந்த பின்னர் மாணவரிடம் தோன்றும் கற்றல் விளைவுகளைப் பொது நோக்கமாகவும், நடத்தை நோக்கங்களாகவும், தெளிவுப்படுத்துதல் இன்றியமையாதது.

| **பொது நோக்கங்கள்** | **நடத்தை நோக்கங்களை வெளிப்படுத்தும் செயல்கள்** |
|---|---|
| அறிந்து கொள்ளுதல் (Knowledge) | • விதிகளை, கோட்பாடுகளை வரையறை செய்தல்.<br>• விபரங்களைப் பட்டியலிடுதல்<br>• பெயர்கூறுதல் |
| புரிந்து கொள்ளுதல் (Understanding) | • வேறுபடுத்திக் காட்டுதல்<br>• எடுத்துக்காட்டுகள் தருதல்<br>• விவரித்தல்<br>• ஒப்பிடுதல்<br>• தொடர்பினைக் கூறுதல் |
| பயன்படுத்துதல் (Application) | • காரணம் கூறுதல்<br>• புதிரை விடுவித்தல்<br>• பாடக் கருத்துகளுக்கான வாழ்வியல் பயன்பாடுகளைக் குறிப்பிடுதல். |
| திறன்கள் பெறுதல் (Skills) | • சோதனைக் கருவிகளைக் கொண்டு சோதனையை அமைத்தல்.<br>• உற்று நோக்கி விபரங்களைத் துல்லியமாகக் குறிப்பிடுதல்.<br>• சோதனைக்கான கருவிகளைத் தயாரித்தல்<br>• பாடக் கருத்துக்களை விளக்கும் படங்களை வரைதல்<br>• சோதனையின் போது துல்லியமாக அளவிடுதல்<br>• பாடப் பொருள்களைச் சேகரித்தல் பொருள்களின் குறிப்பிட்ட நிலைகளைச் சரியாகச் சுட்டிக்காட்டுதல்.<br>• உயிரியல் பொருள்களைக் குறிப்பிட்ட முறையில் வகைப்படுத்தி பார்வைக்கு வைத்தல். |

**34. வாழ்வியல் விழுமங்களைக் கற்றல் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக. (2021)**

**விழுமக்கல்வி**:

குழந்தைகட்குக் கல்வியின் வாயிலாக அறிவையும் திறன்களையும் வளர்த்தல் ஆசிரியர் கடமையாகும். குழந்தைகள் எதிர்காலத்தில் நாட்டின் சிறந்த குடிமக்களாக உருவாகும் வண்ணம் நற்பண்புகளையும், எண்ணங்களையும் உருவாக்குவதும் கல்வியின் தலையாய நோக்கங்களில்

ஒன்றாகும். இத்தகைய நல்ல மனப்பாங்கை வளர்க்கும் கல்வியினை "விழுமக் கல்வி" என்று கூறுகிறோம்.

**விழுமங்களின் வகைகள்:**

***1) தற்சார்பு விழுமம்***

ஒரு மனிதனிடம் உள்ள நல்ல விழுமங்களைக் கொண்ட நடத்தையை தற்சார்பு விழுமம் என்று கூறுகிறோம். அம்மனிதனிடம் காணப்படும் விழுமங்கள் நேர்மை, உண்மைத் தன்மை, நம்பகத் தன்மை, மற்றவர்களுடனான நட்புறவு நிகழ்வுகளைச் சந்திக்கும் பாங்கு ஆகியவை.

***2) பண்பாடு சார்ந்த விழுமம்***

சமயம், தேசியம், மொழி, மதம் போன்ற பாரம்பரியமாகப் பேணி வளர்க்கப்படுகின்ற வேறுபாடற்ற பண்பாடுகளை அனைவரிடமும் பகிர்ந்துக் கொள்ளுதல் பண்பாடு சார்ந்த விழுமங்களின் அடையாளமாகும்.

***3) சமூகம் சார்ந்த விழுமங்கள்***

பொது இடங்களில் தங்களை வெளிப்படுத்தும் முறை சமூகம் சார்ந்த விழுமம் ஆகும்.

***4) பணிசார்ந்த விழுமங்கள்***

நாம் மேற்கொள்ளும் பணியில் வெற்றி கொள்ள பணியிடத்தில் பின்பற்றும் அனைத்து மதிப்புகளும், மற்றவர்களுடன் பழகும் விதம், காலந்தவறாமை, பணியில் அர்ப்பணிப்பு, சமத்துவம் போன்றவையும் பணிசார்ந்த மதிப்புகளாகும்.

**மகாத்மா காந்தியடிகள் பயன்படுத்திய விழுமங்கள்:**

மக்களாட்சித் தத்துவம், சமதர்மம், மதச்சார்பின்மை, சமத்துவம், சமநீதித்தத்துவம் மேலும் நமது இந்திய பண்பாட்டுப் பாரம்பரியத்தில் வேர்களாகக் காணப்படும், உண்மை, அஹிம்சை, கருணை, அமைதிவழி, மன்னிக்கும் பண்பு, சகிப்புத் தன்மை, எளிமை, அறிவு வேட்கை, அறிவைப் பரப்புதல், ஒத்துழைப்பு நல்குதல் போன்ற பண்புகளும் குழந்தைகளிடையே வளர்க்கப்பட வேண்டிய பண்புகள் ஆகும்.

**விழுமக் கல்வியின் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு**

- விழுமக் கல்வி பள்ளியில் நடத்தப்பெறும் செயல்பாடுகள் மூலம் மாணவர்கள் பெறுவர். வகுப்பிற்கு உள்ளும், புறமும், ஒவ்வொரு சிறு சிறு செயலிலும் நல்ல உணர்வுகளும், அதன் அடிப்படையிலான செயல்களும் வளர்க்கப்படுகின்றன.
- விளையாட்டில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல், மற்றவருடன் இணைந்து செயல்படுதல் போன்ற நன்னெறி விழுமப் பண்புகள் பள்ளி வாழ்க்கையில் மட்டுமே வளர்கின்றன.
- விழுமக் கல்வியைப் பாடம் சார்ந்த செயல்பாட்டிலும் பாடம்சாரா செயல்பாட்டிலும் ஆசிரியரே திட்டமிட்டு வளர்க்க வேண்டும்.

**விழுமமும், நடத்தையும்:**

- அன்பு, உண்மை, பாதுகாப்பான சூழ்நிலையை பள்ளியில் உருவாக்க ஆசிரியர், உதவ வேண்டும்.
- ஆசிரியர் குழந்தையின் உடல், உள்ளம், மற்றும் பண்புகள் வளர்ச்சியைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

❖ விழுமக் கல்வியின் முக்கியத்துவத்தை உண்மை வாழ்வியல் நிகழ்வுடன் ஒப்பிட்டுக் கற்பிக்க வேண்டும். ஏனெனில் மாணவர்கள் உண்மைக்கும் கற்பனைக்கும் உள்ள வேறுபாட்டை அறிய வேண்டும்.

❖ பாடல்களுடனும், கதைகளுடனும், பாடம் சார்ந்த செயல்பாடுகளுடனும் விழுமம் சார்ந்த நடத்தை வலுப்படுத்த வேண்டும்.

❖ உண்மைக்குப் புறம்பான எடுத்துக் காட்டுகளையோ, கதைகளையோ விழும நெறிகளைக் கற்பிக்கும் பொழுது பயன்படுத்தக் கூடாது.

❖ ஆசிரியர் முன்மாதிரியாகத் திகழ வேண்டும். ஓர் ஆசிரியர் நேர்மையாளராக இருந்துகொண்டு மாணவர்களுக்கு நேர்மையைக் கற்பிக்க வேண்டும். ஆசிரியர் காலந்தவறாமை என்ற நடத்தை விழுமத்தைப் பின்பற்றுபவராக இருப்பின் மாணவர்களும் அவரைப் பின்பற்றுவர். அவ்விழுமத்தின் தன்மையைப் புரிந்து ஏற்றுத் தமதாக்கிக் கொள்வர்.

**வாழ்வியல் விழுமங்களைக் கற்றல்**

❖ கற்ற விழுமங்களைப் போற்றுதல் பின்பற்றுதல்

❖ உறவுகளை மதிக்கக் கற்றல்

❖ சமுதாயத்தை மதித்தல்

❖ சுற்றுப்புறச் சூழலை மதித்தல் ஆகிய விழுமங்களை பொறுப்புடன் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும்.

**விழுமக் கல்வியின் தேவையை:**

❖ அதிவேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றத்தால் மக்களின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறிக்கொண்டே வருகிறது. மனித வாழ்க்கையில் அமைதி பல காரணங்களால் சீர்குலைந்து வருகிறது. அறிவியல் தொழில் நுட்பம் அழிவு வேலைக்குப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். எனவே வளரும் குழந்தைகளிடம் நல்லொழுக்க உணர்வைத் தூண்டி, வளர்த்து அறிவியலை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துமாறு நெறிப்படுத்துவது தேவையான ஒன்றாகும்.

❖ மேலை நாடுகளைப் போலவே நமது நாட்டிலும் பழமையான ஒழுக்க நெறிகள் மக்களிடையே குறைந்துவருவதைக் காணமுடிகிறது. சமுதாய நல்வாழ்வுக்குத் தேவையான பண்புகளையும், எண்ணங்களையும் விழுமக் கல்வி வளர்த்திடும்.

❖ எதிர்காலத்தில் குடும்பத்திலும், சமூகத்திலும், தொழிலிலும், அரசியலிலும் ஏராளமான பிரச்சினைகளை ஒவ்வொருவரும் சந்திக்க நேரிடும். அவ்வேளையில் ஒவ்வொருவரும் அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தனியாகவும், குழுவாகவும், தீர்மானிக்க வேண்டியிருக்கும். அத்தகைய தீர்வுகள் சிறப்பான தீர்வுகளாக இருந்திடல் அவசியம். இதற்கு ஒவ்வொருவருக்கும்

நல்ல பண்பு நலன்கள் பெற்றிருப்பது அவசியமாகிறது. அத்தகைய பண்பை மாணவரிடம் உருவாக்க விழுமக் கல்வி உதவுகிறது.

❖ சில மாணவர்கள் புகைபிடித்தல், மது அருந்துதல், போதை மருந்தை உட்கொள்ளுதல் போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகின்றனர். மாணவப் பருவத்தில் விழுமக் கல்வி அளிப்பதன் மூலம் இத்தகைய தீய பழக்கங்களுக்கு அடிமையாவதினின்றும் அவர்களைத் தடுக்கலாம்.

**விழுமக் கல்வி அளிப்பதற்கான பொது நோக்கங்கள்**

❖ அடிப்படையான மனிதப் பண்புகளை மாணவர்களிடம் வளர்ப்பது அவற்றுள் முக்கியமானவை அவைகள். சுத்தம், வாய்மை, அஹிம்சையுணர்வு, கடின உழைப்பு, அன்பும் பரிவும், சமத்துவம், சமதர்மம், மதச் சார்பின்மை, குடியாட்சி தத்துவ உணர்வு, ஒத்துழைப்பு நல்குதல், நீதியுணர்வு, தைரியம், அறிவியல் நோக்கு, சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு, உற்பத்தி திறன் அதிகரிப்பு, சிறு குடும்ப நெறி போன்றவை.

❖ ஒவ்வொரு மாணவரும் தமது தனி மற்றும் சமூக வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான பொறுப்புள்ள குடிமக்களாக உருவாக உதவுதல்.

❖ தற்போது நாட்டில் நிலவும் சமூக பொருளாதார நிலைமைகளை மாணவர்களுக்கு அறியச் செய்து, அதற்கான தீர்வுகளைக் கண்டறியும் விழிப்புணர்வை உருவாக்குதல்.

❖ சமயம், மொழி, சாதி, பாலினம் குறித்த பாகுபாடுகளை தவிர்த்து விலகி எண்ணத்திலும் செயலிலும் சிறப்பான பண்புகளை மாணாக்கரிடத்தில் உருவாக்குதல்.

❖ மாணவர்களிடத்தில் தன்மதிப்பை உருவாக்குதல்; அவர்களது உள்ளார்ந்த திறன்களை வளர்த்தல்; நல்ல சமூக ஒழுக்கப் பண்புகளை அவர்களிடம் வளர்த்திட உதவ வேண்டும்.

❖ தன்னைக் குறித்தும், சமூகத்தைக் குறித்தும், நாட்டைக் குறித்தும் பிற நாடுகள் குறித்தும், சுற்றுப்புற சூழல் குறித்தும், எல்லாச் சமயங்கள் குறித்தும், மாணவர்களிடம் நல்லெண்ணத்தை வளர்த்திட உதவ வேண்டும்.

**35. விழுமங்களில் வகுப்பறையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் முறைகள் பற்றி விளக்குக.** (2020, 2016)

❖ பள்ளியின் மரபும், அதன் பாங்கு பண்பும் மாணவர்களை நெறிப்படுத்தவல்ல ஆக்க நிலையாகும்.

❖ நல்ல மரபும் பண்பும் உள்ள பள்ளியில் சேர்ந்த புது மாணவன் தன்னையும் அறியாமல் அவற்றால் ஈர்க்கப்பட்டு நல்ல மனப் போக்குகளைப் பெறுகிறான்.

❖ மாணவர்களின் விழுமம் பள்ளி ஆசிரியர்களின் பண்புகளைப் பொருத்திருக்கும்.

❖ மாணவர்களிடம் விழுமங்களை ஏற்படுத்த, ஆசிரியர்கள் சீறிய ஆளுமைப்பண்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

- ❖ அறிவும், சிறப்பான ஆளுமையும், ஆற்றலும், புகழும், மாணவர்களிடம் அன்பும் பரிவுணர்ச்சியும், சொற்பொருளுணர்த்தும் சொல்வன்மையும் அவர்களிடம் காணப்படுதல் அவசியம்.
- ❖ சில பாட வகைகளும் மாணவர்களிடம் நன்னெறியைத் தோற்றுவிக்கப்பயன்படும்.
- ❖ உயிர்ப்பூட்டும் பாட வகைகளான இலக்கியம், வரலாறு போன்றவற்றைக் கற்பதன் மூலம் மாணவர்கள் நல்ல குறிக்கோள்களை அறிந்து அவற்றையடையத் தாமே முயற்சி மேற்கொள்வர்.
- ❖ கவர்ச்சிமிக்க செயல்களில் விருப்பத்துடன் ஈடுபடும் மாணவர்கள் தாமாக ஒழுங்காகவும், கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்வர். இவை யாவற்றையும் விட அதிகப் பயனளிப்பவை ஒழுங்கு நிலையைத் தோற்றுவிக்க கூடிய நேரடி அனுபவங்களே. இவற்றுள் குடிமைப் பயிற்சியில் அடங்கிய செயல்கள், சாரணர் இயக்கம், தன்னாட்சி முறை போன்ற மிக முக்கியமானவையாகும்.
- ❖ தினமும் பள்ளியில் காலை வழிபாட்டுக் கூட்டத்தைத் தவறாமல் நடத்துதல்.
- ❖ ஒழுக்க நெறிகள் குறித்து கலந்துரையாடல், விவாதம் செய்தல், நாடகம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கதை கூறுதல் போன்ற செயல்பாடுகளைஏற்பாடு செய்தல்.
- ❖ பள்ளியின் சுற்றுப்புறச் சுழலை சுத்தமாக வைத்திருக்க மாணவருக்கு பயிற்சியும், பொறுப்பும் அளித்தல்.
- ❖ மாணவர்களின் தவறுகளைத் தண்டிப்பதைத் தவிர்த்து, நன்னடத்தை உள்ள மாணவர்களைப் பாராட்டுவதன் மூலம் அனைவரும் அதைப் பின்பற்றுமாறு செய்தல். மாணவர்கள் குழுக்களை நிறுவி அவர்களிடம் வகுப்பில் அன்றாடம் செய்ய வேண்டிய
- ❖ வழக்கமான செயல்களை நிறைவேற்றும் பொறுப்புகளை ஒப்படைத்தல்.
- ❖ தமது ஓய்வு நேரங்களைப் பயன்தரத்தக்க வழிகளில் செலவிட மாணவர்களுக்கு பயிற்சியளித்தலும், அவர்களிடம் கட்டுப்பாட்டையும் விழுமக்கல்வியையும் வளர்க்கும்.
- ❖ மாணவர்களுக்கு ஆக்க பூர்வமான வேலை அளிப்பதன் மூலம் நற்பண்புகளை வளர்க்க முடியும். அவற்றுள் சில,

i) பள்ளியில் வகுப்பறையைத் தினமும் துப்புறவு செய்தல்.

ii) உண்மையும், நேர்மையும் வளர்க்கும் வண்ணம் நல்ல அங்காடிகள் வகுப்பறையில் அமைத்து மாணவர்களே கற்றல் பொருட்களை (பென்சில், பேனா, நோட்டு) எடுத்துக்கொண்டு அதற்குரிய பணத்தை அவர்களே வைத்துச் செல்ல பழக்குவது.

iii) எல்லா மாணவர்களும் கலந்து பழகும் வண்ணம் கூட்டு விளையாட்டுக்களையும், குழு வேலைகளையும் அளிப்பது, வகுப்பறைச் செயல்பாடுகளை செய்து முடிக்க குழுக்களை யமித்தல்.

iv) தேசிய தினங்களையும், பண்டிகைகளையும் பள்ளியில் அனுசரித்தல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.

v) நல்ல பேச்சாளர்களைக் கொண்டு, நாட்டு விடுதலைப் போராட்டம், நாட்டின் பண்பாட்டு பாரம்பரியம், நாட்டின் பல சமயக் கருத்துக்கள், நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் அவற்றை தீர்ப்பது போன்ற தலைப்புகளில் உரையாடச் செய்வது, மாணவர்களின் வினாக்களுக்கு விடையளிக்கச் சொல்வது.

vi) பள்ளிகளுக்கிடையே கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் நடத்துவது.

vii) மேல்வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் அறிவுரை கூறும் பணியைச் செய்வது போன்றவை அவசியமாகும்.

- ❖ சமய அறநெறிக் கல்வியும், நன்னெறி வளர்ச்சிக்கு மிகவும் உதவும்.

**36. புளூமின் கற்றலின் வகைபாட்டினைக் கூறி, அறிவு சார்ந்த வகையின் படிநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2018)**

கல்வி கற்பித்தலால் ஏற்படும் மாணவர்களின் வளர்ச்சியினை மூன்று விரிவான வகைகளாகப் (Domains) பிரித்து அறிய இயலும் என்று கூறுகிறார் அவையாவன.

1) அறிவு சார்ந்தவகை (Cognitive domain)

2) எழுச்சி சார்ந்தவகை (Affective domain)

3) உடல் உள இயக்கம் சார்ந்தவகை (Psychomotor domain) போன்றவையாகும்.

ஒவ்வொரு வகைப்பாட்டிலும் கற்பிக்கும் நோக்கங்கள் சாதாரண அடிப்படை நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலைக்கு அமைக்கப்பட்டுள்ளன.

***அறிவு சார்ந்தவகை (Cognitive domain)***

அறிவு சார்ந்தவகை என்பது பொதுவாக மாணவரது அறிவினைப் பல்துறையிலும் வளர்ச்சியுறச் செய்தலே ஆகும்.

***நோக்கங்கள்***

1) கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் (Knowledge)

2) புரிந்து கொள்ளுதல் (Understanding)

3) பெற்ற அறிவினைப் புதிய சூழலில் பயன்படுத்துதல் (Application)

4) விவரங்களைப் பகுத்தாராய்தல் (Analysis)

5) விவரங்களைத் தொகுத்தாராய்தல் (Synthesis)

6) மதிப்பிட்டு அறிதல் (Evaluation)

- ❖ கற்றலில் அறிவு சார்ந்த வகையானது அறிவுபெறுதல் (கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்) என்ற நிலையிலிருந்து அறிவினைப் புரிந்து கொள்ளுதல், பெற்ற அறிவினைப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல் பகுத்தாராய்தல், தொகுத்தாராய்தல் என்று படிப்படியாகச் சென்று இறுதியில் மதிப்பிடுதல் போன்ற நோக்கங்களில் முடிவடைகின்றது, இந்நோக்கங்கள் அனைத்தும் கற்பித்தலுக்குப் பொருத்தமுடையவை.
- ❖ தொடக்கக் கல்வி நிலையைப் பொருத்தமட்டில் அறிவுப் பகுதியில் முதல் மூன்று நோக்கங்களை அடையச் செய்யும் வாய்ப்புகள் மிகுதி.
- ❖ ஆனால் இன்று ஆசிரியர் மாணவர்களுக்குச் செய்திகளைத் திணிக்கிறார்கள்.



DIET PYT

❖ குருட்டுப் பாடமாகக் கற்ற செய்திகளனைத்தும் படிப்பை முடித்த பின்னர் பயன்படுத்தாது போனால் ஏறத்தாழ 80 விழுக்காடு மறந்து போகின்றது என்பது ஆராய்ச்சி மூலம் காணப்பட்ட உண்மை.

❖ எனினும் செய்திகளை நினைவில் நிறுத்துவதை மட்டும் வலியுறுத்துவதை விட அவற்றைப் புரிந்து கொள்ளவும், புரிந்து கொண்ட செய்திகளைப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்தவும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

❖ மேல்வகுப்புகளில் பாடத் தொடர்பான செய்திகளைப் பகுத்துப் பார்க்கவும், பகுத்தவற்றைத் தொகுக்கவும், அறிந்த செய்திகளிலிருந்து மதிப்பீடு செய்யவும் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

***<u>தகுந்த எடுத்துக்காட்டுடன் படிநிலைகளை விளக்குதல்.</u>***

37. **மனவெழுச்சி நுண்ணறிவின் வரையறை, இயல்புகள் மற்றும் உட்கூறுகளை விளக்குக.** (2017, 2014, 2011)

**வரையறை:**

❖ ***ஜாக்மேயர், பீட்டர் ஸலோவே*** **முன்மொழிந்த வரையறையானது:**

"மனவெழுச்சி நுண்ணறிவு என்பது சமூக நுண்ணறிவின் உள் அங்கமாகும். தமது மற்றும் பிறரது உணர்வுகள், மனவெழுச்சிகள் ஆகியவற்றைக் கண்டறிந்து, முறைப்படுத்தும் அறிவைப் பெற்றிருப்பதோடு அவற்றில் தமது சிந்தனைகளையும் செயல்களையும் நெறிப்படுத்தி மேம்படுத்திக் கொள்வதற்கு பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருப்பதே மனவெழுச்சி நுண்ணறிவாகும்."

❖ ***எஸ். ஹெயின்*** **என்பவரது வரையறைப்படி,**

"மனவெழுச்சிகளை உணர்தல், வெளிப்படுத்துதல், அடையாளம் காணுதல், நினைவிலிருத்தல், அவற்றைப் பயன்படுத்திக் கற்றல், நெறிப்படுத்துதல் ஆகியவற்றில் மேம்பட்ட ஆற்றலை ஒருவர் இயல்பாகப் பெற்றிருத்தலைக் குறிப்பதே மனவெழுச்சி நுண்ணறிவாகும்".

❖ ***லீ. பரோவேதனி*** **என்பாரது வரையறைப்படி,**

"மனவெழுச்சி நுண்ணறிவு என்பது, உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் அறிந்து கொண்டு, தம்மை நெறிப்படுத்தவும், பிறரோடு தாம் கொண்டுள்ள உறவுகளை பயன்மிக்கதாக ஆக்கிவிடுவதற்கு பெற்றிருக்கும் ஆற்றலாகும் ".

***மனவெழுச்சி நுண்ணறிவின் இயல்புகள்;***

❖ ஒவ்வொரு குழந்தையிடமும் பிறவியிலேயே அமையப்பட்டது.

❖ ஒவ்வொரு குழந்தையிடமும் வெவ்வேறு அளவுகளில் அமையப் பெற்றிருக்கும்.

❖ மனவெழுச்சிகளை உணர்ந்து செயல்படும் ஆற்றலோடு தொடர்புடையது.

❖ உணர்வுகளையும் நினைவிருத்தலையும் உள்ளடக்கியது.

***உட்கூறுகள்:***

***மனவெழுச்சியினை உணர்தல், வெளிப்படுத்துதல்:***

(i) தன் உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் நன்குணர்தல்

(ii) சொற்கள், குரல்ஒலி, முகபாவம், செய்கைகள் ஆகியவற்றின் மூலம் பிறரது உணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் புரிந்து கொள்வதோடு, கலைப்படைப்புகள், வடிவமைப்புகள் போன்றவற்றின் நயங்களையும் உன்னிப்பாக கவனிக்கும் ஆற்றலை பெற்றிருத்தல்.

(iii) மனவெழுச்சி பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல்; அதாவது தமது மற்றும் பிறரது மனவெழுச்சிகளை குறிப்பிட்டு இனம் காணும் திறமை, அவற்றை தெளிவாக வெளிப்படுத்தும் ஆற்றல், அவை பற்றி விவாதிக்கும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றிருத்தல்.

***மனவெழுச்சியும், சிந்தனை வளர்ச்சியும்:***

(i) தமது உணர்வுகளை ஆராய்ந்தறிதல், முடிவுகள் எடுத்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்ற கருத்தியல் செயல்பாடுகளில் பயன்படுத்துதல்.

(ii) தமது உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து செயல்படுதல்.

***மனவெழுச்சிகள் பகுப்பாய்வு – புரிதல்:***

(i) மனவெழுச்சிப் பிரச்சனைகளைத் தீர்த்தல்.

(ii) மனவெழுச்சி, சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்புகளை புரிந்து கொள்ளுதல். அதாவது சிந்தனை எவ்வாறு மனவெழுச்சியை உண்டாக்குகின்றது, மனவெழுச்சி. சிந்தனையை எவ்வாறு பாதிக்கின்றது, ஒருவரது மனவெழுச்சியின் வெளிப்பாட்டால் அவரது நடத்தையும். பிறர் அவரிடம் நடந்துக் கொள்வதும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ளுதல்.

***மனவெழுச்சிகளை நெறிப்படுத்துதல், முன்னேற்றத்துக்கு வழிவகுத்தல்***

(i) ஒருவர் தமது மன வெழுச்சிகளுக்கும், மகிழ்ச்சிக்கும் தாமே பொறுப்பேற்றல்.

(ii) பிறர் தமது மனவெழுச்சிகளை கண்டறிந்து பயன்பெறுவதற்கு உதவுதல்.

**38. மாணவர்களின் மனவெழுச்சி நுண்ணறிவை எவ்வாறு அளவிடுவாய் என்பதை விவரி.** (2016, 2012)

நுண்ணறிவினை அளவிடுவதற்கு நுண்ணறிவு சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோன்று மனவெழுச்சி நுண்ணறிவினை அளவிட அதற்கான சோதனை முறைகளைப் பயன்படுத்தவேண்டும்.

அவை,

❖ மேயர் (Mayer) மனவெழுச்சி நுண்ணறிவு அளவுகோல்; இதனை உருவாக்கியவர் மற்றும் தரப்படுத்தியவர் Dr. ஜான்மேயர்

❖ மேயர் (Mayer) , சலோவே (Salovey), மற்றும் காரசோ (Caruse) மனவெழுச்சி நுண்ணறிவுச் சோதனை (MSCEIT) இதனை உருவாக்கியவர் மற்றும் தரப்படுத்தியவர் Dr. ஜான் மேயர், Dr. பீட்டர் சலோவே மற்றும் Dr. டேவிட் காரசோ.

❖ பார்-ஆன் மனவெழுச்சி ஈவு உருவாக்கியவர் மற்றும் தரப்படுத்தியவர் Dr. ரூவன் பார் - ஆன்.

மனவெழுச்சி ஈவினை 1996ல் பல்வகை நல அமைப்பு முதன் முதலில் வெளியிட்டது,

இச்சோதனை ஐந்து முக்கிய பகுதிகளைக் கொண்டது. அவை,

❖ மனித ஆளுமைகள், பண்புகள்

❖ மனிதர்களின் தொடர்பணிகள்

❖ தகவமைப்பு

DIET PVT

- ❖ மன அழுத்தச் சமாளிப்பு
- ❖ இயல்பு நிலை.

தரப்படுத்தப்பட்ட சோதனையைத் தவிர வேறு சில மனவெழுச்சி சோதனைகள், அளவிடல் முறையில் குறைந்த மதிப்பு தருவதாக அமைகிறது. அல்லது விளையாட்டுத்தனமாக கேள்விகள் கொண்டதாக அமைகிறது. மனவெழுச்சி நுண்ணறிவானது மாணவனின் மனவெழுச்சியை அறிந்து கொள்ள ஒரு நல்ல சூழ்நிலையாக உள்ளது.

**சோதனையில் உள்ள சில உதாரணங்கள்**

***5 புள்ளிகள் கொண்ட தர அளவு கோலால் அளத்தல்* முறை:**

எடுத்துக்காட்டு - 1

(1) என்னுடைய வாழ்வில் சில முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு என்னுடைய உணர்வுகளைப் பயன்படுத்துவதாக அறிகிறேன். (எப்பொழுதும்) (வழக்கமாக) (சில நேரங்களில்) (எப்பொழுதாவது) (எப்பொழுதுமில்லை)

எடுத்துக்காட்டு - 2

(2) எனக்கு உறவுகளால் ஏற்படும் மனப்போராட்டத்தை கையாளுவதில் குழப்பம் ஏற்படுகிறது. (எப்பொழுதும்) (வழக்கமாக) (சில நேரங்களில்) (எப்பொழுதாவது) (எப்பொழுதுமில்லை)

***புறவயவினா அமைப்பில் அளவிடும்* முறை:**

எடுத்துக்காட்டு - 1

நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து வெளியே செல்லும்போது அக்குழுவில் இல்லாத நண்பரைப் பற்றி ஒரு நண்பர் எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுகிறார்.

**உன்னுடைய கருத்து;**

- ❖ அவனுடன் சேர்ந்து மேலும் எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுதல்.
- ❖ அச்சமயத்தில் எதுவும் கூறாமல், பிறகு தன்னுடைய உணர்வுகளை எதிர்மறைக் கருத்துக் கூறிய நண்பரிடம் வெளிப்படுத்துதல்.
- ❖ இல்லாதவரைப்பற்றி எதிர்மறையான கருத்துக்களை கூறுவது தவறு எனச் சுட்டிக்காட்டி பின்னர் வேறொரு சூழ்நிலைக்கு மாறுதல்.
- ❖ அமைதியாக இருந்து எதிர்மறையாக பேசுவதை நிறுத்த முடியவில்லையே என்று தன்னையே வறுத்திக் கொள்ளுதல்.

**எடுத்துக்காட்டு-2**

உன்னுடைய உயிர் நண்பன் வேறொரு நபரினால் மனமுறிவு ஏற்பட்டு அதனால் மிகவும் பாதிப்படைந்தால்,

- ❖ அவனின் / அவளின் மனதை மாற்றுவதற்காக இரவில் வெளியே கூட்டிச் செல்லுதல்.
- ❖ தன்னுடைய தோழனுக்கு ஏற்பட்ட பாதிப்பு தன்னுடைய வேறொரு நண்பனுக்கும் ஏற்பட்டு விடுமோ! என்று வருந்துதல்.
- ❖ நண்பருக்கும் பாதிப்பை ஏற்படுத்திய நபரைக் கடிந்துக்கொண்டு தன் நண்பரிடம் அவர் உன்னைவிட்டு விலகி செல்வதே நல்லது என்று கூறுதல்.

❖ தன்னுடைய நண்பரிடம், அவர் அச்சூழ்நிலையிலிருந்து வெளிவர என்ன உதவி செய்ய வேண்டும் என ஆலோசனையை வேறு நண்பரிடம் கேட்டல்.

***மனவெழுச்சி நுண்ணறிவு மதிப்பீட்டு அளவுகோல்:***

மனவெழுச்சி ஈவு மதிப்பீட்டு அளவுகோலை "பார்- ஆன்" (1997) என்பவர் தயாரித்தார். இந்த அளவுகோலின் மூலம் ஒருவர் சமூகத்துடன் ஒட்டி வாழும் இயல்பினை கண்டறியமுடியும். இவ்வறவு கோல் பத்து கூறுகளைக் (Component) கொண்டுள்ளது. அவை

❖ தன்னலக்கருத்து
❖ மற்றவருடனான உறவு
❖ உணர்வுக் கட்டுப்பாடு
❖ சிக்கலுக்கான தீர்வு
❖ மனவெழச்சி விழிப்புணர்வு
❖ நெகிழ்வுத் தன்மை
❖ உண்மைநிலை அறிதல்
❖ மனஅழுத்த கட்டுப்பாடு
❖ சுய உறுதிப்பாடு
❖ பிறர் உணர்வுகளை உணர்தல்.

இவைகளைக் கொண்ட இம்மதிப்பீட்டுக்கருவியில் 65 வாக்கியங்கள் அடங்கியுள்ளன. இவ்வாக்கியங்களுக்குள் நேர்மறை வாக்கியங்களும், எதிர்மறைவாக்கியங்களும், உள்ளன. அவற்றில் நேர்மறை வாக்கியங்களுக்கு 0,1,2,3,4 என்றும் எதிர்மறை வாக்கியங்களுக்கு 4,3,2,1,0 என்றும் வழங்கி மதிப்பெண்களை கணக்கிடவும்.

ஒவ்வொரு வாக்கியத்தையும் கவனமாகப் படியுங்கள். அதனைத் தொடர்ந்து ஐந்து வகை விடைகள் எண்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன. அவை 1. எப்பொழுதும் இல்லை (Never) , 2. எப்பொழுதாவது (Rarely) 3. சிலநேரங்களில் (Some times) 4. பலநேரங்களில் (Often) 5. எப்பொழுதும் (Always)

***மதிப்பெண்கள் வழங்கும் முறை:***

| பதில்கள் | நேர்மறை வாக்கியங்கம் | எதிர்மறை வாக்கியங்கம் |
|---|---|---|
| எப்பொழுதும் இல்லை | 0 | 4 |
| எப்பொழுதாவது | 1 | 3 |
| சில நேரங்களில் | 2 | 2 |
| பல நேரங்களில் | 3 | 1 |
| எப்பொழுதும் | 4 | 0 |

ஒவ்வொரு பகுதியின் கூட்டல் தெகையைக் கொண்டு தங்கள் மனவெழுச்சி நுண்ணறிவு ஈவினைக் கணக்கிடவும், தங்கள் நுண்ணறிவு ஈவினைக் கணக்கிட

நுண்ணறிவு ஈவு == X x 100

இங்கு $\mathbf{X} = \frac{\text{ஒருவர் பெற்ற மதிப்பெண்}}{\text{மொத்தமதிப்பெண்}}$

ஒவ்வொரு பகுதியிலும் ஒருவர் பெற்ற மதிப்பெண்களைத் கொண்டு மேற்காணும் முறையில் குறிப்பிட்ட நுண்ணறிவு ஈவினைக் கணக்கிடவும்.

**39. மாணவர்களிடம் உடன்பாட்டு மனப்பான்மையை எவ்வாறு வளர்ப்பாய்? (2015)**

***உடன்பாட்டு மனப்பான்மை***

ஒருவரின் தற்கருத்து, வெற்றி உணர்வு, அன்பு, பாதுகாப்புணர்வு, மரியாதை, நம்பிக்கை போன்ற உணர்வுகளின் அடிப்படையில் அமைந்திருப்பது உடன்பாட்டு மனப்பான்மை எனப்படும்.

***உடன்பாட்டு மனப்பான்மையை வளர்த்தல்***

- ❖ உடன்பாட்டு மனப்பான்மையை மாணவர்களிடம் வளர்க்க நல்லவிதமான சுய அறிவுறுத்தல்கள் பயிற்சியை மாணவர்களிடையே கடைபிடிக்க உதவுதல்.
- ❖ பலவீனங்களை மீறி சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதைகளைக் கூறி தன்னம்பிக்கை உணர்வினை வளர்த்தல்.
- ❖ ஏளனமான வார்த்தைகள் மூலம் மாணவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாதிருத்தல்.
- ❖ மாணவர்களின் திறமை, ஆர்வம், விருப்பத்திற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தி திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்யவேண்டும்.
- ❖ தேவையற்ற ஒப்புமை செய்து மாணவர்களின் மன உணர்வினை காயப்படுத்தாமலிருத்தல்.

***உடன்பாட்டு மனப்பான்மையின் பயன்கள்***

- ❖ வகுப்பறையில் சுறுசுறுப்பாகவும், வெற்றி உணர்வோடும், தன்னம்பிக்கையுடனும் திகழ்வார்கள்.
- ❖ பிறரோடு இணைந்து விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள்.
- ❖ ஆற்றல்களை மேன்மேலும் உயர்ந்த அளவிற்கு வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள்.
- ❖ சமூகத் தொடர்புகளில் நாட்டம் கொண்டு குழுவேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள்.

**40. பெஞ்சமின் புளூமின் கற்றலின் வகைப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக. (2025, 2013, 2010)**

கல்வி கற்பித்தலால் ஏற்படும் மாணவர்களின் வளர்ச்சியினை மூன்று விரிவான வகைகளாகப் (Domains) பிரித்து அறிய இயலும் என்று கூறுகிறார் அவையாவன.

1) அறிவு சார்ந்தவகை (Cognitive domain)

2) எழுச்சி சார்ந்தவகை (Affective domain)

3) உடல் உள இயக்கம் சார்ந்தவகை (Psychomotor domain) போன்றவையாகும்.

ஒவ்வொரு வகைப்பாட்டிலும் கற்பிக்கும் நோக்கங்கள் சாதாரண அடிப்படை நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலைக்கு அமைக்கப்பட்டுள்ளன.

***அறிவு சார்ந்தவகை (Cognitive domain)***

அறிவு சார்ந்தவகை என்பது பொதுவாக மாணவரது அறிவினைப் பல்துறையிலும் வளர்ச்சியுறச் செய்தலே ஆகும்.

***நோக்கங்கள்***

1) கருத்துக்களை அறிந்து கொள்ளுதல் (Knowledge)

2) புரிந்து கொள்ளுதல் (Understanding)

3) பெற்ற அறிவினைப் புதிய சூழலில் பயன்படுத்துதல் (Application)

4) விவரங்களைப் பகுத்தாராய்தல் (Analysis)

5) விவரங்களைத் தொகுத்தாராய்தல் (Synthesis)

6) மதிப்பிட்டு அறிதல் (Evaluation)

- ❖ கற்றலில் அறிவு சார்ந்த வகையானது அறிவுபெறுதல் (கருத்துக்களை அறிந்து கொள்ளுதல்) என்ற நிலையிலிருந்து அறிவினைப் புரிந்து கொள்ளுதல், பெற்ற அறிவினைப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்துதல் பகுத்தாராய்தல், தொகுத்தாராய்தல் என்று படிப்படியாகச் சென்று இறுதியில் மதிப்பிடுதல் போன்ற நோக்கங்களில் முடிவடைகின்றது, இந்நோக்கங்கள் அனைத்தும் கற்பித்தலுக்குப் பொருத்தமுடையவை.
- ❖ தொடக்கக் கல்வி நிலையைப் பொருத்தமட்டில் அறிவுப் பகுதியில் முதல் மூன்று நோக்கங்களை அடையச் செய்யும் வாய்ப்புகள் மிகுதி.
- ❖ ஆனால் இன்று ஆசிரியர் மாணவர்களுக்குச் செய்திகளைத் திணிக்கிறார்கள்.
- ❖ குருட்டுப் பாடமாகக் கற்ற செய்திகளனைத்தும் படிப்பை முடித்த பின்னர் பயன்படுத்தாது போனால் ஏறத்தாழ 80 விழுக்காடு மறந்து போகின்றது என்பது ஆராய்ச்சி மூலம் காணப்பட்ட உண்மை.
- ❖ எனினும் செய்திகளை நினைவில் நிறுத்துவதை மட்டும் வலியுறுத்துவதை விட அவற்றைப் புரிந்து கொள்ளவும், புரிந்து கொண்ட செய்திகளைப் புதிய சூழ்நிலைகளில் பயன்படுத்தவும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- ❖ மேல்வகுப்புகளில் பாடத் தொடர்பான செய்திகளைப் பகுத்துப் பார்க்கவும், பகுத்தவற்றைத் தொகுக்கவும், அறிந்த செய்திகளிலிருந்து மதிப்பீடு செய்யவும் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

***உணர்வு சார்ந்தவகை***

மாணவரிடம் எழுச்சியினை உணர்வினைத் தூண்டுவதை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும்.

***நோக்கங்கள்***

1) பாராட்டுணர்வை வளர்த்தல் 2) ஆர்வம் கொள்ளுதல் 3) மனப்பான்மை பெறுதல் 4) உயர்ந்த எண்ணங்களைப் பேணுதல் 5) நற்பண்புகளைப் பெறுதல்

ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயல்வழியாக மேற்கூறிய ஐந்து உணர்வு சார்ந்த வகைப் பண்பு முழுமையாக மாணவரிடம் அடையச்செய்வதே நோக்கமாகும்.

***உணர்வுசார் செயல்நிலைகள்***

- ❖ பெறுதல் என்பது மாணவர்களின் கூறுணர்திறனால் தூண்டல்களை ஏற்பதற்கு அல்லது பெறுவதற்கு விருப்பத்துடன் இருத்தல். (அ) தூண்டல் பற்றிய விழிப்புணர்வு (ஆ) பெறுவதற்கான விருப்பம் (இ) தெரிவு செய்யப்பட்ட கருத்து என இம்மூன்றையும் பெறும் கூறாக அமைந்துள்ளது.

❖ உணர்வை வெளிப்படுத்துதல் தூண்டல் வகைகளில் ஒன்றைப்பெற்று அதற்கேற்ப வினைபுரிதல்.

❖ மதிப்பளித்தல் ஒரு கருத்தை உள்வாங்கி அதன் மதிப்பினை உணர்தல்.

❖ பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்தல் நாம் கொண்டுள்ள விழுமங்களை பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்து உறவு அமைப்பினை ஏற்படுத்துதல்.

❖ உள்வாங்கிச் செயல்படுதல் விழுமங்களை உள்ளத்தால் புரிந்து உணர்வுகளாக்கிய பின் தன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், உள்வாங்குதலின் அளவைப் பெறுத்தே அமையும்.

***உணர்வு சார்ந்த கற்றல் சூழல் வகைகள்***:

❖ பாதுகாப்பு, திறந்த மனம், நம்பிக்கை ஆகியவற்றைத் தரும் சுற்றுபுறச்சூழல்

❖ கற்போரை மையமாகக் கொண்ட கற்பித்தல் அணுகுமுறை

❖ சிக்கல்கள் - அதற்கான தீர்வுகள் திறனாய்வு அணுகுமுறை வழியாக தனியாள் வேற்றுமைகளை வெளிக்கொணர்தல்.

***உடல் உள இயக்கம் சார்ந்தவை:***

மாணவருடைய உளப்பாங்கின் அடிப்படையில் செயற்படும் நரம்பு மண்டல இயக்கமாகும். மாணவரிடம் செயல்திறன்களை வளர்ப்பது, இதன் அடிப்படை நோக்கமாகும், இதில்

❖ செயற்தூண்டல்

❖ வினையாற்றல்

❖ கட்டுப்பாடு

❖ ஒத்திசைவு

❖ இயற்கை அமர்வு போன்றவை அடங்கும்,

அறிவியல், கணிதம் போன்ற பாடங்களில் இவை முக்கியமானதாகக் கருதப்படுவதன் நோக்கம் கைத்திறன்களை வளர்த்தல் ஆகும். இதில்

❖ சோதனைக்கான கருவிகளைச் சேகரித்து அவற்றை பயன்படுத்தி முடிவுகளைக் காணும் திறன் வளர்த்தல்

❖ புதிய கருவிகளை அமைக்கும் திறன் வளர்த்தல்

❖ பிரச்சினைக்குத் தீர்வு காணும் திறன் வளர்த்தல்

❖ உற்று நோக்கும் திறன் வளர்த்தல்

❖ பயன்படுத்திய கருவிகளின் அமைப்பினைப் படம் வரையும் திறன் வளர்த்தல்

போன்ற மேற்கூறிய அனைத்து திறன்களும் கைத்திறன்களை வளர்த்தல் என்ற நோக்கத்தினுள் அடங்கும். இவ்வகை திறன் பெரும்பாலும் ஆய்வக வேலைகளில் வளர்க்கப்படுகின்றன.

**41. உணர்வுசார் செயல்நிலைகளைப் பற்றி எழுதுக. (2022) 4 மதிப்பெண்கள்.**

***உணர்வுசார் செயல்நிலைகள்***

❖ பெறுதல் என்பது மாணவர்களின் கூறுணர்திறனால் தூண்டல்களை ஏற்பதற்கு அல்லது பெறுவதற்கு விருப்பத்துடன் இருத்தல். (அ) தூண்டல் பற்றிய விழிப்புணர்வு (ஆ) பெறுவதற்கான விருப்பம் (இ) தெரிவு செய்யப்பட்ட கருத்து என இம்மூன்றையும் பெறும் கூறாக அமைந்துள்ளது.

DIET PVT

- ❖ உணர்வை வெளிப்படுத்துதல் தூண்டல் வகைகளில் ஒன்றைப்பெற்று அதற்கேற்ப வினைபுரிதல்.
- ❖ மதிப்பளித்தல் ஒரு கருத்தை உள்வாங்கி அதன் மதிப்பினை உணர்தல்.
- ❖ பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்தல் நாம் கொண்டுள்ள விழுமங்களை பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்து உறவு அமைப்பினை ஏற்படுத்துதல்.

உள்வாங்கிச் செயல்படுதல் விழுமங்களை உள்ளத்தால் புரிந்து உணர்வுகளாக்கிய பின் தன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், உள்வாங்குதலின் அளவைப் பெறுத்தே அமையும்.

**42. உணர்வுசார் புலம் பற்றி எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2022) 10 மதிப்பெண்கள்**

***உணர்வு சார்ந்தவகை***

மாணவரிடம் எழுச்சியினை உணர்வினைத் தூண்டுவதை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும்.

***நோக்கங்கள்***

1) பாராட்டுணர்வை வளர்த்தல் 2) ஆர்வம் கொள்ளுதல் 3) மனப்பான்மை பெறுதல் 4) உயர்ந்த எண்ணங்களைப் பேணுதல் 5) நற்பண்புகளைப் பெறுதல்

ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயல்வழியாக மேற்கூறிய ஐந்து உணர்வு சார்ந்த வகைப் பண்பு முழுமையாக மாணவரிடம் அடையச்செய்வதே நோக்கமாகும்.

***உணர்வுசார் செயல்நிலைகள்***

- ❖ பெறுதல் என்பது மாணவர்களின் கூறுணர்திறனால் தூண்டல்களை ஏற்பதற்கு அல்லது பெறுவதற்கு விருப்பத்துடன் இருத்தல். (அ) தூண்டல் பற்றிய விழிப்புணர்வு (ஆ) பெறுவதற்கான விருப்பம் (இ) தெரிவு செய்யப்பட்ட கருத்து என இம்மூன்றையும் பெறும் கூறாக அமைந்துள்ளது.
- ❖ உணர்வை வெளிப்படுத்துதல் தூண்டல் வகைகளில் ஒன்றைப்பெற்று அதற்கேற்ப வினைபுரிதல்.
- ❖ மதிப்பளித்தல் ஒரு கருத்தை உள்வாங்கி அதன் மதிப்பினை உணர்தல்.
- ❖ பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்தல் நாம் கொண்டுள்ள விழுமங்களை பிற விழுமங்களோடு ஒருங்கிணைத்து உறவு அமைப்பினை ஏற்படுத்துதல்.
- ❖ உள்வாங்கிச் செயல்படுதல் விழுமங்களை உள்ளத்தால் புரிந்து உணர்வுகளாக்கிய பின் தன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், உள்வாங்குதலின் அளவைப் பெறுத்தே அமையும்.

***உணர்வு சார்ந்த கற்றல் சூழல் வகைகள்***.

- ❖ பாதுகாப்பு, திறந்த மனம், நம்பிக்கை ஆகியவற்றைத் தரும் சுற்றுபுறச்சூழல்
- ❖ கற்போரை மையமாகக் கொண்ட கற்பித்தல் அணுகுமுறை
- ❖ சிக்கல்கள் - அதற்கான தீர்வுகள் திறனாய்வு அணுகுமுறை வழியாக தனியாள் வேற்றுமைகளை வெளிக்கொணர்தல்.

**முதியோரைப் பேணுதல்**

செங்கமு குன்றம் நாட்டை அனல் வேந்தன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய பெயரைப் போலவே அவன் எடுக்கும் முடிவுகளில். செயல்களில் அனல் பறக்கும். ஒரு நாள் நாட்டில் உள்ள முதியவர்களால் என்ன பயன் என்று கருதினான். எனவே முதியவர்கள் அனைவரையும்

கொண்டு வரும்படி உத்திரவிட்டான், அரசனின் மெய்க்காவலன் சஞ்சீவகனுக்கு இந்த முடிவு அதிர்ச்சியைத் தந்தது.

ஏனென்றால் அவன் தந்தையும் வயதானவர். தந்தையை தவிர வேறு எந்த உறவும் இல்லை. அவரையும் இழந்த பின் எதற்கு வாழ வேண்டும் என்று கருதி, தற்கொலை செய்து கொள்ள முயன்றான். அவனைத் தடுத்த அவரது தந்தை தன்னை எங்காவது ஒளித்து வைக்கும்படிக் கூறினார். அவன் வீட்டில் அவனது முன்னோர்களால் கட்டப்பட்ட நிலவறை ஒன்று இருந்தது. அங்கு தந்தையை மறைத்து வைத்தான். ஒரு நாள் ஒரு வழிப்போக்கன் மன்னனைச் சந்தித்து அவன் அருகே உள்ள கடற்கரை ஒன்றில் இருந்து பார்த்தால் தங்கக் கோப்பை ஒன்று கடலுக்குள் அடியில் தெரிவதாகக் கூறினான். அரசனும் அவன் பரிவாரங்களும் அந்த அதிசயத்தைக் காண விரைந்தனர். சஞ்சீவகன் தன் தகப்பனாரைப் பெண் வேடம் புனைய வைத்து நீண்ட கருப்பு அங்கியை மாட்டி முகத்தை மறைத்துத் தன்னுடன் கூட்டிச் சென்றான்.

நீண்ட தூரம் பயணம் செய்தனர். அப்போது சிறிது தூரம் சென்றவுடன் எல்லோரும் தாகத்தால் தவித்தனர். ஆனால் எங்கும் நீர் கிடைக்கவில்லை. எல்லோரும் சோர்ந்து விழுந்தனர். அரசனும் சோர்ந்தான், அப்போது சஞ்சீவகனின் தந்தை உங்களிடம் உள்ள பசுக்களில் ஒன்றை மேய்க்க ஓட்டிச் செல் அது நீருள்ள இடத்தைக் கண்டறிந்து விடும் என்று இரகசியமாக மகனிடம் கூறினார். சஞ்சீவகன் அவ்வாறே செய்ய அந்த பசு நீருள்ள இடத்தைக் கண்டறிந்தது. சஞ்சீவகனும் அந்த இடத்தைக் கண்டார். பின்னர் அரசனும் அவன் பரிவாரங்களும் அந்த நீரைப் பருகி இளைப்பாறினர். இதைக் கண்டறிந்த மன்னன் சஞ்சீவகனைப் பாராட்டினார். பிறகு அங்கிருந்து அவர்கள் கிளம்பிச் சென்றனர். செல்லும் வழியில் மழை கொட்டியது. அரசனும் மற்றவர்களும் குளிரால் நடுங்கியவாறு ஒரு மண்டபத்தில் தங்கி இருந்தனர். தூரத்தில் நெருப்புப்பிழம்பு தெரிவதைக் கண்டான், குளிரைப் போக்கிக் கொள்ள அங்கிருந்து நெருப்பை எடுத்து வருமாறு ஒரு காவலாளியை அனுப்பினான். நெருப்பை எடுத்து வரும் வழியிலே நெருப்பு அணைந்தது பலரும் முயற்சித்துப் பார்த்தும் நெருப்பை மண்டபத்திற்கு எடுத்து வர இயலவில்லை. அப்பொழுது சஞ்சீவகனின் தந்தை இரகசியமாக ஒரு பானையை எடுத்துக்கொள்; அதில் கால்பாகம் மணலை நிரப்பிக் கொள் அந்தப் பானையை ஒரு அகலமான பாத்திரத்தில் வைத்துக்கொள்; பானையில் மேல் இன்னொருபானையை வைத்து மூடி நீ நெருப்பு எரியும் இடத்துக்குப் போ; அங்குள்ள கங்குகளை மட்டும் மணல் உள்ள பானையில் நிரப்பி மற்றொரு பானையால் மூடி விடு, பின் அதைக் கொண்டு நெருப்பை உண்டாக்கி விடலாம் என்று சொன்னார். சஞ்சீவகன் அவ்வாறே செய்தான் சஞ்சிவகனின் இவ் அறிவுச் செயல் திறனை எண்ணி அரசன் வியந்தான். பின்னர் கடற்கரையை அடைந்தனர். வழிப்போக்கன் சொன்னது போல கடலின் அடியில் தங்கக்கோப்பை தகதகத்தது. அதைக் கண்ட மன்னன் உள்ளம் பறி கொடுத்தான். யார் அதை எடுத்துத் தன்னிடம் தருகிறார்களோ அவர்களுக்கு விரும்பியது கொடுக்கப்படும் என்று அறிவித்தான்

பலரும் முயன்றனர். இதைக் கவனித்த சஞ்சீவகனின் தந்தை மகனே! நீ முயற்சி செய். வெற்றி நிச்சயம் " என்றான்.

அதை எப்படி எடுப்பது எனக் கேட்டான்? நீ கடலில் குதிக்க வேண்டாம், அதோ அருகில் தெரியும் மலையின் மீது ஏறு அங்கேதான் இந்த தங்கக் கோப்பை இருக்கிறது. நீரில் தெரிவது அதன் நிழல் தான் என்றார்.

அவ்வாறே மலை உச்சியில் ஏறி தங்கக் கோப்பையை அரசனிடம் கொண்டு வந்து கொடுத்தான். அரசன் வியப்பில், ஒவ்வொரு முறையும் நீயே முயற்சித்து காரியங்களில் வெற்றி பெறுகிறாய் எப்படி? என்று கேட்டான். இது என் வெற்றியில்லை, ஒரு முதியவரின் ஆலோசனைக்கு கிடைத்த வெற்றி என நடந்ததை விளக்கிக் கூறினான் பின் நீங்கள் எனக்கு ஏதாவது தருவதாய் இருந்தால் அந்த முதியவர் ஆயுள் உள்வரை நிம்மதியாக வாழ வரம் தரவேண்டும் என்று வேண்டினான். அரசன் தன் தவற்றை எண்ணி வருந்தினான். அனுபவமில்லாத இளைஞர்களை, அனுபவம் பெற்ற பெரியவர்களால் தான் வழி நடத்திட முடியும் எனக்கூறி, வயதானவர்களுக்கு யாரும் எக்காலத்திலும் துன்பம் செய்யக்கூடாது என்றும் கட்டளையிட்டான். எனவே முதியோர்களைப் பேண வேண்டும். (பரிவு, இரக்கம் காட்டுதல், பெரியோரை மதித்தல், அன்புடைமை, மனித நேயம், பிறருக்கு உதவுதல்)

**43. நடத்தை நோக்கம் என்றால் என்ன? (2022) --- 2 மதிப்பெண்கள்**

அறிவு பெறுதல் என்பது பொது நோக்கம்; தெளிவற்றது; கண்ணால் பார்க்க இயலாது; ஆகவே அளந்தறிய இயலாது.

நினைவு கூர்தல், சரியான விடையை அறிந்து சொல்லுதல் (Recognition) என்பது மாணவனின் நடத்தையினால் வெளிப்படுவதால், இதனை நடத்தை நோக்கம் என்று சொல்கிறோம்

**<u>கூடுதல் வினாக்கள்</u>**

**44. மாணவர்களிடம் காணப்படும் தீய பண்புகளுக்கான காரணங்கள் யாவை? (2023 – 2 மதிப்பெண்கள்)**

இன்றைய மக்கள் சமுதாயத்தில் பரவியுள்ள காழ்ப்புணர்ச்சி, குடும்ப ஒற்றுமைச் சிதைவு, சமயப் பற்றின்மை, சமூகத்தில் முதியோர்களது கட்டுப்பாடற்ற நடத்தை போன்றவை மாணவர்களின் தீய நெறிகளுக்கான காரணம் என்று சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுவதை மறுப்பதற்கில்லை. மாணவர்களிடையே இன்று காணப்படும் தீய நெறிகளுக்கு கல்வி முறையும் ஓரளவு காரணமாகும்.

- ❖ இன்றைய கல்விமுறை வாழ்க்கைத் தொழில்களுக்கான பயிற்சியை அளிக்கத் தவறிவிட்டது.
- ❖ சமூகவியல்பினைப் பெறுதலில் தேவைப்படும் பயிற்சியை இளம் தலைமுறையினருக்கு அளிக்கத் தவறிவிட்டது.
- ❖ மாறுபட்ட சமூக சூழ்நிலைக்கேற்ப தனது நோக்கங்களையும் செயல்முறைகளையும் மாற்றிக் கொள்ளத் தவறிவிட்டது.

- இவை மாணவ சமூகத்தினரிடையே கல்வி பற்றிய அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது என்றும், இந்த அவநம்பிகையும் மனமுறிவும் தீயநெறிகளுக்குக் காரணங்களாகும் என்றும் கூறப்படுகிறது.

**45. அறிவு சார் புலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமங்கள் நான்கினை கூறுக.**

- தூய்மை
- பொதுக் காரணம் அறிதல்.
- மனவலிமை
- அறிவு ஆர்வம்
- சம உரிமையுடன் முடிவெடுத்தல்
- ஒழுங்கு முறை
- தொலைநோக்கு
- முழுமை
- தேசிய விழிப்புணர்வு
- உடல், உள்ளம், ஒழுக்கம்
- அறிவை நாடிச் செல்லல்
- சுய ஒழுக்கம்
- நன்மை, தீமை, வேறுபாடு அறியும் தன்மை
- விசாரணை
- தேசிய குடிமை சொத்துக்களைப் போற்றுதல்

**46. உணர்வு சார்புலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமங்கள் நான்கினை கூறுக.**

1) தவிர்த்தல் 2) மற்றவர்களின் பண்பைப் பாராட்டுதல், 3) தீண்டாமையை எதிர்த்தல் 4) கொடைத் தன்மை 5) பிறர் பால் பரிவு 6) இரக்கம் 7) மதிப்பு நயச் செயல் 8) உறுதிப்பாடு 9) கடவுள் பற்று 10) தனிமனித உயர்வு 11) சமநிலை 12) நட்புறவு 13) உண்மை மனப்பான்மை 14) ஒருமைப்பாடு 15) சுதந்திரம் 16) மன்னித்தல் 17) நற்குடியாளர் 18) நன்றியரிதல்

**47. உடல் உள்ளம் சார்புலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழுமங்கள் நான்கினை கூறுக.**

1) குடியுரிமை 2) கூட்டுறவு 3) உழைப்பின் உயர்வு 4) கடமை 5) நன்னடத்தை 6) உடல்நல வாழ்வு 7) தான்தொடங்காற்றல் 8) பணியில் திடப்பற்றுதி 9) கீழ்ப்படிதல் 10) நேரத்தைப் பயன்படுத்துதல் 11) காலந்தவறாமை 12) எளிமையான வாழ்க்கை 13) தன்னம்பிக்கை 14) சுயவேலை 15) குழு வேலை 16) வள ஆதாரம்

**48. கல்வி குறித்து சுவாமி விவேகானந்தர்கருத்து யாது?**

"மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி. எத்தகைய பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும், கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன் தரும் வகையில் அமைக்கிறதோ அந்தப் பயிற்சி தான் கல்வியாகும்.

**49. விழுமங்களின் வெளிப்பாடுகளாக ஆர்.சி. டேவிஸ் என்ற ஆராய்ச்சியாளர் எவற்றை குறிப்பிடுகின்றார்?**

- நிர்வாகத்தின் குறிக்கோளுடன் சேர்ந்து ஒத்துழைப்பு அளித்தல்.



DIET PYT

- ❖ நிர்வாகத் தலைமைக்கு விசுவாசமாக இருத்தல்
- ❖ கட்டுப்பாடுகள், வசதிகள், சட்டங்கள், ஆகியவற்றிற்கு இணங்குதல்.
- ❖ கடின வேலைகளாக இருந்தாலும், நிர்வாகத்தினருடன் இணைக்கமாக நடந்து கொள்ளுதல்.
- ❖ தொழிலில் ஆர்வம் மற்றும் தொழில் ஒருங்கமைவு இவற்றில் பயிற்சியாளர் பங்களிப்பு செய்தல்
- ❖ தன்னுடன் பயிலும் பயிற்சி ஆசிரியர்களுடன் நட்புறவோடு பழகுதல்.
- ❖ கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுவதில் பெருமிதம் கொள்ளுதல்.

**50. விழுமம் அல்லது நன்னெறி என்றால் என்ன?**

உளவியல் அறிஞர்கள் விழுமம் என்பது மனப்பாங்கு என்றும், சமூக அறிஞர்கள் நன்னெறி என்பது சமூக நடத்தை என்று பொருள்படும். மனிதனுக்கு விழுமம் என்பது நல்ல பண்புகளைப் பின்பற்றி ஒருவருடன் ஒருவர் ஒன்றாகக் கூடி வாழ்தல் என்று பொருள்படும்.

**51. பயிற்சி ஆசிரியர் விழுமம் என்றால் என்ன?**

- ❖ பயிற்சியாளரின் விழுமம் என்பது எவ்வாறு பயிற்சியாளர்கள் தங்களது பயிற்சிக் காலத்தில் எவ்வாறு பயிற்சியைப் பொறுப்புடன், கடமை உணர்வுடன், பயிற்சியாளர், நிறுவனம், பயிற்றுனர் ஆகியோருடன் இணைந்து ஒவ்வொரு பயிற்சி இலக்குகளை ஒழுக்க உணர்வோடு பெறுகின்றனர் என்பதாகும்,
- ❖ ஒரு பயிற்சியாளரின் இலக்குகளுக்கும் அவரது சாதனைகளுக்கும் இடையே உருவாகும் மனநிறைவான மனநிலைக்கு பயிற்சியாளரின் நன்னெறி என்று பெயர்.

**52. விழுமங்களின் வெளிப்பாடுகளாக மாணவ ஆசிரியரின் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும்? (அல்லது) ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான நன்னெறி பண்புகளை விளக்குக.** (2023 – 10 **மதிப்பெண்கள்**)

- ❖ எப்பொழுதும் காலம் தவறாது பள்ளிக்கு வருதல், கடமையைச் செய்தல்.
- ❖ எப்பொழுதும் எந்தப் பாடப்பொருளைக் கற்பிக்க வேண்டுமோ அதை முழுமையாகத் தயார் செய்து கற்பித்தல்.
- ❖ சாதி, மத, பால், இனம், மொழி, ஏற்றத்தாழ்வு, மாநிலம் ஆகிய வேற்றுமையின்றி எல்லா மாணவர்களையும் அன்புடனும், நேசத்துடனும் ஒரு சிறிதும் பாரபட்ச மின்றி நடத்துதல்.
- ❖ உடல், சமூக, திறமை, எழுச்சி, நேர்மை, ஆன்மநேயம் ஆகியவற்றில் வளர்ச்சியடைய வழிகாட்டுதல்.
- ❖ தனித்தேவைகள், தனியாள் வேற்றுமை, கல்வி சமூகப் பொருளாதாரப் பண்புகள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு கற்பித்தல்.
- ❖ தகவல்களை உரியவர்களைத் தவிர மற்றவர்களிடம் வெளியிடாது இருத்தல்.

- ❖ தனக்கே எதிராக (எதிர்ப்பு உணர்ச்சி) பிறருக்கு எதிராக, நிர்வாகத்திற்கு எதிராக எண்ணம் கொள்ளாதிருத்தல்.
- ❖ தனிநபர் ஒழுங்கு, பொது ஒழுங்கு, பணிசெய்யும் இடத்தின் பெருமை ஆகியவற்றை போற்றிப் பாதுகாத்தல்.
- ❖ தரமான கல்வியைப் பெறுவது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமை என்பதை அங்கீகரித்தல்.
- ❖ கல்வி மனிதனின் முழுமையான பன்முக ஆளுமை வளர்ச்சிக்குக் கருவியாகும் என்பதை ஏற்றல்.
- ❖ பெறும் பயிற்சி மூலமாக, வழங்கும் கல்வி வழியாக நம்முடைய வளமான, கலை, பண்பாட்டுணர்வையும், தேசிய உணர்வையும் உலக அமைதியையும் பாதுகாத்தல். பள்ளி, சமுதாயம், மாநிலம், நாடு ஆகியவற்றை மதித்தல்.
- ❖ ஆசிரியர் என்பவர் சமுதாய, பொருளாதார, வளர்ச்சிக்குப் பொறுப்பாளர் ஆவார். மக்களின் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யப் பங்களிப்பவர்.
- ❖ சமுதாயம் தரமான கல்வியாலும் ஆசிரியர்த் தொழிலைப் பற்றிய நல்ல மனப்பான்மையாலும், ஆசிரியர் சமுதாயத்தை போற்றவும், மதிக்கவும் செய்ய வேண்டும் என்று உறுதி எடுத்தல்.
- ❖ ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பயிற்சி காலத்தில் வழங்கப்படுகின்ற அனைத்து பொருள் சார்ந்த, செயல் சார்ந்த, சமூக உளகியல் சார்ந்த எதிர்பார்ப்பில் வருங்கால சமூதாயம், வளமாகவும், வாழ்வாகவும் வாழ நல்ல விழுமங்களை ஒவ்வொருவரும் கடைபிடித்து ஆசிரியர் சமூதாயத்தின் மதிப்பு உயர பயிற்சியை பயனுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

**53. மனப்பான்மை பற்றி விளக்குக. (2022) – 4 மதிப்பெண்கள்**

**மனப்பான்மை**:

- மனப்பான்மை என்பது ஒருவர் தமது சூழ்நிலைக் **கூறுகளான** மனிதர்கள், பொருட்கள் கருத்துகள் ஆகியவற்றிற்கு கற்றலின் விளைவாக, குறிப்பிட்ட துலங்களை நிகழ்த்துவத**க்கா**ன தயார் நிலையைக் குறிக்கிறது.
- ஒரு பொருளிடத்தில் நாம் கொண்டுள்ள மனப்பான்மையின் காரணமாக, அதற்கு நாம் ஒரு குறிப்பிட்ட நடத்தையையே எப்போதும் வெளிப்படுத்துகிறோம்.
- பொருட்கள் பற்றிய **சாதகமான** அல்லது **பாதகமான** மனப்பான்மையே நாம் கொண்டிருக்க முடியும். மனப்பான்மை உடலூக்கிகளைப் போலன்றி, கற்றலால் தோன்றுவது. மனப்பான்மைக்கு ஏற்பவே பொருட்களை உற்று நோக்கி, பொருள் அறிந்து அனுபவத்தைப் பெறுகிறோம்.

**மனப்பான்மையின் பண்புகள்.**

- ❖ மனப்பான்மையில் பொதுவாக மூன்று அம்சங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அவை சிந்தனை, உணர்வு, செயல்.
- ❖ மனப்பான்மை என்பது சிந்தனைக்கூறு, 'நம்பிக்கை' (Belief)' எனப்படும். அது ஒருவரது எண்ணத்தை பிரதிபலிக்கிறது.
- ❖ மனப்பான்மையின் உணர்வுக்கூறு 'விழுமம்' (Value) எனப்படும். இது ஒரு பொருளால் நாம் கவரப்படுகிறோமா, வெறுப்புறுகிறோமா அல்லது நடுநிலையாகத் திகழ்கிறோமா என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

- ❖ மனப்பான்மையின் மூன்றாவது கூறான செயல் என்பது நமது நடத்தைத் தோன்றுவதற்கான தயார் நிலையைக் (Readiness to act) குறிக்கின்றது.
- ❖ நமது பல்வேறு மனப்பான்மைகள் குழந்தைப் பருவத்திலேயே, ஆக்க நிலையுறுத்தல் (conditioning), பின்பற்றுதல் (Imitation), போதனை (Instruction) ஆகியவற்றால் தோன்றி நிலைத்து விடுகின்றன.

**54. எதிர்மறை மனப்பான்மை மாற்றம் பற்றி குறிப்பு வரைக. (2023, 2026 – 4 மதிப்பெண்கள்)**

- ❖ எதிர்மறை மனப்பான்மை தொடர்புடைய கருத்து அல்லது பொருளில் உள்ள நல்ல அம்சங்களை நேரடியாக விளக்குதல்.
- ❖ எதிர்மறை மனப்பான்மை ஏன் ஏற்பட்டுள்ளது என்பதை காரண காரியத்தோடு உணர்தல்.
- ❖ எதிர்மறை மனப்பான்மை உடைய பொருட்களை சாதகமான சூழ்நிலைகளில் அடிக்கடி பின்னணியில் தோன்றச் செய்தல்.
- ❖ எதிர்மறை மனப்பான்மை தோன்றக் கூடிய சூழ்நிலைகளில் நேரிடையாக, தொடர்பை ஏற்படச் செய்து முதன்மையான அனுபவத்தைப் பெற வாய்ப்பளித்தல்.

**55. மனவெழுச்சி நுண்ணறிவு குறித்து எஸ். ஹெயின் -ன் வரையறையை எழுதுக. (2024 - 2 மதிப்பெண்கள்)**

"மனவெழுச்சிகளை உணர்தல், வெளிப்படுத்துதல், அடையாளம் காணுதல், நினைவிலிருத்தல், அவற்றைப் பயன்படுத்திக் கற்றல், நெறிப்படுத்துதல் ஆகியவற்றில் மேம்பட்ட ஆற்றலை ஒருவர் இயல்பாகப் பெற்றிருத்தலைக் குறிப்பதே மனவெழுச்சி நுண்ணறிவாகும்".

**56. உணர்வு சார்புலம் வரையறை தருக. (2025)**

மாணவரிடம் எழுச்சியினை உணர்வினைத் தூண்டுவதை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும்.

**57. கற்பித்தல் நோக்கங்களின் மூன்று புலங்கள் யாவை? (2026)**

- அறிவு சார் புலம்
- உணர்வு சார் புலம்
- உடல் உள இயக்கப் புலம்

**58. பண்பாடு சார்ந்த விழுமம் என்றால் என்ன? (2026)**

சமயம், தேசியம், மொழி, மதம் போன்ற பாரம்பரியமாகப் பேணி வளர்க்கப்படுகின்ற வேறுபாடற்ற பண்பாடுகளை அனைவரிடமும் பகிர்ந்துக் கொள்ளுதல் பண்பாடு சார்ந்த விழுமங்களின் அடையாளமாகும்.

DIET-PVT

## 5. கற்றலுக்காக மதிப்பீடும் கற்றல் மதிப்பீடும்.

## 2 மதிப்பெண்கள்

1. **மதிப்பீட்டுக் கருவியனை எவ்வாறு தயாரிப்பாய்? (2021)**

ஆசிரியர் எதை மதிப்பிட வேண்டும் என்று முதலில் தீர்மானிப்பது அவசியம். அதன் பின் கலைத்திட்டத்தில் உள்ள பாடப்பொருளை சோதனைக்களமாக்கி அதில் வேண்டிய திறன் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன் அடைவு நிலைகளைப் பட்டியல் இட்டு மதிப்பீட்டுக் கருவியைத் தயாரிக்க வேண்டும்.

2. **அளவிடக்கூடிய கற்றல் அடைவினால் ஏற்படும் மாற்றங்கள் எவை? (2021) கற்பவர்களின் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் நான்கு கூறுகளை குறிப்பிடுக. (2026)**

i) அறிவு ii) திறன் iii) மனப்பான்மை iv) நடத்தை

3. **வகுப்பறை உரையாடலின் அவசியம் யாது? (2021) மாணவர்களின் முன்னறிவை எப்படி சோதிக்கலாம்? (2012)**

❖ ஆசிரியர்கள் மாணவர்களிடம் வினா எழுப்பி அதற்கான பதிலை உடனே எதிர்பார்க்காமல் போதிய கால அவகாசம் கொடுத்து காத்திருந்து பதிலைப் பெறும்போது அவர்கள சிந்திப்பதற்கு வாய்ப்பாக அமைகிறது.

❖ மாணவர்கள் இவ்வாறாக கேள்வி பதில் விவாதங்களில் தீவிரமாக பங்கெடுப்பதால் ஆசிரியர்கள் அவர்களின் முன்னறிவைப் (Prior knowledge) பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது.

❖ அதன் மூலம் கற்போரின் உண்மையான கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

❖ வகுப்பறையில் கேட்கப்படும் வினாக்கள் - உரையாடல்-பதில் கற்றலுக்கு வலுசேர்க்கிறது.

4. **மாணவர்களின் நடத்தையை மதிப்பிடும் வகைகளை எழுதுக. (2025,2021, 2012)**

❖ சரிபார்ப்புப் பட்டியல்

❖ தரவரிசை பட்டியல்

❖ வாழ்க்கைக் குறிப்பு (biography)

❖ நாட் குறிப்பு (Diary)

❖ நேர்காணல் (Interview)

❖ உற்றுநோக்கல் (Observation)

❖ ஒப்பார் குறிப்பு (peer note)

5. **சக மாணவர் மற்றும் சுய மதிப்பிடல் பற்றி எழுதுக. (2021)**

❖ கற்றலுக்குச் சுயமதிப்பீட்டின் மூலம் கற்றல் இலக்கைப் புரிந்து கொள்ள முடியும்.

❖ அவ்வாறு புரிந்து கொள்ளும் போதுஅந்த இலக்கை அடைய திட்டமிட்டுக் கொள்ள முடியும்.

❖ கற்றல் அடைவுகளை மதிப்பீடு செய்யும் தேர்வுக் கூறுகள் (Criteria) வெளிப்படையானதாக இருக்க வேண்டும்.

❖ நடைமுறையில் சகமாணவர் மதிப்பீடு சுயமதிப்பீட்டிற்குச் சிறந்த தூண்டு கோலாக அமைகிறது. இதன்மூலம் இயற்கையாகவே மாணவர்கள் கூடுதலாகக் கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

6. **பண்பு வகை சார்ந்த மதிப்பீடு மூன்று நிலைகளில் மதிப்பீடு செய்யப்படுகிறது. அவை யாவை? (2020, 2017). பண்பு சார்ந்த மதிப்பீட்டின் மூன்று நிலைகள் யாவை?**

பண்பு வகை சார்ந்த மதிப்பீடானது மூன்று நிலைகளில் மதிப்பிடப்படுகிறது. அவை

- ❖ நடத்தை சார்ந்த மதிப்பீடு
- ❖ ஈடுபாடு சார்ந்த மதிப்பீடு
- ❖ உடல் சார்ந்த மதிப்பீடு.

7. **மாணவர்கள் திறன்களை அடைவதற்கான செயல்கள் யாவை? (2020)**

- ❖ உற்று நோக்கல் (Observation)
- ❖ போலச்செய்தல் (Imitation)
- ❖ எப்படியாவது செய்துமுடித்தல் (Manipulation)
- ❖ மிகச்சரியாகச் செய்தல் (precision)
- ❖ பிறசெயல்களோடு நேர்பட இணைத்தல் (Articulation)
- ❖ தன்னியல்பாகச் செய்தல் (naturalization)

8. **தேர்வின் வகைகள் யாவை? (2020, 2017, 2016, 2014)**

- ❖ வாய்மொழித் தேர்வு.
- ❖ எழுத்துத் தேர்வு
- ❖ செய்முறைத் தேர்வு.

9. **நேர்காணல் மூலம் ஒரு மாணவனின் நடத்தையை எவ்வாறு மதிப்பிடலாம்? (2019)**

- ❖ சுகாதாரம்
- ❖ ஒழுங்கு
- ❖ நேரம் தவறாமை
- ❖ உதவி செய்தல்
- ❖ உழைப்பு
- ❖ வளர் மனப்பான்மை
- ❖ உளக்கட்டுப்பாடு
- ❖ சமூகத் தேவை
- ❖ ஒழுக்கம்.

10. **தேர்வு மற்றும் ஒப்படைவுகளை மதிப்பிடும் போது மதிப்பெண் வழங்குவதைவிட கருத்துரையே சிறந்தது. ஏன்? (2025, 2019)**

- ❖ மாணவர்களின் தேர்வு மற்றும் ஒப்படைப்புகளை மதிப்பிடும்போது மதிப்பெண்கள் வழங்காமல் தேவையான கருத்துகளை (Comments) வழங்குவதைக் கற்றலுக்கான மதிப்பீடு வலியுறுத்துகிறது.
- ❖ கருத்துக்களை எழுதும்போது ஆசிரியர்கள் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் தங்களைத் திருத்திக்கொள்ளவும் மற்றும் வளர்த்துக்கொள்ளவும் உதவுமாறு ஆசிரியர் தமது கருத்துகளை மாணவர்களின் விடைத்தாளில் அல்லது ஒப்படைப்பில் குறிப்பிடுதல் வேண்டும்.

DIET PYT

11. **மனப்பான்மை எதனால் உருவாகிறது? (2024, 2018)**

சூழ்நிலை (Environment)

அனுபவம் (Experience)

கல்வி (Education)

ஆகியவற்றால்தான் மனப்பான்மை உருவாகிறது,

12. **கற்றல் மதிப்பீட்டுக் களங்கள் நான்கினைக் கூறுக. (2018)**

- ❖ கற்பித்தல் பாங்கு (Learning style),
- ❖ மாணவர் - ஆசிரியர் இடைவினை, (Interaction)
- ❖ ஆசிரியர் மற்றும் மாணவரின் சுய உள்ளாய்வு (Self - introspection),
- ❖ ஊக்கம் (Motivation)

ஆகிய மதிப்பீட்டு களங்கள் ஆகும்.

13. **" அறிவின் உருவாக்கக் கோட்பாடு " எதன் முக்கியத்துவத்தை தருகிறது. (2018)**

உண்மையான வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுடைய அறிவும் திறன்களும் பயன்படுகின்றனவா என்பதற்கு " அறிவின் உருவாக்கக்கோட்பாடு " (Constructivism) முக்கியத்துவம் தருகிறது.

14. **குறையறிச் சோதனை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக. (2017, 2016, 2013)**

குறையறி சோதனை என்பது குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களிடையே குறிப்பிட்ட கற்றல் திறன்களில் காணப்படும் குறைகளைக் கண்டறிய, பாட ஆசிரியரால் நடத்தப்படும் சோதனை ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

மாணவர்களில் பலர் மொழியைக் கையாளுவதில் பேச்சு, எழுத்து இரண்டிலும் பல்வேறு நிலைகளில் இடர்படுகின்றனர். இடர்படும் மாணவர்களைக் கண்டறிந்து இடர்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவைகளை நீக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

15. **கற்றலின் மதிப்பீடு வரையறுக்க. (2016, 2010)**

கற்றல் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் மாணவர்கள் அடைந்துள்ளனரா எனச் சோதித்துத் தரம் பிரிக்கவும் சான்றளிக்கவும் பயன்படும் முறையே மதிப்பீடு என கருதப்படுகிறது. இதுவே கற்றலின் மதிப்பீடு எனவும் அழைக்கப்படும்.

16. **கற்றலுக்கான மதிப்பீட்டுச் சுழற்சியின் நான்கு படிநிலைகளை எழுதுக. (2015)**

- ❖ குறிக்கோள்
- ❖ சான்றுகள்
- ❖ அடைவுநிலை தீர்மானித்தல்
- ❖ கற்றலின் அடுத்த நிலை.

17. **மாணவர்கள் பள்ளிப் பருவத்தில் பெறக்கூடிய திறன்களை எழுதுக. (2015)**

- ❖ கேட்டல்
- ❖ படித்தல்
- ❖ பேசுதல்
- ❖ எழுதுதல்
- ❖ கலந்துரையாடுதல்
- ❖ வரைதல்
- ❖ சோதனைகள் செய்தல்
- ❖ கணிதம் கற்றல்
- ❖ கையெழுத்து கற்றல்

18. **தேர்ந்தெடுப்பு வகை வினாக்களின் வகைகளை எழுதுக.** (2015, 2026)

- ❖ பலவிடை வினா
- ❖ சரியா - தவறா
- ❖ பொருத்துக
- ❖ வகைப்படுத்துதல்.

19. **கற்றலை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டுக் கருவிகள் (Tools for Assessment) யாவை?** (2014) **மதிப்பீட்டுக் கருவியின் பெயர்களைப் பட்டியலிடுக.** (2022)

- ❖ நாட்குறிப்பு
- ❖ உற்றுநோக்கல்
- ❖ வகைப்பாட்டு அளவுகோல்
- ❖ வினாப்பட்டியல்
- ❖ மனப்பான்மைக்கருவி

20. **புறவயத் தேர்வு வினா என்றால் என்ன?** (2014)

- ❖ புறவயத்தேர்வு வினாக்களுக்கு ஒரே ஒரு விடை மட்டுமே உள்ளதால் தேர்வாளரின் (Examiner) சொந்த விருப்பு வெறுப்புகளோ, மனநிலையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலோ, மதிப்பீடு மாறுபடுவதில்லை.
- ❖ இத்தகையத் தேர்வு நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது.
- ❖ எளிதாக மதிப்பீடு செய்யவும் பாடப்பகுதி முழுவதிலும் அதிகமான அளவில் நிறைய வினாக்கள் தயாரிக்கவும் இயலுவதால் இத்தேர்வு முறை சிறப்புறுகிறது.

21. **முழுமைப்படுத்தும் சோதனையின் பயன்கள் யாவை?** (2024, 2013)

- ❖ சொல்லறிவு
- ❖ புரிதல் திறனை சோதித்தல்.

22. **வினா வகைகள் யாவை?** (2025, 2013)

- ❖ புறவயத் தேர்வு
- ❖ அகவயத் தேர்வு

23. **சகமாணவர் மதிப்பிடல் என்றால் என்ன?** (2012)

- ❖ சகமாணவர் மதிப்பீடு சுயமதிப்பீட்டிற்குச் சிறந்த தூண்டு கோலாகஅமைகிறது.
- ❖ இதன்மூலம் இயற்கையாகவே மாணவர்கள் கூடுதலாகக் கற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

24. **கற்றலுக்கான மதிப்பீடு ஏன் தேவைப்படுகிறது?** (2011)

- ❖ மதிப்பீடு என்பது மாணவர்களின் தேர்ச்சி அல்லது அடைவு நிலையை அறிய மட்டுமே இதுவரை பயன்பட்டு வந்தது.
- ❖ மதிப்பீடு கற்றலை மேம்படுத்தப் பெரிதும் உதவுகிறது.



DIET PVT

- ஒரு மாணவனின் அறிவு, திறன், மனப்பான்மைகளைச் சோதிக்கும் பொழுது, அவன் தனது நிலையை (தனது முந்தைய நிலை, தனது சக மாணவர்கள் நிலைகளுடன் ஒப்பீடு செய்ய) உணர்கிறான்.
- அவ்வமயம் தனது தேர்ச்சியை மேம்படுத்த இவ்வகை மதிப்பீடு அவனுக்கு உதவுகிறது.

25. **பண்பு வகை சார்ந்த மதிப்பீட்டு கருவிகளில் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.** (2011)

- நாட்குறிப்பு
- உற்றுநோக்கல்
- வகைப்பாட்டு அளவுகோல்
- வினாப்பட்டியல்
- நேர்காணல்
- மனப்பான்மை கருவி
- நாட்டம் அறியும் கருவி
- ஈடுபாடு அளவுகோல்
- மருத்துவப் பரிசோதனை
- விளையாட்டுப் போட்டிகள்

26. **வாய்மொழித் தேர்வின் பயன்பாடு யாது?** (2011)

- வகுப்பறையில் அன்றாடப் பாட வளர்ச்சி அறிவினை மதிப்பிட
- அறிவு வளர்ச்சியை சோதிப்பதற்கு
- மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு
- மாணவர்களின் ஐயப்பாட்டைப் போக்க
- கற்றலின் முன்னேற்றம் பெற உதவுகின்றன.

27. **நிறையறி சோதனையை எப்பொழுது பயன்படுத்தலாம்?** (2010)

- ஓர் அலகு (unit) முடிவிலோ ஒரு பருவம் (term) நிகழ்வின் முடிவிலோ, ஓர் ஆண்டின் முடிவிலோ இறுதி நிலை மதிப்பீடு அமையலாம்.
- மொத்த நிகழ்வின் சாதக, பாதகங்களை ஆராய இது உதவும்.
- ஆசிரியர் தம் கற்பித்தல் செயலை மீளாய்வு செய்து பார்க்கவும் மாணவர்களின் கற்றல் அடைவை ஆராயவும் உதவும் மதிப்பீடு.
- இறுதிச் சான்றளிக்கவும் இது பயன்படுகிறது.

28. **"தொடர்ச்சியான முழுமையான அக மதிப்பீடு" என்ற சொற்றொடரின் பொருளை விளக்குக.** (2010)

- தொடர்ச்சியான முழுமையான மதிப்பீடு என்பது கற்றல் / கற்பித்தலின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது அகன்றது மற்றும் ஆழமானது. நிறை குறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது.
- "தொடர்ச்சியான மதிப்பீடு" என்பது பாரம்பரியமான பருவ முடிவு (மாதாந்திர / காலாண்டு / அரையாண்டு) தேர்வுகளுக்குப் பதிலாக கற்பித்தல் / கற்றல் நிகழ்வுறும் காலத்தே

எவ்வகையிலான கற்பித்தல் நிகழ்ந்தது; எவ்வகையான கற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது, என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பிடுதலைக் குறிக்கும்.

❖ முழுமையான மதிப்பீடு என்பது வழக்கமான அறிவுசார் புலம் சார்ந்த பாடப்பகுதியின் திறன் அடைவுகள் மட்டுமில்லாமல் உணர்தல் மற்றும் செயல் சார்ந்த அடைவுகளையும் மதிப்பீடு செய்தலைக் குறிக்கும்.

***<u>4 மதிப்பெண்கள்</u>***

**29. ஒரு ஆசிரியர் மேற்கொள்ளும் மதிப்பீடு நிலைகள் குறித்து விளக்குக.** (2021) **மதிப்பீட்டின் பல்வேறு நிலைகளை குறித்து விளக்குக.** (2025 – 10 மதிப்பெண்கள்)

***<u>நிலை 1: இலக்குவரையறை (Goal settings)</u>***

நாம் முன்பே பார்த்தது போல் மாணவர்களின் முழு ஆளுமையானது அறிவு, திறன், மனப்பான்மை, நடத்தை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவற்றையே ப்ளூமும் அவரது ஆய்வாளர்களும் மூன்று களங்களாகப் பிரித்துள்ளனர்.

- ❖ அறிவுக்களம் (Cognitive)
- ❖ உணர்வுக் களம் (Affective)
- ❖ உடலியக்கக் களம் (psychomotor)

எந்தக் காலத்தில், எந்த உட்பிரிவுகளைச் சோதிக்க வேண்டுமோ அதற்குத் தகுந்தாற்போல் தேர்வுமுறையும், தேர்வுக்கருவிகளும் தேர்வு நேரமும் மாறுபடும். எனவே தேர்வுக்கு முன்பே ஓர் ஆசிரியர் எதற்காக மதிப்பீடு செய்யப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். சான்றாக அறிவியலில் அறிதலைச் சோதிப்பதாக வைத்துக் கொள்வோம்.

கீழ்வருவனவற்றுள் எது வெற்றிடத்தின் ஊடே செல்லாது?

I. ஒளி
II. ஒலி
III. மின்புலம்
IV. காந்தப்புலம்

அதுபோல ஆங்கிலம் கற்பிக்கும் ஓர் ஆசிரியர், மாணவரின் பேசும் திறனைச் சோதிக்க நினைத்தால், எழுத்துத் தேர்வுக்குப் பதில், வாய்மொழித் தேர்வு நடத்துவது தான் சாலச் சிறந்தது.

***<u>நிலை-2 தயாரிப்பு நிலை</u>***

இந் நிலை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். மதிப்பீட்டின் வெற்றியே இதில் தான் அடங்கியுள்ளது என்பது மிகையாகாது. கலைத்திட்டத்தை ஆய்வு செய்து சோதிக்க வேண்டிய அடைவுகளைப் பட்டியலிட்டபின் வினாத்தாள் வடிவமைப்பைத் தீர்மானித்தல் வேண்டும். தயாரிப்பு நிலையில் கவனிக்க வேண்டிய அடிப்படைகளாவன:

❖ குறிக்கோளை அறிதல் நிலையில் பட்டியலிட்ட அனைத்து அடைவுகளையும் சோதிக்க ஏற்ற களத்தைத் தேர்ந்தெடுத்தல்.

DIET PYT

- தேர்ந்தெடுத்த களத்திற்கேற்ப உட்பிரிவுகள் அனைத்தையும் சோதிக்காவிடினும் பெருமளவு சோதித்தல் அவசியம்.
- அனைத்து வகையான கேள்விகளும் இடம் பெற வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.
- தேவையான நேரத்தையும் மதிப்பெண்களையும் முன்பே தீர்மானித்தல் வேண்டும்.
- வினாப் பங்கீடு முறையாக அமைக்கப்பட வேண்டும்.
- வினாத்தாள் திட்டவரைவு (Blue print) வடிவமைத்தப் பின் அடைவுத் திறனைச் சோதிப்பதற்கு ஏற்ற வினாக்களைத் தேர்வு செய்ய வேண்டும். அவ்வாறு தேர்வு செய்த வினாக்களைத் தொகுத்து வினாத்தாளை வடிவமைக்க வேண்டும்.

***<u>நிலை - 3 வளர்ச்சி நிலை</u>***

வினாத்தாள் வடிவமைப்பினைத் தயாரித்தபின் ஆசிரியர் செய்ய வேண்டியவை

- ஒவ்வொரு வினாவையும் தனித்தனி அட்டையில் எழுதுதல் வேண்டும்.
- பின்னர் அவற்றை ஒருமுகப்படுத்தி அடுக்குதல் வேண்டும்.
- தேர்வு எழுதும் மாணவர்களுக்குத் தேவையான நெறிமுறைகள் வரையறுக்கப்பட வேண்டும்.
- வினாத்தாளுக்கான விடைத்தாள் தயாரித்தல் அவசியம்.
- இறுதியாக, வினாத்தாளினை ஆசிரியர் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் ஆராயலாம். சக ஆசிரியர்களிடம் கொடுத்துக் கருத்துக் கேட்பது வினாத்தாளின் தரத்தை மேம்படுத்தும்.

***<u>நிலை - 4 செயலாக்க நிலை</u>***

- தேர்வு எழுதும் சூழல் அமைதியானதாகவும் வசதியானதாகவும் இருத்தல் அவசியம்.
- மாணவர்களுக்கு வகுக்கப்பெற்ற நெறி முறைகள் எழுத்து வடிவில் இருந்தால் அனைவரையும் சமமாகச் சென்றடையும்.
- தேர்வுக் கண்காணிப்பு நேர்மையாகச் செயல்படுத்தப்படல் வேண்டும்.

***<u>நிலை - 5 பகுப்பாய்வு அறிக்கை தயாரித்தல்</u>***

எந்த வகைத் தேர்வையும் அளவிடுவதன் மூலம் அதன் பயனைத் தெளிவாக அறியலாம்.
மாணவர்களின் விடைத்தாள்களைத் திருத்திய பின், மதிப்பெண்களைப் பட்டியலிட்டு, அதனைப் பகுப்பாய்வு செய்தல் மிக மிக அவசியம்.

- மிக அதிக மதிப்பெண்
- மிகக்குறைந்த மதிப்பெண்
- சராசரி மதிப்பெண்
- அடைவு நிலையை நன்கு பெற்றவர்
- அடைவுநிலையை அடையாதவர்கள்
- ஒவ்வொரு மாணவரின் முன் தேர்ச்சி நிலையோடு ஒப்பிடுதல்
- மாணவர்கள் புரிந்து கொள்ளாத கருத்துக்கள்
- குறையறிதல்
- ஒரு குறிப்பிட்ட அலகில் (தலைப்பில்) ஆசிரியரது செயல்பாட்டு நிலை மாணவர்கள் அடைவு குறைந்ததற்கான காரணங்கள் இவ்வாறு பற்பல கோணங்களில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கலாம்.



DIET PVT

- ❖ அவ்வறிக்கையினை தலைமை ஆசிரியர், பெற்றோர் என அனைவருக்கும் அளிக்கலாம். தனித்தனியே மாணவரிடம் அவரது அடைவுநிலை பற்றி ஓர் ஆசிரியர் கலந்துரையாடினால் அந்த மாணவரின் கல்வித்தரம் உயரும். அறிக்கை தயாரித்தல் இறுதிநிலையாக இருப்பினும் இது முக்கியமான படிநிலையாகும். இந்நிலை தான் கற்றலுக்காக மதிப்பீடு என்பதைத் தீர்மானிப்பது. எனவே மதிப்பீடு, கற்றலை மேம்படுத்துவதோடு கற்பித்தலையும் மதிப்பிடப் பயன்படும் என்பதையும் அறியலாம்.
- ❖ கல்வித்தரம் நிரந்தரமாக, செங்குத்தாகச் செல்ல, கற்பித்தல்-கற்றல் செயல்கள் நிகழும் பொழுதே இவற்றிற்கான மதிப்பீட்டுத் தேர்வுகள் இணையாகச் செய்யப்படுதல் வேண்டும்.

**30. வினா வகைகளை விளக்குக. (2021) விடைகளின் தன்மையின் அடிப்படையில் வினாவின் வகைகளை விளக்குக. (2020)**

தேர்வர் (Examinee) தரும் விடையின் தன்மையின் அடிப்படையில் தேர்வு வினாக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை புறவயத் தேர்வு (Objective type) மற்றும் அகவயத் தேர்வு (Subjective) வினாக்களாகும்.

***புறவயத் தேர்வு (Objective type)***

புறவயத்தேர்வு வினாக்களுக்கு ஒரே ஒரு விடை மட்டுமே உள்ளதால் தேர்வாளரின் (Examiner) சொந்த விருப்பு வெறுப்புகளோ, மனநிலையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலோ, மதிப்பீடு மாறுபடுவதில்லை. ஆகையால் இத்தகையத் தேர்வு நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது. எளிதாக மதிப்பீடு செய்யவும் பாடப்பகுதி முழுவதிலும் அதிகமான அளவில் நிறைய வினாக்கள் தயாரிக்கவும் இயலுவதால் இத்தேர்வு முறை சிறப்புறுகிறது.

***அகவயத் தேர்வு (Subjective type)***

மாணவர்களின் சிந்திக்கும் அல்லது காரணம் கூறும் திறனைச் சோதிக்கப் பயன்படுகிறது. இம்முறையில் மாணவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுய கருத்துக்களையும் விரிவான அறிவாற்றலையும் சுதந்திரமாக வெளியிட வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இம்முறைப்படி மாணவர்களின் விடையைத் துல்லியமாக மதிப்பீடு செய்வது கடினம். எனவே நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைத் தன்மையை உறுதி செய்வது கடினமாகிறது.

மாணவர் விடைதரும் முறையை அடிப்படையாகக் கொண்டு, தேர்வு வினாக்களைத் தேர்ந்தெடுப்பு மற்றும் அளிப்பு வினா என இருவகையாகப் பிரிக்கலாம்.

***தேர்ந்தெடுப்பு வினா (Selection type)***

தேர்ந்தெடுப்பு வினாவுக்குரிய விடைகள், தரப்பட்டுள்ள விடைத் தொகுதியிலிருந்து அளிக்கப்படும் வகையில் அமையும். இத்தகையத் தேர்வில் ஒரே ஒரு விடைதான் சரியானதாக இருக்கும். உண்மைச் செய்திகளை (Factual information) இத்தகையத் தேர்வு மூலம் நன்றாகச் சோதிக்க முடியும். இத்தகைய வினாக்களுக்கு புறவயத்தன்மை (Objectivity), நம்பகத்தன்மை (Reliability), ஏற்புடைமை (Validity) போன்ற பண்புகள் அதிகமுண்டு. தேர்ந்தெடுப்பு வகை வினாக்களில் பலவகைகள் உண்டு. அவை (1) பலவிடை வினா (Multiple Choice) (2) சரியா - தவறா (True or false), (3) பொருத்துக (Match) (4) வகைப்படுத்துதல் (Classification) ஆகும்.

***அளிப்பு வகை வினா (Supply type)***

தேர்ந்தெடுப்பு வகை வினாத் தேர்விலுள்ள குறைகளைக் களைவதற்கு அளிப்பு வகை வினாத் தேர்வு உதவுகின்றது. அளிப்பு வகை வினாக்களுக்கு பல விடை அளிக்கும் வாய்ப்புகள் உண்டு. மாணவர்களின் உயர்நிலைத் திறன்களை இத்தகைய வினாக்கள் மூலம் சோதிக்க முடியும். இவ்வகை வினாக்களின் அகவயத்தன்மையால் தேர்வரின் விருப்பு வெறுப்பிற்கு அதிக வாய்ப்புண்டு. இதில் பல வகைகள் உண்டு. அவையாவன (1) கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல் (2) குறுவிடை வினா, (3) முழுமைப்படுத்தும் சோதனை (Cloze test), (4) கட்டுரை வினா ஆகும்.

**31. செய்முறைத் தேர்விற்கான மதிப்பீட்டுச் செயல்களை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை? (2020) செய்முறைத் தேர்வு – குறிப்பு வரைக. (2012)**

அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி, மாணவர்கள் பயிற்சி அனுபவத்தின் வெளிப்பாடாக செய்முறையைச் செய்கின்றனர். கற்றல் செய்முறைகளை மாணவர்களைச் செய்யச் செய்து திறனடைவை மதிப்பிடுதல் செய்முறை மதிப்பீடு ஆகும்.

***மதிப்பீட்டுச் செயல்களை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:***

- ஒவ்வொரு செயலும் வரையறுக்கப்பட்ட திறன் / இலக்குகளின் அடிப்படையில் அமைத்தல் வேண்டும்
- மதிப்பிட உதவும் செயல்கள் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். தனிநபர் செயல்பாட்டிற்கேற்ப கற்றல் கருவிகள் ஏற்ற எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும்.
- செயல்களைச் செய்ய மாணவர்களுக்குக் கொடுக்கும் குறிப்புகள் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.
- குழுச் செயல்பாட்டில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.
- கற்றல் உபகரணத்தைப் பயன்படுத்த வேண்டிய கால அளவு மாணவர் தம் பங்கேற்பு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- மேல்வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் துணைக் கருவிகளைக் கையாளும் திறன், உற்று நோக்கி அறியும் திறன், அறிதல் மற்றும் பகுத்தல் திறன்கள் போன்றவற்றை மதிப்பிடல் வேண்டும்.

**32. மாணவர்களின் அடைவினை கண்டறிய பயன்படுத்தும் தேர்வின் வகைகள் யாவை? (2019) தேர்வின் வகைகளை விளக்குக.** (2024)

**வாய்மொழித்** தேர்வு:

வகுப்பறையில் அன்றாடப் பாட வளர்ச்சி அறிவினை மதிப்பிடுவதற்கும், தொடர்ந்து அறிவு வளர்ச்சியை சோதிப்பதற்கும் மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும் வாய்மொழித்தேர்வு பயன்படுகிறது.

**பயன்கள்**:

- மாணவர்களின் ஐயப்பாட்டைப் போக்கவும்,
- தொடர்ந்து கற்றலின் முன்னேற்றம் பெற உதவுகின்றன.
- எழுத்துத் தேர்வைவிடச் சிக்கனமானவை.
- கல்வி உலா மற்றும் கல்வி சம்பந்தமான திரைப்படங்கள் மூலம் மாணவர்கள் பெற்ற அறிவை வாய்மொழித் தேர்வு மூலம் எளிதாகவும் ஆழமாகவும் சோதிக்கலாம்.

❖ அறிவாக்கக் கோட்பாட்டின்படி (Constructivism) கற்றல் சூழலிலேயே மாணவர்களை மதிப்பிட வாய்மொழி வினாக்கள் மிகவும் உதவுகின்றன.

❖ ஒரு கேள்விக்குப் பல பதில்கள் அல்லது தீர்வுகள் உண்டு என்பதற்கு வாய்ப்பளிப்பதால் அத்தகைய வினாக்கள் சிறப்படைகின்றன.

**எழுத்துத் தேர்வு** :

மாணவர்கள் எழுத்து மூலமாகப் பதில் எழுதுகின்ற தேர்வுகள் எழுத்துத் தேர்வுகள் எனப்படும். இதில் கொடுக்கின்ற வினாக்களுக்கு மாணவர்கள் எழுது பொருட்களைக் கொண்டு எழுத்து மூலமாக விடைகளை அளிப்பர். விடைகளின் கருத்திற்கும் பொருத்தத்திற்கும் ஏற்ப ஆசிரியர் அதற்கு மதிப்பெண் அளிப்பார்.

**பயன்கள்** :

மாணவர்களின் நினைவாற்றலையும் கருத்துக்களைச் சிந்தித்து வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கின்றன.

**செய்முறைத் தேர்வு** :

அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி, மாணவர்கள் பயிற்சி அனுபவத்தின் வெளிப்பாடாக செய்முறையைச் செய்கின்றனர். கற்றல் செய்முறைகளை மாணவர்களைச் செய்யச் செய்து திறனடைவை மதிப்பிடுதல் செய்முறை மதிப்பீடு ஆகும்.

***<u>மதிப்பீட்டுச் செயல்களை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை:</u>***

❖ ஒவ்வொரு செயலும் வரையறுக்கப்பட்ட திறன் / இலக்குகளின் அடிப்படையில் அமைத்தல் வேண்டும்.

❖ மதிப்பிட உதவும் செயல்கள் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். தனிநபர் செயல்பாட்டிற்கேற்ப கற்றல் கருவிகள் ஏற்ற எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும்.

❖ செயல்களைச் செய்ய மாணவர்களுக்குக் கொடுக்கும் குறிப்புகள் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.

❖ குழுச் செயல்பாட்டில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.

❖ கற்றல் உபகரணத்தைப் பயன்படுத்த வேண்டிய கால அளவு மாணவர் தம் பங்கேற்பு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேல்வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் துணைக் கருவிகளைக் கையாளும் திறன், உற்று நோக்கி அறியும் திறன், அறிதல் மற்றும் பகுத்தல் திறன்கள் போன்றவற்றை மதிப்பிடல் வேண்டும்.

33. **அளவைக்குட்பட்ட மதிப்பீடு மற்றும் பண்புவகை சார்ந்த மதிப்பீடு வேறுபடுத்துக.** (2019)

| அளவைக்குட்பட்ட மதிப்பீடு | பண்புவகை சார்ந்த மதிப்பீடு |
|---|---|
| 1. எண் (அ) மதிப்பெண்ணால் மதிப்பிடப்படுகிறது. உதா. காலாண்டு/ அரையாண்டு தேர்வு மதிப்பெண்கள் | பண்பின் அடிப்படையில் மதிப்பீடு.<br>உதா. நேர்மை |
| 2. வாய்மொழி, எழுத்துத் தேர்வு மூலம் அளக்கப்படுகிறது. | உற்று நோக்கல் படிவம், வினாப்பட்டியல், நாள் குறிப்பு போன்றவைகள் மூலம் அளக்கப்படுகிறது. |
| 3. புறவயத்தன்மையுடையது | அகவயத்தன்மையுடையது |
| 4. தரவுகள் புள்ளியியல் சார்புடையது | தரவுகள் புள்ளியியல் சார்பற்றது |
| 5. எத்தனை? எவ்வளவு? என்ற வினாவிற்கு விடை கொடுப்பது அளவைக்குட்பட்ட மதிப்பீடு மாணவனின் அறிவு நிலையை அளப்பத்தாகும். உதா. மாணவனின் மொழி, கணிதம், அறிவியல் பாட மதிப்பெண்கள் | ஏன்? என்ற வினாவிற்கு விடை கொடுப்பது, சுயமதிப்பீடு.<br>உதா. சுகாதாரம், ஒழுக்கம், நேரம் தவறாமை. |
| 6. அறிவு, திறன் சார்ந்த மதிப்பீடு. | நடத்தை ஈடுபாடு, உடல் சார்ந்த மதிப்பீடு. |

34. **வகுப்பறை பயன்பாட்டில் உள்ள மதிப்பீட்டுச் செயல்களை விவரிக்கவும்.** (2025, 2018)

- ❖ வகுப்பறை (கற்பித்தல் கற்றல்) வினாக்கள்
- ❖ வீட்டுப்பாடம் அளித்தல்
- ❖ கற்பித்தல் முறை சரியானதா என மாணவர் அடைவின் மூலம் சோதித்தல்
- ❖ மதிப்பீட்டின் விளைவைக் கலைத்திட்ட கருத்துப் மாற்றத்திற்குப் பயன்படுத்துதல்.
- ❖ வாரஇறுதி, மாதஇறுதிகளில் அகமதிப்பீடு செய்தல்.
- ❖ மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பயன்படுத்துதல்.
- ❖ குறையறி சோதனை மேற்கொள்ளுதல்.
- ❖ மாணவர்களின் தேர்ச்சித் தரத்தைப்பற்றி அறிதல்.
- ❖ தங்கள் விருப்பம், மனப்பான்மை, தேர்ச்சி பற்றி மாணவர்கள் தாங்களே அறியச் செய்தல்.
- ❖ பெற்றோர்களுக்கு குழந்தைகளின் தேர்ச்சி அறிக்கையை அளித்தல்.
- ❖ மதிப்பீட்டுச் செயலில் பெற்றோரையும் ஈடுபடுத்துதல்.
- ❖ மாணவர் பற்றிய பதிவேடுகளைத் தயாரித்தல்.

DIET PYT

- ❖ ஒப்பு நோக்குதலுக்குப் பயன்படுத்துதல்.
- ❖ வழிகாட்டுதலுக்கும் அறிவுரை அளித்தலுக்கும் பயன்படுத்துதல்.
- ❖ கற்றலை மேம்படுத்துவதற்குக் கருவியாகக் கொள்ளல்.

**35. மதிப்பீடு முன்னேற்ற அறிக்கையை நீ எவ்வாறு தயாரிப்பாய்? (2018)**

- ❖ மதிப்பிடலை அறிவிக்க முற்படும்போது எதற்காகத் தேர்வு நடத்தப்பட்டது என்ற நோக்கத்தைத் தெளிவாகக் கூற வேண்டும். எதை மதிப்பிட்டிருக்கிறோம் என்பதைக் கூற வேண்டும். என்னென்ன பாடங்கள், திறன்கள், அத்திறன்கள் அறிதலா, உணர்தலா (அ) நடத்தை சார்ந்ததா என்பதைத் துல்லியமாக விவரிக்க வேண்டும்.
- ❖ தேர்வு எவ்வாறு நடத்தப்பட்டது? எத்தன்மைக் கொண்டது? வளர்வறி மதிப்பீடு(formative), நிறையறி மதிப்பீடு (summative) குறையறி மதிப்பீடு (diagnostic) என்பது பற்றி விளக்க வேண்டும்.
- ❖ பயன்படுத்தப்பட்ட தேர்வுகள் அகவயத்தன்மை கொண்டதா (Subjective) அல்லது புறவயத்தன்மை கொண்டதா (Objective) என்பதை குறிப்பிட வேண்டும்.
- ❖ அடுத்து இந்தத் தேர்வை யார் நடத்தினார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் அறிக்கையில் இடம் பெறுவது அவசியம். வகுப்பறையில் ஆசிரியரால் நடத்தப்பட்ட தேர்வா? அல்லது அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் நடத்தப்பட்டத் தேர்வா? என்பதைப் பதிவு செய்ய வேண்டும்.
- ❖ தேர்வர்கள் யார் என்று குறிப்பிடுவது முக்கியம். தொடக்கப்பள்ளி மாணவர்களா அல்லது நடுநிலைப்பள்ளி மாணவர்களா என்பன போன்ற செய்திகள் இடம் பெற வேண்டும்.
- ❖ இறுதியாக இந்தத் தேர்வின் முடிவுகள் தெளிவாகவும் துல்லியமாகவும் கொடுக்கப்பட வேண்டும். அவை எந்த அளவிற்கு மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்பதையும் விவரிக்க வேண்டும்.
- ❖ இந்த அறிக்கையில் இறுதிநோக்கமாக மாணவர்களின் அடைவு மேம்பாட்டிற்கான ஆலோசனைகள் இடம்பெறுதல் மிகவும் முக்கியமானதாகும்.
- ❖ கற்பித்தலும் மதிப்பிடலும் ஒரு தொடர் நிகழ்வாகும். ஆசிரியரின் கற்பித்தல் எந்த அளவிற்கு மாணவனின் கற்றலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தேர்வின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.
- ❖ தேர்வு என்பது ஆசிரியரின் கற்பித்தலை சோதிக்கும் உரைகல். கற்றல் நிகழாத கற்பித்தல், வகுப்பறைச் செயல்பாட்டை பொருளற்றதாக ஆக்கிவிடும். ஆகவே, மதிப்பீடு கற்பித்தலை கற்றல் மூலம் மதிப்பிடும் ஓர் அளவுகோலாக அமைகிறது.
- ❖ கற்பித்தலில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தும் ஓர் வழிகாட்டியாகவும் அமைகிறது. ஆனால் மதிப்பீடு கற்பித்தலுக்காகவே தவிர, கற்பித்தல் மதிப்பீட்டிற்காக அல்ல. ஆகையால் தான், மதிப்பீடு கற்றலை மதிப்பிடவும், கற்றலுக்காக மதிப்பிடவும் வகுப்பறையில் பயன்படுத்தப்படுகிறது. தொடர் மதிப்பீடு செய்யப்படாத கற்பித்தலும் கற்பித்தலை மேம்படுத்த உதவாத மதிப்பீடும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதில்லை.

**36. பல்விடை தேர்தல் வினா (Multiple Choice Questions) என்றால் என்ன? அவ்வினாவினை எவ்வாறு தயாரிப்பாய் என்பதை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.** (2024, 2017)

ஒரு வினாவிற்கு சரியான விடை ஒன்றும், தவறான பலவிடைகளும் கலந்து கொடுக்கப்பட அவற்றிலிருந்து சரியான விடையைத் தெரிந்தெடுப்பதாக அமையும் வினா, பலவிடை வினாவாகும். கொடுக்கப்படும் பல விடைகளில் ஒன்று மட்டுமே சரியானதாக இருக்கும். மற்றவைகள் சரியான விடைகள் போலக் காணப்பட்டாலும் அவைகள் தவறான விடைகளே. இவைகள் எண்ண மாற்றிகளாக (distractors) செயல்படுகின்றன.

பலவிடை வினாக்கள் அமைப்பது கடினமானது. எண்ண மாற்றிகளை சரியாகத் தருவது தேர்வின் புறவயத்தன்மையை அதிகமாக்கும். மாணவர்களின் உணர்தல் திறன்களை இதன்மூலம் சோதிக்க முடியாது. மாணவர் கற்றலில், சிக்கலானவற்றையும், புளூமின் வகைதொகை நெறிகளின் உயர்நிலைத் திறன்களையும் இத்தகைய வினாக்கள் மூலம் முழுமையாகச் சோதிப்பது கடினம்.

எ.கா: கீழ்வருவனவற்றுள் எது வெற்றிடத்தின் ஊடே செல்லாது?

I. ஒளி
II. ஒலி
III. மின்புலம்
IV. காந்தப்புலம்

**37. மதிப்பீட்டின் வகைகள் யாவை? விளக்குக.** (2017) **வளர்வறி சோதனை, நிறையறி சோதனை விளக்குக.** (2025, 2014, 2010)

**மதிப்பீட்டு வகைகள்**

கற்றல் அடைவு எந்த நிலையில் உள்ளது என்பதை அளவிட உதவுவது மதிப்பீடு.

மதிப்பீடு செய்தலை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. வளர்வறி சோதனை (Formative Evaluation)
2. நிறையறி சோதனை (Summative Evaluation)

**வளர்வறி சோதனை (Formative Evaluation)**

- வளர்வறி சோதனை (Formative Evaluation) என்பது வகுப்பறையில் ஆசிரியர், மாணவர்களிடையே கற்றல், கலந்துரையாடல், விநாடி வினா போன்றவைகளை நிகழ்த்தி, அடைவை அளக்க பல சூழல் பல நிலைகளில் நிகழ்த்தப்பட்டு கற்றல் கற்பித்தலின் இடையே இவ்வகை மதிப்பீடு நடைபெறுதல் வேண்டும்.
- இம்மதிப்பீடு ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு அவரவர் செயல்பாடுகள் பற்றிய பயன் விளைவை அறியப்பயன்படுகிறது.

- ❖ எனவே மாணவர், ஆசிரியர் ஆகிய இரு தரப்பினருக்குமே கற்றல், கற்பித்தலை மேம்படுத்த இது ஒரு கருவியாகிறது.
- ❖ இம்மதிப்பீடு கற்றலின் தரத்தை அளவிடுவதைக் காட்டிலும், கற்றலில் ஏற்பட்டுள்ள நிறை, குறைகளை எடுத்துக்காட்டுகிறது. இது முறைசார்ந்த மதிப்பீடாகவும் முறைசாரா மதிப்பீடாகவும் இருக்கலாம்.
- ❖ ஏன் சில நேரங்களில் எதேச்சையான (incidental) மதிப்பீடாகவும் இருக்கலாம். செயலின் விளைவை, பயனை அளந்தறிவது தான் இவ்வகை மதிப்பீட்டின் நோக்கம். (ஸாட்லர், 1989)

**எடுத்துக்காட்டு** :

ஒரு வேடன் குறிபார்த்துப் பலமுறை அம்பு எய்கிறான். அவன் எத்தனை முறை முயற்சி செய்து, கொண்ட இலக்கு மீது சரியாக அம்பு எய்தான் எனக் கவனித்தல் அவசியம். இவ்வாறு கவனிக்கும்போது இலக்கை அடைய எத்தனை முறை முயற்சி செய்தான் என்றும், தவறிய முயற்சிகளில் அம்பு இலக்கைவிட்டு எவ்வளவு விலகிச் சென்றது என்றும், எப்போது இலக்கை அடைந்தது என்றும் அறிதல் அவசியமாகிறது. ஆசிரியர், கற்பித்தல் இலக்குகளை மாணவரின் கற்றல் நோக்கங்களைச் செயல்படுத்தும்போது அவற்றை மாணவன் அடைய, எத்தனை முறை முயற்சி செய்கிறான், (Trial and Error) அப்படி முயலும் போது என்னென்ன தவறுகள் செய்கிறான் என ஆசிரியர் உற்றுநோக்கி, அவற்றை நீக்க முயற்சி செய்தல் அவசியம்.

**நிறையறி சோதனை (Summative Evaluation)** :

- ❖ கற்றல் அடைவுகளைச் அளந்தறிய நிறையறி சோதனை உதவுகிறது. மாணவரின் அறிவு, திறன், மனப்பான்மை, நடத்தை ஆகிய அனைத்தையும் இம்முறை மதிப்பிடுகிறது.
- ❖ கற்றல் துவங்கும் முன்பே, கற்றலில் மாணவர் அடைய வேண்டிய இலக்கைத் தீர்மானிப்பர். அந்த அடைவை மாணவர் பெற்றுவிட்டனரா எனச் சோதித்தறிய கற்றல் நிகழ்வின் இறுதியில் நடைபெறும் மதிப்பீடு இது.
- ❖ ஓர் அலகு (unit) முடிவிலோ ஒரு பருவம் (term) நிகழ்வின் முடிவிலோ, ஓர் ஆண்டின் முடிவிலோ இறுதி நிலை மதிப்பீடு அமையலாம்.
- ❖ மொத்த நிகழ்வின் சாதக, பாதகங்களை ஆராய இது உதவும். ஆசிரியர் தம் கற்பித்தல் செயலை மீளாய்வு செய்து பார்க்கவும் மாணவர்களின் கற்றல் அடைவை ஆராயவும் உதவும் மதிப்பீடு இது. இறுதிச் சான்றளிக்கவும் இது பயன்படுகிறது.
- ❖ இவ்விரு வகை மதிப்பீடுகளும் வளர்ச்சியையும், வளர்ச்சியின்மை எனில் அதற்கான காரணங்களையும் பகுப்பாய்வு செய்யத் துணையாகும். நிறையறி சோதனை சான்றளிக்கவும், அறிக்கை தயாரிக்கவும் பெரிதும் உதவுவதுடன், கல்வியின் தரத்தை முழுமையான அளவில் வெளிப்படுத்தவும் உதவுகிறது.

**38. சிக்கல் – தீர்வு செயல் நிலையின் படி நிலைகளை விவரி. (2026, 2016) சிக்கல் – தீர்வு திறனை நடைமுறை வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துவாய்? (2011)**

- ❖ பிரச்சினை, தீர்வின் அவசியம் அல்லது தீர்வுக்குரிய கடினத் தன்மையை உணர்தல்.
- ❖ இப்பிரச்சினையைத் தீர்க்கப் பயன்படக்கூடிய செய்திகள் யாவற்றையும் தேடித்தொகுத்தல் அல்லது பிரச்சினையின் கடினத்தன்மையினை பல பரிமாணங்களிலும் அடையாளங்காணல்.
- ❖ இச்செய்திகளினின்றும், நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண உதவக் கூடிய பல்வேறு கருதுகோள்களை (Hypotheses) அல்லது தகுந்த தீர்வுகளை உருவாக்குதல்.
- ❖ இக்கருதுகோள்களைச் சரிபார்த்து உண்மையான கருதுகோள்களைத் தேர்ந்தெடுத்தல் (Verification) அல்லது சரியான கருதுகோளைக் கையாண்டு சிக்கலைத் தீர்க்க முனைதல்.
- ❖ அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கருதுகோளினை செயலாக்கி பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்.

**சிக்கலும் தீர்வும் - எடுத்துக்காட்டு**

- ❖ ஒரு மாணவன் தன் அறையில் தனக்குத் தேவைப்படும் ஒரு புத்தகம் இல்லாமற் போவதைக் காண்கிறான்.
- ❖ அப்புத்தகம் எங்கு மறைந்துள்ளது என்பது அவனது பிரச்சினை அதனைத் தீர்ப்பதற்கு உதவக்கூடிய முன்நிகழ்ச்சிகளை அவன் நினைவுபடுத்திக் கொள்கிறான்.
- ❖ இப்புத்தகத்தைக் கடைசிமுறையாக எப்போது தன்னுடைய அறையில் தான் கண்டான்- நண்பருக்குக் கொடுத்துள்ளாரா? பள்ளிக்கு அதனை எப்போது எடுத்துச் சென்றார்? தன்னுடைய அறைக்கு வேறு நண்பர்கள் எவேரேனும் வந்தனரா? போன்றன இத்தகைய நிகழ்வுகளாகும்.
- ❖ பின்னர் இவற்றினின்றும் சில கருதுகோள்களை நினைவுகூறுகின்றான். புத்தகம் பள்ளியில் காணாமல் போயிருக்கலாம். தன் நண்பன் இரவல் கேட்டு வாங்கிச் சென்றிருக்கலாம் அல்லது அவன் தன்னைக் கேட்காமலேயே எடுத்துச் சென்றிருக்கக் கூடும் போன்றன இத்தகைய கருதுகோள்களாகும்.
- ❖ இவை யாவுமே உண்மையாக இருக்கமுடியாது. ஆகையால் ஒவ்வொன்றையும் சரிபார்க்கிறான். தான் எப்போதும் புத்தகத்தை அறைக்கு வெளியில் எடுத்துச்செல்வதில்லை. புத்தகத்தை இரவல் கொடுக்கும் பழக்கமும் இல்லை. யாரும் இரவலும் கேட்டதில்லை. நேற்று மாலை அறையில் அந்தப் புத்தகத்தைப் படித்ததும் நினைவுக்கு வருகிறது. அப்போது நண்பன் ஒருவன் அறைக்கு வந்து உரையாடிச் சென்றுவிட்டான்.
- ❖ இவ்வாறு நிகழ்வுகளை மனதில் திரையிட்டுப் பார்த்ததில் தன்னைக் கேட்காமல் தன் நண்பன் அப்புத்தகத்தை எடுத்துச் சென்றிருக்கக் கூடும் என்பதே பொருத்தமான கருதுகோளாகிறது.

உடனே அந்நண்பனது அறைக்குச் சென்று பார்க்கும்போது அப்புத்தகத்தை அவனது மேசையின் மீது காண்கிறான்.

**39. பள்ளிகளில் தற்போதுள்ள மதிப்பீட்டு முறைகளை விளக்குக.** (2015)

***விடை: வினா எண் 37 மற்றும் 28***

**40. தேர்ந்தெடுப்பு வகை வினாக்களை எடுத்துக்காட்டுடன் எழுதுக. (2015) தேர்ந்தெடுப்பு வகை வினாவின் வகைகளை விளக்குக. (2023 – 10 மதிப்பெண்கள்)**

**1. பலவிடை வினா (Multiple choice)**

- ❖ ஒரு வினாவிற்கு சரியான விடை ஒன்றும், தவறான பலவிடைகளும் கலந்து கொடுக்கப்பட அவற்றிலிருந்து சரியான விடையைத் தெரிந்தெடுப்பதாக அமையும் வினா, பலவிடை வினாவாகும்.
- ❖ இவ்வாறு கொடுக்கப்படும் பல விடைகளில் ஒன்று மட்டுமே சரியானதாக இருக்கும். மற்றவைகள் சரியான விடைகள் போலக் காணப்பட்டாலும் அவைகள் தவறான விடைகளே. இவைகள் எண்ண மாற்றிகளாக (distractors) செயல்படுகின்றன.
- ❖ பலவிடை வினாக்கள் அமைப்பது கடினமானது. எண்ண மாற்றிகளை சரியாகத் தருவது தேர்வின் புறவயத்தன்மையை அதிகமாக்கும்.
- ❖ மாணவர்களின் உணர்தல் திறன்களை இதன்மூலம் சோதிக்க முடியாது. மாணவர் கற்றலில், சிக்கலானவற்றையும், புளுமின் வகைதொகை நெறிகளின் (உயர்நிலைத் திறன்களையும் இத்தகைய வினாக்கள் மூலம் முழுமையாகச் சோதிப்பது கடினம்.

***எ.கா***

*இந்தியாவின் தலைநகர் ……………………………*

*அ. புதுடில்லி ஆ. சென்னை இ. மும்பை ஈ. கொல்கத்தா*

**2. சரியா - தவறா (True - False)**

- ❖ மாணவர்கள் குறிப்பிட்ட வாக்கியத்தில் காணப்படும் கருத்து சரியா (அ) தவறா என்று குறிப்பிட வேண்டும். அவற்றுள் ஒன்றே பொருத்தமான விடையாகும். அதைச் சரியாக தெரிந்தெடுக்க வேண்டும்.
- ❖ இத்தகைய வினாக்களை ஆசிரியர் தயாரிக்கவும் மதிப்பீடு செய்யவும் எளிதாக இருக்கும்.
- ❖ சரியான விடை அளிப்பதற்கான வாய்ப்பு 50 சதவிகிதமாக அமைகிறது. எனவே விடை தெரியாத மாணவனும் ஏதாவது ஒரு விடையைத் தேர்ந்தெடுப்பினும், அவன் 50 சதவிகிதம் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பளிக்கும். இது ஒரு குறையேயாகும்.
- ❖ உயர்நிலைத் திறன்களை இதன் மூலம் சோதிக்க முடியாது. இருந்த போதிலும் ஆரம்பக் கல்வி நிலையில் இவ்வகை வினாக்கள் ஏற்கப் படலாம்.

***எ.கா** : வைகை அணை தேனி மாவட்டத்தில் உள்ளது – சரியா/தவறா*

**3. பொருத்துதல் (Matching)**

- ❖ பொருத்துதல் வினா மூலம் மாணவர்களின் தகவலறிவின் திட்ட வட்டத்தன்மையைச் சோதிக்கலாம். ஒன்றுக்கொன்று தொடர்புள்ள செய்திகளை இரண்டு வரிசைகளில் அமைத்து, அவற்றுள் பொருத்தமானவற்றைச் சேர்க்குமாறு செய்தல் இவ்வகைச் சோதனையாகும்.
- ❖ இதில் மாணவர்களின் மீட்டுணர்திறன் வெளிப்படுகிறது.
- ❖ இத்தகைய வினா உண்மைச் செய்திகளையும் (Factual information) தொடர்புகளையும் (relationships) சோதிப்பதற்கு உதவுகிறது. எளிதாக இவ்வினாக்களைத் தயாரிக்கலாம்.
- ❖ ஆனால் பொருத்துதல் வினா வடிவமைக்கும் போது தொகுப்பு முறையை பயன்படுத்துவதால், வினாவின் சுயசார்புத் தன்மை இழந்து விடுகிறது. இவ்வகை வினாக்களைத் தயாரிக்கும்போது தேர்ந்தெடுக்க வேண்டிய விடைகளின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ள வினாக்களைக் காட்டிலும் ஒன்று (அ) இரண்டு அதிகமாக இருக்க வேண்டும்.
- ❖ *எ.கா*

| அ | ஆ |
|---|---|
| **திருக்குறள்** | **கம்பர்** |
| **சிலப்பதிகாரம்** | **திருமூலர்** |
| **கம்பராமாயணம்** | **திருவள்ளுவர்** |
| | **இளங்கோவடிகள்** |

**4. வகைப்படுத்துதல்**

- ❖ இத்தகைய வினாவில் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட உருப்படிகளோ, கருத்துருக்களோ சொற்றொடர்களோ (அ) வாக்கியங்களோ கொடுக்கப்பட்டிருக்கும்.
- ❖ அவைகளின் பண்புகளைக் கண்டறிந்து வகைப்படுத்துதல் வேண்டும். இத்தகைய வினாவினை வடிவமைப்பதும், மதிப்பிடுவதும் எளிதானது.
- ❖ உண்மைச் செய்திகளையும் தொடர்புகளையும் இவ்வினா மூலம் சோதிக்கலாம். பொருத்துதல்வகை போலவே வகைப்படுத்துதல் உண்மைச் செய்திகளை பிரித்தறிய அதிகம் பயன்படும்.
- ❖ உயர்நிலைத் திறன்களை சோதிக்க முடியாது.
- ❖ தேர்ந்தெடுப்பு வினாக்கள் பல்வேறான கற்றல் விளைவுகளை அளக்கப் பயன்படுவது, தேர்வர்களின் துலங்கலைக் கட்டுப்படுத்துவதிலும் அதன் மூலம் புறவயத்தன்மையை அதிகப்படுத்த முடியுமாதலால் தேர்ந்தெடுப்பு வினாச் சிறப்பினைப் பெறுகிறது.

  ***எ.கா** : யானை, சிங்கம், நாய், புலி*

41. **கற்றலுக்கான மதிப்பீட்டின் பயன்கள் யாவை? (2014)**

- ❖ திட்டமிடலுக்குப் பயன்படுகிறது.
- ❖ மாணவர்களின் கற்றல் பாங்கை மையப்படுத்துகிறது.
- ❖ வகுப்பறைச் செயல்பாடுகளைத் தீர்மானிக்கிறது,

- ❖ தொழில் சார்ந்த திறனை வெளிப்படுத்துகிறது.
- ❖ மாணவர்களை ஊக்குவிக்கிறது.
- ❖ இலக்குகளை அடைய வழிவகுக்கிறது.
- ❖ சுயமதிப்பீட்டிற்கு வழிவகுக்கிறது.
- ❖ மாணவர்கள் முன்னேற்றத்திற்கு அளவுகோலாக அமைகிறது.

**42. புறவயத் தேர்வு, அகவயத் தேர்வு – விளக்குக.** (2013)

***<u>புறவயத் தேர்வு (Objective type)</u>***

- ❖ புறவயத்தேர்வு வினாக்களுக்கு ஒரே ஒரு விடை மட்டுமே உள்ளதால் தேர்வாளரின் (Examiner) சொந்த விருப்பு வெறுப்புகளோ, மனநிலையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலோ, மதிப்பீடு மாறுபடுவதில்லை.
- ❖ இத்தகையத் தேர்வு நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது.
- ❖ எளிதாக மதிப்பீடு செய்ய முடியும்.
- ❖ பாடப்பகுதி முழுவதிலும் அதிகமான அளவில் நிறைய வினாக்கள் தயாரிக்கவும் இயலுவதால் இத்தேர்வு முறை சிறப்புறுகிறது.

***<u>அகவயத் தேர்வு (Subjective type)</u>***

- ❖ மாணவர்களின் சிந்திக்கும் அல்லது காரணம் கூறும் திறனைச் சோதிக்கப் பயன்படுகிறது.
- ❖ மாணவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுய கருத்துக்களையும் விரிவான அறிவாற்றலையும் சுதந்திரமாக வெளியிட வாய்ப்புகள் உள்ளன.
- ❖ மாணவர்களின் விடையைத் துல்லியமாக மதிப்பீடு செய்வது கடினம். எனவே நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைத் தன்மையை உறுதி செய்வது கடினமாகிறது.
- ❖ மாணவர் விடைதரும் முறையை அடிப்படையாகக் கொண்டு, தேர்வு வினாக்களைத் தேர்ந்தெடுப்பு மற்றும் அளிப்பு வினா என இருவகையாகப் பிரிக்கலாம்.

**43. கற்றலுக்கான மதிப்பிடல் என்றால் என்ன?** (2013)

- ❖ கற்றல் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் மாணவர்கள் அடைந்துள்ளனரா எனச் சோதித்துத் தரம் பிரிக்கவும் சான்றளிக்கவும் பயன்படும் முறையே மதிப்பீடு என கருதப்படுகிறது. இதுவே கற்றலின் மதிப்பீடு எனவும் அழைக்கப்படும்.
- ❖ ஆசிரியர் நிலையில் கற்பித்தல் நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டனவா, மாணவர்கள் நிலையில் கற்றல் அடைவுகள் முழுமை பெற்றனவா, கற்பித்தல் செயலும், கற்றல் பாங்கும் எவ்வாறு நடைபெற்றன என்பதற்கான வழிமுறைகளைத் தேடிச் சான்றுகளைக் கண்டறிந்து, விளக்கம் தரும் செயல்பாடுகளே மதிப்பீடு ஆகும்.
- ❖ கற்பித்தல் முறை, ஆசிரிய - மாணவர் கலந்தாய்வு மீள் சிந்தனை, ஊக்கமடைதல், பற்பல மதிப்பீட்டு வகைகள் ஆகிய செயல்பாடுகளை உள்ளடக்கியதே "கற்றலுக்கான மதிப்பீடு" என்பதாகும்.

**44. தொடர்ச்சியான முழுமையான அக மதிப்பீட்டை செயல்வழிக் கற்றலில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விவரி.** (2012)

- தொடர்ச்சியான முழுமையான மதிப்பீடு என்பது கற்றல் / கற்பித்தலின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது அகன்றது மற்றும் ஆழமானது. நிறை குறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது.
- "தொடர்ச்சியான மதிப்பீடு" என்பது பாரம்பரியமான பருவ முடிவு (மாதாந்திர / காலாண்டு / அரையாண்டு) தேர்வுகளுக்குப் பதிலாக கற்பித்தல் / கற்றல் நிகழ்வுறும் காலத்தே எவ்வகையிலான கற்பித்தல் நிகழ்ந்தது; எவ்வகையான கற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது, என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பிடுதலைக் குறிக்கும்.
- முழுமையான மதிப்பீடு என்பது வழக்கமான அறிவுசார் புலம் சார்ந்த பாடப்பகுதியின் திறன் அடைவுகள் மட்டுமில்லாமல் உணர்தல் மற்றும் செயல் சார்ந்த அடைவுகளையும் மதிப்பீடு செய்தலைக் குறிக்கும்.
- ஒரு குழந்தையின் கற்றல் அறிவு, பயம் மிகுந்த படபடப்பான, பரபரப்பான தேர்வுச் சூழலில் மட்டும் அளவிடப்படுவதன்று.
- பாடங்கள் பற்றிய அக்குழந்தையின் ஆர்வம், நாட்டம், அறிவியல், சமூக சிந்தனைகள், கலை, இலக்கியம், உடற்கல்வி போன்ற பல்வேறு அம்சங்களிலும் அக்குழந்தையின் அறிவுத்திறன்கள் வெளிப்படும். எனவே எல்லாப் பண்பு நலன்களையும் மதிப்பிடுதலே முழுமையான மதிப்பீடு ஆகும்.
- தொடர்ச்சியான முழுமையான மதிப்பீட்டு முறையில் ஆசிரியர் மாணவர் நேரடித் தொடர்பு, உற்று நோக்கல், தொடர்ச்சியாக கண்காணித்தல் போன்றவைகளால் மாணவர் பற்றிய முழுமையான திறனை மதிப்பிட இயலும்.
- திரள் பதிவேடு, உற்றுநோக்கல் பதிவேடு, மாணவர்களின் வருகைப் பதிவேடு, மதிப்பெண் பதிவேடு, அகமதிப்பீட்டுப் பதிவேடு போன்ற பதிவேடுகள் மூலம் தொடர்ச்சியான விரிவான மதிப்பீட்டைப் பதிவு செய்யலாம்.

***<u>10 மதிப்பெண்கள்</u>***

**45. அளிப்பு வகை வினாக்களை எடுத்துக்காட்டுடன் விவரி.** (2020)

தேர்ந்தெடுப்புவகைவினாத் தேர்விலுள்ள குறைகளைக் களைவதற்கு அளிப்புவகை வினாத் தேர்வு உதவுகின்றது. அளிப்புவகை வினாக்களுக்கு பல விடை அளிக்கும் வாய்ப்புகள் உண்டு. மாணவர்களின் உயர்நிலைத் திறன்களை இத்தகைய வினாக்கள் மூலம் சோதிக்க முடியும். இவ்வகை வினாக்களின் அகவயத்தன்மையால் தேர்வரின் விருப்பு வெறுப்பிற்கு அதிக வாய்ப்புண்டு. இதில் பல வகைகள் உண்டு. அவையாவன (1) கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல் (2) குறுவிடை வினா, (3) முழுமைப் படுத்தும் சோதனை (Cloze test), (4) கட்டுரை வினா ஆகும்.

1. ***<u>கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல்</u>***

- கோடிட்ட வினா, ஒரு சொல், சொற்றொடர் (அ) குறியீடு மூலம் விடையளிப்பதாகும்.
- ஒரு வாக்கியத்தில் கோடிட்ட இடத்தைக் கொடுத்து, அதனைப் பூர்த்தி செய்தால் தான் வாக்கியம் நிறைவு பெறும்.

❖ உண்மையறிவை (factual information) சோதிக்கப் பயன்படுகிறது.

❖ யூகித்தலுக்கு குறைந்த வாய்ப்பே உள்ளது.

❖ எளிதில் தயாரிக்க முடியும்.

❖ உயர்நிலைத் திறன்களை இத்தகைய வினா மூலம் அளப்பது கடினம்.

❖ இவ்வினாவிற்கு பொருத்தமற்ற வகையில் (inappropriate) மாணவர்கள் பதிலளிக்க வாய்ப்புண்டு.

**எ.கா.1**

கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

1. நுண்ணறிவு ஈவு _______ ஆகும்.

2. தன்னைப் பற்றி அறிந்து கொள்ளும் முறை ________ ஆகும்.

***<u>2 குறுவிடை வினா</u>***

❖ ஓரிரு தொடர்களில் விடையை உள்ளடக்கியது குறுவிடை வினா எனப்படும்.

❖ உண்மையறிவைச் (Factual information) சோதிப்பதற்கு உதவுகிறது.

❖ எளிதாக வடிவமைக்க முடியும்.

❖ சிக்கலான உயர்நிலைத் திறன்களை இதன் மூலம் அளக்க முடியாது.

❖ விடைக்குப் பொருத்தமற்ற (inapporiate) வகையில் மாணவர் பதிலளிக்க வாய்ப்புண்டு.

**எடுத்துக்காட்டு**

1. உனது கிராம ஊராட்சியின் இரண்டு முக்கியப் பணிகளைக் குறிப்பிடுக.

2. சாலை விதிகளில் இரண்டினை எழுதுக.

***<u>3 முழுமைப்படுத்தும் சோதனை (cloze Test)</u>***

❖ ஒரு கருத்தினை எடுத்துரைக்கக்கூடிய பத்தியினை எடுத்துக் கொண்டு அதிலுள்ள முதல் ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களுக்குப் பிறகு வரும் வாக்கியங்களுள் ஒரு சில சொற்களை நீக்க வேண்டும்.

❖ இவ்வாறு நீக்கப்படும் சொற்கள் ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் அமைதல் வேண்டும்.

❖ உதாரணமாக ஒரு வாக்கியத்தில் ஆரம்பித்து ஐந்தாவது வார்த்தையை நீக்குகிறோமென்றால் அடுத்த 10, 15, 20, 25 என்ற இடங்களில் அமையும் வார்த்தைகளையும் நீக்குதல் வேண்டும்.

❖ இதில் வார்த்தைகள் அமையும் இடத்தைத்தான் கருத்தில் கொள்ளவேண்டும். வாக்கியத்தின் நீளத்தை கணக்கில் கொள்ளக் கூடாது.

❖ இவ்வாறான வினாக்களில் கொடுக்கப்பட்ட பத்தியில் விடுபட்ட வார்த்தைகளைப் பூர்த்தி செய்து பதிலளிக்குமாறு மாணவரிடம் கேட்க வேண்டும்.



DIET PYT

❖ மாணவர் அதே வார்த்தையையோ அல்லது அதற்கு ஒத்த அர்த்தமுள்ள வார்த்தைகளில் ஒன்றையோ பதிலாக அளிக்கலாம்.

❖ தேர்வு வினா வடிவமைப்பதற்கு எளிதானது.

❖ மாணவர்களின் சொல்லறிவையும், புரிதல் திறனையும் சோதிக்க வல்லது.

**எடுத்துக்காட்டு**

A farmer had three sons. The farmer was rich and had many fields, but his sons were lazy. When the farmer was death-bed, he called his three sons. “I have left you ____________ which will make you _____________” he told them. “But ____________ must dig in all _________ fields to find the ___________ where the treasure is ___________.”After the old man _________ died, the three sons ______out into the fields ________ began to dig. “I’II ____________ the first to find ________place where the treasure _______ burried” cried the eldest ________ “That’s the field where _________ father put the treasure”, _______ another son. The three ________ dug all the fields ______ several years, but they _________ no treasure. However, many _________ grew in the fields ___________ the sons had dug. ____________ Vegetables made them very ___________.

**விடை:**

A farmer had three sons. The farmer was rich and has many fields, but his sons were lazy. When the farmer was in death bed, he called three sons. “I have left you treasure which will make you rich” he told them. ‘But you must dig in all the fields to find the place where the treasure is buried’. After the old man had died, the three sons went out into the fields and began to dig. I’ll be the first to find the place where the treasure is buried’ cried the eldest son. “That’s the field where our father put the treasure”, said another son. The three sons dug all the fields for several years, but they found no treasure. However, many vegetables grew in the fields where the sons had dug. The vegetables made them very rich.

***<u>4. கட்டுரை வினா</u>***

❖ மாணவர் எந்த அளவிலும் விடையளிக்கக் கூடியவாறு அமையும் வினா கட்டுரை வினாவாகும்.

❖ மாணவர் விரும்பியவாறு விடை அளவையும் அமைப்பையும் கொடுப்பதற்கு ஏதுவாகிறது.

❖ உயர்நிலைத் திறன்களை சோதிப்பதற்கு ஏற்றவாறு அமையும்.

❖ தயாரிப்பதற்கு எளிதானது.

❖ படைப்பாற்றல் (Creative) திறனையும் விமர்சிக்கும் (Critical) திறனையும் மாணவரின் விடைமூலம் மதிப்பிடலாம்.

❖ உணர்தல் சார்ந்த திறன்களையும் சோதிக்க முடியும்.

❖ மாணவர்கள் செய்திகளைத் தெளிவாகவும், விரிவாகவும் தர்க்க ரீதியிலும் விளக்கி எழுதும் திறமையுடையவராக இருக்கின்றனரா என்பதை இவ்வினா மூலம் மதிப்பிடலாம்.

❖ பொருத்தமான கருத்துக்கள் அனைத்தையும் ஒன்று திரட்டவும், குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குச் சரியான விடைகள் அளிக்கவும், தொடர்புடைய கருத்துக்களை கோர்வைப்படுத்தி விளக்கவும் முடிகிறது.

❖ ஆனால் இம்முறையில் மாணவரின் விடையை மதிப்பிடல் கடினம்.

❖ மதிப்பிடல் புறவயத்தன்மை வாய்ந்ததாக இருப்பதில்லை.

❖ விடையளிப்பதிலும் விடை திருத்துவதிலும் அகவயத்தன்மைக்கு வாய்ப்பு உண்டு.

எ.கா.

1. பாண்டியர்கால கலைத்திறனை விளக்கு.

2. வேதி மாற்றத்தின் பண்புகளை விவரிக்க.

- ❖ அளிப்பு வினாக்கள் பொதுவான விடையை வடிவமைத்துத் தருதலை அடிப்படையாகக் கொண்டவை.
- ❖ வினாக்களில் புறவயத்தன்மை மற்றும் அகவயத்தன்மை உள்ளடங்கியிருக்கும். மாணவர்களின் உயர்நிலைத் திறன்களான பகுப்பாய்வு செய்வது (analysis), தொகுப்பாய்வு செய்வது (Synthesis) மற்றும் மதிப்பிடும் திறன்கள் போன்றவை கட்டுரை வினா மூலம் மட்டுமே சோதிக்க முடியுமாதலால் இத்தகைய வினாக்கள் முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன.

**46. மாணவர்களின் கற்றல் கற்பித்தலை மதிப்பிட உதவும் பல்வேறு வகையான வினா வகைகள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2019) வினா வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. (2011)**

தேர்வர் (Examinee) தரும் விடையின் தன்மையின் அடிப்படையில் தேர்வு வினாக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை புறவயத் தேர்வு (Objective type) மற்றும் அகவயத் தேர்வு (Subjective) வினாக்களாகும்.

***<u>புறவயத் தேர்வு (Objective type)</u>***

புறவயத்தேர்வு வினாக்களுக்கு ஒரே ஒரு விடை மட்டுமே உள்ளதால் தேர்வாளரின் (Examiner) சொந்த விருப்பு வெறுப்புகளோ, மனநிலையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்கள் மதிப்பீடு செய்தாலோ, மதிப்பீடு மாறுபடுவதில்லை. ஆகையால் இத்தகையத் தேர்வு நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் கூடுதலாகக் கொண்டிருக்கிறது. எளிதாக மதிப்பீடு செய்யவும் பாடப்பகுதி முழுவதிலும் அதிகமான அளவில் நிறைய வினாக்கள் தயாரிக்கவும் இயலுவதால் இத்தேர்வு முறை சிறப்புறுகிறது.

***<u>அகவயத் தேர்வு (Subjective type)</u>***

மாணவர்களின் சிந்திக்கும் அல்லது காரணம் கூறும் திறனைச் சோதிக்கப் பயன்படுகிறது. இம்முறையில் மாணவர்களின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் சுய கருத்துக்களையும் விரிவான அறிவாற்றலையும் சுதந்திரமாக வெளியிட வாய்ப்புகள் உள்ளன. ஆனால் இம்முறைப்படி மாணவர்களின் விடையைத் துல்லியமாக மதிப்பீடு செய்வது கடினம். எனவே நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைத் தன்மையை உறுதி செய்வது கடினமாகிறது.

மாணவர் விடைதரும் முறையை அடிப்படையாகக் கொண்டு, தேர்வு வினாக்களைத் தேர்ந்தெடுப்பு மற்றும் அளிப்பு வினா என இருவகையாகப் பிரிக்கலாம்.

**தேர்ந்தெடுப்பு வகை வினா**

அவை (1) பலவிடை வினா (Multiple Choice) (2) சரியா – தவறா (True or false), (3) பொருத்துக (Match) (4) வகைப்படுத்துதல் (Classification) ஆகும்.

***<u>விடை : வினா எண் 40</u>***

***<u>அளிப்பு வகை வினா:</u>***

<u>விடை: *வினா எண் 45*</u>

**47. கற்றலை மதிப்பிடலின் வகைகளைக் கூறி எடுத்துக்காட்டுடன் விரிவாக விளக்குக. (2018) கற்றல் மதிப்பீட்டு வகைகளை விரிவாக விளக்குக. (2022) கற்றலை மதிப்பிடுதல் குறித்து விளக்குக. (2026)**

<u>விடை: *வினா எண் 37*</u>

**48. தொடர்ச்சியான முழுமையான அகமதிப்பீட்டு முறையின் சிறப்பியல்புக்களை விவரிக்கவும். (2024, 2017) தொடர்ச்சியான முழுமையான அகமதிப்பீட்டின் தனித்தன்மையை எடுத்துரைக்க (2013) தொடர்ச்சியான முழுமையான கற்றலுக்குப் பயன்படுத்தப்படும் முறைகளையும், பதிவேடுகளையும் விளக்குக. (2012)**

- ❖ தேசியக் கல்வி கொள்கை (1986) கற்பித்தல் கற்றல் கொள்கைகளை வரையறுத்தது மட்டுமின்றி, தொடர்ச்சியான, முழுமையான மதிப்பீட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.
- ❖ தேசிய கலைத்திட்ட வடிவமைப்பும் (2005) விரிவான முழுமையான மதிப்பீட்டை வரவேற்கிறது.
- ❖ குழந்தையின் வகுப்பறைச் செயல்களை மட்டுமின்றி, வகுப்பறைச் செயல்கள் அல்லாத குழந்தையின் ஆளுமைத் திறனுக்குத் தேவையான பிற திறன் அடைவுகளையும் மதிப்பிட வழிவகுக்கிறது.
- ❖ தொடர்ச்சியான முழுமையான மதிப்பீடு என்பது கற்றல் / கற்பித்தலின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது அகன்றது மற்றும் ஆழமானது. நிறைகுறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது.
- ❖ தொடர்ச்சியான மதிப்பீடு என்பது பாரம்பரியமான பருவ முடிவு (மாதாந்திர / காலாண்டு / அரையாண்டு) தேர்வுகளுக்குப் பதிலாக கற்பித்தல் / கற்றல் நிகழ்வுறும் காலத்தே எவ்வகையிலான கற்பித்தல் நிகழ்ந்தது; எவ்வகையான கற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது, என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பிடுதலைக் குறிக்கும்.
- ❖ முழுமையான மதிப்பீடு என்பது வழக்கமான அறிவுசார் புலம் சார்ந்த பாடப்பகுதியின் திறன் அடைவுகள் மட்டுமில்லாமல் உணர்தல் மற்றும் செயல் சார்ந்த அடைவுகளையும் மதிப்பீடு செய்தலைக் குறிக்கும்.

❖ ஒரு குழந்தையின் கற்றல் அறிவு, பயம் மிகுந்த படபடப்பான, பரபரப்பான தேர்வுச் சூழலில் மட்டும் அளவிடப்படுவதன்று. பாடங்கள் பற்றிய அக்குழந்தையின் ஆர்வம், நாட்டம், அறிவியல், சமூக சிந்தனைகள், கலை, இலக்கியம், உடற்கல்வி போன்ற பல்வேறு அம்சங்களிலும் அக்குழந்தையின் அறிவுத்திறன்கள் வெளிப்படும். எனவே எல்லாப் பண்பு நலன்களையும் மதிப்பிடுதலே முழுமையான மதிப்பீடு ஆகும்.

***<u>தொடர்ச்சியான முழுமையான கற்றலுக்கு பயன்படுத்தப்படும் முறைகளும் பதிவேடுகளும்</u>***

- ❖ மாணவர்களுக்கு நடத்தப்பெறும் தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஒவ்வொருவரும் தங்கள் கற்றல் அடைவுகளை வெளிப்படுத்தும் வகையில் விடைத்தாளில் பதில் அளிக்கின்றனர்.
- ❖ ஆசிரியர், மதிப்பீடு செய்து ஓர் மதிப்பெண் அளித்து திறனடைவை நிர்ணயிக்கிறார்.



DIET PVT

❖ தொடர்ச்சியான முழுமையான மதிப்பீட்டு முறையில் ஆசிரியர் மாணவர் நேரடித் தொடர்பு, உற்று நோக்கல், தொடர்ச்சியாக கண்காணித்தல் போன்றவைகளால் மாணவர் பற்றிய முழுமையான திறனை மதிப்பிட இயலும்.

❖ திரள் பதிவேடு, உற்றுநோக்கல் பதிவேடு, மாணவர்களின் வருகைப் பதிவேடு, மதிப்பெண் பதிவேடு, அகமதிப்பீட்டுப் பதிவேடு போன்ற பதிவேடுகள் மூலம் தொடர்ச்சியான விரிவான மதிப்பீட்டைப் பதிவு செய்யலாம். மேலும் கீழ்க்கண்ட கற்றல் திறன்களை / திறமைகளைக் கண்காணித்து உற்றுநோக்கி ஆசிரியர் மேற்கண்ட பதிவேடுகளில் பதிவு செய்யலாம்.

| **அறிவுசார் புலம்** | **மதிப்பீட்டு முறை** |
|---|---|
| திறன்கள், அறிவு, புரிந்து கொள்ளல் பயன்படுத்துதல். | எழுத்துத்தேர்வு, வாய்மொழித்தேர்வு, செயல்முறைத்தேர்வு |
| **உணர்வு சார்புலம்** | **மதிப்பீட்டு முறை** |
| ஒழுங்கு , காலம் தவறாமை, (தூய்மை / துப்புரவு) , உணர்வுகளின் கட்டுப்பாடு, தலைமைப் பண்பு, பொறுப்பு, கடின உழைப்பு, சேவை மனப்பான்மை, பொதுநல உணர்வு. | உற்றுநோக்கல் மற்றும் நடத்தை வெளிப்பாடுகளைக் கண்காணித்தல் |
| **செயல் சார்ந்த புலம்** | **மதிப்பீட்டு முறை** |
| நூலகம் மற்றும் ஆய்வுக் கூட செயல்களில் பங்கேற்பு, இலக்கிய மன்றம், கலை மற்றும் கைத்தொழில், உடற்கல்வி, முதலுதவி, சமூகத்தொண்டு, தோட்டம் அமைத்தல் | உற்றுநோக்கல் மற்றும் கண்காணித்தல் |

❖ எனவே தேர்வுகள்/சோதனைகள் மூலம் மட்டுமல்லாது, தொடர்ச்சியாக குழந்தைகளைக் கண்காணித்தல், உற்றுநோக்கல், அவர்களின் நடத்தை, செயல்பாடுகளின் முடிவுகளை ஆராய்தல் மூலம் மாணவர்களின் முழு ஆளுமைத் திறனை ஆசிரியரால் மதிப்பீடு செய்ய முடியும்.

**49. குறையறி சோதனையும் குறைதீர் கற்பித்தலும் முறையில் நீ எவ்வாறு ஆய்வு செய்தாய் என்பதைச் சான்றுடன் விவரி.** (2015)

கற்றலில் குறைபாடு எங்கே உள்ளது? எம்மாதிரியான குறைபாடுகள் உள்ளன? எனக் கண்டறிய குறையறி சோதனைகள் பயன்படுகின்றன.

**குறைதீர் கற்பித்தலின் நோக்கம்:**

ஆசிரியர் தன்னுடைய அனுபவத்தில் கண்ட மாணவர்கள் பெரிய அளவில் செய்யும் பாடம் சார்ந்த தவறுகளை மனதில் இருத்தி, குறைகளின் தன்மைகளையும் பரிமாணத்தையும் நோக்கங்களாகக்

கொண்ட தேர்வு ஒன்றினைத் தயாரித்தல் வேண்டும். அதன் மூலம் மாணவரிடையே காணப்படும் குறைகளின் தன்மைகளையும், பரிமாணங்களையும் அளந்தறிந்து அவற்றிற்கேற்ப குறைதீர்க் கற்பித்தல் முறைகளை உருவாக்குவதே குறைதீர் கற்பித்தலின் நோக்கங்களாகும்.

**குறையறி சோதனை**

- ❖ குறையறி சோதனை என்பது குறிப்பிட்ட வகுப்பு மாணவர்களிடையே குறிப்பிட்ட கற்றல் திறன்களில் காணப்படும் குறைகளைக் கண்டறிய, பாட ஆசிரியரால் நடத்தப்படும் சோதனை ஆகும்.
- ❖ ஒரு குறிப்பிட்ட பாடம்/அலகின் முடிவில் வகுப்பு மாணவர்களின் நிலை என்ன என்பதைக் கண்டறிய குறையறி சோதனை உதவுகிறது. வகுப்பிலுள்ள மாணவர்கள் தனித்தனியே செய்யும் பிழைகளைக் கண்டறிய வேண்டும்.
- ❖ பெரும்பாலான மாணவர்கள், தேர்வில் குறிப்பிட்ட தவறைச் செய்திருப்பார்களேயானால், ஆசிரியர் தன்னுடைய கற்பித்தலில் உள்ள தவறு என்ன என்பதைக் கண்டறிந்து, தகுந்த மாற்றுக் கற்பித்தல் முறைகள் மூலம் அக்குறையினை நிவர்த்திக்க வேண்டும்.
- ❖ குறையறி சோதனை என்பது ஆசிரியரின் கற்பித்தல் முறையில் / மாணவரின் கற்றலில் உள்ள குறைகள் நிவர்த்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் சோதனையாகும்.

**குறையறி சோதனை-எடுத்துக்காட்டு**

- ❖ மாணவர்களில் பலர் மொழியைக் கையாளுவதில் பேச்சு, எழுத்து இரண்டிலும் பல்வேறு நிலைகளில் இடர்படுகின்றனர். இடர்படும் மாணவர்களைக் கண்டறிந்து இடர்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அவைகளை நீக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.
- ❖ குறையறி சோதனைகள் எனப்படுவன, மாணவன் கற்றலில் எவ்வெவற்றைச் சரியாக அறியவும் புரியவும் முடியவில்லை? ஏன் ஆளவும் முடியவில்லை? என்பதற்கான காரணங்களையும் சூழல்களையும் அறிவதற்குப் பயன்படுகின்றன.
- ❖ குறைகண்டு தீர்க்க வேண்டிய சூழலில் இக்குறையறி சோதனைகள் பயன்படும்.
- ❖ மொழிப்பாடம் (தமிழ், ஆங்கிலம்) கணிதப்பாடம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பல்வேறு பாடங்களில் பல்வேறு கடினப் பகுதிகள் அல்லது புரியாத பகுதிகள் அல்லது விளக்கம் இல்லாத பகுதிகள் போன்றவைகளை அறிய இச்சோதனை நன்கு பயன்படுகிறது.

**(எ.கா) தமிழ்:**

ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடப்பகுதியில் உள்ள சொற்களைக் கூறி எழுத்துப் பயிற்சி தரப்பட்டது மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சொற்களும் அவர்கள் எழுதியனவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **கொடுக்கப்பட்ட சொற்கள்** | **மாணவர் எழுதியவை** |
|---|---|
| மகாகவி | மாகாகவி. மாகாவி |
| தமயந்தி | தமைஅந்தி. தமயாந்தி |
| நளன் | நாளன், நளண் |
| அருள்செல்வம் | ஆருள் செல்வம் |
| நாகரிகம் | நகாரிகம், நகரிகம் |
| தேசியக் கல்வி | தெசியக்கல்வி |
| பத்தாண்டு | பத்தண்டு |
| மணிமேகலை | மணிமோகலை / மனிமேகலை |
| பொற்காலம் | பொர்க்காலம் |

படித்தலின் போது மாணவர்கள் செய்த தவறுகள் ஆறு, ஏழு, எட்டு ஆகிய வகுப்பு மாணவர்களிடம் அவர்களுடைய தமிழ்ப் பாடநூலைப் படிக்கும் பயிற்சி தரப்பட்டது.

அவர்கள் படித்த போது செய்த தவறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **சரியான சொல்** | **படித்த விதம்** |
|---|---|
| தமக்குரியர் | தமக்குரியார் |
| வாய்ந்தவர் | வாய்ந்தவார் |
| கலை | காலை |
| உடனே பதில் | உடன் பதில் |
| ஆதிக்கத்தின் | அதிகத்தின் |
| திரௌபதியம்மன் | திரபதியம்மன் |
| கூத்து | குத்து |
| தமயந்தி | தயமந்தி |
| நிடதநாட்டு | நிடநாட்டு |

**குறைதீர் கற்பித்தல்**

மாணவர்களிடம் குறில், நெடில் வேறுபாடு உள்ள சொற்களை படிக்க எழுதப் பயிற்சி அளிக்கலாம். எகர, ஏகார, ஒகர, ஓகாரச் சொற்கள் எழுதப்பட்ட அட்டையைக் கொடுத்து மாணவர்களைப் படிக்கச் செய்தும், எழுதச் செய்தும் குறைதீர் கற்பித்தல் செயலைத் திறம்படச் செய்யலாம்.

**(எ.கா) கணிதம் தலைப்பு : வடிவியல்**

**மாணவர்களிடம் கண்ட இடர்பாடுகள்**

முக்கோணத்தின் பண்புகளை நினைவில் வைத்துக் கொள்வதில் உள்ள கடினம். சரியாக நினைவில் வைத்துக் கொள்ளாமல் முக்கோணத்தின் பண்பை மற்றொரு வடிவத்திற்கு தவறாகப் பயன்படுத்துதல்.

**குறைதீர் கற்பித்தல்**

நேரடியாக முக்கோணத்தின் பண்புகளை நாமே அட்டவணைப்படுத்தாமல் காகித மடிப்பு மூலம் மாணவர்களை தானாகச் செய்யச் செய்து பட்டியலிடுவதன் மூலம் சரியாகப் புரிந்து கொண்டு அந்தப் பண்புகளை தகுந்த இடத்தில் பயன்படுத்த ஏதுவாக இருக்கும்.

உதாரணமாக முக்கோணத்தின் மூன்று கோணத்தின் கூட்டுத் தொகை 180° என்பதை நேரடியாக ஒரு விதியாகக் கூறாமல் மாணவர்களை பல வகையான முக்கோணத்தை வரையச் செய்து பின்பு பாகைமானி கொண்டு A, B, C யின் கோண அளவை அளந்து அட்டவணைபடுத்தச் செய்தல். அட்டவணையில் இருந்து முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் 180° என்றும் இது எல்லா முக்கோணத்திற்கும் பொருந்தும் என்பதையும் வருவித்தல்.

இதுபோன்று எல்லா பண்புகளுக்கும் செய்து கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் கற்றல் தெளிவடையும்.

**எ.கா: அறிவியல்**

பாடம்: அறிவியல் - தாவரவியல் தலைப்பு: உயிரினங்களின் பலதன்மை

**மாணவர்களிடம் கண்ட இடர்பாடுகள்**

மாணவர்களுக்கு ரிக்ஸியா அமைப்புப் பற்றி படம் வரையத் தெரியவில்லை. பாகங்களைச் சரியாகக் குறிக்கவும் தெரியவில்லை.

**குறைதீர் கற்பித்தல் முறை**

***பட விளக்க முறை***

பட விளக்க முறை, குழு கற்றல் உத்தியைப் பயன்படுத்தும் முறையாகும். ஒரு படத்தை அனைத்து மாணவர்களுக்கோ அல்லது பல சிறிய படங்களை குழுவுக்கோ கொடுத்துச் செயல்படுத்தலாம். இதற்கு கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றலாம்:

- ❖ படத்திலுள்ள கருத்துக்களின் மேலோட்ட விவரங்களை அளித்தல்.
- ❖ படம் எதைப் பற்றியது என்பது பற்றிய வாக்கியங்கள் அளித்தல்.
- ❖ ஒரு பத்தி உருவாக்குவதற்குரிய தேவையான குறிப்பு (clue) கொடுத்தல்.
- ❖ ஒரு கதை உருவாக்குவதற்கு ஓரிரு வாக்கியங்கள் கொடுத்தல்.
- ❖ படத்திலுள்ள கதாபாத்திரங்களின் உரையாடலுக்கான கருத்துக்கள் கொடுத்தல்.

மேற்கூறிய முறையில் படத்தைக் கொடுத்து அதன் விளக்கத்தை அனைத்து மாணவர்களும் புரிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கவேண்டும்.

***எடுத்துக்காட்டாக.***

ரிக்ஸியா - அமைப்புப் படத்தை சிறிய மின் அட்டையில் ஒட்டி மாணவர்களுக்கு அளித்து படவிளக்க முறையை செயற்படுத்தலாம். ரிக்ஸியாவின் வாழ்க்கை சுழற்சியையும் இவ்வாறே மாணவர்களுக்கு விளக்கலாம்.

DIET PYT

**50. அளவிடக்கூடிய கற்றல் அடைவுகளை விவரிக்க. (2014)**

- கற்றல் என்பது ஒரு நடத்தை மாற்றம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த மாற்றம்,
    - i) அறிவு ii) திறன் iii) மனப்பான்மை iv) நடத்தை

  என்னும் நான்கு கூறுகளிலும் ஏற்படலாம்.
- கல்வியின் குறிக்கோள் முழு ஆளுமை பெற்ற நற்குடி மக்களை உருவாக்குவதுதான் ஆனால், நடைமுறை மதிப்பீட்டில் அறிவு மட்டுமே, அதிலும் பெரும்பாலும் நினைவு ஆற்றல் மட்டுமே சோதிக்கப்படுகிறது.
- பத்தாம் வகுப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பலரால் பிழையின்றி ஒரு விடுப்புக் கடிதம் கூட எழுத முடிவதில்லை.
- சிறந்த அறிவியல் பட்டதாரி ஒருவர் வேலைத் தகுதி இல்லாதவராக (unemployable) இருக்கிறார்.
- எனவேதான் ஆளுமையின் அனைத்துக் கூறுகளையும் அளந்து அவற்றின் அடிப்படையில் இறுதித் தேர்வு நடந்தால் நல்ல குடிமக்களை இந்நாட்டிற்கும் இச்சமுதாயத்திற்கும் உருவாக்கி தந்த பெருமை ஆசிரியர் சமுதாயத்திற்குக் கிடைக்கும். இனி மேற்கண்ட நான்கு கூறுகளை எவ்வாறு மதிப்பிடுவது எனக் காண்போம்.

**அறிவு**

"அறிவுடையார் ஆவது அறியார்" என்ற குறள் நெறிப்படி அறிவு சிந்திக்கத்தூண்டும்; ஆராய வைக்கும். சிக்கலுக்குத் தீர்வு தரும், எது எதுவாகும்? இனி என்னவாகும் என்று எல்லா கோணங்களிலும் பகுப்பாய்வு செய்து வாழ்வைப் பயனுள்ளதாக்கும்.

**திறன்**

பள்ளிப் பருவம் என்பது உடல் வளர்ச்சிக்கான பருவம், மற்றும் திறன் அடைவுக்கான பருவம்

இப்பருவத்தில்

- கேட்டல்
- படித்தல்
- பேசுதல்
- எழுதுதல்
- கலந்துரையாடுதல்
- வரைதல்
- சோதனைகள் செய்தல் (Experimenting)
- கணிதம் கற்றல்
- கையெழுத்து கற்றல் (Handwriting)

மேற்கூறிய திறன்களை மாணவர்கள் பின்வரும் செயல்களால் அடைவர்

அவையாவன:

- உற்று நோக்கல் (Observation)
- போலச்செய்தல் (Imitation)
- எப்படியாவது செய்துமுடித்தல் (Manipulation)

❖ மிகச்சரியாகச் செய்தல் (precision)

❖ பிறசெயல்களோடு நேர்பட இணைத்தல் (Articulation)

❖ தன்னியல்பாகச் செய்தல் (naturalisation) ஆகிய பல செயல்கள் மூலம் பெறுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக

❖ ஆங்கிலத்தில் பேசுதல் ஒரு திறன்.

❖ வகுப்பறையில் ஆசிரியரும் உடன் பயிலும் மாணவர்களும் எவ்வாறு ஆங்கிலத்தில் பேசுகிறார்கள்,

❖ அவர்தம் உச்சரிப்பு, சொற்களஞ்சியம் (vocabulary) கற்கும் பாங்கு (Learning style) ஆகியவற்றை முதலில் உற்றுநோக்கி அதேபோலத்தானும் பேசிப் பார்க்க வேண்டும் (imitation).

❖ தேவை ஏற்படும் பொழுதெல்லாம் ஆங்கிலத்தைப் பயன்படுத்திப் பேச வேண்டும்.

❖ பிறகு அதில் தேர்ச்சி பெற தன் பேச்சில் தோன்றும் வார்த்தை உச்சரிப்புப் பிழை, வாக்கியப் பிழைகளைக் களைந்து சீரமைத்துக் (perfection) கொள்ள வேண்டும்.

❖ இப்படி தொடர்ந்து பலமுறை பயிற்சி செய்து ஆங்கிலத்தைச் சரளமாக இயல்பாகப் பேசும் நிலைக்கு உயர வேண்டும்.

❖ இந்தத் திறனை எவ்வாறு சோதிக்க வேண்டும் எனப் பார்க்கலாம்.

❖ "அளவிடக்கூடிய அடைவுநிலை" என்று பார்த்தோமானால், என்ன அடைவுநிலை என்பதைத் தீர்மானித்து, அதற்கேற்பத் தேர்வு நிலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

❖ சான்றாக ஆங்கிலத்தின் உச்சரிப்பை மூன்று நிலைகளில் சோதிக்கலாம்." எப்படி"என்றால்?, குறிப்பிட்ட அடைவுகளை அடைந்துள்ளாரா எனச் சோதிக்க, ஓர் பாடப்பகுதியையோ, கலந்துரையாடல் (dialogue) பகுதியையோ கொடுத்து இரு மாணவர்களைப் பேசச் சொல்லலாம்.

❖ ஒவ்வொரு பகுதிக்கும் என்னென்ன மதிப்பெண் தருவது என ஆசிரியர் முன்பே தீர்மானித்தல் வேண்டும்.

❖ திறன் அடைவின் 6 நிலைகளில் எந்த நிலையில் மாணவன் உள்ளான் என்பதை அறிந்து அவனை ஊக்கப்படுத்த வேண்டும்.

❖ அனைத்துத் திறன்களையும் நன்கு பெறப் பல்வேறு நிலைகளில் உள்ள மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து பயிற்சியளித்தல் வேண்டும்.

❖ திறன் தேர்ச்சி பெற்ற மாணவரைப் பிறருக்கு வழிகாட்டியாக இருக்கச் செய்யலாம்.

❖ ஆசிரியர் மேற்பார்வையாளராக இருந்து மாணவர்களுக்கு வழிகாட்டலாம்.

**மனப்பான்மை**

ஒரு மனிதனுக்கு அறிவும் திறனும் செம்மையாக வாய்க்கப் பெற்றும். நல்ல மனப்பான்மை இல்லையெனின் அவன் சமூகத்திற்கு உதவமாட்டான். எனவே, ஒவ்வொரு மாணவனும் பள்ளிப்பருவத்திலேயே எதிலும் உடன்பாடான சிந்தனையைத் தூண்டும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். மனப்பான்மை எதனால் உருவாகிறது தெரியுமா? ஆங்கிலத்தில்' 3 "E" s என குறிப்பிடப்பெறும்,

- ❖ சூழ்நிலை (Environment)
- ❖ அனுபவம் (Experience)
- ❖ கல்வி (Education)

ஆகியவற்றால்தான் மனப்பான்மை உருவாகிறது,

- ❖ பள்ளிக்கு வரும் மாணவர்களின் குடும்பச் சூழல் வெவ்வேறாக இருக்கும்.
- ❖ அவர்களின் குடும்பச் சூழலைக் கட்டுப்படுத்தும் உரிமை ஆசிரியர்களுக்கு இல்லை.
- ❖ ஆனால் அனுபவம், கல்வி ஆகிய இரண்டு காரணிகளைஆசிரியர்கள் நல்ல முறையில் அமைத்து வழங்கலாம்.
- ❖ நல்ல கற்றல் அனுபவங்களை அமைத்தோ பள்ளிக்குள் உருவாக்கியோ நல்ல கல்வியை அளிப்போமானால் மாணவர்கள் ஓரளவிற்கு உடன்பாடான சிந்தனை மனப்பான்மையுடன் வளருவர் என்பது திண்ணம்.
- ❖ எடுத்துக்காட்டாக

  "சாதிகள் இல்லையடி பாப்பா" என பாரதி பாடிய வரியை மட்டும் கற்றுக் கொடுக்காமல், அதன்படி வாழ்ந்து காண்பிக்க வேண்டும்.
- ❖ எந்தச் சூழலிலும் சாதியை எடுத்துக் கூறி விவாதமோ, ஏன் உரையாடலோ கூடாது குழந்தைகளைப் பழிக்கவோ, பிரித்து வைக்கவோ கூடாது. எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்திய மக்கள் என்ற உணர்வை கதைகள், பாடல்கள், நாடகங்கள் மூலமாக வளர்க்கவேண்டும்,
- ❖ உடன்பாடான மனப்பான்மை வளர்ந்துள்ளதை எவ்வாறு மதிப்பிடுவது எனப் பார்ப்போம்.
- ❖ மனப்பான்மையை மதிப்பிட வேண்டியது அவசியமாகும்.
- ❖ இதை ஓர் வாழ்க்கைச் சூழலாகப் பார்த்தால் அதன் இன்றியமையாமை புரியும். இவ்வகையில் நல்ல மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளாத குழந்தைகளே பிற்காலத்தில் சமூக விரோத

செயல்களில் ஈடுபடுபவர்களாக மாறுகின்றனர். இவர்களையும் மாணவப் பருவத்திலேயே உடன்பாடான மனப்பான்மை கொண்டவர்களாக உருவாக்குவது ஆசிரியரின் முதன்மைக் கடமையாகும்.

- ❖ இனி இதை எவ்வாறு சோதித்து அறிவது எனக் காண்போம். மாணவர்களின் மனப்பான்மையை.
- ❖ உற்றுநோக்குதல்
- ❖ உரையாடுதல்
- ❖ சரிபார்ப்புப்பட்டியல்
- ❖ கருத்துப்பதிவு

எனப் பலவகை அளவீடுகளைக் கொண்டு மதிப்பிடலாம்.

**நடத்தை (Behaviour)**

- ❖ கல்வியின் குறிக்கோள்களுள் ஒன்று நன்னடத்தையை மாணவர்களிடம் வளர்ப்பதாகும்.
- ❖ தற்காலத்தில் கற்றறிந்த மாணவர்களிடம் நற்பண்புகள் அறிதாக உள்ளன. இன்றைய கல்வி முறை பண்பாட்டை வளர்ப்பதில் பின்தங்கியுள்ளதோ எனப் பல கல்வியாளர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.
- ❖ பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் நல்ல நடத்தையை, பண்பாட்டைப் பயிற்சி செய்யாவிட்டால் வேறெங்கும் பெற முடியாது என்கின்றனர்.
- ❖ பெற்றோர்க்கு அடுத்த நிலையிலுள்ள ஆசிரியர்கள்தாம்' நல்லொழுக்க வளர்ச்சிக்கு' முன்னோடியாகவும் பயிற்சியாளராகவும் இருந்து குழந்தைகளை வழி நடத்த வேண்டும் என்பது தெளிவாகிறது.

**நடத்தையை மதிப்பிடும் வகைகள்**

- ❖ சரிபார்ப்புப் பட்டியல்
- ❖ தரவரிசை பட்டியல்
- ❖ வாழ்க்கைக் குறிப்பு (biography)
- ❖ நாட் குறிப்பு (Diary)
- ❖ நேர்காணல் (Interview)
- ❖ உற்றுநோக்கல் (Observation)
- ❖ ஒப்பார் குறிப்பு (peer note).

**51. கற்றல் கற்பித்தலை மேம்படுத்துவதற்கான மதிப்பீட்டுச் செயல்களை விவரி.** (2010)

**விடை: வினா எண் 34**

**56. பண்புவகை சார்ந்த மதிப்பீட்டின் மூன்று நிலைகளைப் பற்றி எழுதுக. (2022) --- 4 மதிப்பெண்கள்**

**பண்புவகை சார்ந்த மதிப்பீட்டின் நிலைகளை மதிப்பிடும் முறைகளுடன் பட்டியலிடுக. (2026)**

பண்புவகைசார்ந்த மதிப்பீடானது மூன்று நிலைகளில் மதிப்பிடப்படுகிறது. அவை

| (i) நடத்தை சார்ந்த மதிப்பீடு | மதிப்பிடும் முறை |
|---|---|
| சுகாதாரம்<br>ஒழுங்கு<br>நேரம் **தவறாமை**<br>உதவி செய்தல்<br>உழைப்பு<br>வளர் மனப்பான்மை<br>உளக்கட்டுப்பாடு<br>சமூகத் தேவை<br>ஒழுக்கம் | நாட்குறிப்பு (**Diary**)<br>உற்றுநோக்கல் (**observation**)<br>வகைப்பாட்டு அளவுகோல் (**Rating Scale**)<br>வினாப்பட்டியல் (**Questionnaire**)<br>நேர்காணல் (**Interview**)<br>மனப்பான்மைகருவி (**Attitude Scale**)<br>நாட்டம் அறியும் கருவி (**Interest Inventory**) |
| (ii) ஈடுபாடு சார்ந்த மதிப்பீடு | மதிப்பிடும் முறை |
| கலை<br>இலக்கியம்<br>இசை<br>நாடகம் முதலியன | உற்று நோக்கல்<br>ஈடுபாடு அளவுகோல் (நாட்டச்சோதனை). |
| (iii) உடல் சார்ந்த மதிப்பீடு<br>உடல் வளர்ச்சி<br>உடற்பயிற்சி | மதிப்பிடும் முறை<br>மருத்துவப் பரிசோதனை<br>விளையாட்டுப்போட்டிகள் |

**57. வளர்வறி சோதனை என்றால் என்ன? (2023, 2022) – 2 மதிப்பெண்கள்**

வளர்வறி சோதனை (Formative Evaluation) என்பது வகுப்பறையில் ஆசிரியர், மாணவர்களிடையே கற்றல், கலந்துரையாடல், விநாடி வினா போன்றவைகளை நிகழ்த்தி, அடைவை அளக்க பல சூழல் பல நிலைகளில் நிகழ்த்தப்பட்டு கற்றல் கற்பித்தலின் இடையே நடைபெறும் மதிப்பீடு ஆகும்.

**58. ஒரு மாணவனை எப்பொழுது மதிப்பிடுவது? (2022) -- 2 மதிப்பெண்கள்**

மதிப்பீடு எல்லா காலங்களிலும் நடைபெறலாம். வகுப்பறையில் பாடம் தொடங்கும் முன்பும் கற்கும் பொழுதும், **பாடவேளை** முடிந்த பொழுதும், ஓர் அலகு முடிந்ததும், பருவ முடிவிலும், ஆண்டு முடிவிலும் மதிப்பீடு செய்யலாம்.

**59. அளிப்பு வகை வினாக்களின் நான்கு வகைகள் யாவை? (2023 – 2 மதிப்பெண்கள்)**

- ❖ கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்தல்
- ❖ குறு விடை வினா

- ❖ முழுமைப் படுத்தும் சோதனை
- ❖ கட்டுரை வினா.

**60. மதிப்பீட்டுச் செயல்களை அமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை எவை? (2023 – 2 மதிப்பெண்கள்)**

- ➢ ஒவ்வொரு செயலும் வரையறுக்கப்பட்ட திறன் / இலக்குகளின் அடிப்படையில் அமைத்தல் வேண்டும்.
- ➢ மதிப்பிட உதவும் செயல்கள் எளிமையாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும்.
- ➢ தனிநபர் செயல்பாட்டிற்கேற்ப கற்றல் கருவிகள் ஏற்ற எண்ணிக்கையில் இருத்தல் வேண்டும்.
- ➢ செயல்களைச் செய்ய மாணவர்களுக்குக் கொடுக்கும் குறிப்புகள் அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக இருக்க வேண்டும்.
- ➢ குழுச் செயல்பாட்டில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.
- ➢ கற்றல் உபகரணத்தைப் பயன்படுத்த வேண்டிய கால அளவு மாணவர் தம் பங்கேற்பு ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ➢ மேல்வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் துணைக் கருவிகளைக் கையாளும் திறன், உற்று நோக்கி அறியும் திறன், அறிதல் மற்றும் பகுத்தல் திறன்கள் போன்றவற்றை மதிப்பிடல் வேண்டும்

**61. தொடர்ச்சியான முழுமையான அகமதிப்பீடு என்றால் என்ன? ( 2023 – 4 மதிப்பெண்கள்)**

- ❖ தேசியக் கல்வி கொள்கை (1986) கற்பித்தல் கற்றல் கொள்கைகளை வரையறுத்தது மட்டுமின்றி, தொடர்ச்சியான, முழுமையான மதிப்பீட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.
- ❖ தேசிய கலைத்திட்ட வடிவமைப்பும் (2005) விரிவான முழுமையான மதிப்பீட்டை வரவேற்கிறது.
- ❖ குழந்தையின் வகுப்பறைச் செயல்களை மட்டுமின்றி, வகுப்பறைச் செயல்கள் அல்லாத குழந்தையின் ஆளுமைத் திறனுக்குத் தேவையான பிற திறன் அடைவுகளையும் மதிப்பிட வழிவகுக்கிறது.
- ❖ தொடர்ச்சியான முழுமையான மதிப்பீடு என்பது கற்றல் / கற்பித்தலின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது அகன்றது மற்றும் ஆழமானது. நிறைகுறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது.
- ❖ தொடர்ச்சியான மதிப்பீடு என்பது பாரம்பரியமான பருவ முடிவு (மாதாந்திர / காலாண்டு / அரையாண்டு) தேர்வுகளுக்குப் பதிலாக கற்பித்தல் / கற்றல் நிகழ்வுறும் காலத்தே எவ்வகையிலான கற்பித்தல் நிகழ்ந்தது; எவ்வகையான கற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது, என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பிடுதலைக் குறிக்கும்.
- ❖ முழுமையான மதிப்பீடு என்பது வழக்கமான அறிவுசார் புலம் சார்ந்த பாடப்பகுதியின் திறன் அடைவுகள் மட்டுமில்லாமல் உணர்தல் மற்றும் செயல் சார்ந்த அடைவுகளையும் மதிப்பீடு செய்தலைக் குறிக்கும்.
- ❖ ஒரு குழந்தையின் கற்றல் அறிவு, பயம் மிகுந்த படபடப்பான, பரபரப்பான தேர்வுச் சூழலில் மட்டும் அளவிடப்படுவதன்று. பாடங்கள் பற்றிய அக்குழந்தையின் ஆர்வம், நாட்டம், அறிவியல், சமூக சிந்தனைகள், கலை, இலக்கியம், உடற்கல்வி போன்ற பல்வேறு அம்சங்களிலும் அக்குழந்தையின்

அறிவுத்திறன்கள் வெளிப்படும். எனவே எல்லாப் பண்பு நலன்களையும் மதிப்பிடுதலே முழுமையான மதிப்பீடு ஆகும்.

**62. பொருத்துதல் வினாவின் நிறை, குறைகள் யாவை? (2023 – 4 மதிபெண்கள்)**

**நிறைகள்:**

❖ பொருத்துதல் வினா மூலம் மாணவர்களின் தகவலறிவின் திட்ட வட்டத்தன்மையைச் சோதிக்கலாம். ஒன்றுக்கொன்று தொடர்புள்ள செய்திகளை இரண்டு வரிசைகளில் அமைத்து, அவற்றுள் பொருத்தமானவற்றைச் சேர்க்குமாறு செய்தல் இவ்வகைச் சோதனையாகும்.

❖ இதில் மாணவர்களின் மீட்டுணர்திறன் வெளிப்படுகிறது.

❖ இத்தகைய வினா உண்மைச் செய்திகளையும் (Factual information) தொடர்புகளையும் (relationships) சோதிப்பதற்கு உதவுகிறது. எளிதாக இவ்வினாக்களைத் தயாரிக்கலாம்.

**குறைகள்:**

❖ ஆனால் பொருத்துதல் வினா வடிவமைக்கும் போது தொகுப்பு முறையை பயன்படுத்துவதால், வினாவின் சுயசார்புத் தன்மை இழந்து விடுகிறது. இவ்வகை வினாக்களைத் தயாரிக்கும்போது தேர்ந்தெடுக்க வேண்டிய விடைகளின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ள வினாக்களைக் காட்டிலும் ஒன்று (அ) இரண்டு அதிகமாக இருக்க வேண்டும்.

**63. மாணவர்களின் மனப்பான்மையை எவ்வாறு மதிப்பிடுவாய்? (2024)**

மாணவர்களின் மனப்பான்மையை.

❖ உற்றுநோக்குதல்

❖ உரையாடுதல்

❖ சரிபார்ப்புப்பட்டியல்

❖ கருத்துப்பதிவு

எனப் பலவகை அளவீடுகளைக் கொண்டு மதிப்பிடலாம்.

**64. வகுப்பறையில் வாய்மொழித்தேர்வின் மூலம் மாணவர்களைச் சோதிதறிய இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக. (2026 – 2 மதிப்பெண்கள்)**

- **கல்வி உலா**
- **கல்வி சம்பந்தமான திரைபடங்கள்**

## 6. சிறப்புக் கல்வி

## இரண்டு மதிப்பெண்கள்

1. **உள்ளடங்கிய கல்வி – விளக்குக. (அல்லது) உள்ளடங்கிய கல்வி என்றால் என்ன? (2023 – 4 மதிப்பெண்கள், 2022, 2021, 2015, 2014, 2012)**

ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சாதாராண ஆசிரியர்களுக்கு ஊனமுற்ற குழந்தைகளைப் பள்ளிகளில் மேலாண்மை செய்யும் விதம் அல்லது பராமரித்தல் பற்றிய பணியிடைப் பயிற்சியளித்து, ஒரே வகுப்பில் மற்ற மாணவ மாணவிகளுடன் ஊனமுற்ற மாணவ - மாணவிகளுக்கும் கல்வி அளிக்கச் செய்வது உள்ளடங்கிய கல்வி ஆகும். இதில் ஆசிரியர்கள் தேவைப்படும் போது மட்டுமே சிறப்பாசிரியர்களிடம் ஆலோசனை பெறுவர். இம்முறையில் அனைத்து ஊனமுற்ற குழந்தைகளும் சாதாராண பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

2. **உடல் இயக்க நிலை குறைபாடு – வரையறைக்கவும்.** (2021)

உடலியக்கத்திற்குக் காரணமாக உள்ள எலும்பு, தசை மற்றும் மூட்டுகள் ஆகியவற்றுள் ஏதேனும் பாதிப்பு ஏற்படும்போது உடலியக்கம் பாதிக்கப்படுகிறது. இதனால் கை, கால் இயக்கங்களில் ஏற்படும் பாதிப்பினை உடலியக்கநிலை குறைபாடு என்பர். இக்குறைபாடுடைய குழந்தைகள் நடப்பதிலும், கைகளைப் பயன்படுத்துவதிலும் மிகக்குறைவான திறனைப் பெற்றிருப்பர். இக்குழந்தைகளின் அறிவுத்திறனில் எந்த குறையும் இருப்பதில்லை. எனவே கல்வி கற்பதில் எந்த இடர்பாடும் இருப்பதில்லை.

3. **கற்றலில் இயலாமையின் வகைகள் யாவை?** (2020)

கல்வி சார் திறன் குறைபாடு மற்றும்

கவனக்குறைபாடு என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

4. **டிஸ்கிராஃபியா – சொல் விளக்கம் தருக.** (2025, 2020, 2017)

சாதாரணமாக வகுப்பறையில் பெரும்பாலான குழந்தைகள் எழுத்துக்களை எழுதுவதில் பல தவறுகள் செய்கின்றனர். அவர்கள் தாங்கள் எழுதியதையே வாசிக்க இயலாமல் சிரமப்படுகின்றனர். இத்தகைய குறைபாடுள்ள குழந்தைகளால் சரளமாக எழுத இயலுவதில்லை. இக்குறைபாட்டினையே டிஸ்கிராஃபியா என்கிறோம்.

5. **கீழே கொடுக்கப்பட்டுள்ளவை என்ன குறைபாடு என்று கண்டுபிடிக்க.**

**அ. பிழையோடு வாசித்தல்**

**ஆ. எழுதும் போது வார்த்தைகளிலுள்ள பெரிய எழுத்துகளையும், சிறிய எழுத்துகளையும் கலந்து எழுதுதல்.** (2019)

பிழையோடு வாசித்தல் – டிஸ்லெக்ஸியா

எழுதும் போது வார்த்தைகளிலுள்ள பெரிய எழுத்துகளையும், சிறிய எழுத்துகளையும் கலந்து எழுதுதல் - டிஸ்கிராஃபியா

6. **செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் கருவிகள் ஏதேனும் நான்கினை கூறுக.** (2025 – **4 மதிப்பெண்கள்**, 2019)

ஒலிப்பான், அழைப்பு மணி, ஒலி எழுப்பும் இசைக்கருவி, டிரம், புவி வரைபடங்கள் மற்றும் புவிக்கோளம், கேளிக்கைச் சித்திரங்கள், மின் அட்டைகள், வண்ண வரைபடங்கள், செவித்துணைக்கருவிகள், கணினி மென்பொருட்கள், நிலைக்கண்ணாடி, பேச்சுப் பெட்டி, ஒலி எழுப்பும் பொம்மைகள், ஆடியோமீட்டர், கண்ணாடி. வாசிப்புப் புத்தகங்கள் ஆடியோ புத்தகங்கள், தனி செவித்துணைக்கருவி, குழு செவித்துணைக்கருவி.

7. **கீழ்க்கண்ட உடல் இயக்க குறைபாட்டை எவ்வாறு கண்டறிவாய்?**

**அ. இளம்பிள்ளை வாதம்**

**ஆ. கவட்டைக் கால்** (2019)

இளம்பிள்ளை வாதம் – கை கால் மெலிந்து காணப்படும்.

கவட்டைக் கால் – கால்களில் எலும்புகள் வளைந்து காணப்படுதல், பாதங்களை மடக்கி நடத்தல்.

8. **மாணவர்களிடையே பேசுதல் திறனை வளர்க்க மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் யாவை?** (2019)

- சரியான உச்சரிப்புடன் நிறுத்தி, பலமுறை மீண்டும் மீண்டும் உச்சரித்தல்
- சொற்றொடர்களைப் பொருள் விளங்கக் கூறுதல்.
- சக மாணவர்களோடு உரையாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.
- மொழிப் பயன்பாட்டில் நிகழும் தவறுகளைத் திருத்துவதன் மூலமாகப் பேச்சுத் திறனை மேம்படுத்துதல்.
- சுருக்கமாக, தெளிவாக, துல்லியமாக, குறைந்த நேரத்தில் சரியான முறையில் பேசுவதற்கு பயிற்சி அளித்தல்.
- ஆசிரியர், அப்பகுதியில் பணியாற்றும் சிறப்பு மருத்துவர், பேச்சு நிபுணர்கள் போன்ற வல்லுநர்களிடம் குழந்தையைப் பற்றி ஆலோசனை கேட்பதற்கு பெற்றோர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.
- திக்கிப் பேசும், குழறிப் பேசும் குழந்தைகளின் பிரச்சனைகளில் தனி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- படிப்படியாகப் பேசுகின்ற மன உறுதியை வளர்ப்பதற்குப் பாராட்டல், பொறுப்பு வழங்கல் போன்ற ஊக்க உத்திகளை ஆசிரியர் கையாள வேண்டும்.
- இந்நிலையில் உள்ள மாணவர்களை அடிக்கடி குழுச் செயலில் ஈடுபடுத்தி அச்சம், கூச்சம் ஆகியவற்றை நீக்குதல்.
- நகைச்சுவையாகவும், தோழமை உணர்வுடன் உரையாடும் இனிமையான வகுப்பறைச்
- சூழலை உருவாக்கி சரளமாகப் பேச செய்தல்.

DIET PYT

9. **"டிஸ்லெக்ஸியா" என்னும் கற்றல் குறைபாடு ஏற்படக் காரணம் என்ன?** (2018)

- நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்ட குறைபாடு
- குழந்தை பிறக்கும் சமயம் ஏற்படும் பலவகை பிறப்பு அதிர்ச்சிகள்
- விபத்துக்கள், வலிப்பிற்குக் கொடுக்கப்படும் மருந்துகள்

10. **இயலாமை – குறிப்பு வரைக.** (2018)

ஒரு மனிதனுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பினால் அவனுக்கு சராசரி மனிதனைப்போல் செயல் படுவதில் ஏற்படும் சிரமம் அல்லது பாதிப்பு.

11. **செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்குக் கல்வியளிப்பதில் ஆசிரியரின் பங்கினைக் கூறுக. (2018) (எவையேனும் 4)**

- செவித்திறன் குறைபாடு உடைய குழந்தைகளை வகுப்பறையில் ஆசிரியரை நன்கு பார்க்கும் வகையில் அமரச் செய்ய வேண்டும்.
- சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- ஆசிரியர்கள், மாணவர்களை நேரடியாகப் பார்த்துப் பாடம் நடத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியரின் உடல், உதட்டசைவினைப் பார்த்து புரிந்து கொள்ள இயலும்.
- ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் உபகரணங்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். முக்கியமாக காட்சிப்படங்களை (visual pictures) அதிகமாக காண்பித்தல்.
- அதிகமான பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல்.
- புதிய பாடங்களைக் கற்பிக்கும்போது உண்மைப் பொருள்களை வைத்துப் பாடம் கற்பித்தல்.
- அதிகமான வாசிப்புப் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தல்.
- புதிய பாடங்களைக் கற்பிக்கும் போது கரும்பலகையில் எழுதி பாடப் பொருள்களை விளக்குதல்.
- உரையாடல் முறையில் பேச்சுத்திறனை வளர்த்தல்.
- பார்வை மூலம் பெறக்கூடிய அனுபவங்களை உருவாக்குதல்.
- நிலைக்கண்ணாடியைப் பயன்படுத்தி பேச்சுப் பயிற்சி அளித்தல்.
- பாடல்கள், செய்யுள் இவற்றைக் கற்பிக்கும்போது சீர்பிரித்து தாளத்துடன் கற்பித்தல்.
- எழுத்துப் பயிற்சிகளை வாசிப்புத்திறனுடன் செயல்படுத்த ஆசிரியர் முயற்சித்தல்.
- மிதமான செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களிடம் சைகைமொழியைத் தவிர்த்தல்.
- எளிமையான வாக்கியங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தல்.
- நாடகம் மற்றும் உரையாடல் முறையில் பாடங்களை மாணவர்களுக்கு எளிதாகக் கற்க வழி செய்தல்.
- பாடம் கற்பிக்கும் போது செவித்துணைக் கருவிகளை மாணவர்கள் முறைப்படி பயன்படுத்துகிறார்களா என்று கவனித்தல்.
- அதிகமாக வண்ண வரைபடங்கள் மற்றும் மின்னட்டைகளைப் பயன்படுத்துதல்.
- தனித் திறன்களையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

12. **வாசிக்கும் குறைபாடுடைய மாணவர்களின் பிரச்சனை தீர நீவீர் கூறும் வழிமுறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.** (2017)

- ➢ ஐம்புலன்களைப் பயன்படுத்தி கற்கும் வகையில் கற்கும் செயல்பாடுகளை அமைத்து தர வேண்டும்.
- ➢ மாதிரி உருவங்கள், காட்சி படங்கள், எழுத்துக்கள் மற்றும் எண்கள் உள்ள மின் அட்டைகள் போன்றவைகளை பயன்படுத்தி கற்றுத்தர வேண்டும்.
- ➢ எழுத்துக்களை கற்பிக்கும்போது ஆசிரியர் செய்ய வேண்டியவை
    - ❖ எழுத்தை சப்தமாகக் கூறுதல்,
    - ❖ எழுத்தை முறையாக எழுதிக்காட்டுதல்.
    - ❖ அவ்வெழுத்தின் மீது எழுத வைத்தல்.
    - ❖ அவ்வெழுத்தைப் பார்த்து எழுத வைத்தல்.
    - ❖ அதே எழுத்தைப் பார்க்காமல் எழுத வைத்தல்.
- ➢ 10 புதிய எழுத்துக்களைக் கற்க வைத்தல், கற்றுக் கொண்ட எழுத்துக்களைக் கொண்டு புதிய வார்த்தைகளை அமைத்துப் படிக்க வைத்தல்.
- ➢ எழுத்தினை கற்று தரும்போது அதன் சரியான உச்சரிப்பையும் கற்கச் செய்ய வேண்டும்.
- ➢ ஆசிரியர் சப்தமாக படித்துக் காட்டிடல் வேண்டும். அதை தொடர்ந்து குழந்தைகள் படிக்க வேண்டும்.
- ➢ குழந்தைகள் படிக்கும்போது வார்த்தையின் மீது விரல் வைத்து படிக்க வைக்க வேண்டும்.
- ➢ குழந்தைகள் படிப்பதை ஒலிநாடாவில் பதியச் செய்து அதை அவர்களையே கேட்க வைக்கும்போது தாம் செய்து தவறுகளை கண்டறிந்து திருத்தி கொள்ள வைத்தல்.

13. **ஊனத்தின் வகைகள் யாவை?** (2024, 2016)

- கண்பார்வையின்மை
- குறைந்த பார்வை
- செவித்திறன் குறைபாடு
- மன வளர்ச்சி குறைவு
- உடல் இயக்கத்தில் பாதிப்பு

14. **மாணவர்களுக்கு எழுதுவதில் ஏற்படும் பிரச்சனைகள் குறிப்பிடுக.** (2022, 2016) **எழுதுவதில் பிரச்சனை கொண்டோரை எவ்வாறு கண்டறிவாய்?** (2010, 2013). **குழந்தைகளின் டிஸ்கிராஃபியா பிரச்சனைகளைப் பற்றி குறிப்பிடுக.** (2012)

- ❖ வார்த்தைகளுக்கிடையே விடும் இடைவெளி அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விட்டு எழுதுதல்.
- ❖ எழுதும்போது வார்த்தைகளிலுள்ள சிறிய எழுத்துக்களையும் பெரிய எழுத்துக்களையும் கலந்து எழுதுதல்.
- ❖ வார்த்தைகளிலுள்ள எழுத்துக்களை வடிவத்தில் பொருத்தமில்லாமல் சிறிதாகவும் பெரிதாகவும் எழுதுதல்.
- ❖ எழுதிய எழுத்துக்களின் மேல் திரும்பத் திரும்ப எழுதுதல்.
- ❖ பார்த்து எழுதுவதில் சரியாகவும், சொல்லுவதை எழுதும்போது தவறாக எழுதுதல்.
- ❖ வார்தையிலுள்ள எழுத்துக்களை விட்டுவிடுதல், சேர்த்தல் மற்றும் மாற்றி எழுதுதல்.

15. **பார்வைத்திறன் குறைபாடுடையோர் பயன்படுத்தும் கருவிகள் நான்கினை எழுதுக. (2016)**

- பிரெயில் பலகை, ஸ்டைலஸ்
- பிரெயிலர் மெஷின்
- ஆணி மணிச் சட்டம் (Abacus)
- டெய்லர் சட்டம் (Taylor Frame)
- ஒலி நாடா, பதிவுப் பெட்டிகள் (Cassette Recorder)
- உருப்பெருக்கி (Magnifier)
- மேலெழுந்த வரைபடங்கள் (Embossed diagram)
- புத்தகத் தாங்கி (Reading bookstand)
- டைபோஸ்கோப் (Typoscope)
- ரிலீவ் தாள்கள் (Relive sheets)
- ஊன்றுகோல் (Long cane)
- பிரெயில் புத்தகங்கள் (Braille text books)
- பெரிய அச்சு எழுத்துக்களாலான புத்தகங்கள்
- ஒலியெழுப்பும் பந்து (Rattle ball)
- காந்த சதுரங்கப் பலகை (Magnetic chess)

16. **செவித்திறன் குறைபாட்டின் வகைகள் யாவை? (2015)**

(i) ஒலியைக் கடத்தா நிலை செவித்திறன் குறைபாடு: வெளிக்காதில் ஏற்படும் பாதிப்பு.

(ii) புலன் உணர்வு, நரம்பு சார்ந்த செவித்திறன் குறைபாடு:

உட்செவியில் உள்ள நரம்புகள், செவிப்பறை மற்றும் எலும்பு சிதைவுகளினால் ஏற்படும் பாதிப்புகள்

(iii) ஒலியைக் கடத்தா நிலை, புலன் உணர்வு, நரம்பு ஆகியவை இணைந்த குறைபாடு. வெளிச்செவி மற்றும் உட்செவியில் ஏற்படும் பாதிப்பு.

17. **"டிஸ்லெக்ஸியா"-விளக்குக. (2015) டிஸ்லெக்ஸியா என்ற சொல்லின் பொருள் யாது? (2023)**

- ❖ டிஸ்லெக்ஸியா என்ற சொல் கிரேக்க மொழிச் சொல்லாகும். "டிஸ்" என்றால் கடினம், லெக்ஸியா என்றால் சொற்கள் சம்பந்தப்பட்ட மொழி என்று பொருள்.
- ❖ மிகக் குறைந்த மொழித்திறமை பெற்றவர்கள் என்றும் பொருள் கொள்ளலாம். மேலும் அடிப்படை மொழித்திறன் அடைவதில் குறைபாடு உள்ளவர்கள் என்றும் பொருள். குறிப்பாகப் படித்தல் அல்லது வாசித்தலில் குறைபாடு உடையவர்கள் எனக் கொள்ளலாம்.
- ❖ இது ஒரு நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்ட குறைபாடு ஆகும். டிஸ்லெக்ஸியாவால் பாதிக்கப்பட்டவர்களை மனவளர்ச்சிக் குன்றியவர்கள் என்றோ மெதுவாக கற்கும் திறன் படைத்தவர்கள் என்றோ எண்ணிவிடக் கூடாது.
- ❖ டிஸ்லெக்ஸியா என்பது ஒரு நோயல்ல. பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஒன்றிணைந்து பயிற்சிகளை அளித்துக் குணப்படுத்த முடிகின்ற செயல்தான்.
- ❖ குழந்தை பிறக்கும் சமயம் ஏற்படும் பலவகை பிறப்பு அதிர்ச்சிகள், விபத்துக்கள், வலிப்பிற்குக் கொடுக்கப்படும் மருந்துகள் டிஸ்லெக்ஸியாவை உண்டாக்கக் கூடும்.

18. **பேச்சுத்திறன் குறைபாட்டினை நீக்கும் வழிகள் நான்கினை குறிப்பிடுக.** (2014)

- பெற்றோர்கள் சரியான உச்சரிப்போடு எளிய மொழியை இலக்கணப் பிழையின்றி குழந்தைகளோடு உரையாடி அவர்களையும் பேசுவதற்கு ஊக்குவித்தல்.
- தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு முன் மாதிரியாக பேச்சுத்திறனை வளர்ப்பதற்குப் பயன்படுத்துதல்
- குழந்தைகளைப் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட வல்லுநர்களிடம் காட்டி பரிந்துரைகளைப் பின்பற்றுதல்.
- மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளல்.
- பேச்சு நிபுணரின் ஆலோசனையின் அடிப்படையில் பேச்சுப் பயிற்சி (Speech theraphy) கொடுத்தல்.
- பயத்தைத் தவிர்க்கச் செய்தல் வேண்டும்.

19. **டிஸ்கால்குலியா என்பது யாது?** (2024, 2014)

எண்களின் மதிப்புகளையும் பொருண்மையையும் அறிய முடியாத தன்மை கணக்குகளைப் போட முடியாத தன்மை, எண்களை உபயோகித்தலில் ஏற்படும் குழப்பம் ஆகியவை கணக்கிடல் குழப்பமாகும்.

(எ.கா.) 36 என்ற எண்ணை 63 ஆக இடம்மாற்றி எழுதுதல்.

3 x 6 = 18 x குறியீட்டை + ஆக மாற்றி எழுதுதல்.

3 + 6 = 18

20. **பேச்சுத்திறன் குறைபாட்டினை வகைப்படுத்துக.** (2013)

- உச்சரிப்பில் உள்ள குறைபாடுகள் (Articulation)
- குரலில் உள்ள குறைபாடுகள்
- பேச்சு சரளத்தில் உள்ள குறைபாடுகள்

21. **பார்வை குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்களை குறிப்பிடுக.** (2013)

- கண்ணில்புரை
- வைட்டமின் ஏ குறைவு
- டிரக்கோமா (Trachoma) என்ற கண் அரிப்பு
- அம்மை நோய்
- விபத்து
- பரம்பரை நோய்கள்
- ஊட்டச்சத்து குறை உள்ள குழந்தை.
- மூளையில் கட்டிகள்
- குழந்தைப் பருவத்தில் ஏற்படும் சர்க்கரை நோய் பார்வைத்திறன் குறைபாட்டிற்கான காரணங்கள்.

22. **ஹெலன் கெல்லர் பற்றி சிறு குறிப்பு வரைக.** (2012)

- அமெரிக்க நாட்டில் டஸ்காம்பியா அருகில் உள்ள ஒரு ஊரில் 1880-ம் ஆண்டு ஹெலன் கெல்லர் பிறந்தார். இரண்டு வயதில் விஷக்காய்ச்சல் ஏற்பட்டு காது கேளாமை, வாய் பேச முடியாமை, கண் பார்வை இன்மை இவைகளால் அவதிப்பட்டார்.

- ஆனால் இவர் மனந்தளராமல் காது கேளாதவர் பார்வையிழந்தோருக்கான பள்ளிகளில் கல்வி கற்றுத் தேர்ந்து கல்லூரி பட்டப் படிப்பையும் முடித்தார். கல்லூரியில் படித்துக் கொண்டே கட்டுரைகளை எழுதிப் பிரபல இதழ்களில் வெளிவரச் செய்தார்.
- உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு காது கேட்காதவர்கள், கண்குறைபாடு உள்ளோர், வாய் பேச முடியாதவர்களின் நலனுக்காக நிதியுதவிகளை அளித்து வந்தார்.
- பல நூல்களையும் எழுதி வெளியிட்டு வெற்றி கண்டார். என் கதை, நான் வாழும் உலக நம்பிக்கை நோக்கு, கற்சுவரின் கீதம், இருளைக் கடந்து திறந்த கதவு மற்றும் பல நூல்களை எழுதி வெளியிட்டார்.
- அவரின் சாதனைகளைப் பாராட்டி 1964-ம் ஆண்டில் Presidential Medal of Freedom என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.
- ஊனம் ஒரு குறைபாடேயல்ல, நம்மாலும் அனைத்து சாதனைகளையும் செய்திட முடியும் என்று வாழ்ந்து காட்டியவர் ஹெலன் கெல்லர்.
- பிரைலிமுறை (Braille) எழுத்துக்களை பார்வையற்றோர் பயன்பாட்டிற்காக உலகத்திற்கு முதன்முதலில்அறிமுகப்படுத்தியவர் ஹெலன் கெல்லர் ஆவார்.

23. **டிஸ் ஆர்த்திரியா என்றால் என்ன? (2011)**

பேச்சை ஒருங்கிணைக்கும் மையங்கள் மூளையில் உள்ளன. இம்மையங்களில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டாலும் பேச்சின் தன்மை பாதிக்கப்படும். இதற்கு "டிஸ் ஆர்த்திரியா" (Disarthria) எனப் பெயர்.

24. **பார்வைத்திறன் பாதிப்பின் வகைகளைக் கூறுக. (2011)**

- குறைந்தளவு பார்வைத்திறன் (Low vision)
- முழுமையாகப் பார்வை இழப்பு (Total Blindness)

25. **கற்றல் இயலாமை என்றால் என்ன? கற்றல் இயலாமை – வரையறுக்க.** (2010, 2011, 2017, 2022)

சில குழந்தைகளுக்கு மொழி வளர்ச்சிக் குறைவாக இருக்கும். அக் குழந்தைகளுக்குப் பேச்சு உறுப்புகள், கண் பார்வை, கேள்வி உறுப்புகள், மூளை முதலியன இயல்பாகவே இருப்பினும், எழுத்துக்களைக் கூட்டிப் படித்தல், எழுதுதல், அடிப்படை கணிதச் செயல்பாடுகள் முதலிய திறமைகளில் குறைந்தே காணப்படுவர்.

26. **பேச்சுத்திறன் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்களைப் பட்டியலிடுக. (2024 – 4 மதிப்பெண்கள், 2010)**

- சரியான மூளை வளர்ச்சியின்மை
- காது உள்ளுறுப்புகள் முழுமையாக வளராமை
- ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் சுற்றுப்புறச் சூழ்நிலை
- வாய், நாக்கு, தொண்டை இவற்றின் அசைவுகளில் கட்டுப்பாடின்மை

- கூச்சம், அச்ச உணர்வுகள்
- மொழியின் ஒலிக்குறிப்புகளைப் புரிந்துகொள்ள இயலாமை
- உதடுகள் பிளவுபட்டிருந்தால், பிளவுபட்ட அண்ணப்பிளவு
- நாக்கு தடித்திருத்தல்
- திக்கு வாய் ஏற்படுவது
- அதீத மழலைப்பேச்சு
- மிகக் குறைவான சொற்களையே அறிந்து இருத்தல்
- பேசும் செயல் வளர்ச்சியில் தாமதம்.

**நான்கு மதிப்பெண்கள்**

27. **செவித்திறன் குறைபாடுடைய குழந்தையை எவ்வாறு கண்டறிவாய்?** (2021, 2016, 2011, 2010)

**குழந்தைகளின் செவித்திறன்**

- மூன்றடி தூரத்திற்குள் சத்தமாக கைகளைத்தட்டும் பொழுது குழந்தை திடுக்கிடாதிருத்தல்.
- சத்தம் வரும் திசையை நோக்கிப் பார்க்காதிருத்தல்.
- புரிந்து கொள்வதில் அதிக தாமதம் ஏற்படுதல்.
- ஆசிரியரை மீண்டும் பாடப்பகுதியைக் கூறச்சொல்லி வற்புறுத்துதல்.
- ஆசிரியர் பேசும் போது முகபாவனைகளை உற்று நோக்குதல்.
- பிறர் கூறுவதைக் கவனித்தல், கேட்டவற்றைப் புரிந்து கொள்ளும் தன்மை போன்ற திறன்கள் மிகக்குறைவாக காணப்படுதல்.
- பேசும்பொழுது அதிகத் தடுமாற்றம் ஏற்படுதல், வாசிப்புத் திறனில் மிக மோசமான நிலை உருவாதல்.
- பேசுபவர் பக்கம் தலையைச் சாய்த்து கேட்டல்.
- குரல் ஒலியில் வித்தியாசம், உச்சரிப்பில் வித்தியாசம்.
- பெயரைச் சொல்லி அழைக்கும் போது திரும்பாமல் இருத்தல்.
- கதைகள் கேட்பதில் அதிக விருப்பமின்மை.
- காதில் அடிக்கடி சீழ் வடிதல்.
- ஆசிரியர் சொல்லுவதை எழுதும்போது சகமாணவர்களின் உதவியை நாடுதல்.

28. **கற்றல் இயலாதோர்களை எவ்வாறு கண்டறிவாய்?** (2021) **கற்றல் குறைபாடுடைய குழந்தைகளை எவ்வாறு கண்டரிவாய்?** (2015)

- கற்றல் திறனில் குறைபாடுடைய குழந்தைகள் நுண்ணறிவுத்திறனில் சராசரிக்கு மேல் திகழ்வர்.
- இவர்கள் உடல் மற்றும் புலனுறுப்புகளில் எந்த விதக்குறைபாடும் இன்றி நல்ல குடும்ப மற்றும் பொருளாதாரப் பின்னணியுடன் திகழ்ந்து, கற்றல் செயலான எழுதுதல், பேசுதல், வாசித்தல் மற்றும்

DIETPVT

கணக்கிடுதல் போன்ற ஏதாவது ஒரு செயலில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயல்களில் பாதிப்புடன் இருப்பர்.

❖ இவர்களைக் கண்டறிவதில் முதல்கட்டமாக நுண்ணறிவுத்திறன் சோதனையைச் செய்தல் வேண்டும்.
❖ அதன் பின்பு அடைவுத்திறன் சோதனையைச் செய்தல் வேண்டும்.
❖ நுண்ணறிவுத் திறனுக்கும், அடைவுத்திறனுக்கும் உள்ள இடைவெளியானது அதிமாக இருந்தால் அவர்களுக்குக் கற்றல் குறைபாடு இருப்பதாக முதல்கட்ட முடிவினை எட்டலாம்.
❖ அதன் தொடர்ச்சியாக ஆசிரியர்களிடம் கூறி அந்த மாணாக்கனின் குணாதிசயங்களில் மேலே குறிப்பிட்ட கற்றல் செயலான எழுதுதல், வாசித்தல், பேசுதல், கணக்கிடுதல், பிறருடன் பழகுதல் மற்றும் பிற வகுப்பறைச் செயல்களில் ஏதேனும் குறைபாடுகள் இருக்கிறதா? என்று கண்டறியலாம்.
❖ எனவே நுண்ணறிவுச் சோதனை, அடைவுத்திறன் மதிப்பீடு போன்ற சோதனைகளின் வாயிலாகக் கற்றல் திறன் குறைபாடுடையோர்களைக் கண்டறிய இயலும்.

(அல்லது)

**கற்றல் இயலாதோர்களைக் கண்டறிய உதவும் அறிகுறிகள்** (2025, 2019)

❖ மிகக் குறைவான கவன நீடிப்பு
❖ விளைவுகளைச் சிந்திக்காமல் நினைத்ததைச் செய்யும் இயல்பு.
❖ மிக எளிதில், தொடங்கிய காரியத்தைக் கைவிடும் மனப்போக்கு.
❖ மற்ற குழந்தைகளைச் சீண்டும் மனப்பான்மை.
❖ சமூகத்திறன்களில் குறைபாடு.
❖ சம வயது சிறுவர்களுடன் ஒத்துப்போக இயலாமை
❖ சுயநலப்போக்கு
❖ நகம் கடித்தல், படுக்கையில் சிறுநீர் கழித்தல், போன்ற பழக்கங்களினால் பாதிப்பு.
❖ தன்னைப்பற்றித் தாழ்வான கருத்து.
❖ தனது இயலாமைக்குப் பிறரைக் காரணம் கூறுதல்.

29. **பேச்சுத் திறன் குறைபாட்டின் வகைகளை எழுதுக? (2021)**

1. **உச்சரிப்பில் உள்ள குறைபாடுகள் (Articulation)**
   - சேர்த்தல் (Addition)
   - சிதறுதல் (Distration) திரித்துக் கூறுதல்
   - ஒன்றுக்கு பதிலாக ஒன்றைப் பயன்படுத்துதல் (Substitution)

2. **குரலில் உள்ள குறைபாடுகள்**
   - குரல் தொனியில் ஏற்றம் / தாழ்வு
   - தொனி
   - அழுத்தம்

3. **பேச்சு சரளத்தில் உள்ள குறைபாடுகள்**

- திக்குதல் (Stammering) or (Stuttering)
- ஓசை தாறுமாறாக இருத்தல் (Cluttering)
- பயம்

30. **பார்வைத் திறன் பாதிப்பின் வகைகளை விளக்குக.** (2021)

- ➢ குறைந்தளவு பார்வைத்திறன் (Low vision)
- ➢ முழுமையாகப் பார்வை இழப்பு (Total Blindness)

**குறைந்தளவு பார்வைத்திறன்:**

குறைந்தளவு பார்வைத் திறனுடையவர்கள், கேட்டல் மற்றும் காட்சி சாதனங்கள், அச்செழுத்துக்கள் ஆகியவற்றை எஞ்சியுள்ள பார்வையைப் பயன்படுத்தி கற்கும் நிலையில் உள்ளவர் ஆவர்.

**முழுமையாகப் பார்வை இழப்பு:**

முழுமையாகப் பார்வையற்றவர்கள் பிரெய்ல், செவிப்புலன், தொடு புலன்களால் மட்டும் கற்றுக் கொள்பவர்கள் ஆவர்.

31. **மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வியில் ஆசிரியரின் பங்கினை விவரி.** (2020)

- ❖ பாடத்திட்டத்தில் முழுமையான தேர்ச்சியிலிருந்து விலக்கு அளித்தல்.
- ❖ வாழ்க்கைக்கு உதவும் திறன்களை (life skills) வளர்ப்பதே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் முக்கியமாக இருக்கச் செய்தல்.
- ❖ அன்றாட தனிநபர் கடமைகளைச் சரிவர செய்வதற்கு சிறப்பாசிரியரை அணுகி அத்திறன்களைக் கற்பிக்கச் செய்தல்.
- ❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து கருத்துக்களையும் வாய்மொழியாக மட்டும் இன்றி செயல் மூலமாக படிப்படியாக விளக்க வேண்டும்.
- ❖ குழந்தையின் மன வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்டே கற்பித்தல் நன்று.
- ❖ குழந்தைகளுக்கு வெற்றியைத் தரக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும்.
- ❖ எண்களைக் கற்றபின் கூட்டல், கழித்தல் கற்றுக்கொடுக்க வேண்டும்.
- ❖ ஞாயிற்றுக்கிழமை என்ற சொல்லைக் கற்றுக்கொடுக்க வேண்டும் எனில் அதனுடன் தொடர்புடைய பொருட்களைக் காட்ட இயலாது. ஆகையால் அதனுடன் தொடர்பு கொண்ட செயல்களைச் சொல்லிப் புரிய வைக்கலாம்.

DIET PVT

- ❖ உடலின் பாகங்களைக் கற்றுக்கொடுக்கும் போது முழு உடலைக் காட்டி பிறகு உடலின் பல பாகங்களை ஒவ்வொன்றாகச் சொல்லித்தரலாம்.
- ❖ கற்றல் திறனை திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதன் மூலம் திறனை நிலையாக்கி கொள்ளலாம்.
- ❖ ஒன்று அல்லது இரண்டு கட்டளை வாக்கியங்களுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ நினைவாற்றலை வளர்க்கும் பயிற்சிகளை அளிக்க வேண்டும் (எ.கா.) மேசையில் ஐந்து பொருட்களைக் கிடத்தி ஐந்து நிமிடங்கள் பார்த்தபின் பட்டியலிடச் சொல்லுதல். காலை முதல் மாலை வரை செய்த செயல்களை முழுமையாக சொல்ல வைத்தல் (பகுதி பகுதியாகவும் சொல்ல வைக்கலாம்)
- ❖ அன்றாடக் கடமைகளின் முறைகளைக் கற்பித்தல் (எகா. சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும் கைகளைக் கழுவுதல், குளித்தபின் சுத்தமான உடை அணிதல், கழிவறைகளைப் பயன்படுத்துதல் போன்றவை).
- ❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப தொடர் பணி அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஊனமுற்ற மாணவரின் தனித்திறனை வெளிக் கொணரப் பயிற்சி அளிப்பதோடு பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த விளையாட்டு முறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துவது அவசியம்.

**32. உடலியக்கக் குறைபாடுகளைக் களைய ஆசிரியர்கள் கையாள வேண்டிய அணுகுமுறைகள் யாவை? (2020)**

- ❖ உடலியக்கக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு அறிவுத்திறன் பாதிப்பு இல்லாததால் சாதாரண குழந்தைகளுக்குக் கற்பிப்பது போல் கற்பிக்கலாம்.
- ❖ தசைகளை வலுவாக்க எளிய உடற்பயிற்சிகள் அளித்தல்.
- ❖ பிடித்த விளையாட்டுக்களில் பங்கேற்கச் செய்தல்.
- ❖ எழுத்துக்களின் வடிவங்களைச் சரியாக எழுதப் பயிற்சி அளித்தல்.
- ❖ இவர்கள் தடையின்றி நடமாடுவதற்கான பள்ளிச் சூழலை ஏற்றவாறு வடிவமைத்துக் கொடுத்தல்.
- ❖ படிகளுக்குப் பதிலாக சாய்தளம் (ramp) அமைத்துத்தர வேண்டும்.
- ❖ கால்கள் செயலிழந்தும் அதிமாக பாதிக்கப்பட்ட நிலையிலும் இருந்தால் வகுப்புத் தேர்வு அறைக்கு வரத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
- ❖ கைகள் பாதிப்பு அடைந்திருந்தால் உதவியாளரைக் கொண்டு தேர்வு எழுதச் செய்யலாம்.(எனினும் தேர்வுக் காலத்தில் மாற்றம் செய்யக்கூடாது)
- ❖ ஒரு கை பாதிக்கப்பட்டிருந்தால், அடுத்த கையைக் கொண்டு எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ❖ இக்குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து கல்விசார்ந்த செயல்களிலும் முன்னுரிமை தர வேண்டும்.

- ❖ இக்குழந்தைகளிடம் உள்ள தனித் திறமைகளைக் கண்டறிந்து அத்திறன்களை மேம்படுத்தி, அவர்களைப் பாட இணைச் செயல்களில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ ஆதாரா வளமையத்திலும், பள்ளியிலும் அளிக்கப்பட்ட தசைப் பயிற்சிகளை இல்லத்திலும் தொடர பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ❖ பள்ளியில் சேர்ந்த குழந்தைகளை உற்று நோக்கி ஆசிரியர்கள் தாம் பெற்ற பயிற்சியின் அடிப்படையில், இயலா மாணவர்களை இனங்கண்டு சிறப்பாசிரியரின் உதவியுடன் மருத்துவர் ஆலோசனை பெற உதவுதல் வேண்டும்.
- ❖ உடல் இயக்கப் பாதிப்புடைய மாணவர்களை அவர்களால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கேற்ற விளையாட்டுக்களில் ஈடுபடச்செய்தல் வேண்டும்.
- ❖ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாகப் பயன்படுத்த பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
- ❖ இவர்களுக்கு சாதனையாளர்களின் கதைகளைக் கூறுவதன் மூலம் ஊக்கமளித்துத் தன்னம்பிக்கை ஏற்படச் செய்யலாம்.

**33. மாணவர்களிடம் ஒலிகளை சரியாக உச்சரிக்க எம்மாதிரியான பயிற்சிகளை அளிப்பாய்? (2019)**

- ❖ மொழியில் உள்ள எளிமையாகப் புரிந்து கொள்ள இயலும் எழுத்து ஒலி-சொற்களை முதலில் அறிமுகப்படுத்திப் பயிற்சி அளித்தல்.
- ❖ படிப்படியாக (சொற்கள் - தொடர்கள்) எளிமையிலிருந்து சிக்கலான, கடினமாக ஒலிப்புகள் கொண்ட சொற்களைத் தொடர்களைப் பொருளறிந்து பேசப் பயிற்சி அளித்தல்.
- ❖ மொழியின் அனைத்து ஒலிகளையும், சொற்களையும் ஒலிப்பதிவு நாடாவின் மூலம் கேட்கச் செய்து, ஒலிப்பு முறைகளை தொலைக்காட்சியில் உற்று நோக்கச் செய்தும் பொருளை விளக்கியும் முறையான உளவியல் உடல்கூறு (பேச்சுறுப்பு) ரீதியிலும் பயிற்சி அளித்தல்.
- ❖ குழந்தைகளுக்குப் பிடித்தமான தலைப்புகளில் உரையாடலையும், கலந்துரையாடலையும், விவாதங்களையும் நேரடியாகவோ, கல்வி நுட்பக் கருவிகள் மூலமாகவோ பயிற்சி அளித்தல். அவ்வாறே எளிய தலைப்புகள் மூலம் குழந்தைகளையும் பின்பற்றி உரையாட விவாதிக்கச் செய்து திருத்தங்கள் செய்து பயிற்சி அளித்தல்.

**34. உடல் ஊனமுற்ற குழந்தைகளின் நலம் காப்பதில் பெற்றோர் – ஆசிரியரின் பங்கு பற்றி விளக்குக. (2019, 2011)**

- ❖ உடல் இயக்க பாதிப்புள்ளவர்களுக்கு தேவையான உபகரணங்கள்-கருவிகள், முடம் நீக்கும் சாதனங்கள் மற்றும் இயற்பியல் சிகிச்சை முறை ஆகியவைகளைப் பெறுவதற்கு ஆசிரியர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- ❖ உடல் ஊனமுற்ற குழந்தைகளை வழி நடத்துவதில், பெற்றோருக்கு விழிப்புணர்ச்சியினை ஆசிரியர் உருவாக்கல் வேண்டும்.
- ❖ உடல் ஊனம் உள்ள குழந்தைகளை கண்டுபிடித்து பள்ளியில் ஒருங்கிணைத்து கல்வித்திட்டத்தின் கீழ் பள்ளியில் சேர்க்க வேண்டும்.
- ❖ அக்குழந்தைகளை அவர்களுடைய குறையை வைத்து அழைக்கக் கூடாது.



DIET DVT

❖ கற்பிக்கும் பாடத்திலோ, முறைகளிலோ அல்லது உபகரணங்களிலோ எந்தவித மாற்றங்களும் தேவையில்லை என்பதை ஆசிரியர் மறந்துவிடக்கூடாது.

❖ உடல் நலப் பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்கு தனிப் பதிவேடுகள் வைத்துக் கொள்ள வேண்டும்.

❖ சக்கர நாற்காலிகள், கைத் தாங்கிகள் போன்றவற்றை பயன்படுத்தும் குழந்தைகள் எளிதாக வகுப்பிற்குள் சென்றுவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கும் வண்ணம் ஆசிரியர் வகுப்பறையை அமைக்க வேண்டும்.

35. **மனவளர்ச்சி குறைபாட்டிற்கான காரணங்கள் நான்கினை எழுதுக.** (2018, 2016, 2026 – 2 **மதிப்பெண்கள்**)

❖ மூளைக் காய்ச்சல்

❖ மரபணுக் குறைபாடு (எ.கா. டவுன்ஸின்ரோம், 21ம் குரோமோசோமில் ஏற்படும் பாதிப்பு)

❖ நரம்பு மண்டலம், தண்டு வடப் பாதிப்பு

❖ பிறப்பின் போது மூளைக்குச் செல்லும் ஆக்ஸிஜன் குறைவு.

❖ பிறப்பின் போது குழந்தையின் தலையில் உண்டாகும் ஆழமான காயங்கள்.

36. **செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் உச்சரிப்பில் காணப்படும் குறைபாடுகள் நான்கினை விளக்குக.** (2018)

சாதாரணமாக செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் உச்சரிப்பில் காணப்படும் குறைபாடுகளை நான்காகப் பிரிக்கலாம்.

1. சேர்த்தல்
2. சிதறுதல்
3. ஒன்றிக்குப் பதிலாக ஒன்றைப் பயன்படுத்துதல்
4. விட்டுவிடுதல்

1. **<u>சேர்த்தல் (Addition)</u>**

தேவையில்லாத இடத்தில் எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

(எ. கா) அம்பு என்பதை அரும்பு என உச்சரித்தல்.

2. **<u>சிதறுதல் (திரித்துக் கூறுதல்) (Distraction)</u>**

சொல்லில் உள்ள எழுத்துக்களின் ஓசைப்படி உச்சரிக்காமல் தான் நினைப்பது போல் உச்சரித்தலாகும். இந்தக் குறைபாட்டினைத் திருத்துவது மிகவும் கடினம்.

(எ. கா) 1. மாங்காய் என்பதை மாந்தாய் என உச்சரித்தல்

2. மதுரை - மருதை என உச்சரித்தல்

3. **<u>ஒன்றிக்குப் பதிலாக ஒன்றைப் பயன்படுத்துதல் (Substitution)</u>**

ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்களை உச்சரிப்பது கடினமாக இருந்தால் வேறொரு எழுத்தின் ஓசையை உச்சரிப்பதாகும்.

(எ. கா) வாழைப் பழம் - வாளப்பலம்

4. **விட்டுவிடுதல்**

குழந்தைகள் ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்களை உச்சரிக்காமல் அப்படியே விட்டு விடுதலாகும்.

(எ. கா) கப்பல் என்பதை கபல் என உச்சரித்தல்.

37. **மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவை? (2017)**

- மூளை வளர்ச்சியில் பின்னடைவு உள்ளதால் கற்றல் திறனில் பின்னடைவு ஏற்படுகிறது.
- எதையும் ஒரே முறையில் கற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படுதல். எடுத்துக்காட்டாக உடல் உறுப்புகள், அன்றாட பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ளுவதில் பிரச்சனை.
- நினைவாற்றலில் பின்னடைவு ஏற்படுதல். கற்றதை நினைவில் நிறுத்திக்கொள்ள சிரமப்படுதல். (எ.கா.) காலையில் கற்றவைகளை மாலையில் அல்லது சில நாட்கள் கழித்து கேட்கும் போது மறந்து விடுதல்.
- சிக்கலைத் தீர்ப்பதில் பின்னடைவு. (எ.கா.) தான் வழக்கமாகச் செல்லும் பேருந்தை ஒருநாள் விட்டு விட்டால் பிறகு என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க முடியாமல் இருத்தல்.
- எதிலும் முடிவெடுப்பதில் பின்னடைவு.
- கவனச்சிதறல். (எகா.) வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்தும்போது கட்டுப்பாடு இன்றி வகுப்பறையை விட்டுச் செல்லுதல்.
- புரிந்து கொண்ட பழக்கவழக்கத்தை பொதுமைப்படுத்துவதில் சிரமம். (எ.கா.) வகுப்பறையில் வணக்கம் சொல்லுவது. அதேபோல் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்கத் தெரியாமல் இருத்தல்.
- பின்விளைவு ஏற்படுத்தக்கூடியவைகளைப் புரிந்து கொள்வதில் கடினம். (எ.கா.) சூடான பாத்திரத்தைத் தொட்டால் சுடும் என்று அறியாமல் தொடுதல்.

38. **செவித்திறன் குறைபாடு ஏற்படக் காரணங்கள் யாவை? (2023) அக்குறைபாடுடைய குழந்தைகளுக்கு உதவும் துணைக் கருவிகள் ஏதேனும் நான்கினைக் கூறுக. (2017)**

**அ. பரம்பரைக் காரணிகள் (மரபணுக்கள் சம்மந்தப்பட்டவை)**

- வாடர்ன் பெர்க் சின்ட்ரோம், இந்த மரபணு கொண்ட ஒருவர் (செவித்திறன் குறையுடையவர்) அதே மரபணு உடைய துணைவரைத் திருமணம் செய்தால்தான் இயல்பான குழந்தைகள் பிறக்கும். இல்லையென்றால் அவர்களுக்குச் செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகள் பிறக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம்.
- நெருங்கிய உறவுமுறைத் திருமணம்
- மரபணுக்களில் ஏற்படும் குறைகள்
- மரபணுக்களில் ஏற்படும் சிதைவுகள் போன்ற காரணங்களால் இக்குறைபாடு ஏற்படலாம்.

**(ஆ) பரம்பரை அல்லாத காரணிகள் (மரபணுக்கள் சாராக் காரணிகள்) (2026 – 4 மதிப்பெண்கள்)**

- மணல் வாரி அம்மை.
- அதிகமான காய்ச்சல் (எ.கா.) புளூ காய்ச்சல், டெங்கு காய்ச்சல்.
- விபத்தின் மூலம் உட்செவியில் ஏற்படும் கட்டி, பாதிப்பு.
- மூளைக்குச் செல்லும் செவி நரம்புகளில் ஏற்படும் பிறவிக் குறைபாடுகள்.
- மூளையில் மொழி வளர்ச்சிக்கு உரிய பகுதியில் ஏற்படும் காயம்.
- அதிகமான சத்தங்களைக் கேட்டல்.
- வயது முதிர்வால் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி.
- தாய் கருவுற்றிருக்கும் போது மஞ்சள் காமாலை நோய் ஏற்படுதல்.
- தாய் கருவுற்றிருக்கும் போது உயிர்ச்சத்துக்களின் பற்றாக்குறை.

**துணைக்கருவிகள்:**

ஒலிப்பான், அழைப்பு மணி, ஒலி எழுப்பும் இசைக்கருவி, டிரம், புவி வரைபடங்கள் மற்றும் புவிக்கோளம், கேளிக்கைச் சித்திரங்கள், மின் அட்டைகள், வண்ண வரைபடங்கள், தனி செவித் துணைக்கருவிகள், குழு செவித் துணைக்கருவிகள் கணினி மென்பொருட்கள், நிலைக்கண்ணாடி, பேச்சுப் பெட்டி, ஒலி எழுப்பும் பொம்மைகள், பேச்சுப் பெட்டி, ஆடியோ மீட்டர், வாசிப்புப் புத்தகங்கள்.

39. **கற்றல் இயலாமை பற்றி விளக்குக.** (2016)

- குழந்தைக்குப் புலன் உறுப்புகளின் செயல்பாட்டிலோ, நுண்ணறிவுத் திறனிலோ அல்லது மனநலத்திலோ யாதொரு குறையும் இன்றி, வகுப்புப் பாடங்களை வாசிப்பதில், எழுதுவதில் மற்றும் கணக்கிடுவதில் சிரமப்படுகின்றார்கள். இவர்களையே கற்றல் திறன் இல்லாதோர் என்கிறோம்.
- சில குழந்தைகளுக்கு மொழி வளர்ச்சிக் குறைவாக இருக்கும். அக்குழந்தைகளுக்குப் பேச்சு உறுப்புகள், கண் பார்வை, கேள்வி உறுப்புகள், மூளை முதலியன இயல்பாகவே இருப்பினும், எழுத்துக்களைக் கூட்டிப் படித்தல், எழுதுதல், அடிப்படை கணிதச் செயல்பாடுகள் முதலிய திறமைகளில் குறைந்தே காணப்படுவர்.
- "தனிப்பட்ட கற்றல் திறன் இல்லாதோர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உளவியல் செயல் முறைகளில் பாதிப்பு ஏற்பட்டு அதன் வெளிப்பாடாக உற்றுக்கேட்டல், நினைவாற்றல், பேச்சு, வாசிப்பு, எழுதுதல், கணக்கிடல் மற்றும் புலன்காட்சி சார்ந்த செயல்பாடுகளில் குறைபாடுடன் விளங்குவர்.
- பார்வை, கேள்வி, மனவளர்ச்சிக் குறைபாடு மற்றும் மனவெழுச்சிக் குழப்பம், சூழ்நிலைத் தாக்கம், சமூக - பொருளாதாரா அனுகூலமின்மை போன்ற காரணங்களால் ஏற்படும் கற்றல் இயலாமை போன்றவைகளைத் தனிப்பட்ட கற்றல் குறைபாடுகளாகக் கருதக்கூடாது.

❖ சுருங்கக் கூறின் எல்லா வகையான நல்ல பின்னணிகளைக் கொண்டு விளங்கும் குழந்தைகள் எழுதுதல், வாசித்தல், பேசுதல் மற்றும் கணக்கிடுதலில் தீவிரக் குறைபாடுடன் விளங்குவதையே கற்றல் இயலாமை என்று கூறுகிறோம்".

**40. சிறப்பு குழந்தைகளிடையே காணப்படும் பேச்சுத்திறன் குறைபாட்டைக் களைய எத்தகைய வழிகளைப் பின்பற்றுவாய்? (2014)**

❖ பெற்றோர்கள் சரியான உச்சரிப்போடு எளிய மொழியை இலக்கணப் பிழையின்றி குழந்தைகளோடு உரையாடி அவர்களையும் பேசுவதற்கு ஊக்குவித்தல்.

❖ தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு முன் மாதிரியாக பேச்சுத்திறனை வளர்ப்பதற்குப் பயன்படுத்துதல்

❖ குழந்தைகளைப் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட வல்லுநர்களிடம் காட்டி பரிந்துரைகளைப் பின்பற்றுதல்.

❖ மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளல்.

❖ பேச்சு நிபுணரின் ஆலோசனையின் அடிப்படையில் பேச்சுப் பயிற்சி (Speech theraphy) கொடுத்தல்.

❖ பயத்தைத் தவிர்க்கச் செய்தல் வேண்டும்.

**41. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் கல்வியில் ஆசிரியரின் பங்கினை குறிப்பிடுக. (2014, 2012)**

❖ பாடத்திட்டத்தில் முழுமையான தேர்ச்சியிலிருந்து விலக்கு அளித்தல்.

❖ வாழ்க்கைக்கு உதவும் திறன்களை (life skills) வளர்ப்பதே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் முக்கியமாக இருக்கச் செய்தல்.

❖ அன்றாட தனிநபர் கடமைகளைச் சரிவர செய்வதற்கு சிறப்பாசிரியரை அணுகி அத்திறன்களைக் கற்பிக்கச் செய்தல்.

❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து கருத்துக்களையும் வாய்மொழியாக மட்டும் இன்றி செயல் மூலமாக படிப்படியாக விளக்க வேண்டும்.

❖ குழந்தையின் மன வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்டே கற்பித்தல் நன்று.

❖ குழந்தைகளுக்கு வெற்றியைத் தரக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும்.

❖ எண்களைக் கற்றபின் கூட்டல், கழித்தல் கற்றுக்கொடுக்க வேண்டும்.

❖ ஞாயிற்றுக்கிழமை என்ற சொல்லைக் கற்றுக்கொடுக்க வேண்டும் எனில் அதனுடன் தொடர்புடைய பொருட்களைக் காட்ட இயலாது. ஆகையால் அதனுடன் தொடர்பு கொண்ட செயல்களைச் சொல்லிப் புரிய வைக்கலாம்.

DIETPY

- ❖ உடலின் பாகங்களைக் கற்றுக்கொடுக்கும் போது முழு உடலைக் காட்டி பிறகு உடலின் பல பாகங்களை ஒவ்வொன்றாகச் சொல்லித்தரலாம்.
- ❖ கற்றல் திறனை திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதன் மூலம் திறனை நிலையாக்கி கொள்ளலாம்.
- ❖ ஒன்று அல்லது இரண்டு கட்டளை வாக்கியங்களுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ நினைவாற்றலை வளர்க்கும் பயிற்சிகளை அளிக்க வேண்டும் (எ.கா.) மேசையில் ஐந்து பொருட்களைக் கிடத்தி ஐந்து நிமிடங்கள் பார்த்தபின் பட்டியலிடச் சொல்லுதல். காலை முதல் மாலை வரை செய்த செயல்களை முழுமையாக சொல்ல வைத்தல் (பகுதி பகுதியாகவும் சொல்ல வைக்கலாம்)
- ❖ அன்றாடக் கடமைகளின் முறைகளைக் கற்பித்தல் (எகா. சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும் கைகளைக் கழுவுதல், குளித்தபின் சுத்தமான உடை அணிதல், கழிவறைகளைப் பயன்படுத்துதல் போன்றவை).
- ❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப தொடர் பணி அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஊனமுற்ற மாணவரின் தனித்திறனை வெளிக் கொணரப் பயிற்சி அளிப்பதோடு பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்த விளையாட்டு முறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துவது அவசியம்.

42. **இயலாக் குழந்தைகளுக்கு அரசு அளிக்கப்பட்டுள்ள கல்விச் சலுகைகள் யாவை? (2014, 2011)**

- ❖ புத்தகம் மற்றும் எழுது பொருட்கள் வாங்கிட ஆண்டொன்றுக்கு ரூபாய் - 400.00
- ❖ சீருடை வாங்கிட வருடத்திற்கொரு முறை ரூபாய் - 200.00
- ❖ போக்குவரத்து உதவித் தொகை மாதமொரு முறை ரூபாய் - 50.00
- ❖ ஐந்தாம் வகுப்புக்கு மேல் படிக்கும் குழந்தைகளுக்கு வாசிப்பவருக்கான உதவித் தொகை மாதமொன்றுக்கு ரூபாய் - 50.00
- ❖ கடுமையாக ஊனமுற்றோருக்கான உதவியாளர் ஊக்கத் தொகை மாதமொன்றுக்கு ரூபாய் - 75.00
- ❖ ஒரு ஊனமுற்றவருக்கு அதிகபட்சம் ஐந்து வருடங்களுக்கு உள்ளான காலத்திற்கு உபகரணங்கள் வாங்கிக் கொள்ள ரூபாய் - 2000.00
- ❖ கை, கால் ஊனமுற்றோர்கள் 10 மாணவர்கள் ஒரு பள்ளியில் படித்தால் அவர்களுக்கான உதவியாளரை வைத்துக்கொள்ள முடியும். அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைநிலை ஊழியருக்கான ஊதியத்தினை வழங்கலாம். விடுதிகளில் தங்கிப் படிப்பவர்களாயின் அவர்களின் பெற்றோர்களில் மாத வருமானம் ரூ.3000க்கு மிகாமல் இருந்தால் விடுதிக் கட்டணமாக மாதமொன்றுக்கு ரூ.200 வழங்கப்படுகிறது.
- ❖ கிராமப்புறப் பள்ளிகளில் 10 ஊனமுற்ற குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்பட்டிருப்பின் அந்த குழந்தைகளின் போக்குவரத்து வசதிக்காக அந்த பள்ளிக்கு ஒரு ரிக்க்ஷா இலவசமாக வழங்கப்படும்.

DIET PVT

அதன் பராமரிப்புக்கு மாதமொன்றுக்கு ரூ.300 வழங்கப்படுகிறது. ரிக்ஷா வழங்கப்படுகின்ற பள்ளிகளுக்கு போக்குவரத்துப் படி தரப்படமாட்டாது.

**பார்வையற்றவர்களுக்கு உள்ள சலுகைகள்**

படிப்பதற்காகத் தற்போது விதிக்கப்பட்டுள்ள உயர்ந்த பட்ச வயது வரம்பு அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வயது வரம்பினைத் தளர்த்தி சலுகை வழங்கப்படுகிறது.

**கல்வி உதவித்தொகை**

கல்வி வசதிகள், உதவித் தொகைகள் திட்டத்தின் கீழ் ஒன்பதாவது வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பொதுக் கல்விக்கும் தொழில் கல்விக்கும் கல்வி நிதி உதவி வழங்கப்படுகிறது.

**பயிற்சிக் கட்டணம்**

இம்மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. SC/ST பிரிவினருக்கு முழு விலக்கும் மற்ற பிரிவினருக்கு ஆண்டு வருமானம் 24,000க்குள் இருப்பின் முழு விலக்கும் அளிக்கப்படுகிறது. மேலும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பார்வையற்றவர்கள் தேர்வுக் காலத்தில் ஒரு மணி நேரத்திற்கு 10 நிமிட நேரம் அதிகமாக எழுதலாம். இத்தேர்வின் போது எழுதுவதற்கென எழுத்தரை (Scriber) வைத்துக் கொள்ளலாம். ஒரு பாடத்தேர்வு எழுதுவதற்கு அவருக்கான உதவித்தொகை ரூ.30 வழங்கப்படும்.

**காது கேளாதோர், கை, கால் ஊனமுற்றவர், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சலுகைகள்**

இவர்களுக்கு மொழிப்பாடத்தில் விலக்கு உண்டு, பயிற்சிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் இல்லை. கற்பதற்கான இலவச உபகரணங்கள் வழங்கப்படும்.

**போக்குவரத்து**

அனைத்து ஊனமுற்றவர்களுக்கும் ரயில்களில் 75 சதவீதம் கட்டணச் சலுகை உண்டு. பார்வையற்றவர்கள், கை, கால் ஊனம், மனவளர்ச்சிக் குன்றியவர்கள் தங்கள் உதவிக்கென உதவியாளரையும் உடன் அழைத்துச் செல்லலாம். பேருந்துகளில் பார்வையற்றவர்கள் மாவட்டம் முழுமைக்கும் இலவசமாகச் செல்லலாம். மற்ற ஊனமுற்றவர்கள் தாங்கள் செல்லும் இடங்களுக்கு மட்டும் இலவசமாகச் செல்லலாம்.

**அடிப்படைத்திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ஊனமுற்றோருக்கான ஒரு சில உதவிகள் அளிக்கப்படுகின்றன.

**ஊனமுற்றோருக்கான இலவசப் பரிசோதனை**

கை, கால் ஊனம், காதுகேளாமை, கண் பார்வை இழப்பு மற்றும் மனவளர்ச்சி குன்றியோர் ஆகிய சகல வகையான ஊனமுற்றோர்களின் இயல்பு மற்றும் தன்மைகள் பரிசோதிப்பதற்கான சலுகைகள் உள்ளன.

**இலவசக் கருவிகள் மற்றும் செயற்கை அவயங்கள் தந்து உதவுதல்**

உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கரவாகனம் செயற்கை கை, கால்கள், உதவிப்பட்டைகள், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், நடப்பதற்கான குச்சிகள், பிரத்யேக ஷீக்கள், எம்.சி. ஆர் காலணிகள் மற்றும் செயல்படுவதற்குத் தேவையான கருவிகள் தரப்படுகின்றன.

**<u>செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு உள்ள சலுகைகள்</u>**

அனைத்து வகையான செவித்திறன் கேட்கும் கருவிகள் கல்வி சாதனங்கள் மற்றும் குறைந்த கண்பார்வை உள்ளவர்கள் பார்ப்பதற்கான கண்ணாடிக் கருவிகள், நடப்பதற்குப் பயன்படும் குச்சிகள், பேசும் கால்குலேட்டர்கள், பேசும் கடிகாரம், டேப் ரெக்கார்டர்கள் போன்றவைகள் அளிக்கப்படுகின்றன.

**<u>மனவளர்ச்சிக் குன்றியவர்களுக்கு உள்ள சலுகைகள்</u>**

அன்றாட வாழ்விற்கான செயல்பாடுகளையும் மற்றும் கல்வியறிவைக் கற்பிப்பதற்கு புத்தகங்கள் மற்றும் கற்பிப்பதற்கு தேவையான சாதனங்கள் வழங்கப்படுகின்றன.

**<u>அறுவை சிகிச்சைக்கு வேண்டிய உதவிகள்</u>**

ஊனத்தின் தன்மையைத் தவிர்க்கும் வகையிலோ அல்லது குறைக்கும் வகையிலோ அறுவை சிகிச்சைக்கு உட்படுபவர்களுக்கு பண உதவிகள் கீழ்கண்டவாறு வழங்கப்படுகின்றன. காது கேளாதவர்களுக்கு ரூ.500, கண் பார்வைக்காக ரூ.1000, மற்றும் உடல் ஊனமுற்றோருக்காக ரூ.3000 வரையிலும் வழங்கப்படுகின்றது. அறுவை சிகிச்சை, அரசாங்க மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற (Charitable) மருத்துவமனைகளில் மட்டுமே செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

43. **ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கற்றல் – கற்பித்தல் உபகரணங்களை விளக்குக.** (2013)

- ❖ அன்றாட வாழ்க்கை பழக்க வழக்கங்களைப் பழக்குவதற்கு எலர் துளைப் பலகை முறையைப் பயன்படுத்துகின்றனர். (விரல்களைப் பயன்படுத்தி பொருட்களை எடுக்க உதவும் துளைப்பலகை
- ❖ கோபுர செட் (Tower set)
- ❖ சிறப்புக் குழந்தைளில் கால் பாதிக்கப்பட்டவருக்குப் பயன்படும் அக்குள் கட்டைகள் (Crutches) பற்றி கற்றுக் கொடுத்தல்.
- ❖ மூளை முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நடைவண்டி உபயோகிக்கச் சொல்லித் தருதல்.
- ❖ தவழ்ந்து செல்ல உதவும் வண்டியை (Crawler) உபயோகிக்கக் கற்றுக் கொடுத்தல்.
- ❖ ஒவ்வொரு குழந்தையும் வசதியுடன் அமர்வதற்கேற்ப ஏற்றவாறு சாய்வு மேசை மற்றும் நாற்காலிகள் கொடுத்தல்.
- ❖ சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வகுப்பறையில் பொருத்தமான கற்பித்தலுக்கான கருவிகள், பெரிய பேனாக்கள் அல்லது பென்சில்கள் சிறுவர்கள் சிரமமின்றி எளிதில் கையாளும் வகையில் கொடுக்கப்படுதல்.
- ❖ அத்துடன் பென்சிலால் அல்லது பேனாவால் எழுத முடியாத ஊனமுற்ற சிறுவர்களுக்கு மின் தட்டச்சுப் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்தல்.

**44. சிறப்பு – குழந்தைகளிடையே வாசித்தலிலுள்ள குறைப்பாட்டை களைய நீவிர் மேற்கொள்ளும் அணுகுமுறையை விளக்குக.** (2013) **மாணவனுக்கு வாசித்தலிலுள்ள பிரச்சினைகளைக் களைய நீவீர் பயன்படுத்தும் அணுகுமுறைகளைக் கூறுக.** (2022, 2026)

DIET PVT

- ❖ பாடப்பொருளை கற்றுத்தரும்போது ஐம்புலன்களைப் பயன்படுத்தி கற்கும் வகையில் கற்கும் செயல்பாடுகளை அமைத்து தர வேண்டும். இம்முறையில் மாதிரி உருவங்கள், காட்சி படங்கள், எழுத்துக்கள் மற்றும் எண்கள் உள்ள மின் அட்டைகள் போன்றவைகளை பயன்படுத்தி கற்றுத்தர வேண்டும்.
- ❖ எழுத்துக்களை கற்பிக்கும்போது ஆசிரியர் செய்ய வேண்டியவை
    - ➢ எழுத்தை சப்தமாகக் கூறுதல்,
    - ➢ எழுத்தை முறையாக எழுதிக்காட்டுதல்.
    - ➢ அவ்வெழுத்தின் மீது எழுத வைத்தல்.
    - ➢ அவ்வெழுத்தைப் பார்த்து எழுத வைத்தல்.
    - ➢ அதே எழுத்தைப் பார்க்காமல் எழுத வைத்தல்.

  இதே முறையில் 10 புதிய எழுத்துக்களைக் கற்க வைத்தல், கற்றுக் கொண்ட எழுத்துக்களைக் கொண்டு புதிய வார்த்தைகளை அமைத்துப் படிக்க வைத்தல்
- ❖ எழுத்தினை கற்று தரும்போது அதன் சரியான உச்சரிப்பையும் கற்கச் செய்ய வேண்டும்.
- ❖ ஆசிரியர் சப்தமாக படித்துக்காட்டிடல் வேண்டும். அதை தொடர்ந்து குழந்தைகள் படிக்க வேண்டும்.
- ❖ குழந்தைகள் படிக்கும்போது வார்த்தையின் மீது விரல் வைத்து படிக்க வைக்க வேண்டும்.
- ❖ குழந்தைகள் படிப்பதை ஒலிநாடாவில் பதியச் செய்து அதை அவர்களையே கேட்க வைக்கும்போது தாம் செய்து தவறுகளை கண்டறிந்து திருத்தி கொள்ள வைத்தல்.

**45. பேச்சுத் திறன் குறைபாடு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? (2024, 2012)**

- ❖ சரியான மூளை வளர்ச்சியின்மை
- ❖ காது உள்ளுறுப்புகள் முழுமையாக வளராமை
- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பேசும் சுற்றுப்புறச் சூழ்நிலை
- ❖ வாய், நாக்கு, தொண்டை இவற்றின் அசைவுகளில் கட்டுப்பாடின்மை
- ❖ கூச்சம், அச்ச உணர்வுகள்
- ❖ மொழியின் ஒலிக்குறிப்புகளைப் புரிந்துகொள்ள இயலாமை
- ❖ உதடுகள் பிளவுபட்டிருந்தால், பிளவுபட்ட அண்ணப்பிளவு
- ❖ நாக்கு தடித்திருத்தல்
- ❖ திக்கு வாய் ஏற்படுவது
- ❖ அதீத மழலைப்பேச்சு
- ❖ மிகக் குறைவான சொற்களையே அறிந்து இருத்தல்
- ❖ பேசும் செயல் வளர்ச்சியில் தாமதம்.

**46. மனவளர்ச்சிக் குறைபாடு என்றால் என்ன? அதன் காரணங்கள் யாவை? (2010)**

- ❖ குழந்தைகள் உடல் அளவில் பலவிதமான குறைபாடுகளுடன் காணப்படலாம்.
- ❖ ஆனால் அவற்றுள் மனவளர்ச்சிக் குறைபாடு என்பது உடல் அளவில் மட்டுமின்றி மூளை மற்றும் மன அளவில் ஏற்படும் மந்தமான வளர்ச்சி அல்லது வளர்ச்சியின்மை ஆகும்.
- ❖ மனவளர்ச்சிக் குறைபாடு குணப்படுத்த இயலாத பாதிப்பாகும்.
- ❖ இவர்களது நுண்ணறிவுத் திறன் குறைவாக இருப்பதால் சமுதாயத்தில் தனித்து வாழவோ அல்லது சேர்ந்து வாழவோ, சூழலுக்கு ஏற்றவாறு இணைந்து வாழவோ, பழகவோ இயலாதவர்களாக இருப்பர்.
- ❖ மேலும் இக்குழந்தைகளை மற்ற சாதாரண குழந்தைகளின் வளர்ச்சியிலும், செயலிலும் ஒப்பிடும்போது நடப்பதிலும், பேசுவதிலும், உணவு உட்கொள்வதிலும் மிகவும் இயலாதவர்களாகவே இருப்பர்.
- ❖ வயது, நேரம், இடத்திற்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுவர்.
- ❖ மனவளர்ச்சிக் குறைபாடு என்பது தங்கள் வயதில் எதிர்பார்க்கப்படுகிற பல்வேறு வேலைகளை நிறைவேற்றுவதில் தோன்றும் இடர்ப்பாடு ஆகும்.

**காரணங்கள்:**

- ❖ மூளைக் காய்ச்சல்
- ❖ மரபணுக் குறைபாடு (எ.கா. டவுன்ஸின்ரோம், 21ம் குரோமோசோமில் ஏற்படும் பாதிப்பு)
- ❖ நரம்பு மண்டலம், தண்டுவடப் பாதிப்பு
- ❖ பிறப்பின் போது மூளைக்குச் செல்லும் ஆக்ஸிஜன் குறைவு.
- ❖ பிறப்பின் போது குழந்தையின் தலையில் உண்டாகும் ஆழமான காயங்கள்.

**47. கற்றல் குறைபாடுடையவர்களுக்கு எவ்வகையான கற்றல் அணுகுமுறைகளை பயன்படுத்துவீர்? (2010)**

- ❖ கற்றல் செயல்பாடுகளை ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் அமைத்தல்.
- ❖ ஒரே மாதிரியான இரண்டு சொற்களையோ, எண்களையோ, எழுத்துக்களையோ இணைத்து ஒரே நேரத்தில் கற்பிக்காமலிருத்தல்.
- ❖ மாணவர்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய செயல்களில் தொடர்ந்து ஈடுபடச் செய்தல். ஒவ்வொரு கற்றல் செயலும் ஒரு குறுகிய காலத்தில் தொடங்கி முடிக்கக்கூடிய செயல்களாக அமைத்தல்.
- ❖ காட்சிக் கருவிகள் மூலமாக கற்றல் அனுபவங்கள் வழங்கப்படுதல்.
- ❖ சரியான பதில்களுக்கு பரிசும் பாராட்டும் வழங்குதல்.
- ❖ கலைத்திட்டத்தை நெகிழ்வுடையதாக்கிக் கற்பித்தல்.

- ❖ கவன வீச்சை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- ❖ ஒவ்வொரு மாணவனுடைய கற்றல் முன்னேற்றத்தை அறிந்து கொள்ள மதிப்பீடு செய்தல்.
- ❖ கற்பித்தல் பாடப் பொருள் பகுதியிலிருந்து தொடர் பணி கொடுக்கப்படுதல்.
- ❖ கற்பித்த பாடப்பொருளை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து கற்க கொடுத்தல்.
- ❖ கற்றல் குறிப்புகளை சுருக்கமானதாக அமைத்துக் கொடுத்தல்.
- ❖ பட விளக்கங்களையும், வரைவுகளையும் கற்பித்தலில் பயன்படுத்துதல்.
- ❖ கற்பித்த பாடப் பகுதியை மீள்பார்வை செய்ய வினாக்கள் கேட்டல், பாடத்தை வாசிக்கச் செய்தல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- ❖ ஆசிரியர்கள் சிறப்பு கல்வியில் பட்டம் பெற்ற ஆசிரியரிடம் ஆலோசனைகளைப் பெற்று கற்றல் கற்பித்தல் முறையை அமைத்தல்.
- ❖ ஆசிரியர்கள் கற்றல் குறைபாடுடைய குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்துதல்.

<u>10 மதிப்பெண்கள்</u>

**48. இயலாக் குழந்தைகளுக்கான கல்விச் சலுகைகளும் பிற சலுகைகளும் பற்றி விளக்குக.** (2021, 2012)

*விடை : 4 மதிப்பெண்கள் வினா எண் 41*

**49. பார்வைத்திறன் குறைபாடுடைய குழந்தைகள் வகுப்பறையில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் யாவை?** (2020, 2017)

- ❖ கரும்பலகையில் எழுதப்படும் எழுத்துக்கள் மாணவர்களுக்குத் தெளிவாக அல்லது முழுவதும் தெரிவதில்லை.
- ❖ மழைக்காலங்களிலோ, வேறு சில காரணங்களினாலோ வகுப்பறையின் வெளிச்சம் குறையும் சமயங்களில் கரும்பலகை மற்றும் புத்தகங்களில் உள்ள எழுத்துக்களைப் படிப்பதில் இடர்ப்பாடு உண்டாகும்.
- ❖ ஆய்வுக் கூடத்தில் அறிவியல் பாடசம்பந்தமான நுட்பமான சோதனைகள் செய்வது, நிறங்களை வேறுபடுத்தி அறிவது போன்றவற்றில் சிரமம் ஏற்படும்.
- ❖ ஓவியம், கைத்தொழில் போன்ற செயல்வழி மூலம் கற்கும் பாடங்களில் மற்ற மாணவர்களுக்கு இணையாகச் செய்ய இயலாமை.
- ❖ புகைப்படம் மற்றும் வரைபடம் முதலியவற்றில் இருந்து தேவைப்படும் விபரங்களைக் கண்டறிவதில் சிரமங்கள் ஏற்படும்.
- ❖ தேர்வுகளில் வடிவியல் போன்ற பாடங்களில் பார்வையின் அடிப்படையிலான கேள்விகளுக்குப் பதில் அளிப்பதில் சிரமங்கள் உண்டாகும்.
- ❖ முழு பார்வைத்திறன் குறைபாடு உள்ள மாணவர்கள் மற்ற மாணவர்கள் படிக்கும் பாடப்புத்தகங்களைப் படிப்பதோடு, பிரெயில் முறையும் கற்றுக் கொள்ள வேண்டி உள்ளது. இதனால் அவர்களுக்கு மன இறுக்கம் ஏற்படும்
- ❖ பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களின் குறைபாடுகளின் தன்மை ஒருவருக்கொருவர் மாறுபட்டு இருப்பதால் அவர்கள் இணைந்து ஒரு செயலில் ஈடுபடுவதில் சிரமம் ஏற்படும்.



DIET PVT

- ❖ பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களுக்கு முதல் வரிசையைத் தவிர பிற வரிசைகளில் அமர்ந்து இருந்தால் கரும்பலகையையோ, ஆசிரியரையோ பார்ப்பதில் தெளிவிருக்காது.
- ❖ வகுப்பறையில் வெளிச்சம் மிகவும் அதிகமாகவோ, மிகவும் குறைவாக இருப்பின் பார்வைத்திறன் குறைபாடுள்ள மாணவர்களால் எழுதுவதிலும், படிப்பதிலும் சிரமம் ஏற்படும்.
- ❖ தொடர்ச்சியாகப் படித்துக் கொண்டே வரும்பொழுது சில வரிகளை விட்டுவிட்டு படிப்பார்கள். அவர்களால் தொடர்ச்சியாகவும், விரைவாகவும் படிக்க இயலாது.
- ❖ படிக்கும் பொழுதும், எழுதும் பொழுதும் எழுத்துப் பிழைகள் ஏற்படும்.
- ❖ வண்ணங்களை அறிவதில் சிரமங்கள் இருக்கும்.
- ❖ கையெழுத்துப் பிரதிகளைப் படிப்பதிலும் சிரமம் இருக்கும்.
- ❖ எழுத்துகளின் வண்ணமும் தன்மையும், எழுதப்பட்டுள்ள காகிதத்தின் வண்ணத்தை ஒத்திருந்தால் அவற்றைப் படிப்பது சிரமமாகும்.
- ❖ ஆசிரியர் கொடுக்கும் ஒப்படைப்பு மற்றும் வீட்டு வேலைகளைச் செய்வதிலும் சிரமம் மற்றும் தாமதம் ஏற்படும்.
- ❖ வெளிச்சம் அதிகம் இல்லாத இடங்களில் நடமாட இயலாது.
- ❖ பொருட்களின் பல்வேறு வடிவங்கள் நிலைகளை அறிந்து கொள்வதில் சிரமங்கள் இருக்கும்.
- ❖ பள்ளி வழித்தடத்தில் உள்ள தடைகளைஅறிந்துகொள்வதில் சிரமம் ஏற்படும்.
- ❖ பாடங்களை விரைவாகப் படிப்பது மற்றும் எழுதுவது உள்ளிட்ட சிக்கல்களைச் சந்திக்கநேரிடும்.
- ❖ பாடங்களைப் படிக்கும்போது கண்களில் அயர்வு மற்றும் தொய்வு ஏற்படும்.
- ❖ சிறிய எழுத்துக்களை படிப்பதில் சிரமம் ஏற்படும்.

50. **உடலியக்கக் குறைபாடுகளைக் களைய ஆசிரியர்கள் கையாள வேண்டிய அணுகுமுறைகளை விளக்குக.** (2019)

- ❖ உடலியக்கக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு அறிவுத்திறன் பாதிப்பு இல்லாததால் சாதாரண குழந்தைகளுக்குக் கற்பிப்பது போல் கற்பிக்கலாம்.
- ❖ தசைகளை வலுவாக்க எளிய உடற்பயிற்சிகள் அளித்தல்.
- ❖ பிடித்த விளையாட்டுக்களில் பங்கேற்கச் செய்தல்.
- ❖ எழுத்துக்களின் வடிவங்களைச் சரியாக எழுதப் பயிற்சி அளித்தல்.
- ❖ இவர்கள் தடையின்றி நடமாடுவதற்கான பள்ளிச் சூழலை ஏற்றவாறு வடிவமைத்துக் கொடுத்தல்.
- ❖ படிகளுக்குப் பதிலாக சாய்தளம் (ramp) அமைத்துத்தர வேண்டும்.
- ❖ கால்கள் செயலிழந்தும் அதிமாக பாதிக்கப்பட்ட நிலையிலும் இருந்தால் வகுப்புத் தேர்வு அறைக்கு வரத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
- ❖ கைகள் பாதிப்பு அடைந்திருந்தால் உதவியாளரைக் கொண்டு தேர்வு எழுதச் செய்யலாம். (எனினும் தேர்வுக் காலத்தில் மாற்றம் செய்யக்கூடாது)
- ❖ ஒரு கை பாதிக்கப்பட்டிருந்தால், அடுத்த கையைக் கொண்டு எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

- ❖ இக்குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து கல்விசார்ந்த செயல்களிலும் முன்னுரிமை தர வேண்டும்.
- ❖ இக்குழந்தைகளிடம் உள்ள தனித் திறமைகளைக் கண்டறிந்து அத்திறன்களை மேம்படுத்தி, அவர்களைப் பாட இணைச் செயல்களில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ ஆதாரா வளமையத்திலும், பள்ளியிலும் அளிக்கப்பட்ட தசைப் பயிற்சிகளை இல்லத்திலும் தொடர பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ❖ பள்ளியில் சேர்ந்த குழந்தைகளை உற்று நோக்கி ஆசிரியர்கள் தாம் பெற்ற பயிற்சியின் அடிப்படையில், இயலா மாணவர்களை இனங்கண்டு சிறப்பாசிரியரின் உதவியுடன் மருத்துவர் ஆலோசனை பெற உதவுதல் வேண்டும்.
- ❖ உடல் இயக்கப் பாதிப்புடைய மாணவர்களை அவர்களால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கேற்ற விளையாட்டுக்களில் ஈடுபடச்செய்தல் வேண்டும்.
- ❖ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாகப் பயன்படுத்த பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
- ❖ இவர்களுக்கு சாதனையாளர்களின் கதைகளைக் கூறுவதன் மூலம் ஊக்கமளித்துத் தன்னம்பிக்கை ஏற்படச் செய்யலாம்.

51. **பேச்சுத்திறன் குறைபாட்டின் வகைகளை விரிவாக விவரிக்கவும்.**(2025, 2018, 2016, 2013) **பேச்சுத்திறன் குறைபாட்டில் உள்ள வகைகள் மற்றும் அவை கற்றலில் எவ்வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை விவரி. (அல்லது) ஒரு மாணவனின் பேச்சுத்திறன் குறைபாட்டினை எவ்வாறு வகைப்படுத்தலாம்?** (2022)

**உச்சரிப்பில் உள்ள குறைபாடுகள்:**

சாதாரணமாக செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் உச்சரிப்பில் காணப்படும் குறைபாடுகளை நான்காகப் பிரிக்கலாம்.

1. சேர்த்தல்
2. சிதறுதல்
3. ஒன்றிக்குப் பதிலாக ஒன்றைப் பயன்படுத்துதல்
4. விட்டுவிடுதல்

***1. <u>சேர்த்தல் (Addition)</u>***

தேவையில்லாத இடத்தில் எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

(எ.கா) அம்பு என்பதை அரும்பு என உச்சரித்தல்.

***2. <u>சிதறுதல் (திரித்துக் கூறுதல்) (Distraction)</u>***

சொல்லில் உள்ள எழுத்துக்களின் ஓசைப்படி உச்சரிக்காமல் தான் நினைப்பது போல் உச்சரித்தலாகும். இந்தக் குறைபாட்டினைத் திருத்துவது மிகவும் கடினம்.

DIET PVT

(எ. கா) 1. மாங்காய் என்பதை மாந்தாய் என உச்சரித்தல்

2. மதுரை - மருதை என உச்சரித்தல்

3. ***ஒன்றிக்குப் பதிலாக ஒன்றைப் பயன்படுத்துதல் (Substitution)***

ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்களை உச்சரிப்பது கடினமாக இருந்தால் வேறொரு எழுத்தின் ஓசையை உச்சரிப்பதாகும்.

(எ. கா) வாழைப் பழம் – வாளப்பலம்

***4. விட்டுவிடுதல்***

குழந்தைகள் ஒரு சொல்லில் உள்ள எழுத்துக்களை உச்சரிக்காமல் அப்படியே விட்டு விடுதலாகும்.

(எ. கா) கப்பல் என்பதை கபல் என உச்சரித்தல்.

**குரலில் உள்ள குறைபாடுகள்**:

குரல்வளை அமைப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பினும் அல்லது குரல்வளையைச் சரிவர பயன்படுத்தவில்லையெனினும் குரல் பாதிக்கபடும்.

***குரல் தொனியில் ஏற்றம் / தாழ்வு***

குரல் வளமாக இருப்பதற்கு தொனி அளவின் செறிவு, வலிமை, குரலின் இயல்பு மூன்றும் முக்கியக் காரணிகளாகும். குரல் நாண்களின் வழியே சென்று வரும் காற்றுதான் நமது குரலின் ஏற்ற இறக்கத்தை நிர்ணயிக்கிறது.

***தொனி (Prosody)***

சில செவித்திறன் குறைபாடு உடையவர் உயர்ந்த தொனியில் (high pitch) பேசுவர். அப்போது தொடு உணர்வு (tactile sense) மூலமாகவும், பந்தினை மேலும் கீழுமாகப் போட்டுக்காட்டும் உத்தியின் மூலமாகவும் தொனியின் செறிவைச் சரிசெய்யலாம்.

***அழுத்தம்***

இயல்பாகப் பேசும் பொழுது சில ஒலிகளுக்குத் தேவையில்லாமல் அழுத்தம் கொடுத்து உச்சரித்தல்.

**பேச்சுச் சரளத்தில் உள்ள குறைபாடுகள்**:

***அ. திக்குதல்***

பேச்சில் தொனி, லயம் மற்றும் சரளம் இருத்தல் அவசியம். பேச்சின் சரளத்தில் தடை ஏற்படும் போது "திக்குதல்" ஏற்படுகிறது. சொன்னதையே திரும்பச் சொல்லுதல், சிலவற்றை நீட்டுதல் போன்றவையும் திக்கும் பொழுது காணப்படும்.

***ஆ. திக்குதலின் இயல்புகள்***

உருக்குலைதல், பேசத் துன்பப்படுதல், தயக்கம் ஏற்படல், சில ஒலிகளை நீட்டுதல், சில ஓசைகளை அவசியமில்லாமல் திரும்பத் திரும்பச் சொல்லுதல், பேச ஆரம்பிப்பதற்கு முன்பே போராடுதல் போன்றவைகளாகும்.

***இ. திக்குதலின் காரணங்கள்***

உளவியல் கட்டுப்பாடுகள், உணர்வுகளின் நிதானமின்மை, நரம்பு மையங்களின் தவறான செயற்பாடுகள்.

***ஈ. ஓசை தாறுமாறாக இருத்தல்***

பேசும் போது கையாள வேண்டிய கால இடைவெளி முறையைக் கையாலாமல் இருத்தல், பேச்சில் அதிவேகம் காட்டுதல், பேசும் வேகத்தில் thOE குளறுதல் போன்றவை காரணமாக தாறுமாறான ஓசை எழுப்புவர்.

***உ. பயம்***

சில நேரங்களில் அளவுக்கதிகமான பயத்தின் காரணமாக பேச்சுக்குறைபாடு ஏற்படுகிறது.

52. **இயலாக் குழந்தைகளின் வாழ்க்கை முன்னேற்றத்தில் பெற்றோர் ஆசிரியர் பங்கினை விளக்குக.** (2015)

**செவித்திறன் குறைபாடு:**

***ஆசிரியர் பங்கு:***

- ❖ செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளை வகுப்பறையில் ஆசிரியரை நன்கு பார்க்கும் வகையில் அமரச் செய்ய வேண்டும். சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- ❖ ஆசிரியர்கள், மாணவர்களை நேரடியாகப் பார்த்துப் பாடம் நடத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியரின் உடல், உதட்டசைவினைப் பார்த்து புரிந்து கொள்ள இயலும்.
- ❖ ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் உபகரணங்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். முக்கியமாக காட்சிப்படங்களை (visual pictures) அதிகமாக காண்பித்தல்.
- ❖ அதிகமான பேச்சுத்திறன் பயிற்சி அளித்தல்.
- ❖ புதிய பாடங்களைக் கற்பிக்கும்போது உண்மைப் பொருள்களை வைத்துப் பாடம் கற்பித்தல்.
- ❖ அதிகமான வாசிப்புப்பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தல்.
- ❖ புதிய பாடங்களைக் கற்பிக்கும் போது கரும்பலகையில் எழுதி பாடப் பொருள்களை விளக்குதல்.
- ❖ உரையாடல் முறையில் பேச்சுத்திறனை வளர்த்தல்.
- ❖ பார்வை மூலம் பெறக்கூடிய அனுபவங்களை உருவாக்குதல்.
- ❖ நிலைக்கண்ணாடியைப் பயன்படுத்தி பேச்சுப் பயிற்சி அளித்தல்.
- ❖ பாடல்கள், செய்யுள் இவற்றைக் கற்பிக்கும்போது சீர்பிரித்து தாளத்துடன் கற்பித்தல்.
- ❖ எழுத்துப் பயிற்சிகளை வாசிப்புத்திறனுடன் செயல்படுத்த ஆசிரியர் முயற்சித்தல்.
- ❖ மிதமான செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களிடம் சைகைமொழியைத் தவிர்த்தல்.
- ❖ எளிமையான வாக்கியங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தல்.
- ❖ நாடகம் மற்றும் உரையாடல் முறையில் பாடங்களை மாணவர்களுக்கு எளிதாகக் கற்க வழி செய்தல்.
- ❖ பாடம் கற்பிக்கும் போது செவித்துணைக் கருவிகளை மாணவர்கள் முறைப்படி பயன்படுத்துகிறார்களா என்று கவனித்தல்.
- ❖ அதிகமாக வண்ண வரைபடங்கள் மற்றும் மின்னட்டைகளைப் பயன்படுத்துதல்.
- ❖ தனித் திறன்களையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

***பெற்றோர்களின் பங்கு***

- ❖ சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறான ஒலிகளைக் கேட்க வைத்தல் மற்றும்அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைப் புரிய வைத்தல். எ.கா - தொலைபேசி அழைப்பு, காலிங் பெல்
- ❖ ஆரம்ப காலத்தில் குழந்தை காது கேட்கும் திறனில் குறை இருப்பதைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த மருத்துவ ஆலோசனை பெறுதல்.
- ❖ வீட்டில் உள்ள பொருட்களின் மேல் அதனதன் பெயரினை எழுதி வைத்தல்.
- ❖ பேச்சுப் பயிற்சி கொடுக்க வேண்டும். வேகமாக பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.
- ❖ பொருள்களின் உதவி கொண்டு சொற்களைக் கற்பித்தல்.
- ❖ செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களிடம் சைகையில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். வார்த்தைகளையே பயன்படுத்துதல் அவசியமான ஒன்றாகும்.

***<u>பேச்சுத்திறன் குறைபாடு:</u>***

- ❖ குழந்தைகள் பேசுவதற்கு அதிக சந்தர்ப்பங்களை கொடுக்க வேண்டும்.
- ❖ குழந்தைகளுடைய முயற்சிகளை பாராட்ட வேண்டும்.
- ❖ குழந்தைகள் பேச ஆரம்பிக்கும் போது அதிகமான தடைகள் ஏற்படுகின்றன. (திக்குதல், மழலைப் பேச்சு பேசுதல், திரும்பக்கூறல், தயங்குதல் முதலானவை)
- ❖ பெற்றோர்களும், ஆசிரியர்களும் பேச்சுப்பயிற்சி கொடுக்கும் பொழுது, குழந்தைகள் ஆரம்ப நிலையிலேயே நன்றாக பேசிவிடும் என எதிர்பார்க்கக் கூடாது.
- ❖ குழந்தைகள் பேசும் பொழுது, அவர்களை விமர்சனம் செய்தாலோ அல்லது கேலி செய்தாலோ, அவர்கள் தங்களைப்பற்றி தங்கள் பேச்சுத்திறனைப் பற்றி கவலை கொள்ளலாம். மேலும் பேசுவதற்கு பயந்து பேச்சில் தடங்கல் ஏற்பட்டு விடும்.
- ❖ முறையாக குறைகளை கண்டறிந்து அவற்றிற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ உச்சரிப்பு பயிற்சிகளுக்கு பெரிய நிலைக் கண்ணாடிகளை பயன்படுத்தலாம்
- ❖ தன் உதட்டசைவுகளை நன்றாகப் பார்க்குமாறு மாணவர்களைப் பார்த்து ஆசிரியர் நிற்க வேண்டும். நிற்கும் போது ஆசிரியர் முகத்தில் வெளிச்சம் படும்படியாக இருத்தல் வேண்டும்.
- ❖ புதிய சொற்களைக் கற்றுத்தரும்போது கரும்பலகையில் எழுதுவதுடன் ஆசிரியர் சொல்லும் போது நிறுத்தி மெதுவாகச் சொல்லல் வேண்டும்,
- ❖ பேச்சுப் பயிற்சிக்குத் தேவையான கற்றல் சாதனங்களை திட்டமிட்டுத் தயாரித்தல்.

***<u>பார்வைக்குறைபாடு:</u>***

- ❖ வீட்டுப்பாடம் செய்வதிலும் வகுப்பறையில் தேர்வு எழுதுவதில் கேள்விகள் கேட்பதிலும் எந்தவிதமான சலுகைகளையும் பார்வையற்ற மாணவ மாணவிகளுக்கு வழங்காமல் இருக்க வேண்டும்,
- ❖ ஆசிரியர்கள் வகுப்பறையில் பாடங்களை நடத்தும்போது கரும்பலகையில் எழுதுவதை வாய்மொழியாகச் சொல்லிச் கொண்டே எழுத வேண்டும்.
- ❖ கேள்விகள் கேட்கப்படும் போது 'நீ சொல்' , அடுத்தவன் சொல் என்பதைத் தவிர்த்து மாணவ மாணவியரின் பெயர்களைச் சொல்லி அழைத்தல் மிக நன்று.

DIET PVT

❖ கணக்குப் பாடத்தைத் கரும்பலகையில் எழுதிவிட்டு 'இதையும், இதையும்', 'இது, இது'என்ற வார்த்தைகளை தவிர்த்தல் வேண்டும்.

❖ அறிவியல் பாடங்கள் நடத்தும் போது தேவையான தொட்டு உணர்ந்து படிக்கக் கூடிய (Tactual aids) படங்களைச் சிறப்பு ஆசிரியர்களிடம் இருந்து பெற்று பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு உதவுதல் வேண்டும்.

❖ தேசப்படங்கள் பற்றி (map) நடத்துகின்ற பொழுதும் வரைபடங்கள் (Graphs) நடத்துகின்ற பொழுதும்; சிறப்பு ஆசிரியர்களின் உதவியுடன் சொல்லிக் கொடுப்பது நல்ல பலனைக் கொடுக்கும்.

❖ வகுப்பில் பார்வையுள்ள மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தி பார்வையற்றவர்களுக்கு வாசித்துக்காட்டுவது, எழுதுவதற்கு உதவுவது போன்ற உதவிகளைச் செய்ய வகுப்பு ஆசிரியர்கள் அறிவுரை வழங்குதல் வேண்டும்,

❖ கற்பிக்கும் கருவிகளை உருவாக்கும் போது பார்வையற்ற மாணவனையும் மனதில் கொண்டு உருவாக்க வேண்டும்.

❖ பாடங்களை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து கற்பித்தல் பார்வையற்றவர்கள் தன்னுடன் கல்வி கற்போரிடம் இணைந்து கல்வி கற்க ஏதுவாக இருக்கும்.

❖ பார்வைக் குறைபாடு (low vision) மற்றும் முழுமையாக பார்வையற்ற (Totally blind) மாணவ, மாணவிகளுக்கு ஏற்ற கற்பித்தல் முறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

❖ பார்வைக் குறைபாடுடையோரிடம் உள்ள புத்தாக்கச் சிந்தனை ஆக்கச் சிந்தனை போன்றவற்றினை வளர்ப்பதற்கு பெற்றோரும், ஆசிரியரும் ஊக்கப்படுத்துதல் வேண்டும்,

❖ அவ்வப்போது பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு வாய்ப்புக் கொடுத்து பாடத்தை பிரெயிலில் வாசிக்கச் சொல்ல வேண்டும்.

❖ பார்வையுள்ளவர்களுடன் சேர்ந்து விளையாட கற்றுத் தர வேண்டும்.

❖ பார்வையற்ற மாணவ மாணவிகளின் தனித்திறமைகளை அறிந்து அவற்றை வளர்ப்பதற்கான ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். உதாரணமாக பாட்டு, பேச்சுத்திறமை, பலகுரல், தனிநடிப்பு போன்ற திறமைகளைவளர்த்து பள்ளி விழாக்களிலும் இதர நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற வாய்ப்பளிக்க வேண்டும்,

❖ வகுப்பறையிலும், பள்ளி விடுதியிலும் பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கத் தனி இருப்பிடம் தராமல் மற்றவர்களோடு சேர்ந்து இருக்கச் செய்தல் மிகமிக அவசியம்.

***<u>உடல் ஊனமுற்ற குழந்தைகள்:</u>***

❖ உடல் இயக்க பாதிப்புள்ளவர்களுக்கு தேவையான உபகரணங்கள்-கருவிகள், முடம் நீக்கும் சாதனங்கள் மற்றும் இயற்பியல் சிகிச்சை முறை ஆகியவைகளைப் பெறுவதற்கு ஆசிரியர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

❖ உடல் ஊனமுற்ற குழந்தைகளை வழிநடத்துவதில், பெற்றோருக்கு விழிப்புணர்ச்சியினை ஆசிரியர் உருவாக்கல் வேண்டும்.

❖ உடல் ஊனம் உள்ள குழந்தைகளை கண்டுபிடித்து பள்ளியில் ஒருங்கிணைத்து கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளியில் சேர்க்க வேண்டும்.

❖ அக்குழந்தைகளை அவர்களுடைய குறையை வைத்து அழைக்கக் கூடாது.

❖ கற்பிக்கும் பாடத்திலோ, முறைகளிலோ அல்லது உபகரணங்களிலோ எந்தவித மாற்றங்களும் தேவையில்லை என்பதை ஆசிரியர் மறந்து விடக்கூடாது.

❖ உடல் நலப் பிரச்சினைகள் உள்ள குழந்தைகளுக்கு தனிப் பதிவேடுகள் வைத்துக் கொள்ள வேண்டும்.

❖ சக்கர நாற்காலிகள், கைத் தாங்கிகள் போன்றவற்றை பயன்படுத்தும் குழந்தைகள் எளிதாக வகுப்பிற்குள் சென்றுவகுப்பு நிகழ்ச்சியில் பங்கேற்கும் வண்ணம் ஆசிரியர் வகுப்பறையை அமைக்க வேண்டும்.

***<u>மனவளர்ச்சிக் குறைபாடு:</u>***

❖ பாடத்திட்டத்தில் முழுமையான தேர்ச்சியிலிருந்து விலக்கு அளித்தல்.

❖ வாழ்க்கைக்கு உதவும் திறன்களை (life skills) வளர்ப்பதே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் முக்கியமாக இருக்கச் செய்தல்.

❖ அன்றாட தனி நபர் கடமைகளைச் சரிவர செய்வதற்கு சிறப்பாசிரியரை அணுகி அத்திறன்களைக் கற்பிக்கச் செய்தல்.

❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து கருத்துக்களையும் வாய்மொழியாக மட்டும் இன்றி செயல் மூலமாக படிப்படியாக விளக்க வேண்டும்.

❖ குழந்தையின் மன வளர்ச்சிக்கு ஏற்றாற் போல் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்களைக் கொண்டே கற்பித்தல் நன்று.

❖ குழந்தைகளுக்கு வெற்றியைத் தரக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும்.

❖ எண்களைக் கற்ற பின் கூட்டல், கழித்தல் கற்றுக் கொடுக்க வேண்டும்.

❖ ஞாயிற்றுக்கிழமை என்ற சொல்லைக் கற்றுக்கொடுக்க வேண்டும் எனில் அதனுடன் தொடர்புடைய பொருட்களைக் காட்ட இயலாது. ஆகையால் அதனுடன் தொடர்பு கொண்ட செயல்களைச் சொல்லிப் புரிய வைக்கலாம்.

❖ உடலின் பாகங்களைக் கற்றுக்கொடுக்கும் போது முழு உடலைக் காட்டி பிறகு உடலின் பல பாகங்களை ஒவ்வொன்றாகச் சொல்லித்தரலாம்.

❖ கற்றல் திறனை திரும்பத் திரும்பப் பயிற்சி செய்வதன் மூலம் திறனை நிலையாக்கி கொள்ளலாம்.

❖ ஒன்று அல்லது இரண்டு கட்டளை வாக்கியங்களுக்கு மிகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖ நினைவாற்றலை வளர்க்கும் பயிற்சிகளை அளிக்க வேண்டும் (எ.கா.) மேசையில் ஐந்து பொருட்களைக் கிடத்தி ஐந்து நிமிடங்கள் பார்த்தபின் பட்டியலிடச் சொல்லுதல். காலை முதல் மாலை வரை செய்த செயல்களை முழுமையாக சொல்ல வைத்தல் (பகுதி பகுதியாகவும் சொல்ல வைக்கலாம்)

❖ அன்றாடக் கடமைகளின் முறைகளைக் கற்பித்தல் (எகா. சாப்பிடுவதற்கு முன்னும், பின்னும் கைகளைக் கழுவுதல், குளித்தபின் சுத்தமான உடை அணிதல், கழிவறைகளைப் பயன்படுத்துதல் போன்றவை).

❖ குழந்தைகளின் திறமைக்கு ஏற்ப தொடர் பணி அளிக்க வேண்டும். ஒவ்வொரு ஊனமுற்ற மாணவரின் தனித்திறனை வெளிக் கொணரப் பயிற்சி அளிப்பதோடு பொழுது போக்கு அம்சங்கள்

நிறைந்த விளையாட்டு முறைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துவது அவசியம்.

**53. உடல் இயக்கக் குறைபாடு உடையவர்களின் கல்விப் பிரச்சனைகள் யாவை? அவற்றைக் களைவதற்கான அணுகுமுறைகளை விவரி.** (2014, 2011)

**உடல் இயக்கக் குறைபாடு உடையவர்களின் கல்விப் பிரச்சனைகள்:**

- ➢ இடம் பெயருவதில் ஊனமுள்ள குழந்தைகள் தன்னுடைய குறைவான இடப்பெயர்ச்சித் திறனின் காரணமாகப் பள்ளிக்குக் குறித்த நேரத்தில் வர இயலாமை.
- ➢ ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதில் உள்ள சிரமங்கள்.
- ➢ எழுது பொருட்களைப் பயன்படுத்துவதில் சிரமங்கள்.
- ➢ கைகளும் கண்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதில் சிரமம் (மூளை முடக்குவாதம் எனில்).
- ➢ கட்டிட அமைப்பு (படிகள் / மாடிப்படிகள்) தடங்கலாக இருப்பதால் அன்றாடக் கடமைகளைப் பூர்த்தி செய்வதில் தாமதம்.
- ➢ கால்கள் செயலிழந்தோ, துண்டித்த நிலையிலோ இருப்பின் தேர்வு அறைக்குத் தகுந்த ஏற்பாடுகளுடன் வருவதில் தாமதம்.
- ➢ கைகள் பாதிப்பு அடைந்தோர் தேர்வு எழுதுவதில் சிரமம்.
- ➢ அடிக்கடி மூட்டுகளில் ஏற்படும் வலி.
- ➢ கனமான பொருட்களைத் தூக்குவதிலும், தரையில் வைப்பதிலும் சிரமப்படுதல்.
- ➢ பள்ளியில் விளையாட முடியாமல் சக மாணவர்களிடமிருந்து தனித்து இருத்தல்.
- ➢ நடக்கும்போது தேவையில்லாத அசைவு / அதிர்வுகள் ஏற்படுதல்.
- ➢ வகுப்பில் நீண்ட நேரம் ஒரே இடத்தில் உட்கார இயலாமை.
- ➢ சிறுநீர், மலம் கழித்தலில் சிரமப்படுதல்.
- ➢ வகுப்பறையில் சக மாணவர்களுடன் ஒத்துப் போவதில் பிரச்சினை.

**உடல் இயக்கக் குறைபாடு உடையவர்களின் கல்விப் பிரச்சனைகள் களைவதற்கான அணுகுமுறைகள்:**

- ❖ உடலியக்கக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு அறிவுத்திறன் பாதிப்பு இல்லாததால் சாதாரண குழந்தைகளுக்குக் கற்பிப்பது போல் கற்பிக்கலாம்.
- ❖ தசைகளை வலுவாக்க எளிய உடற்பயிற்சிகள் அளித்தல்.
- ❖ பிடித்த விளையாட்டுக்களில் பங்கேற்கச் செய்தல்.
- ❖ எழுத்துக்களின் வடிவங்களைச் சரியாக எழுதப் பயிற்சி அளித்தல்.
- ❖ இவர்கள் தடையின்றி நடமாடுவதற்கான பள்ளிச் சூழலை ஏற்றவாறு வடிவமைத்துக் கொடுத்தல்.
- ❖ படிகளுக்குப் பதிலாக சாய்தளம் (ramp) அமைத்துத்தர வேண்டும்.
- ❖ கால்கள் செயலிழந்தும் அதிமாக பாதிக்கப்பட்ட நிலையிலும் இருந்தால் வகுப்புத் தேர்வு அறைக்கு வரத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.
- ❖ கைகள் பாதிப்பு அடைந்திருந்தால் உதவியாளரைக் கொண்டு தேர்வு எழுதச் செய்யலாம். (எனினும் தேர்வுக் காலத்தில் மாற்றம் செய்யக்கூடாது)
- ❖ ஒரு கை பாதிக்கப்பட்டிருந்தால், அடுத்த கையைக் கொண்டு எழுதப் பயிற்சி அளிக்க வேண்டும்.

- ❖ இக்குழந்தைகளை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து கல்விசார்ந்த செயல்களிலும் முன்னுரிமை தர வேண்டும்.
- ❖ இக்குழந்தைகளிடம் உள்ள தனித் திறமைகளைக் கண்டறிந்து அத்திறன்களை மேம்படுத்தி, அவர்களைப் பாட இணைச் செயல்களில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ ஆதாரா வளமையத்திலும், பள்ளியிலும் அளிக்கப்பட்ட தசைப் பயிற்சிகளை இல்லத்திலும் தொடர பெற்றோர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- ❖ பள்ளியில் சேர்ந்த குழந்தைகளை உற்று நோக்கி ஆசிரியர்கள் தாம் பெற்ற பயிற்சியின் அடிப்படையில், இயலா மாணவர்களை இனங்கண்டு சிறப்பாசிரியரின் உதவியுடன் மருத்துவர் ஆலோசனை பெற உதவுதல் வேண்டும்.
- ❖ உடல் இயக்கப் பாதிப்புடைய மாணவர்களை அவர்களால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கேற்ற விளையாட்டுக்களில் ஈடுபடச்செய்தல் வேண்டும்.
- ❖ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாகப் பயன்படுத்த பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
- ❖ இவர்களுக்கு சாதனையாளர்களின் கதைகளைக் கூறுவதன் மூலம் ஊக்கமளித்துத் தன்னம்பிக்கை ஏற்படச் செய்யலாம்.

54. **கற்றல் குறைபாடுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் அணுகுமுறைகளை விளக்குக.** (2010) **கற்றல் குறைபாடுடையவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பின்பற்ற அணுகுமுறைகளை விவரிக்கவும்.** (2026)

- ❖ கற்றல் செயல்பாடுகளை ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், சிந்தனையைத் தூண்டும் வகையிலும் அமைத்தல்.
- ❖ ஒரே மாதிரியான இரண்டு சொற்களையோ, எண்களையோ, எழுத்துக்களையோ இணைத்து ஒரே நேரத்தில் கற்பிக்காமலிருத்தல்.
- ❖ மாணவர்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய செயல்களில் தொடர்ந்து ஈடுபடச் செய்தல். ஒவ்வொரு கற்றல் செயலும் ஒரு குறுகிய காலத்தில் தொடங்கி முடிக்கக்கூடிய செயல்களாக அமைத்தல்.
- ❖ காட்சிக் கருவிகள் மூலமாக கற்றல் அனுபவங்கள் வழங்கப்படுதல்.
- ❖ சரியான பதில்களுக்கு பரிசும் பாராட்டும் வழங்குதல்.
- ❖ கலைத்திட்டத்தை நெகிழ்வுடையதாக்கிக் கற்பித்தல்.
- ❖ கவன வீச்சை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.
- ❖ ஒவ்வொரு மாணவனுடைய கற்றல் முன்னேற்றத்தை அறிந்து கொள்ள மதிப்பீடு செய்தல்.
- ❖ கற்பித்தல் பாடப் பொருள் பகுதியிலிருந்து தொடர் பணி கொடுக்கப்படுதல்.
- ❖ கற்பித்த பாடப்பொருளை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து கற்க கொடுத்தல்.
- ❖ கற்றல் குறிப்புகளை சுருக்கமானதாக அமைத்துக் கொடுத்தல்.
- ❖ பட விளக்கங்களையும், வரைவுகளையும் கற்பித்தலில் பயன்படுத்துதல்.
- ❖ கற்பித்த பாடப் பகுதியை மீள்பார்வை செய்ய வினாக்கள் கேட்டல், பாடத்தை வாசிக்கச் செய்தல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
- ❖ ஆசிரியர்கள் சிறப்பு கல்வியில் பட்டம் பெற்ற ஆசிரியரிடம் ஆலோசனைகளைப் பெற்று கற்றல் கற்பித்தல் முறையை அமைத்தல்.

❖ ஆசிரியர்கள் கற்றல் குறைபாடுடைய குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்துதல்.

***கூடுதல் வினாக்கள்***

**55. இந்திய நாட்டில் சிறப்பியல்பு குழந்தைகளுக்கான கல்வி வாய்ப்புகள் எவ்வாறு கொடுக்கப்பட வேண்டும் என்று சுவாமி விவேகானந்தா வலியுறுத்துகிறார்? (2 மதிப்பெண்கள்)**

சுவாமி விவேகானந்தர் "சிறப்பியல்புக் குழந்தைகள் கல்வியை நோக்கி வர இயலவில்லை எனில் கல்விதான் அவர்களை நோக்கிச் செல்ல வேண்டும்" - என்று வலியுறுத்தியுள்ளார்.

**56. சிறப்புப் பள்ளி என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

சிறப்புப் பள்ளிகளில் ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி வழங்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கல்வி அளிக்கப்படுகிறது. சிறப்புப் பள்ளி என்பது மற்ற பள்ளிகளில் இருந்து வேறுபட்டு சிறப்புத் தன்மையைக் கொண்டு இயங்கும்.

**57. இயலாதோர்க்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

ஒரே வகுப்பறையில் இயல்பான குழந்தைகளோடு ஊனமுற்ற குழந்தைகளையும் சேர்த்து கல்வி அளிப்பது ஒருங்கிணைந்த கல்வி. இதில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஆதார ஆசிரியர்களாக செயல்பட்டு வகுப்பாசிரியரின் உதவியோடு, ஆதார வகுப்பறையில் ஊனமுற்ற குழந்தைகளுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் உபகரணங்களைக் கொண்டு கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வர். இதில் ஆதார அறை (Resource Room) என்பது தனியாக அமைக்கப்பட்டிருக்கும். இம்முறையில் பள்ளிகளில் ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் ஓர் அங்கமாகச் செயல்படுகிறது.

**58. கல்விசார் திறன் குறைபாடு வகைகள் யாவை? (2 மதிப்பெண்கள்)**

- ❖ வாசிப்பதில் ஏற்படும் பிரச்சனை
- ❖ எழுதுவதில் ஏற்படும் பிரச்சனை
- ❖ கணக்கிடலில் ஏற்படும் பிரச்சனை

**59. எழுதுவதில் உள்ள பிரச்சனைகளை களைய குறைதீர் அணுகுமுறைகள் யாவை? (2025- 4 மதிப்பெண்கள்)**

- ❖ எழுத்துகளை எழுதுவதற்கு முன் பல விதமான கோடுக்களைப் போட்டு பழக வேண்டும். குழந்தைகளுக்கு கை அசைவு பயிற்சி கொடுக்க வேண்டும். இதற்கு புள்ளிகளிட்ட தாளில் புள்ளிகளை மேல்நோக்கி, கீழ்நோக்கி, வலப்பக்கம், இடப்பக்கம், சதுரம், வட்டம் போன்ற வடிவங்களை வரைவதில் பயிற்சி கொடுக்க வேண்டும்.
- ❖ எழுத்துப் பயிற்சி புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளின் மீது எழுதச் செய்தல், எழுத்துக்களைப் பார்த்து எழுதச்செய்தல், சரியான வடிவத்தில் எழுதும்வரை பயிற்சி கொடுக்க வேண்டும்.
- ❖ வார்த்தைகளை பிழையின்றி எழுத பயிற்சி தருதல்.

**60. கற்றல் குறைபாடு - சாதனையாளர்களின் பட்டியல்களை கூறுக. (2 மதிப்பெண்கள்)**

வின்ஸ்டண்ட் சர்ச்சில், வால்ட் டிஸ்னி, எடிசன், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கோயா, அலெக்சாண்டர் கிரகாம்பெல், ஸ்டீபன் ஹாகிங், மில்டன் ஜார்ஜ் பேட்டன், நெல்சன் ராக்பில்லர், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் காரிட் டியூமன், வெர்னர் வோன்பிரான், ஜார்ஜ் வாசிங்டன், உட்ரவ் வில்சன்.

DIET PVT

61. **பாதிப்பு என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

ஒருவரது உளவியல் மற்றும் உடலியல் சார்ந்த உறுப்புகளின் இழப்பு அல்லது அதன் அமைப்பு மற்றும் செயல்பாடுகளில் ஏற்படும் மாறுபட்ட தன்மை. இந்த பாதிப்பு என்பது நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ இருக்கலாம்.

62. **ஊனம் என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

ஊனம் என்பது ஒரு தடையாகும். அன்றாடச் செயல்பாடுகளைச் செய்வதில் மிகுந்த சிரமங்கள் இருப்பது என்ற நிலையே ஊனம் ஆகும். இதன் காரணமாக சுற்றுப்புறத்திலும் சமூகத்திலும் சராசரி மனிதன் போல இருப்பது சாத்தியமில்லாததாகிறது. ஒருவரது வளர்ச்சி எப்போது நிரந்தரமாக பாதிக்கப்படுகிறதோ அதுதான் ஊனம் எனப்படும்.

63. **செவித்திறன் பாதிப்பு என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

செவித்திறன் பாதிப்பு என்பது உரையாடல் மற்றும் பெரும்பாலான சூழ்நிலையில் பேச்சைக் கேட்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் உரிய திறமையின்மையாகும். இது இயற்கையில் குழந்தையின் வளர்ச்சியையும் மற்றும் இயல்பான நடைமுறையையும் பாதிக்கிறது. மிக முக்கியமாக கேட்டல், பேசுதல் மற்றும் புரிந்து கொள்ளுதல் போன்றவற்றால் பாதிப்படைகிறது.

செவித்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குக் கேட்பதில், பேசுவதில், தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதில் அதிக சிரமம் இருக்கும். இக்குறைபாடுடைய குழந்தைகளிடம் அதிகம் பேசும் திறன் காணமுடியாது.

64. **செவித்திறன்குறைபாடுடையோர் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகள் யாது?** (2025, 2022) ----- **(4 மதிப்பெண்கள்)**

- ❖ செவித்திறன் இழப்பை இளம் வயதிலேயே கண்டுபிடித்து, செவித்திறன் இழப்புக்கு ஏற்ப தகுந்த செவித்துணைக் கருவியை அவ் வயதிலேயே அணிவித்து, ஒலிகளை உற்றுக் கேட்கப்பயிற்சியளித்தல். சூழ்நிலையிலுள்ள ஒலிகளை வேறுபடுத்தவும் பயிற்சியளித்தல்.
- ❖ செவித்திறன் குறைபாடுடைய மாணவர்கள் இயல்பாக வாழ முடியும் என்ற எண்ணத்தை பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் வளர்த்தல். பெற்றோர்கள், செவித்திறன் குறையுடையோரிடம் பேச்சுத்திறனை வளர்க்கும் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்.
- ❖ பெற்றோர் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல். ஒத்த வயதுடைய மாணவர்களுடன் இயல்பாக வாழமுடியும் என்ற எண்ணத்தை வளர்த்தல்.
- ❖ செவித்திறன் குறையுடையவர்களிடம் ஆசிரியர் சிறப்புக் கவனம் செலுத்துதல்.
- ❖ சிறப்புப்பயிற்சி பெற்றவர்களின் உதவியை நாடுதல்.

65. **பேச்சுத்திறன் பாதிப்புகளை வெளிப்படுத்தும் அறிகுறிகள் யாவை? (2024 - 2 மதிப்பெண்கள்)**

- ❖ தொடர்ந்து பேசுவதில் சிரமம் ஏற்படும்
- ❖ பேசும் போது இடையே ஒரு சொல்லைச் சொல்ல நீண்ட நேரம் ஆக்குவார்கள்
- ❖ பேச்சுத்திறன் குறையுடையோர்களில் சிலர் சொற்களை சொல்லும் போது சில எழுத்துக்களை அழுத்தமாக உச்சரிப்பார்கள்.
- ❖ எப்போதும் அச்சத்துடன், பதட்டத்துடன் காணப்படுவர்.

**66. பேச்சுத்திறன் குறைபாடுடையோருக்கு கற்றலில் எத்தகைய இடர்பாடுகள் ஏற்படும்? (4 மதிப்பெண்கள்)**

- ஆசிரியர் கூறும் கருத்துக்களைப் புரிந்து பேசுவதில் ஏற்படும் சிரமம்
- பாடங்களைப் படிப்பதில் சிக்கல்.
- குறிப்பிட்ட நேரத்திற்குள் படிக்க இயலாமை.
- ஆசிரியர் கற்பித்தலைப் புரிந்துகொள்ள வழிகாட்டும் செயல்களைச் செய்ய இயலாமை (கற்பித்தல் செயலில்)
- வாக்கிய உச்சரிப்பின்போது வார்த்தைகளைச் சரியான அசைப் பிரிக்காது தவறாகப் பேசுதல்.
- வார்த்தையைத் தொடங்கும் முன்பே பேச முடியாமல் அப்படியே தடங்கள் ஏற்படுவதால்
- பேச்சைக் கேட்பவர்களுக்கு பொருள் வெளிப்படையாக உடனடியாகப் புரியாது.
- திக்கித் திக்கிப் பேசுவதால் குரல்வளம் குன்றிக் காணப்படுகிறது.

**67. பேச்சுத்திறன் குறைபாட்டினை நீக்கும் வழிகள் யாது? (4 மதிப்பெண்கள்)**

- பெற்றோர்கள் சரியான உச்சரிப்போடு எளிய மொழியை இலக்கணப் பிழையின்றி குழந்தைகளோடு உரையாடி அவர்களையும் பேசுவதற்கு ஊக்குவித்தல்.
- தகவல் தொடர்பு சாதனங்கள் ஒரு முன் மாதிரியாக பேச்சுத்திறனை வளர்ப்பதற்குப் பயன்படுத்துதல்
- குழந்தைகளைப் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட வல்லுநர்களிடம் காட்டி பரிந்துரைகளைப் பின்பற்றுதல்.
- மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளல்.
- பேச்சு நிபுணரின் ஆலோசனையின் அடிப்படையில் பேச்சுப் பயிற்சி (Speech theraphy) கொடுத்தல்.
- பயத்தைத் தவிர்க்கச் செய்தல் வேண்டும்.

**68. பேச்சுத்திறன் குறைபாடுடையோருக்கு ஒலிகளை உச்சரிப்பதில் எத்தகைய பயிற்சி அளித்தல் வேண்டும்? (4 மதிப்பெண்கள்)**

- மொழியில் உள்ள எளிமையாகப் புரிந்து கொள்ள இயலும் எழுத்து ஒலி-சொற்களை முதலில் அறிமுகப்படுத்திப் பயிற்சி அளித்தல்.
- படிப்படியாக (சொற்கள் - தொடர்கள்) எளிமையிலிருந்து சிக்கலான, கடினமாக ஒலிப்புகள் கொண்ட சொற்களைத் தொடர்களைப் பொருளறிந்து பேசப் பயிற்சி அளித்தல்.
- மொழியின் அனைத்து ஒலிகளையும், சொற்களையும் ஒலிப்பதிவு நாடாவின் மூலம் கேட்கச் செய்து, ஒலிப்பு முறைகளை தொலைக்காட்சியில் உற்று நோக்கச் செய்தும் பொருளை விளக்கியும் முறையான உளவியல் உடல்கூறு (பேச்சுறுப்பு) ரீதியிலும் பயிற்சி அளித்தல்.
- குழந்தைகளுக்குப் பிடித்தமான தலைப்புகளில் உரையாடலையும், கலந்துரையாடலையும், விவாதங்களையும் நேரடியாகவோ, கல்வி நுட்பக் கருவிகள் மூலமாகவோ பயிற்சி அளித்தல். அவ்வாறே எளிய தலைப்புகள் மூலம் குழந்தைகளையும் பின்பற்றி உரையாட விவாதிக்கச் செய்து திருத்தங்கள் செய்து பயிற்சி அளித்தல்.

DIET PVT

**69. பேச்சுத்திறன் குறைபாடுகளைக் களைய ஆசிரியர் கையாளும் அணுகுமுறைகள் யாவை? (4 மதிப்பெண்கள்)**

- ❖ சரியான உச்சரிப்புடன் நிறுத்தி, பலமுறை மீண்டும் மீண்டும் உச்சரித்தல்.
- ❖ சொற்றொடர்களைப் பொருள் விளங்கக் கூறுதல்.
- ❖ சக மாணவர்களோடு உரையாடும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.
- ❖ மொழிப் பயன்பாட்டில் நிகழும் தவறுகளைத் திருத்துவதன் மூலமாகப் பேச்சுத் திறனை மேம்படுத்துதல்.
- ❖ சுருக்கமாக, தெளிவாக, துல்லியமாக, குறைந்த நேரத்தில் சரியான முறையில் பேசுவதற்கு பயிற்சி அளித்தல்.
- ❖ ஆசிரியர், அப்பகுதியில் பணியாற்றும் சிறப்பு மருத்துவர், பேச்சு நிபுணர்கள் போன்ற வல்லுநர்களிடம் குழந்தையைப் பற்றி ஆலோசனை கேட்பதற்கு பெற்றோர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.
- ❖ திக்கிப் பேசும், குழறிப் பேசும் குழந்தைகளின் பிரச்சனைகளில் தனி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ❖ படிப்படியாகப் பேசுகின்ற மன உறுதியை வளர்ப்பதற்குப் பாராட்டல், பொறுப்பு வழங்கல் போன்ற ஊக்க உத்திகளை ஆசிரியர் கையாள வேண்டும்.
- ❖ இந்நிலையில் உள்ள மாணவர்களை அடிக்கடி குழுச் செயலில் ஈடுபடுத்தி அச்சம், கூச்சம் ஆகியவற்றை நீக்குதல்.
- ❖ நகைச்சுவையாகவும், தோழமை உணர்வுடன் உரையாடும் இனிமையான வகுப்பறைச் சூழலை உருவாக்கி சரளமாகப் பேச செய்தல்.

**70. பார்வையில் பாதிப்பு என்றால் என்ன? (2 மதிப்பெண்கள்)**

பார்வையில் பாதிப்பு என்பது கண்நோய், விபத்து மற்றும் பிறவியிலிருந்தே இருக்கும் கண்ணின் பார்வைத் தன்மை ஆகிய காரணங்களால் ஏற்பட்ட குறைந்த பார்வையாகும். சில பார்வை பாதிப்புகளைச் சிகிச்சை மூலம் சரி செய்யலாம்.

**71. பார்வைக் குறைபாடுகளைக் களைய ஆசிரியர் கையாள வேண்டிய அணுகுமுறைகள் யாவை? (2024 - 10 மதிப்பெண்கள்)**

- ❖ பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளை வகுப்பின் முன் வரிசையில் அமர வைக்க வேண்டும்.
- ❖ கண்களில் நேரடியாக ஒளிபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ ஃபெல்ட் எழுதுகோல் (Felt pen) அல்லது தக்கை எழுதுகோல் (Sketch pen) அல்லது தடிப்பான எழுதுகோல் (Marker pen) ஆகியவற்றைக் கொடுத்து எழுதச் செய்ய வேண்டும்.
- ❖ துணைக் கருவிகளில் உள்ள எழுத்துக்கள் பெரிதாகவும், எதிர்மறை வண்ணங்களைக் கொண்டதாகவும் தயாரிக்கப்படவேண்டும்.
- ❖ கரும்பலகையில் எழுதும்போது வாய்மொழியாகச் சொல்லிக் கொண்டே எழுத வேண்டும்.
- ❖ சொற்கள், சொற்றொடர்களை ஒலிநாடாவில் பதிவு செய்து, பிறகு அதனை இயக்கி தொடர்ந்து கேட்கச் செய்ய வேண்டும்.
- ❖ களிமண் மாதிரிகளைப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும்.

DIET PVT

- ❖ கணிதம் கற்பிக்க அபாகஸ் (Abacus), டெய்லர்ஃபிரேம் (Taylor frame) ஆகிய கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.
- ❖ அறிவியல் மற்றும் சமூகவியல் கற்பித்தலில் தொடு உணர்வு மூலம் உணர்ந்து கொள்ளக் கூடிய படங்களைத் தயார் செய்து பயன்படுத்த வேண்டும்.
- ❖ பார்வையற்ற குழந்தைகள் விளையாட்டில் கலந்து கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.
- ❖ கணினி மூலம் பெரிய அச்சுப் பிரதிகளை தயாரித்து குறைந்த அளவு பார்வைத்திறன் உள்ளோருக்கு வழங்க வேண்டும்.
- ❖ எழுத்துக்களை உச்சரிக்கும் கணினி மென்பொருளைக் கொண்டு கணினியை இயக்க கற்பிக்கலாம்.
- ❖ கற்பித்தலின் போது பாதுகாப்பான உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- ❖ தொடு புலன், செவிப்புலன், சுவை உணர் திறன், நுகர்தல் திறன் ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும்.

**72. உடல் இயக்க நிலை குறைபாட்டினை எவ்வாறு கண்டறிவாய்? விளக்குக(2023 – 10 மதிப்பெண்கள்)**

**<u>மூளை முடக்குவாதம்</u>:**

உடலின் தசைகளில் அதிகப்படியான இறுக்கம். உடல் வளர்ச்சியில் தாமதம். கை கால்கள் வளைந்து சரியாக நிற்கவும், நடக்கவும் முடியாமல் போதல். சுய தேவைகளுக்காக அடுத்தவர்களைச் சார்ந்திருத்தல்.

**<u>வலிப்பு நோய்</u>:**

சுய கட்டுப்பாடின்றி கை கால்களை அசைத்தல் மற்றும் சுய நினைவற்றுப் போதல்.

**<u>இளம்பிள்ளை வாதம்</u>:**

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் கை / கால் மெலிந்து காணப்படுதல்.

**<u>தசை முடக்குவாதம்</u>**:

உடலில் உள்ள தசைகள் மெதுவாகக் கீழிருந்து மேலாக வலுவற்றுப் போதல்.

**<u>தட்டைப்பாதம்</u>:**

பாதத்தில் வளைவற்றுக் காணப்படுதல். அடிப்பாதத்தில் வலி ஏற்படுதல்.

**<u>கவட்டைக் கால்</u>**:

கால்களில் எலும்புகள் வளைந்து காணப்படுதல். பாதங்களை மடக்கி நடத்தல்.

**<u>எலும்பு தேய்மானம்</u>**:

உடலில் எலும்புகள் தேய்ந்து வலி மற்றும் வீக்கம் ஏற்பட்டு அசைக்கமுடியாமல் சிரமப்படுதல்.

**<u>வளர்ச்சிக் குறைபாடு</u>**:

பிறவியிலேயே கை, கால்கள் வளர்ச்சிக் குறைவு ஏற்பட்டு செயல்களைச் செய்ய முடியாமல் போதல்.

**<u>விபத்து</u>:**

திடீரென்று விபத்து காரணமாக கை, கால்களை இழந்து சுய வேலைகளைச் செய்ய முடியாமல் சிரமப்படுதல்.

மேலே சொல்லப்பட்டவை தவிர சில பொதுவான அறிகுறிகள் பின்வருமாறு.

- உடல் உறுப்புகள் ஒத்திசைவு இல்லாமலிருத்தல்.
- நொண்டி நடத்தல் அல்லது தடுமாறி நடத்தல்.
- அசைவின்போது மூட்டுகளில் வலி உண்டாதல்.
- உட்காருதலில், எழுவதில், நடப்பதில் சிரமம்.
- ஓடும் விதத்தில் வேறுபட்டு இருத்தல் – ஓடும்போது தன்னிச்சையாக திரும்ப
- முடியாதிருத்தல். ஓடும்போது கால்கள் சட்டென இழுத்துக் கொள்ளல் போன்ற
- பிரச்சனைகள்.
- முதுகுத்தண்டு பக்கவாட்டில் வளைந்திருத்தல்.
- உடலை இயக்கவும் கட்டுப்படுத்தவும் முடியாமை.
- கைகள் மற்றும் கால்களை இயல்பாகப் பயன்படுத்த இயலாமை.
- கை, கால் மற்றும் பாதங்கள் முடக்கப்பட்ட நிலை.
- சுலபத்தில் களைப்படைதல்.
- செயல்படுதலில் தாமதம்.
- உதடு, கன்னம் மற்றும் விரல்களின் நகங்கள் நீல நிறமாகக் காணப்படுதல்.
- தாழ்வு மனப்பான்மை

**73. உடல் இயக்கநிலைக் குறைபாடுள்ள ஒருவரைப் பற்றி குறிப்பு வரைக.**

**பிராங்க்ளின் டி ருஸ்வெல்ட்**

- ருஸ்வெல்ட் 1882 – ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தவர்.
- 1921 ம் ஆண்டு போலியோவால் பாதிக்கப்பட்டு தனது இரு கால்களின் செயல்களையும் இழந்தவர். இவர் தனது மன உறுதியினால் சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவரின் பேச்சின் திறமையால்
- 1923 – ஆம் ஆண்டு முதல் முறையாக அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றார். 1936 – ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும், 1940 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாகவும், ஐரோப்பாவில் இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற போது 1944 – ஆம் ஆண்டு நான்காவது முறையாகயும் அதிபர் பதவியை வகித்தார்.
- இவர் தொடர்ச்சியாக நான்கு முறை அதிபர் பதிவியில் இருந்ததற்குக் காரணம் இவருடைய தன்னம்பிக்கை, விடாமுயற்சி, சிறந்த பேச்சாற்றலே ஆகும்.

74. **மனவளர்ச்சிக் குறைபாடு என்றால் என்ன**?

- குழந்தைகள் உடல் அளவில் பலவிதமான குறைபாடுகளுடன் காணப்படலாம்.
- ஆனால் அவற்றுள் மனவளர்ச்சிக் குறைபாடு என்பது உடல் அளவில் மட்டுமின்றி மூளை மற்றும் மன அளவில் ஏற்படும் மந்தமான வளர்ச்சி அல்லது ளர்ச்சியின்மை ஆகும்.
- இம்மன வளர்ச்சிக் குறைபாடு குணப்படுத்த இயலாத பாதிப்பாகும்.
- இவர்களது நுண்ணறிவுத் திறன் குறைவாக இருப்பதால் சமுதாயத்தில் தனித்து வாழவோ அல்லது சேர்ந்து வாழவோ, சூழலுக்கு ஏற்றவாறு இணைந்து வாழவோ, பழகவோ இயலாதவர்களாக இருப்பர்.

- ❖ மேலும் இக்குழந்தைகளை மற்ற சாதாரண குழந்தைகளின் வளர்ச்சியிலும், செயலிலும் ஒப்பிடும்போது நடப்பதிலும், பேசுவதிலும், உணவு உட்கொள்வதிலும் மிகவும் இயலாதவர்களாகவே இருப்பர்.
- ❖ வயது, நேரம், இடத்திற்குப் பொருந்தாத செயல்களில் ஈடுபடுவர்.
- ❖ மனவளர்ச்சிக் குறைபாடு என்பது தங்கள் வயதில் எதிர்பார்க்கப்படுகிற பல்வேறு வேலைகளை நிறைவேற்றுவதில் தோன்றும் இடர்ப்பாடு ஆகும்.

**75. மனவளர்ச்சி குன்றிய நிலையை உணர்த்தும் அறிகுறிகள் யாது?**

- ❖ அனைத்து வளர்ச்சி நிலைகளிலும் தாமதம்.
- ❖ 12-15 மாதத்திற்குப் பிறகும் உட்காராமல் இருத்தல்.
- ❖ இரண்டரை வயதிற்குப் பிறகும் நடக்காமல் இருத்தல்.
- ❖ இரண்டரை வயதிற்குப் பிறகும் பேசாமல் இருத்தல்.
- ❖ 6 வயதிற்குப் பிறகும் தன்னிச்சையாகச் சாப்பிடுவதில், உடை அணிவதில், சிறுநீர் மற்றும் மலம் கழிப்பதில் மற்றவர்களின் உதவி தேவைப்படுதல்.
- ❖ சக வயதுடையோரிடம் விளையாடுவதில் சிரமம். அத்துடன் விளையாடும் போது அடிக்கடி அதீத கோபம் அடைதல்.
- ❖ பேச்சுக்கள் மற்றும் வாய்மொழிக் கட்டளைகளை பின்பற்றுவதில் சிரமம்.
- ❖ தன்னுடைய தேவைகள் வாய்மொழியில் பரிமாறிக்கொள்வதில் சிரமம்.
- ❖ ஒரே முறையில் இரண்டு அல்லது மூன்று கட்டளைகளைப் பின்பற்றுவதில் சிரமம்.
- ❖ தன்சூழலைப் பற்றித் தெரியாதிருத்தல் மற்றும் அறியாதிருத்தல்.
- ❖ செயல் திறன் கற்றலுக்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளுதல்.
- ❖ சக மாணவர்களைப் போல் எல்லா வகுப்பறை நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறாதிருத்தல்.
- ❖ படிப்பில் முன்னேற்றமின்மை, கவனக்குறைவு, அதிக மறதி போன்றவை.
- ❖ வகுப்பில் ஒரே இடத்தில் உட்கார இயலாமை.
- ❖ புதுக்கருத்துக்களை, செயல்களைக் கற்றுக்கொள்வதில் சிரமம்.
- ❖ கற்றலில் கண்கொண்டு பார்த்தும், கை கொண்டு உணர்ந்தும் அறிந்து கொள்வதில் மற்றவர்களைச் சார்ந்திருத்தல்.

**76. தாமஸ் ஆல்வா எடிசனின் குறைபாடு மற்றும் அவரின் சாதனைகள் பற்றி எழுதுக.** (2023 – 2 **மதிப்பெண்கள்**)

**குறைபாடு**:

செவித் திறன் குறைபாடு

**சாதனைகள்**:

- ➢ தந்தியடிக்கும் கருவிகளைக் கண்டுபிடித்தார்
- ➢ அறிவியல் சோதனைக் கூடத்தை நிறுவினார்.
- ➢ வெப்பத்தினால் ஒளி வீசக்கூடிய மின்சாரப் பல்பைக் கண்டுபிடித்தார்.
- ➢ பேச்சுக்களைப் பதிவு செய்யும் கிராமபோன் கருவியைக் கண்டுபிடித்தார்.
- ➢ ரெமிங்டன் டைப்ரைட்டர், மிமியோகிராப் என்ற கருவிகளைக் கண்டுபிடித்தார்.

DIET PVT

- அச்சுக் கருவி, ஒலிபெருக்கிக் கருவி, ஓடும் புகை வண்டியிலிருந்து தந்தி அனுப்பும் கருவி
- பேசும் படத்தை உருவாக்கி இயங்க வைத்து ஆடவும் பாடவும் செய்தார்
- மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கருவியைக் கண்டுபிடித்தார்
- நீருள் ஒலி-ஒளி விடும் கருவி
- நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்து தெரிவிக்கும் கருவி
- நீர்மூழ்கிக் கப்பல்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்வதற்கான கருவி ஆகியவற்றையும் கண்டுபிடித்தார்.

**77. வாசித்தலில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுக்கள் தருக.** (2023 – 2 **மதிப்பெண்கள்**)

| வகைகள் | எடுத்துக்காட்டு |
|---|---|
| வாசிப்புத் திறன் குறைபாடு | Bat – Pat<br>Net – Ten |
| பிழையோடு வாசித்தல் | நான் பள்ளிக்குப் போனேன்(தவறு)<br>நான் பள்ளிக்குச் சென்றேன்(சரி) |
| வார்த்தைகளிலுள்ள எழுத்தினை தலைகீழாகப் படித்தல் | b யை d ஆகவும்<br>m யை n ஆகவும்<br>was யை saw ஆகவும்<br>girl யை gril ஆகவும் படித்தல் |
| திரும்பத் திரும்ப படித்தல் | பக்கத்தில் உள்ள வீடுகள் எத்தனை?<br>இந்த வாக்கியத்தில் 'உள்ள' என்ற சொல்லைத் திரும்பத் திரும்பப் படித்தல். |
| வார்தையிலுள்ள எழுத்தை 'விட்டுவிடுதல்' அல்லது சேர்த்தல் | பொம்மை என்பதை பெம்மை<br>இரும்பு என்பதை இம்பு<br>பொருள்கள் என்பதை பொருகள் எனவும் விட்டுப் படித்தல்<br>மரம் – மாரம், தொலை-தொல்லை என்று எழுத்தைச் சேர்த்து படித்தல். |

**78. செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதில் பெற்றோர்களின் பங்கினை எழுதுக.** (2024 - 4 மதிப்பெண்கள்)

- சுற்றுப்புறத்தில் உள்ள பல்வேறான ஒலிகளைக் கேட்க வைத்தல் மற்றும்அவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளைப் புரிய வைத்தல். எ.கா - தொலைபேசி அழைப்பு, காலிங் பெல்
- ஆரம்ப காலத்தில் குழந்தை காது கேட்கும் திறனில் குறை இருப்பதைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த மருத்துவ ஆலோசனை பெறுதல்.
- வீட்டில் உள்ள பொருட்களின் மேல் அதனதன் பெயரினை எழுதி வைத்தல்.
- பேச்சுப் பயிற்சி கொடுக்க வேண்டும். வேகமாக பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

DIET PVT

- ❖ பொருள்களின் உதவி கொண்டு சொற்களைக் கற்பித்தல்.

❖ செவித்திறன் குறைபாடுடைய மாணவர்களிடம் சைகையில் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். வார்த்தைகளையே பயன்படுத்துதல் அவசியமான ஒன்றாகும்.

**79. குறைந்தளவு பார்வைத்திறன் – வரையறு ( 2026 – 2 மதிப்பெண்கள்)**

குறைந்தளவு பார்வைத் திறனுடையவர்கள், கேட்டல் மற்றும் காட்சி சாதனங்கள், அச்செழுத்துக்கள் ஆகியவற்றை எஞ்சியுள்ள பார்வையைப் பயன்படுத்தி கற்கும் நிலையில் உள்ளவர் ஆவர்.

**80. இந்திய அரசியல் சாசனத்தின் 45 – ஆவது பிரிவு பற்றி எழுதுக. (2026– 2 மதிப்பெண்கள்)**

5 முதல் 14 வயதுடைய குழந்தைகளுக்குக் கல்வியை அளிப்பதில் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் சம்வாய்ப்பு அளிக்க வேண்டும்.

DIET PYT